www.padippakam.com

# மார்க்சியத்தின் பெயரால்...

அ.மார்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

MC . LOBANADAN
RINGPARKEN 8 .ST TH
7500 HOLSTEBRO

படிப்பகம்

www.padippakam.com

முதல் பதிப்பு : மார்ச், 1994.

ஆசிரியர் : அ. மார்க்ஸ்

விலை : ரூ. 25-00

அட்டைப்படம் : புகழேந்தி

வெளியீடு : விடியல் பதிப்பகம்,
3, மாரியம்மன் கோவில் வீதி,
உப்பிலிப்பாளையம்,
கோவை-641 015.

அச்சமைப்பு : அலைகள் அச்சகம்,
36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600024.

படிப்பகம்

www.padippakam.com

MC. LOGANADAN
RINGPARKEN 8.ST TH
7500 HOLSTEBRO

# முன்னுரை

இன்று உலகளவில் பொதுவுடைமை இயக்கங்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணங்களை தெளிவாகப்புரிந்துகொள்வதென்பது, இந்நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு ஒரு அவசியமானத் தேவையாக உள்ளது. ஒரு சமூகப் பொறுப்புள்ள ஒரு நேர்மையான ஆய்வாளர் என்ற முறையில் நண்பர் **அ. மார்க்ஸ்** புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கான காரணங்களை துல்லியமாக ஆய்வு செய்து அவ்வப்போது எழுதி வெளியிட்ட கட்டுரைகளின் தொகுப்போடு, இதற்குமுன்..., மற்றும் இதற்குப்பின்... என்ற இரு கட்டுரைகளையும் இணைத்து மார்க்சியத்தின் பெயரால்... என்ற இந்த நூல் வெளிவருவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கான காரணங்களை வரலாற்றின் நெடுக நின்று நூல் ஆசிரியர் ஆய்வு செய்துள்ளார். இதில் நாட்டுக்கு நாடு உள்ள குறிப்பான வேறுபாடுகள் பற்றியும் அவற்றிற்கான காரணங்கள் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளார். 'மாவோயிசத்தின் எதிர்காலம்' என்ற **சமீர் அமீன்** எழுதிய நூலை தமிழ் வாசகர்களுக்கு நன்முறையில் அறிமுகப்படுத்தியுள்ளார். அக்கட்டுரையிலிருந்து, உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொண்டு "பன்னாட்டு வேலைப் பிரிவினை" என்கிற வலையிலிருந்து மீள்வதன் மூலம் மட்டுமே ஒரு தேசிய பொருளாதாரத்தை கட்டமைக்க முடியும் என்பது ரசியா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை உதாரணங்களாகக் கொண்டு நன்கு விளக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கட்டுரை

படிப்பகம்

www.padippakam.com



பற்றியும் மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த முன்னுரையை நான் எழுதவில்லை. அதற்கானத் தகுதியும் எனக்கிருப்பதாக நான் கருதவில்லை. மாறாக ஒரு சில விசயங்கள் பற்றிய எனது கருத்துக்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

புரட்சிக்குப் பிந்திய சமூதாயங்களில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற பெயரில் புரட்சிக்கு முந்திய அரசுகள் மக்களுக்கு அளித்திருந்த உரிமைகள் கூட மறுக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத் தேவைகளைக் காட்டிலும் மனிதனுக்கு, அவனுடைய சுதந்திரத்திற்கான வேட்கையே மேலோங்கி நிற்கும். இதுவே மனித இயல்பு. இதனை மறுத்த எந்த ஒரு அரசும் மக்கள் சமூகத்தின் கோபக் கணையில் இருந்து தப்ப முடியாது என்பதையே புரட்சிக்குப் பிந்திய அரசுகளின் வீழ்ச்சி நமக்கு உணர்த்துகிறது. இதற்கான காரணங்கள் கட்சி கட்டும் முறையிலேயே உள்ளது. கட்சிக்குள் மாறுபட்ட கருத்துக்கள் முறையாக விவாதிக்கப்படுவதற்கு அனுமதிக்காத போக்கு இன்றளவும் பல கட்சிகளில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. பிற இயக்கத் தோழர்களைச் சந்திப்பதும், அவர்களோடு விவாதிப்பதும் சந்தேகத்துடனேயே பார்க்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் தமது கட்சித் தலைமையின் கருத்தே மிகச் சரியானது என்று ஒப்புக் கொள்வதும் ஒரு கலாச்சாரமாகவே அணிகள் மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது. இத்தகையதோர் கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வரும்போது அது எப்படி திறந்த மனதுடன் மக்களுக்கு சனநாயக உரிமைகளை வாரி வழங்கும்?

இன்றளவும் இந்தியாவில் உள்ள சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம் போன்ற கட்சிகள், அவர்களுக்கான உரிமைகள் பறிக்கப்படும் போது மட்டுமே எதிர்ப்புக் குரல் எழுப்புவதும் பிற இயக்கங்கள் ஒடுக்கப்படும்போது மௌனம் சாதிப்பதும் வழக்கமாக உள்ளது. தடா போன்ற கடும்

www.padippakam.com



ஒடுக்குமுறைச் சட்டங்களால் செப். 93 வரையிலும் 50,000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ள சூழலிலும் கூட மேற்குறிப்பிட்ட கட்சிகளிலிருந்து கடுமையான எதிர்ப்புகள் ஏதும் வந்ததில்லை. இச்சட்டத் தினால் பாதிக்கப்படும் இயக்கங்கள் அல்லது கட்சிகளின் கொள்கைகளுடன் உடன்பாடு கிடையாது என்ற ஒரு காரணத்தைக் காட்டி இவை மௌனம் சாதித்து வருகின்றன. சனநாயகம் என்பதே அடிப்படையில் கருத்து மாறுபாடு கொள்வதற்கான உரிமையாகும். நம்முடைய கருத்துக்களோடு மாறுபடுபவர்களுக்கும், அவர்களுடைய கருத்துக்களை பிரச்சாரம் செய்யவும் போராடுவதற்கான உரிமைகளைப் பெற்றுத் தருவதும் ஒரு சனநாயகவாதியின் கடமையாகும். புரட்சிக்குப் பிந்திய அரசுகளில் மக்களுக்கு கருத்து மாறுபாடு கொள்வ தற்கான உரிமையும் அதற்காக அமைப்புகள் ஏற்படுத்திப் போராடுகிற உரிமையும் வழங்கப்பட்டிருந்தால் அவை சந்தித்த வீழ்ச்சிகளை தவிர்த்திருக்கலாம்.

மேலும், புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் ஆட்சி அதிகாரத்தில் மக்களின் பங்கேற்பு என்பதுவும் அதற்கு முந்திய சமுதாயத்தில் இருந்த அளவுக்கும் இருப்பதில்லை. பாட்டாளி வர்க்கக் கட்சி அதிகாரத்திற்கு வந்து விடுவதா லேயே பாட்டாளி வர்க்கத்திற்கும் பரந்துபட்ட மக்களுக் கும் அதிகாரம் வந்துவிட்டதாகாது. அதிகாரத்தில் மக்கள் நேரடியாக பங்கேற்க நாம் வழிவகை செய்வது தொடர் பாக சிந்திக்க வேண்டும். இதற்கு உதாரணமாக திண்டி வனத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். பல ஆண்டு கள் தொடர்ந்த போராட்டத்திற்குப் பின்பு 1992ல் தமிழக அரசு கல்லூரிச்சாலையை செப்பனிட ரூ 25 இலட்சத்தை ஒதுக்கியது. இப்பணம் சாலைப்பணிக்காக முறையாக பயன்பட வேண்டும் என்ற அக்கறையோடு கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள், சாலையோர கிராம மக்கள் ஆகியோரை உள்ளடக்கி 'கல்லூரிச் சாலை

www.padippakam.com



கண்காணிப்புக்குழு' உருவாக்கப்பட்டது. இதன் மூலம், எங்கள் நோக்கத்தில் ஓரளவு வெற்றி கண்டோம். இது போன்று கல்விக் கூடங்கள் முதல் காவல் நிலையங்கள் வரை இப்போதிருந்தே ஒவ்வொரு நிறுவனத்தையும் கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்துவது என்பது புரட்சிக் குப்பிந்திய சமுதாயத்தில் அதிகாரத்தில் மக்களின் பங்கேற்புக்கு வழிகோலும் என்பது என் கருத்து.

மார்க்சியத்தின் பெயரால்...என்ற இந்த நூல் சமூக மாற்றத்தில் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய தொன்றாகும். இதைச் சொல்வதற்கான காரணங்கள் இரண்டை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலில் இதில் உள்ள ஒவ்வொரு கட்டுரையைப் படிக்கும் போதும் நண்பர் அ. மார்க்ஸ் அவர்களின் கடின உழைப்பும் தெளிவான ஆய்வு நோக்கும் நன்கு வெளிப்படுகிறது; அவருடைய கடின உழைப்பு முறையாக பயன்படவேண்டும் என்ற அக்கறை யிலேயே இதைக் கூறுகிறேன். இரண்டாவதாக, இயக்கங் களுக்குள் நிலவும் குறுங்குழுவாதப் போக்கின் காரணமாக இந்நூலின் முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப் பிட்டு விடக்கூடாது. தாம் சார்ந்துள்ள இயக்க வெளியீடு களே அதி உன்னதமானது எனவும் பிற இயக்கங்கள் அல்லது தனிப்பட்ட முறையில் எழுதி வெளியிடும் நூல் களை கணக்கில் எடுத்துக் கொள்ளாத போக்கும் இன்றள வும் தொடர்கிறது. இது பொதுவுடமை இயக்கங்களுக்கே உரித்தான தனித்த பண்பாக வளர்க்கப்பட்டுள்ளது. சமீபத்தில் உண்மை அறியும் குழு பணிக்காக மக்கள் சிவில் உரிமைக் கழகம் சார்பில் தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும் போது கூட தோழர்கள் மத்தி யில் இப்போக்கினை என்னால் பார்க்க முடிந்தது. நண்பர் அ. மார்க்ஸ் மீது சில முத்திரைகளை குத்தி அவர் நூல்களைப் புறக்கணிப்பதால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை. அவருடைய நூல்கள் மட்டுமில்லாது, இயக்கங்களுக்கிடையேயும் திறந்த மனதோடு ஒருவரை

படிப்பகம்

www.padippakam.com



ஒருவர் அங்கீகரித்து பிரச்சனைகளை அணுகுவது என்பது புரட்சிகரமானதொரு கட்சி பருண்மையாக உருவாவதற்கு அடிப்படையாக அமையும் என நம்புகிறேன்.

நூல் ஆசிரியர் நண்பர் அ. மார்க்ஸ் பற்றி நான் ஒன்றும் தமிழக வாசகர்களுக்கு கூறத்தேவையில்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையில் கல்லூரி ஆசிரியர் மாநாட்டில் வைதது முதலில் சந்திககும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்போதிருந்தே திறந்த மனதுடன் வெளிப்படையாக பழகும் முறை எனக்கு மிகவும் பிடித்த தொன்றாகும். தமிழகம் எங்கும் உள்ள அவருடைய நண்பர்களிடம் எல்லாம் என்னை அறிமுகம் செய்து மகிழ்பவர். புரட்சிப் பண்பாட்டு இயக்கமானாலும் சரி பின்பு ஏற்படுத்திய மக்கள் கல்வி இயக்கமானாலும் சரி இவற்றில் எல்லாம் நடைமுறைப் பணிகளில் முன்னோடியாக இருந்து செயல்பட்டு வருபவர். மன்னார்குடி கலைக் கல்லூரி மாணவர்கள், ஆதிதிராவிடர் நலவிடுதிக்காக நடத்திய போராட்டத்தில் பங்கேற்றமைக்காக பல பாதிப்புகளுக்குள்ளானவர். தலித் பண்பாடு மற்றும் அரசியல் தொடர்பாக பல பங்களிப்புகளை செய்துவருபவர். என்னுடைய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நல்ல ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்து எனக்கு தன்னம்பிக்கையும் உற்சாகமும் அளித்து வருபவர்தான் நண்பர் அ. மார்க்ஸ். அவருடைய நூலுக்கு முன்னுரை எழுதும் தகுதி எனக்கில்லையென்றாலும் கூட என்னை வற்புறுத்தி எழுத வைத்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். சமூக மாற்றம் கருதி பல அரிய வெளியீடுகளை வெளியிட்டு வரும் **விடியல் பதிப்பகம்**, இந்நூலை வெளியிடுவதற்கு முன்வந்தமைக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்

**பா. கல்யாணி.**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

1. இதற்கு முன்... 9

2. சோசலிசக் கட்டுமானம்—
தத்துவமும் நடைமுறையும் 33

3. மாவோயிசத்தின் எதிர்காலம் 58

4. சீனமும் 98

5. மார்க்சியம் தோற்கவில்லை 123

6. மார்க்சியம்—அறவியல்—வன்முறை 172

7. இதற்குப் பின்... 187

படிப்பகம்

www.padippakam.com

# 1. இதற்கு முன்...

புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த நேரம். ''சமூக ஏகாதிபத்தியம்'' குறித்து கடலூரிலும், வேலூரிலும், குடந்தையிலும் தோழர்கள் வகுப்புகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்தத் தலைப்பில் இங்கெல்லாம் பேசுகிற வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன. ரசியாவைச் சமூக ஏகாதிபத்தியம் என்று வரையறுத்து-எழுதப்பட்ட 'பீகிங் ரெவியூ' கட்டுரைகளைத் தொகுத்து வெளி வந்திருந்த சில நூல்கள், தமிழில் இந்தத் தலைப்பில் மா-லெ குழுக்களால் வெளியிடப்பட்ட சில வெளியீடுகள், அமெரிக்க புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சி ஒன்று வெளியிட்டிருந்த ஆவணம் முதலியவை எனக்கு ஆதார நூல்கள். இவை தவிர தினசரி இதழ்களில் இந்தக் கருத்திற்கு ஆதரவாக அவ்வப்போது வரும் செய்திகள் ஆகிய எல்லாவற்றையும் தொகுத்து முன் வைத்தேன். அதனை அப்படியே கட்டுரையாக எழுதித்தாருங்கள், சிறு வெளியீடாகக் கொண்டு வந்து விடலாம் எனத் தோழர் **கல்யாணி** வற்புறுத்தினார். அதனை ஒத்துக் கொண்ட போதிலும் கடைசிவரை அந்தப் பணியை மேற்கொள்வதற்கு எனக்குத் தயக்கமாகவே இருந்தது.

மூன்றாம் உலக நாடுகளுடன் சோவியத் யூனியன் கொண்டிருந்த பொருளாதார, வணிக உறவுகளில் ஏற்றத் தாழ்வான நடைமுறைகள் இருந்த போதிலும் சோவியத் அரசு, மூன்றாம் உலக நாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கங்களைக் காட்டிலும் அங்குள்ள தரகு முதலாளிய

www.padippakam.com


அரசுகளோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த போதிலும், மூன்றாம் உலக நாடுகளுடன் அதன் உறவு ஏகாதிபத்தியத்திற்கும் காலனிய நாட்டிற்குமான உறவு எனச் சொல்லத்தக்கதாக இல்லை என என் மனதுக்குப் பட்டுக் கொண்டே இருந்ததுதான் எனது தயக்கத்திற்கு அடிப்படை. எனவே ஏகாதிபத்திய வரையறையின் பிரதான அம்சமாகிய மூலதன ஏற்றுமதி என்கிற அம் சத்தை எடுத்துக் கொண்டு ரசியாவிற்கும் பிற அமெரிக்கா/ பிரிட்டன் போன்ற ஏகாதிபத்தியங்களுக்குமிடையேயான ஒற்றுமை, வேற்றுமை பற்றிய தரவுகளைச் சேகரிக்கத் தொடங்கினேன். கிடைத்த தரவுகள் சோவியத் ரசியாவை ஏகாதிபத்தியம் என வரையறுப்பதற்குகந்ததாக இல்லை. எடுத்துக்காட்டாக, 1978ஆம் ஆண்டு அமெரிக்கா குறை வளர்ச்சி நாடுகளில் செய்த முதலீடு 40, 394 மில்லியன் டாலர்; ஆனால் அன்றைய சோவியத் யூனியன் செய்த முதலீடு (1979) வெறும் 10 மில்லியன் டாலர் மட்டும்தான். அதாவது அமெரிக்கா செய்த முதலீட்டுடன் ஒப்பிடும் போது வெறும் .04 சத முதலீடுதான் ரசியா செய்தது (ரசியாவில் நடப்பதென்ன? பக். 32).

அப்படியானால் சோவியத் யூனியனை நமது இடது வலது பொதுவுடைமைக் கட்சிகளைப் போல சோசலிச நாடு எனச் சொல்லலாமா என்று பார்த்தால் அப்படிச் சொல்வது மிகப் பெரிய அபத்தமாக இருந்தது. ஆனால் அந்த வகையிலும் மா-லெ குழுவினர் முன் வைத்த ஒரு கருத்து எனக்கு உடன்பாடாக இல்லை ஸ்டாலின் இருந்த வரை சோசலிச நாடாக இருந்து, அவர் மறைந்த பின்பு முதலாளிய மீட்பு ஏற்பட்டு சமூக ஏகாதிபத்தியமாக மாறியது என்கிற கருத்துத்தான் அது. உற்பத்தி சாதனங்களெல்லாம் சமூக உடைமையாக்கப்பட்ட பின்னும் கூட, உற்பத்திப் புள்ளியில் பாட்டாளி வர்க்கத்தின் முழுமையான கட்டுப்பாடு உருவாக்கப்பட்டு, அந்நியமாதல் முற்றிலுமாக நீக்கப்பட்ட, பொதுவுடைமையை

www.padippakam.com



நோக்கிய சமூக உறவுகள் நிலைநாட்டப்பட்ட ஒரு சமூகமாக ஸ்டாலின் காலத்து ரசியாவை என்னால் கருத முடியவில்லை. பாசிசத்திற்கு எதிராக வெற்றிக் கொடி நாட்டியது, ஒரு வலுமிக்க அரசாக சோவியத் யூனியனை உருவாக்கியது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கெதிராக ஒரு வலுவான சக்தியாக உலக அரங்கில் ரசியாவை நிறுத்தியது முதலியன மட்டும் சோவியத் யூனியனுக்குள் பொதுவுடைமையை நோக்கிய சமூக உறவுகள் நிலை நாட்டப்பட்டது, எனச் சொல்லத்தக்க காரணங்களாக எனக்குப் படவில்லை. அப்படியானால் லெனின், பொது வுடைமையை நோக்கிய சமூக உறவுகளை நிலைநாட்ட முயற்சித்தார் எனவும், ஸ்டாலின் அந்த முயற்சிகளைக் குழிதோண்டி புதைத்தார் எனவும் சொல்லலாமா? அப்படியும் சிலர் சொல்கிறார்களே? என்கிற கேள்விகள் எழுந்தன. இது குறித்து ஆழமாக யோசித்தபோது, முதலாளியச் சமூக அமைப்பிற்கும் பொதுவுடைமைச் சமூக அமைப்பிற்குமான இடைப்பட்ட மாறுதல் கட்டம் பற்றிய கருத்தாக்கத்தில் லெனினிற்கும், ஸ்டாலினுக்கு மிடையே சில வேறுபாடுகளைச் சுட்டிக்காட்ட முடியு மென்றாலும், சோசலிசக் கட்டுமானம் குறித்த நடை முறைகளில் லெனினுக்கும், ஸ்டாலினுக்குமிடையே பல்வேறு அம்சங்களில் தொடர்ச்சிகள் இருந்தது புலப் பட்டது. எனவே **போல்செவிச** அணுகல்முறையிலேயே சில கோளாறுகள் இருந்ததாகப் பட்டது, எனவே முதலாளியத் திற்கும், பொதுவுடைமைக்குமிடைப் பட்ட காலகட்டம் பற்றி செவ்வியல் மார்க்சியத்திலும், நவ மார்க்சியச் சிந்தனையாளர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் மத்தியி லும் நடைபெற்ற, நடைபெறுகிற விவாதங்களைக் கவனமாகப் பார்த்தல் அவசியம் என்கிற கருத்து வலிமையாகியது. ஏனெனில் சோவியத் யூனியனில் மட்டு மல்ல, சோசலிச நாடுகள் என்று சொல்லப்பட்ட எல்லா நாடுகளிலும், (இந்தப் பிரச்சினைகளைக் கணக்கிலெடுத் துக் கொண்டு செயல்பட்ட) மாவோவின் சீனாவிலும்

www.padippakam.com



பிரச்சினைகள் என்கிறபோது நாம் இந்த விசயத்தை மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியது புரிந்தது.

மார்க்சியத்தைப் பயில்வது என்றால் மார்க்ஸ்-எங்கல்ஸ்- லெனின்- ஸ்டாலின்- மாவோ என்பதாக ஒரு பாரம்பரியத்தை உலகெங்கிலுமுள்ள பொதுவுடைமை இயக்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தப் பாரம்பரியத்திலுங்கூட தேர்வு செய்யப்பட்டு, தொகுக்கப்பட்ட ஒரு சில நூல்கள் மட்டுமே பயிலப்படுவது என்பது தவிர இந்தப்பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்ட **கிராம்சி** போன்ற புரட்சி வெற்றி பெறாத நாட்டைச் சேர்ந்த தலைவர்கள், **அல்துஸ்ஸர்** போன்ற கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று மார்க்சியத்தை வளப்படுத்தியவர்கள், ஆகியோர்கள், பயிலப்படுவதேயில்லை என்பதோடு இவற்றை யாராவது கவனத்தில் எடுத்தால், அவர்களை அய்யத்தோடு கலகக்காரர்களாகப் பார்க்கும் போக்கு ஒன்றும் கட்சிகளுக்குள் இருந்ததையும், இருப்பதையும் நாம் அறிவோம். இன்றைய பிரச்சினைகளையெல்லாம் பார்க்கும்போது இத்தகைய புறக்கணிப்பால் இழப்பு நமக்குத்தான் என்பது விளங்கியது. இவற்றை மட்டுமல்ல இந்தப் பாரம்பரியத் தலைவர்களோடு **ரோசாலக்சம்பர்க், காவுட்ஸ்கி** போன்றோர் நடத்திய விவாதங்களையும் கூட பரிசீலிக்க வேண்டியதன் அவசியம் புரிந்தது. அதற்கு முதற்படியாக இவைகளையெல்லாம் தேடிப்பிடித்து கற்க வேண்டியதன் முக்கியத்துவம் விளங்கியது. இந்தச் சூழலில்தான் **'இன்குலாப்'** ஆசிரியராக இருந்த **'புதிய மனிதன்'** இதழில் எனது 'கற்பது இனிது' என்கிற கட்டுரை (ஜனவரி, 86) வெளி வந்தது, அதில்—

"தோழர்களே! நாம் கற்போம். தொல்காப்பியம் முதல் அல்துஸ்ஸர் வரை அனைத்தையும் கற்போம். அடிப்படை மார்க்சியப் பயிற்சியின் மூலம் சரியானவற்றையும் தவறானவற்றையும் பிரித்தறிவோம். சரியானவற்றைப் பதித்துக் கொள்வோம். ஏனெனில்

www.padippakam.com



விஞ்ஞானபூர்வமான எதுவும் மார்க்சிய விரோதமானதல்ல: புரட்சிக்கு எதிரானதல்ல''

என்று குறிப்பிட்டிருந்தேன்.

'சமூக ஏகாதிபத்தியம்' என்கிற கோட்பாடு தவிர 1947 க்குப் பிந்திய இந்தியாவின் 'அரசியல் சுதந்திரம்' பற்றிய வரட்டுத்தனமான இறுகிய கோட்பாடுகள் குறித்த அய்யங்களும் முளைத்தன. இந்தியா, முழுமையான அரசியல் சுதந்திரமுள்ள ஒரு நாடு என்கிற இடது / வலது பொதுவுடைமைக் கட்சிகள் முன் வைக்கிற பார்வையில் முற்றிலும் எனக்கு உடன்பாடில்லை. நக்சல்பாரிப் புரட்சி இந்திய அரசியலுக்கு அளித்த மாபெரும் கொடை ஏகாதிபத்தியங்களின் கிடுக்கிப் பிடியில் இந்தியா சிக்கிக் கிடப்பது குறித்த எச்சரிக்கைதான். சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பே மா.லெ. குழுவினர் முன் வைத்த இந்த எச்சரிக்கையை 25 ஆண்டுகளுக்குப் பின்பு இன்று சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியான இந்தக் கிடுக்கிப் பிடி நிச்சயம் அரசியல், கலாச்சாரக் களங்களிலும் பிரதிபலிக்கும் என்பதிலும் நமக்கு அய்யமில்லை. ஆனால் இந்த அடிப்படையில் இந்திய அரசு என்பது முற்றிலும் அரசியல் சுதந்திரமற்ற ஏகாதிபத்தியங்களின் அடிமை அரசு என்கிற கருத்தாக்கம் முழுமையாக ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. ஆனால் இந்தியப் போலிப் பாராளுமன்றம் என்பது ஏகாதிபத்தியப் பொம்மலாட்டக் காரனின் விரல்களின் இயக்கத்திற்குத் தக்க இயங்கும் பொம்மையாய் செயல்படுகின்றது என்பதே மா-லெ குழுக்களின் அரசியல் பார்வையாக இருந்தது; இருக்கிறது. இதுபற்றி ஆழமாகச் சிந்திக்கும்போது உலக முதலாளிய அமைப்பு (World System Theory — இக்கோட்பாடு பற்றிய அறிமுகக் கட்டுரை ஒன்று 'நிறப்பிரிகை' யில் வெளிவர உள்ளது) என்கிற கோட்பாடு இந்நிலையை ஓரளவு திருப்திகரமாக விளக்கக் கூடியதாகப்பட்டது.

www.padippakam.com



உலக முதலாளிய வளர்ச்சியில் பல்வேறு கட்டங்கள் உள்ளன. ஆனால் தொடக்கம் முதலாகவே (15 ஆம் நூற்றாண்டு) முதலாளியம் என்பது ஒரு உலகம் தழுவிய நிகழ்வாகவே வளர்ந்து வருகிறது. முதலாளிய மையங்களாகத் திகழ்ந்த / திகழ்கிற அய்ரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் மூன்றாம் உலக நாடுகள் விளிம்பு நிலையில் உறவு கொண்ட நாடுகளாக ஆரம்பம் முதல் இருந்து வருகின்றன. கச்சாப் பொருளாகவும், உழைப்புச் சக்தியாகவும் கடன் வட்டியாகவும், முதலீட்டு இலாபமாகவும், 'ராயல்டி' யாகவும் உலக முதலாளிய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் விளிம்பு நாடுகளிலிருந்து மைய நாடுகளை நோக்கி கப்பம் செல்கிறது; இதன் விளைவாக மூலதனத்திரட்சி மையங்களில் நடைபெறுகிறது.

உலக முதலாளியக் கோட்பாட்டாளர்களில் ஒருவரான இம்மானுவேல் வாலர்ஸ்டீன் — இன் கருத்துப்படி உலக முதலாளியத்தின் அடிப்படையான பண்புகளில் ஒன்று தனது புவியியல் எல்லை முழுமையிலும் முற்று முழுதாக இறையாண்மை செலுத்துகிற அரசியல் அதிகார மையம் (அரசு) என்று எதையும் சொல்ல முடியாது என்பது. உலக முதலாளிய அமைப்பின் அரசியற் மேற் கட்டுமானம் என்பது ஒரு பன்னாட்டு அரசமைப்பு (Inter state system) ஆகும். இதன் மூலமே இறையாண்மை மிக்க (தனி) அரசுகள் என்பன வரையறுக்கப்படுகின்றன. இந்தப் பன்னாட்டு அரசு அமைப்பிற்குட்பட்ட எந்த ஒரு அரசுக்குமே (அமெரிக்கா போன்ற மைய நாடு உட்பட) வரையறையற்ற சுயாட்சி உரிமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் மையங்கள், விளிம்புகளைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் மிக அதிக சுயாட்சி உரிமை கொண்டுள்ளது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

1948 இல் அமெரிக்க ஜனாதிபதி ஹாரி. எஸ். ட்ரூமன் "குறைவளர்ச்சி" என்கிற சொல்லாடலை முன்வைத்தான்.

www.padippakam.com



இந்தச் சொல்லாடலின் விளிப்பை ஏற்றுக்கொண்டு தம்மைக் குறைவளர்ச்சி நாடுகளாக அங்கீகரித்துக் கொண்ட நாடுகள் மையத்தைப் போன்ற முதலாளிய 'வளர்ச்சி' என்கிற வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டன அதற்குரிய மூலதனத்திற்கு எங்கே போவது என்கிற கேள்வி வந்தபோது மைய நாடுகள் முன் வைத்த உதவி, கடன் ஆகிய வலைகளில் விளிம்பு நாடுகள் சிக்கி தமது விளிம்பு நிலையை உறுதிப்படுத்திக் கொண்டன. கடந்த ஒரு நூற்றாண்டுகால உலக வரலாற்றை நுணுகி ஆராயும்போது உலக முதலாளிய வலைப்பின்னலிலிருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டு மையமாகவோ, விளிம்பாகவோ மாறாமல் 'தேசிய சுய மைய வளர்ச்சி'யை மேற்கொண்ட நாடுகளாக **கோர்ப்பசேவுக்கு** முந்திய சோவியத் யூனியனையும் **மாவோ** காலத்திய சீனத்தையும் மட்டுமே குறிப்பிட முடிகிறது. (பார்க்க : இந்நூலிலுள்ள 'மாவோயிசத்தின் எதிர்காலம்' என்கிற கட்டுரை) சோசலிச நாடுகளாகச் சொல்லப்பட்ட இதர நாடுகள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மட்டங்களில் உலக முதலாளிய அமைப்பிற்குள் தம்மை ஆட்படுத்திக் கொள்ளத் தொடங்கின. எனவே ஒப்பீட்டளவில் அரசியல் சுதந்திரமுள்ள நாடுகளாக சோவியத் யூனியனும் சீனமும் மட்டுமே விளங்கின. இதன் விளைவாக இவ்விரு நாடுகளுக்கும் ஏற்பட்ட சாதக பாதகங்கள் விரிவாக ஆராயத் தக்கவை. நம் முன் உள்ள பணிகளில் இதுவும் ஒன்று. ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. டெங்கின் சீனத்தில் தேசிய சுய மைய வளர்ச்சி முற்றாகத் தகர்க்கப்பட்டு அது உலக முதலாளியத்தின் விளிம்பு நாடுகளில் ஒன்றாக தன்னை ஆக்கிக் கொண்டது என்கிற கருத்திலோ இல்லை டெங்கின் சீனம் தன்னை ஒரு சமூக ஏகாதிபத்தியமாக மாற்றிக் கொண்டது என்கிற கருத்திலோ எள்ளளவும் உண்மையில்லை. இன்றளவும் (1994) இந்த வகையில் அமெரிக்காவுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடிய நாடுகள் எனப் பட்டியல் போட்டோமானால்

படிப்பகம்

www.padippakam.com



அதில் முதலில் சீனமும் இரண்டாவதாகக் கியூபாவுமே உள்ளன. 1987 வரை மேற்கு நாடுகள் சீனாவில் செய்த முதலீடு வெறும் 2.2. மில்லியன் டாலர் மட்டுமே. இதுவும்கூட பெரும்பாலும் சீன வம்சா வழியினர் மூலமான முதலீடுதான். சீன அரசின் முதலீட்டுடன் ஒப்பிடும்போது இது வெறும் 2. 2 சதம்தான்.

இதுபற்றியெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதுதான் 'இந்திய மக்கள் முன்னணி'யின் மாநாட்டு மலரில் (1988) ஒரு கட்டுரை எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. 'அரசு' பற்றிய அறியப்பட்ட மார்க்சியத்தின் இறுக்கமான வரட்டுப் பார்வை என்பது மார்க்ஸ்-லெனின் ஆகியோர் முன் வைத்த கோட்பாடுகளிலிருந்து எத்தனை தூரம் விலகியிருக்கிறது, என்பதனையும் இதன் விளைவாக சில அன்றாட அரசியல் பிரச்சனைகளையே நம்மால் எப்படி விளங்கிக் கொள்ள இயலாமற் போகிறது என்ப தையும் சுட்டிக் காட்டும் வாய்ப்பாக இதனைப் பயன் படுத்திக் கொண்டேன். அப்போது நடைபெற்ற ஒரு அரசு ஊழியர் — ஆசிரியர் போராட்டத்தில் போராட்டக் காரர்களை ஒடுக்குகிற விசயத்தில் அரசு எந்திரம் என்பது எப்படிப் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் ஆளும் வர்க்கக் குழுக்களுக்கு மத்தியில் ஒப்பீட்டளவு சுயேச்சை யுடன் செயல்பட்டது என்கிற அம்சத்திலிருந்து தொடங்கி அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாட்டில் சில சிக்கலான பகுதிகளை அலச முயன்றது அக்கட்டுரை.

"அரசு என்பது ஒட்டுமொத்தமான சமூகத்தின் கருவி (Instrument) அல்லது முகவர் (agent) அல்லது நல நிறுவ னமல்ல (Trustee) என்பதே மார்க்சியக் கோட்பாட்டின் சாராம்சமாகும். சமூகம் என்பது வர்க்க சமூகமாக இருப் பதன் விளைவாக 'ஒட்டுமொத்தமான சமூகம்' என்றோ எல்லா மக்களுக்குமான 'தேசிய நலன்' என்றோ ஒன்றும் கிடையாது என்கிற அடிப்படையிலேயே மார்க்சியக் கோட்பாடு எழுகிறது. எனவே வர்க்க ஆதிக்கத்தின்

www.padippakam.com



அடிப்படையான கருவியாக அரசு விளங்குகிறது. வர்க்கப் போராட்டங்களுக்கும் வர்க்கங்களுக்கும் மேலாக நின்று கொண்டு மோதுகின்ற நலன்களுக்கிடையே 'நடுவராகச்' செயல் படாமல் தெளிவான பக்கச் சார்புடையதாக அரசு விளங்குகிறது என்கிறது மார்க்சியம்.

''ஆனால் ஆளும் வர்க்கம் எப்போதும் ஒருபடித்தான தாக (Homogenious) இருப்பதில்லை. மோதுகின்ற நலன்களையுடைய வேறுபட்ட பிரிவுகளாக (Fractions) ஆளும் வர்க்கம் இருப்பதுண்டு. வெவ்வேறு ஏகாதிபத்தி யங்களை அண்டியிருக்கிற பெரு முதலாளிகள், சாதி மற்றும் நில உரிமை அடிப்படையிலான கிராமப்புற ஆதிக்கசக்திகள் என்றெல்லாம் ஆளும் வர்க்கம் பிளவுண்டு கிடப்பது இந்தியா போன்ற நாடுகளில் வெளிப்படை யாகவே தெரிகின்றது. இதே சூழலில் அரசை ''தனது'' நேரடியான கருவியாகச் செயல்படுத்தி முரண்பாடற்ற ஒரு முகமான ''உத்தரவுகள்'' இடுகிற ஆளும் வர்க்கம் என ஒன்று இருப்பதில்லை.

''இதன் பொருள், அரசு பற்றிய மார்க்சியக் கோட் பாட்டை மறுப்பதல்ல, மாறாக அரசுக்கும் ஆளும் வர்க்கத் திற்குமிடையேயான உறவை எளிமைப்படுத்திப் புரிந்து கொள்ள வேண்டாம் என்பதே. 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை'யிலுள்ள- 'நவீன அரசின் நிர்வாக எந்திரம் (executive) என்பது அனைத்து முதலாளிகளின் பொது வான பிரச்சினைகளை நிர்வகிக்கும் ஒரு குழுவே-என்கிற வாசகத்தை மட்டும் மேற்கோளாகப் பயிலும்போது இத்தகைய எளிமைப்படுத்தப்பட்ட புரிதலை அடைகிற வாய்ப்புண்டு. ஆனால் 'பதினெட்டாவது புருமேர்' 'பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்' போன்ற மார்க்சிய முன்னோடிகளின் அரசியலாய்வு நூல்களை ஊன்றிப் படித்தால் அத்தகைய எளிமைப் படுத்தப்பட்ட கருத்தாக் கங்களை அவர்கள் வற்புறுத்தவில்லை என்பது புரியும். அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்குமிடையேயான உறவும்

www.padippakam.com



சரி, பிரச்சினைகளில் அரசு முடிவெடுக்கும் நடைமுறையும் சரி சிக்கலானதாகவும் அமைந்திருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

"இதன் பொருள், அரசு வர்க்க அரசாக இல்லை என்பதல்ல. மாறாக அரசுகள் எப்போதுமே ஆளும் வர்க்கங்களின் அரசுகள்தான். ஆனால் வர்க்க அரசு என்கிற வகையில் அதன் செயல்பாடு குறிப்பிடத்தக்க அளவிற்கு சுயேச்சைத்தன்மை (Autonomous) உடையதாக இருக்கிறது. சொல்லப் போனால் ஒரு வர்க்க அரசாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கே இத்தகைய சுயேச்சைத் தன்மை ஒரு முன் தேவையாக இருக்கிறது. நிலவும் சமூக ஒழுங்கைக் காப்பாற்றி ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் முதன்மையான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு நெகழ்ச்சியும், ஆளும் வர்க்கங்களிடமிருந்தே சுதந்திரத்தன்மையும் பெற்றிருப்பது அரசுக்குத் தேவையாக இருக்கிறது. மாறாக ஆளும் வர்க்கங்களின் நேரடியான கருவியாக அரசு செயல்பட்டால் உடனடி நலன்களை முன்னிட்டு நெடுநோக்கான நலன்களைப் புறக்கணித்துவிடும ஆபத்துண்டு, இது பொன் முட்டையிடும் வாத்தை வயிற்றைக் கிழிப்பதற்கு ஒப்பாகும். இதனால் இத்தகைய சுயேச்சைத் தன்மையை ஆளும் வர்க்கங்களே அனுமதிக்க வேண்டியதாகிறது.

"இன்னொன்றும் முக்கியம். எல்லா அரசுகளுமே ஒரே அளவு சுயேச்சைத் தன்மை பெற்றிருப்பதில்லை. வெவ்வேறு உற்பத்தி முறைகளில் வெவ்வேறு விதமான அரசுகள் இருந்தது தவிர முதலாளிய உற்பத்தி முறையிலேயே முதலாளியக் குடியரசு, போனபார்ட்டிய அரசு, பிஸ்மார்க்கிய அரசு, ஆங்கில அரசு, சாரிய அரசு என்றெல்லாம் வேறுபட்ட அரசுகள் இருந்ததை மார்க்ஸ் சுட்டிக் காட்டியுள்ளார். முதலாளிய அடிக் கட்டுமானத்தில் ஒரே மாதிரியான மேற்கட்டுமானமான முதலாளிய அரசே

படிப்பகம்

www.padippakam.com



அமையும் என்பதாக அவர் எங்கும் எளிமைப்படுத்திச் சொல்லவில்லை. இத்தகைய வேறுபட்ட அரசு வடிவங்கள் வேறுபட்ட அளவுகளில் சுயேச்சைத் தன்மையுடையன வாக இருந்தன.''

—இந்த இடத்தில் இன்றைய இந்திய அரசை மதிப் பிடும்போது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய சில அம்சங்களைக் குறிப்பிட்டுவிட்டு,

''இந்திய அரசு பற்றிய இக்குறிப்பு புரட்சியாளர்கள் கவனத்தில் இருத்தவேண்டிய ஓரம்சத்தைச் சுட்டிக் காட்டு வதாக உணர்கிறேன். 'மார்க்சுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஆய்வுசெய்ய இன்னும் எழுபது மார்க்சுகள் வேண்டும்' என்று ஒரு முறை லெனின் சொன்னார். மார்க்சுக்கும் லெனினுக்கும் பிறகு ஏகாதிபத்தியம் உள்ளிட்ட உலகப் பொருளாதார அமைப்புகளிலும், அரசு வடிவங்களிலும், தொடர்புச் சாதன வலைப் பின்னல்கள் வகிக்கும் பங்கிலும், மத-இன உணர்வுகளின் புதிய பரிமாணங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு ஆய்வு செய்து இன்றைய நடைமுறைகளை வகுக்க இன்னும் எழுநூறு மார்க்சுகளும் லெனின்களும் இன்று தேவைப்படுகின்றனர். இந்த இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மேலும் மேலும் எளிமையின்றி சிக்கலானதாக மாறி வருகின்றன. இந்தச் சிக்கல்களின் முழுப் பரிமாணங்களையும் உள்ள டக்கியதாக நம்முடைய புரிதல் இருப்பது அவசியம். துரதிர்ஷ்டவசமாக இந்நிலையை மா-லெ தோழர்கள் உட்பட மார்க்சியர்கள் யாரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. 'ஆளும் வர்க்கத்தின் (நேரடியான) அடக்கு முறைக்கருவியே அரசு' என்பது போன்ற எளிமைப்படுத் தப்பட்ட உருவக வகைப்பட்ட வாய்ப்பாடுகளையே எந்திரகதியில் தாங்களும் நம்புவதோடு அணிகளுக்கும் பயிற்றுவிக்கின்றனர். எனவே, ''காவிரி நீரைக் கொண்டு

www.padippakam.com



வருவதில் தஞ்சை மிராசுதார்களின் ஜம்பம் பலிக்க வில்லையே, அப்படியானால் மூப்பனார் வாண்டையார் போன்ற தமிழக நிலப்பிரபுக்கள் ஆளும் வர்க்கமாக இல்லையோ'' என ஒரு சாரார் கேட்டு அதனடியாக மார்க்சியமே பொருந்தாது என்கிற கருத்தை முன் வைக்கும் போது நம் தோழர்கள் விழி பிதுக்க வேண்டிய தாகிறது.

''அரசு பற்றிய கருத்தாக்கத்தில் மட்டுமல்ல அடித் தளம்-மேற்கட்டுமானம் பற்றிய உருவக வகைப்பட்ட கண்ணோட்டம், பண்பாட்டுப் பிரச்சினைகள், ஏகாதி பத்தியங்களின் இன்றைய தன்மை, முதலாளிய மீட்பு/சமூக ஏகாதிபத்தியம் (ஸ்டாலின் காலம் வரை தவறுகளே நிகழ வில்லை என்றும் அவர் செத்த அடுத்த நாளே சோசலிசம் கெட்டுப் போனதென்றும் கூறுப்படும் வாய்ப்பாடு), பாட்டாளி வர்க்கக் கட்சி, அரை நிலப்பிரபுத்துவம், அரைக்காலனியம், பாசிசம் போன்ற கருத்தாக்கங்களும் இந்த எளிமைப்படுத்தப்பட்ட வடிவங்களிலேயே புகட்டப் பட்டிருக்கின்றன.

''இதன் விளைவு பாரதூரமானது. இன்றைய மாற் றங்களின் சிக்கலான பரிமாணங்களின் அடிப்படையில் இத்தகைய எளிமைப்படுத்தப்பட்ட புரிதல்களுக்கு எதிராகக் கேள்விகள் கேட்டு மார்க்சியமே ஒரு நெருக்கடிக் குள்ளாகியிருப்பது போன்ற ஓர் மாயையை ஏற்படுத்து வதில் மார்க்சிய எதிரிகள் வெற்றி பெற்றுள்ளனர். (எ.டு: லெனின் நிறுவிய சோவியத்திலும், அதன் படிப் பினைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, மாவோ நிறுவிய மக்கள் சீனத்திலும் முதலாளியம் மீட்கப்பட்டு விட்ட தென்றால் இன்றைய சகாப்தத்தில் சோசலிச நிர்மாணமே சாத்தியமில்லையா?) இந்நிலையைக்கடந்து மார்க்சியம் இன்னும் வெல்ல முடியாத முறையியலாகவே உள்ளது என்கிற நம்பிக்கையை ஊட்டி, செயலுக்கு

www.padippakam.com



இயக்க முதலில் நாம் இத்தகைய எளிமைப் படுத்தப்பட்ட வாய்ப்பாடுகளிலிருந்து விடுபடுவது முக்கியம்.

''இதற்கு வழிபாட்டுத் தன்மையற்ற தேடல் மனப் பான்மையுடன் கூடிய தெளிந்த மார்க்சியப் புரிதல்களும், நுூலமான ஆய்வுகளும் தேவை. மாவோ குறிப்பிட்டது போல **வரட்டுத் தத்துவங்கள் மலத்தைவிட இழிந்தவை...** பாட்டாளி வர்க்கக் கட்சியில் உறுப்பினர் ஆகிவிடுவதா லேயே ஒருவர் புனிதனாகிவிடுவதில்லை மேற்கோள்களை உச்சாடனம் செய்வதைவிட்டுவிட்டு ஒவ்வொரு அம்சத் திலும் மார்க்சிய முன்னோடிகளின் ''தொனி'' என்னவாக இருந்தது என்பதைத் தேடி அறிதல் முக்கியம். ஏனெனில் இத்தகைய தொனிக்கு எதிரான மேற்கோள்களை முன் னோடிகளின் எழுத்துக்களிலிருந்தே குறிப்பிடமுடியும். இதனை **மார்க்ஸ்-எங்கல்சே** ஏற்றுக்கொண்டிருந்தனர். இலக்கிய மதிபபீடுகளில் பொருளாதார வாதம் ஏற்பட்டுப் போனதற்கான **எங்கல்சின்** புகழ்பெற்ற சுயவிமர்சனம் இதற்கோர் சாட்சி. இவற்றையெல்லாம் கணக்கிலெடுத் துக் கொள்வதாக நாம் அவ்வப்போது சொல்லி வந்த போதும், அவையெல்லாம் அடையாளவாதத் தன்மை யுடன் (tokenism) ஒப்புக்குச் சொல்லப்படும் வெற்று முழக்கங்களாகவே அமைந்தன. பழைய குருடி கதவைத் திறடி'' என நடைமுறை வரும்போது வரட்டு மலத்தி லேயே வீழ்ந்தோம்.

''வழிபாட்டு முறையிலிருந்து விலகுவது என்பதில் பரிசீலிக்கப்பட வேண்டிய அம்சங்களில் மார்க்சியப் பாரம் பரியத்திலிருந்து விலகிப் போனவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் கருத்தாக்கங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். **பிளக்கனோவ், காவுட்ஸ்கி, ரோசாலக்சம்பர்க், ட்ராட்ஸ்கி** போன்றோரின் மீது லெனின் மகத்தான மரியாதை கொண்டிருந்ததையும் நாம் அறிவோம். அவர்களது கருத்துக்கள் அனைத்தையும் மார்க்சிய விரோதமானவை என இன்று நாம் புறக்கணித்-

www.padippakam.com


தால் இழப்பு நமக்குத்தான். லெனின் நிர்மாணித்த சோவியத் யூனியனில் அதிகாரவர்க்கம் நிலை நாட்டப் பட்டதை ஆராயும் போது லெனினுக்கும்-ரோசாலக்சம் பர்க்கிற்கும் இடையே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் குறித்து நடைபெற்ற விவாதத்தில் லக்சம்பர்க் என்ன சொன்னார் என்பதைப் பாராதிருப்பது என்ன நியாயம்?

"இன்றைய தேவை திறந்த மனது, தெளிந்த அறிவு, கடின உழைப்பு,"

— என அக்கட்டுரை முடிந்திருந்தது. கிட்டத்தட்ட இந்தக் கட்டுரை முழுவதையுமே மேற்கோளாகக் காட்டி விட்டமைக்கு தோழர்கள் மன்னிக்க வேண்டுகிறேன். இந்தத் தொகுப்பிலுள்ள கட்டுரைகளில் அடி நாதமாக இழையோடும் கருத்துக்களை வந்தடைந்த சூழலைக் கோடிட்டுக் காட்டுவதாக இருப்பதனால் இப்படிச் செய்ய நேர்ந்துவிட்டது இந்தக் கட்டுரைகளை எழுதும்போதோ இப்போதோ நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் பங்களிப்பை மறுதலிப்பது என் நோக்கமில்லை. நடைமுறையிலுள்ள சிக்கல்களை நேர்மையாக எதிர்கொண்ட போது எனக்கேற்பட்ட குழப்பங்கள், அவற்றை எனக்கே உரித்தான முறையில் நான் தீர்த்துக்கொள்ள முயற்சித்தமை ஆகியவற்றைத் தோழர்களோடு பகிர்ந்து கொள்ளும் முயற்சியாகவே இக் கட்டுரைகள் அமைந்தன. கட்சி அணிகள் மத்தியில் இவை ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தவே செய்தன. பொதுவான உலக அரசியல் சூழலும் அவர்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்பின. இந்தக் கேள்விகளுக்குப் பதில் காணுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமில்லை என்பது தெளிவு. இந்தப் பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு பதில் காணும் அவசியத்தை அங்கீகரிப்பதே முதற்படி. ஆனால் பல்வேறு இயக்கங்களின் தலைமைகளும் அதற்குத் தயாராக இல்லை. எனவே இந்தச் சிந்தனைகள் மார்க்சிய விரோதமானவை என்றும், நவ மார்க்சியச் சிந்தனைகள்

www.padippakam.com


என்றும், கேள்விகளைக் கேட்டு அணிகளைக் குழப்புவதே நோக்கமெனவும் கருத்துக்களைப் பரப்பினர். இந்தப் பின்னணியில்தான் ''கற்றலின் கேட்டல் நன்று'' என்கிற கட்டுரையை 'தளம்' (பிப்—ஏப்—1990) இதழில் எழுத நேர்ந்தது. அதில்—

''எல்லாவற்றையும் சந்தேகி என மார்க்ஸ் சொன்னார். கட்சி மரபில் மறக்கடிக்கப்பட்ட அல்லது மாற்றியமைக்கப்பட்ட விசயங்களில் இதுவும் ஒன்று. எல்லாவற்றையும் சந்தேகி எக்ஸ்- ஐத் தவிர அல்லது ஒய்- ஐத் தவிர அல்லது எக்ஸ்-ஒய்-ஐத்தவிர என்பதுதான் அதன் இன்றைய வடிவம். கட்சிக்குள் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஒட்டுமொத்தமாய் தொழிலாளி வர்க்கத்தின் ஏகப் பிரதிநிதியாய் இருப்பது கட்சி. எனவே தொழிலாளி வர்க்கத்திற்கு எது சரி என்பதை அதன் ஆற்றலையும், சாரத்தையும் கிரகித்துக் கொண்ட முன்னணிப் படையாகிய கட்சி தீர்மானிக்கும். எனவே அணிகள் கருத்துருவாக்கத்தில் பங்கு பெற வேண்டிய அவசியமில்லை. தலைமை அப்படி என்ன தான்தோன்றித்தனமாகவா முடிவு செய்துவிடும்? மார்க்சிய-லெனினிய விதிகளின்படி தானே நடைமுறைப்பிரச்சினைகளில் முடிவெடுக்கப் படுகிறது? மார்க்ஸ்-லெனின்-ஸ்டாலின்-மாவோ ஆகியோரது மேற்கோள் ஆதாரங்களுடன் எடுக்கப்படும் முடிவுகளில் கேள்வி என்ன வேண்டியிருக்கிறது? ஆக, ராணுவ மாதிரியில் மேலிருந்து கீழாக ஒழுங்கமைக்கப்பட்ட கட்சியின் முன் தேவையாக மார்க்சிய-லெனினிய விதிகளைக் கட்சிகள் உருவாக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மா-லெ முன்னோடிகள் யாருமே தங்கள் சிந்தனைகளை விதிகளாய்ச் சுருக்க முயற்சித்ததில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவர்கள் யாரும் இயக்கவியல் அல்லது வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்றெல்லாம் புத்தகங்கள் எழுதியதில்லை. தூலமான ஆய்வுகளின் அடிப்படையில் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொன்

படிப்பகம்

www.padippakam.com



னவையெல்லாம் பின்னர் இப்படித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டன. ''லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்'' என்பன போன்ற ''அடிப்படை அம்ச'' நூல்கள் உருவாக்கப்பட்டன. பைபிள் வடிவில் கையடக்கமான மேற்கோள் நூற்கள் பதிப்பிக்கப்பட்டன. நூல்தொகுப்பு வேலைகள் வரலாற்றில் எப்போதெல்லாம் செய்யப் பட்டன என்பது கூட ஒரு சுவையான விசயந்தான். ஒரு அமைப்பு நிறுவனமாக இறுகும்போது, அதற்குரிய கருத்துக்கள் கருத்தியலாக உருப்பெறுகின்றது. அப்போது தான் தொகுப்பு வேலைகளும் நடைபெறுகின்றன. சங்க இலக்கிய நூல்தொகுப்பிலிருந்து பௌத்த நூல்களின் தொகுப்பு, மார்க்ஸ்-ஏங்கல்ஸ்-லெனின் நூல்தொகுப்பு வரை இது பொருந்தும்.

''இவ்வாறு 'அடிப்படை அம்ச' நூல்கள், தேர்வு நூல்கள் போன்ற உருவாக்கத்தின் விளைவாக முன்னோடி களின் மொத்த எழுத்துக்களில் ஒரு குறிப்பிட்ட தேவையின் நோக்கில், குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டுமே முன் வைக்கப்படுகின்றன. இதன் மூலம் பிற நூல்கள் மீது ஒரு வகைத் ''தடை'' விதிக்கப்படுகின்றது எனச் சொன் னால் அது மிகையான குற்றச்சாட்டு அல்ல. லெனினைப் படிப்பது என்றால் 'என்ன செய்யவேண்டும்', 'அரசும் புரட்சியும்' 'ஓரடி முன்னால் ஈரடி பின்னால்' இப்படிச் சில நூல்கள். அதே போல மாவோவின் சில எழுத்துக்கள். மார்க்ஸ் எங்கல்சின் நூல்களை யாரும் படிக்கச் சொல்வது மில்லை; யாரும் படிப்பதுமில்லை. முன்னோடிகளின் நூல்களுக்கே இதுதான் கதி என்றால் அதிகாரபூர்வப் பாரம்பரியத்தில் அடங்காத கிராம்சி, அல்துஸ்ஸர் போன்றோரின் எழுத்துக்கள் மீதான 'தடை' பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

•''தொழிலாளி வர்க்கம் என்பதை ஒரு படித்தான சிந்தனையுடைய சம அரசியல் மட்டத்திலான, ஒரே பிரக்ஞையுடைய குழுமமாக மார்க்சோ-எங்கல்சோ

www.padippakam.com



எங்கும் குறிப்பிட்டதில்லை. எனில் கட்சி என்பதை மொத்தமான தொழிலாளிகளின் ஏகப்பிரதிநிதி என எப்படிச் சொல்லலாம் என்பதைப் போன்ற கேள்விகளும் வாதங்களும் உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் நிறைய நடைபெற்று உள்ளன. சனநாயக மத்தியத்துவம், பாட்டாளி வர்கக்ச் சர்வாதிகாரம், சோவியத் அதிகாரம் ஆகியவை குறித்து லெனின், ட்ராட்ஸ்கி, ரோசா லக்சம்பர்க் புகாரின் ஆகியோரிடையே கடுமையான கருத்து மோதல்கள் நிகழ்ந்ததுண்டு. இந்த விவாதங்கள் அனைத்திலும் லெனினின் நிலைபாடு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியானதாக இருந்தது எனச் சொல்ல முடியாது. இப்படிச் சொல்வது லெனினைக் குறைத்து மதிப்பிடுவதல்ல. சனநாயகத்தைக் காட்டிலும் மத்தியத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டதெனச் சொல்லப்படுகிற 'ஓரடி முன்னால் ஈரடி பின்னால்' (1904) நூலைத் தொடர்ந்து ட்ராட்ஸ்கி, ''நமது அரசியல் பணிகள்'' என்னும் நூலை வெளியிட்டார் தொழிலாளி வர்க்கத்திற்குப் பதிலாகக் கட்சியை வைப்பதென்பது ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றை வைக்கும் 'பதிலியிடும்' போக்கிற்கு (Substitutionism) இட்டுச் செல்லும் என எச்சரித்தார். 'லெனின் அறிமுகப்படுத்துகிற முறைகளின் விளைவாகக் கீழ்க்கண்டவை ஏற்படும். கட்சி முழுமைக்கும் கட்சி அமைப்பு பதிலியாக மாறிவிடும், பின்பு கட்சி அமைப்பை மத்திய கமிட்டி பதிலி செய்யும். இறுதியில் மத்திய கமிட்டியை யாரோ ஒரு ஒற்றைச் சர்வாதிகாரி பதிலி' செய்வார்'- என்றார் ட்ராட்ஸ்கி. அதீத மத்தியத்துவம் என லெனினது முறையை வருணித்த ரோசா, சனநாயக மத்தியத்துவம் என்பதற்குப் பதிலாக **சமூக சனநாயக மத்தியத்துவம்** குறித்துப் பேசினார். இது எந்திரத்தனமான கீழ்ப்படிதலைக் கோராது. தலைமையிலிருக்கும் கட்சி மையத்தை உறுப்பினர்கள் குருட்டுத் தனமாய் பின்பற்ற வேண்டியதில்லை என்றெல்லாம்

மா—2

படிப்பகம்

www.padippakam.com



சொன்ன ரோசா கூட தாம் குறிப்பிட்ட சமூக சனநாயக மத்தியத்துவத்தைப் பற்றி விரிவான, தூலமான ஆய்வுகளை முன்வைக்க இயலாமற் போய்விட்டது.

''இதன் பொருள், லெனின் சொன்னதெல்லாம் தப்பு; மற்றவர்கள் தான் சரி என்பதல்ல. இரண்டு அம்சங்கள் முக்கியமாகப் படுகின்றன. ஒன்று, லெனின் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முன் வைத்த கருத்துகளைத் தூலமாகப்பார்க்காமல். தனியாகப் பிரித்தெடுத்து பொதுமைப்படுத்தி எல்லாச் சூழலுக்கும், எல்லாக் காலத்திற்குமான கட்டளைகளாக மாற்ற வேண்டியதில்லை. மென்செவிக்குகளும், போல்செவிக்குகளும் இறுதியாகப் பிரிய நேர்ந்த போது அமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட நூல் 'ஓரடி முன்னால் ஈரடி பின்னால்'. கட்சிக்குள் பொருளாதாரவாதம் தலைதூக்கிய போது பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகப் போராடுவது என்பதைவிட தொழிலாளர்க்கு அரசியல் உணர்வு ஊட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட விவாத நோக்கிலான நூல் 'என்ன செய்ய வேண்டும்?' எனவே தொழிலாளி வர்க்கத்திற்குச் சுயமாக வர்க்க உணர்வு கிடையாது, கட்சியே அதனை ஊட்ட வேண்டும் என 'விதி'யாக்கி, தொழிலாளிகளும் மக்களும் அரசியல் உணர்வற்றவர்கள், கட்சியே எல்லாவற்றையும் விட உயர்ந்த வர்க்க முன்னோடிப் படை என்பது முதல், கட்சி ஊழியர் எல்லாரையும் விட உயர்ந்தவர், எப்போதுமே சரியானவர் என்கிற நடைமுறைவரை கொண்டு செல்ல அந்நூல் ஆதாரமாகிவிடக் கூடாது. ஆனால் கடந்த காலத்தில் அப்படித்தானே நடந்து இருக்கிறது. 1904 வாக்கிலும் பின்னர் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட காலத்திலும் கட்சி சனநாயகம் பற்றியெல்லாம் விரிவாய்ப் பேசிய ட்ராட்ஸ்கி, தான் அதிகாரத்தின் உச்சகட்டத்தில் இருந்த போது (1921) கட்சி சர்வாதிகாரத்தை வேறு யாரைக் காட்டிலும் அதிகமாக வலியுறுத்தியிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



'தோழர்களே-நாம் யாரும் கட்சியைக்காட்டிலும் சரியாக இருக்க விரும்பவில்லை. இருக்கவும் முடியாது. இறுதி ஆய்வில் கட்சியே எப்போதும் சரியானது...... கட்சிக்கு எதிராக ஒருவர் சரியாக இருக்கக்கூடாது என்பதை நான் அறிவேன். கட்சி மூலமாகவே ஒருவர் சரியாக இருக்க முடியும். ஏனெனில் சரி தவறைக் கண்டுபிடிப்பதற்கு நமக்குக் கட்சியைக் காட்டிலும் சிறந்த வழிமுறை ஒன்றை வரலாறு படைத்துத் தரவில்லை'

—என்றார் ட்ராட்ஸ்கி. தனியாக எடுக்கும் முடிவைக் காட்டிலும் பலரும் இணைந்து எடுக்கும் முடிவு சரியாக இருக்கும் வாய்ப்பு அதிகம் என்கிற அளவில் இந்த வாதம் சரியாக இருக்குமானாலும் நடைமுறை அவ்வாறு இல்லை என்பதுதான் வரலாறு. கட்சி என்பதென்ன? இதற்குத் தான் ட்ராட்ஸ்கியே 1904இல் பதில் சொல்லிவிட்டாரே. கட்சி என்பது மத்திய கமிட்டி; மத்திய கமிட்டி என்பது பெருந் தலைவர். 'ஸ்டாலின் எப்போதுமே சரியானவர்' என்கிற வாசகங்களோடு அலுவலகங்களில் ஸ்டாலின் படங்கள் மாட்டப்பட்டதை இத்தோடு இணைத்துப் பார்க்கலாம். ஒரு புதிய பண்பாட்டை உலகிற்கு வழங்கிய தென ரசியப் புரட்சி குறித்துப் பெருமிதங் கொண்ட அறிஞர் ஈ எச்.கார். ரசியாவில் ஏழாவது காங்கிரசுக்குப் பின். (1918) பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டதில்லை எனக் குறிப்பிட்டுள்ளது கவனத்திற்குரியது.

இரண்டு, லெனினே பிற சந்தர்ப்பங்களில் மேலும் சம நிலையான கருத்துக்களை உதிர்ததுள்ளார் என்பதை நாம் மறந்துவிடலாகாது. தனது இறுதிக் காலத்தில் கட்சியிலும் நிர்வாகததிலும் அதிகாரத்துவம் வளர்ந்து போனதைக் குறித்து விரிவான ஆய்வுகளை அவர் செய்ய இடலாது போயினும் அது குறித்து அவர் நாத்தழுதழுக்க உதிர்த்துள்ள கருத்துக்களை மறந்துவிட்டு முன்பு குறிப்

www.padippakam.com



**பிட்ட இரண்டு நூல்களை மட்டும் மேற்கோள் காட்டி கட்சி வழிபாட்டிற்கு (Party cult) வழி வகுப்பது என்ன நியாயம்?**

''கட்சி வழிபாடு கூடாது எனச் சொல்வது கட்சியை மறுப்பதல்ல. மார்க்சிஸ்டாக இருக்கும் எவனும், அவ்வளவு ஏன் சமூக மாற்றத்தை நேசிக்கும் எவனும், கட்சியை மறுக்க மாட்டான். உறுதியாக கட்சியின் தலைமையில் புரட்சி என்பதை மேலே கூறியுள்ள விசயங்கள் மறுப்ப தாகாது. நடந்த போன தவறுகளுக்குக் கட்சி வடிவம், உட் கட்சி சனநாயகம் பற்றிய நமது பார்வைகள் எத்தனை தூரம் காரணமாயின என்பதை நாம் வெளிப்படையாகப் பேசியாக வேண்டும். **பல அம்சங்களில் நாம் உள்ளடக் கத்தை மட்டும் மாற்றி வடிவத்தை அப்படியே வைத்துக் கொண்டால்போதும் என்றே நினைத்தோம். வர்க்க- சமுதாயம் கண்ட பல வடிவங்கள்- இலக்கியம் கல்வி, கட்சி அமைப்பு, அரசு தொழிற்சாலை நிர்வாகம், போலீஸ் உளவுத்துறை...** உட்பட நாம உருவாக்கப் போகிற வர்க்கமற்ற சமூகத் திற்கும் பொருந்தும் என்று கருதலாம். முதலாளிய நிறுவனங்களின் நிர்வாக முறையையே கட்சி அமைப்புக் கும் நாம் வைத்துக் கொண்டோம். மார்க்சிய லெனி னியத்தை வேதமாக்கினோம். கட்சியைக் கோவில் ஆக்கி னோம். விக்கிரகங்களை ஆதாரித்தோம். இவையெல்லாம் சரிதானா? ரஷ்ய சீன அனுபவங்களுக்குப் பின்னும் கூட இதையெல்லாம் யோசிக்காவிட்டால் பின் எப்போது யோசிப்பது?

மார்க்சிய மரபிலேயே மாற்று வடிவங்கள் குறித் தெல்லாம் பலர் முயற்சித்தனர். ப்ரெக்ட் போன்றோர், கலையில் முயற்சித்தனர் (பார்க்க அ. மார்க்சின், ப்ரக்டின் இன்னொரு பரிமாணம்') மாவோ இந்த வடிவத்திற் குள்ளேயே கட்சித்தலைமையின் அதிகாரத்தை கட்டுக்குள் வைக்க என்ன என்னவோ செய்து தோற்றுப் போனார். ஏகாதிபத்தியத்தையும் சியாங்கே சேக்கையும் வீழ்த்திய

www.padippakam.com



மாவோ கட்சிக்குள் தோற்றுப்போனார். 1918-இல் ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியின் முதலாம் காங்கிரசில் ரோசா இப்படி ஒருபிரகடனம் செய்தார். ஜெர்மானிய பாட்டாளி வர்க்க மக்களின் அறுதிப் பெருபான்மையான, கருத்து வேறுபாடற்ற விருப்பு வெளிப்படுத்தப்படும் வரை **ஸ்பார்டகஸ் யூனியன்**, அரசு அதிகாரத்தை கைப் பற்றாது. ஸ்பார்டகஸ் சங்கத்தின் கொள்கைகள், குறிக் கோள்கள், செயல்வழிகள் ஆகிய அனைத்தையும் மொத்த தொழிலாளிகளும் பிரக்ஞை பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே அரசு அதிகாரத்தை அது கையில் எடுக்கும். இப்படி மத்திய கமிட்டியே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் என்பதற்கு நேர் எதிரிடையாக இன்னொரு எதிர்நிலைபாட்டைச் செயல்படுத்த முயற்சித்து தோற்றுப்போனார்.

''மக்களை அச்சுப் பதிவுகளாக (Stero typer) ஆக்கு வதை முதலாளிய அமைப்பு பிரக்ஞைபூர்வமாக செய் கிறது. ஒரே மாதிரி உடுக்கிற, ஒரே மாதிரி சிந்திக்கிற, ஒரே மாதிரி ஓட்டுப்போடுகிற மந்தைகள் அதன் சந்தை மற்றும் அரசியல் தேவைகளுக்கு அவசியம். நாம் செய்ய வேண்டியது அதற்கு நேரெதிராகச் சிந்திக்கிற செயல் படுகிற மந்தைகளை உருவாக்குவதல்ல. மந்தைகளே இல்லாமற் செய்வதே நமது நோக்கம். அதற்கு முதற் படியாகக் கட்சிக்குள் கருத்து உருவாக்கும் வடிவத்தையும், அணிகளைப் பயிற்றுவிக்கும் வடிவத்தையும் நாம் மாற்றி யாக வேண்டும். கருத்துப் பரவல் என்பது செய்தியாக -ஒரு வழிப் பாதையாக இருக்கக் கூடாது. ஒரு நிகழ்வு என்றால் அது குறித்துக் கருத்துச் சொல்வதற்குக் கட்சிப் பத்திரிகை அல்லது சுற்றறிக்கை வரட்டும் எனக் காத்திருப்பவர்களாக அணிகளை ஆக்கிவிடக் கூடாது. கட்சி ஒரு வகையில் தனது அணிகளைச் 'சொகுசாக' வைத்திருக்கும் வேலை அது.''

www.padippakam.com



—இந்த இடத்தில் கேள்வி கேட்டு அறிவை உற்பத்தி செய்துகொள்ளும் பிரச்சனையுருவாக்க உரையாடல் வழிப் பயிற்சி முறை பற்றி அக்கட்டுரை சுருக்கமாகப் பேசியது (விரிவாக அறிய பார்க்க: நிறப்பிரிகை-4இல் வெளிவந்த **பாவ்லோ ப்ரேயர்** பற்றிய கட்டுரை)- தொடர்ந்து-

''வெளிப்படை எனத் தோன்றுவதெல்லாம் வெளிப்படை அல்ல என அமைப்பியலாளர்கள் இன்று சொல்வதைத்தான் அன்றே மார்க்ஸ் ரத்தினச் சுருக்கமாக்கி 'எல்லாவற்றையும் சந்தேகி' என்றார். நமக்கு வெளிப்படையானது என அளிக்கப்பட்டதெல்லாம் முதலாளிய மாயைகளால் போர்த்தப்பட்டவைதான்- புரட்சியாளர்களாகிய நம்மிடம் இருக்கும் பல சிந்தனைகள் உட்பட இந்த மாயத்திரைகளைக் கிழித்துப் பார்க்கும் பயிற்சி பெறும்போதுதான் அச்சுப் பதிவிலிருந்து விடுதலை பெற முடியும். எனவே கட்சிக்குள் கருத்துருவாக்கத்தில் விவாதங்கள் அனுமதிக்கப்படுதலும், அவை வெளிப்படையாக நடப்பதும் அவசியம். அணிகள் தலைமையோடு கருத்து மாறுபடும் உரிமை அளிக்கப்பட வேண்டும். கட்சியின் பன்மைத் தன்மை வெட்கத்துக்குரியதல்ல. எதார்த்தத்தின் பிரதிபலிப்பு அது. மாறாக ஒருமையை வலியுறுத்துவது தான எதார்த்தத்தைச் சிதைப்பது. **மிலிபான்ட்** சொல்வது போல இந்தச் சிதைப்பின் உச்சவடிவம் தான் ஒற்றைப் பரிமாணக் கட்சி (Marxism and Politics).

''இப்படியெல்லாம் சொல்வது எளிது. ஆனால் கடுமையான வர்க்கப் போராட்ட களத்தில் உள்ளவர்கள், கொடிய ஆயுதங்களை கையில் வைத்துள்ள எதிரியை எதிர்கொண்டுள்ளவர்கள் உருக்குப் போன்ற கட்சியாக இருக்க வேண்டாமா? மக்களிடம் செல்லும் போது முடிவுகளுடன் செல்ல வேண்டாமா? எல்லாவற்றையும் விவா

www.padippakam.com



தத்தில் உள்ளது எனச்சொல்வது சரியா? என்கிற கேள்வி கள் நியாயமானவையே. இந்த நியாயங்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு சுய சிந்தனை மிக்க அணி களை உருவாக்கக் கூடிய கட்சி வடிவத்தை நாம் நடை முறையில் உருவாக்க வேண்டும். ஒன்று நிச்சயம். பெரும் பான்மையான கருத்துகளை உள்ளடக்கி முடிவுகள் எடுப்பது என்பதும் வன்மையான முறையில் களத்தில் செயல்படுவது என்பதும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. விவாதமும் நடைமுறையும் ஒன்றுக்கொன்று முரணானது அல்ல. மாறாக பெரும்பான்மையானவர் களை உள்ளடக்கிச் சனநாயக முறையில் கருத்து உருவாக் கும்பொழுதே அமைப்பு வலுப்பெறுகிறது. அக் கருத்தின் அடிப்படையிலான செயல்பாடு உறுதியாகிறது விவா தங்கள் உள்ளபோது நடைமுறை சாத்தியமல்ல என ஒதுங்கினால் நாம் அணிகளை இழக்க நேரிடும் ஒரு குரல், ஒற்றைப் பரிமாணம் என்று சொல்லிச் சொல்லித்தான் நாம் உடைந்து சிதறுண்டு போனோம். நமக்குள் இருக்கும் விவாதங்களை என்னதான் மறைத்தாலும் எதிரிகள் அதனை தெரிந்துகொண்டு விடுகின்றனர். கருத்து மாறு படுவதற்கும் மாற்றுக் கருத்துக்களை முன் வைப்பதற்கும் இப்போது கூடத்தான் வழிமுறைகள் உள்ளனவே என்று தோன்றலாம். நடைமுறையில் அவை போதாது. இன்றைய வடிவத்தில் இது முழுமையாக சாத்தியமில்லை.

"இந்தக் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிய தூலமான அமைப்பு வடிவம் நடைமுறையில் சாத்தியமே. மிகுந்த திறமையும், அதிகப்படிப்பும், நிறைந்த அனுபவ மும், தியாகப் பாரம்பரியமும் உடைய நமது தோழர்கள் இவற்றையெல்லாம் சாத்தியப்படுத்த வல்லவர்களே. ஆனால் அதன் முதற்படியாக இந்த எதார்த்த உண்மை களை நாம் அங்கீகரிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். ஒரு தேக்கத்திலிருந்து மீண்டும் அடுத்த அடி எடுத்து வைக்கும் போது புதிய பாடங்களைக் கற்றவர்களாக நாமிருக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். மரபு நமது கல்விக்கூடமாக இருக்க வேண்டுமேயொழிய சுமையாகிவிடக்கூடாது.''

—என்கிற கருத்துக்களை அக்கட்டுரை வலியுறுத்தியது. முன்பே குறிப்பிட்டதுபோல கட்சி மட்டத்தில் பெரிய விவாதங்கள் இவைபற்றி உருவாகாவிட்டாலும் அணிகள் மத்தியில் இவை குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தவே செய்தன. உலக அளவிலான அனுபவங்களும் நமக்கு ஏதோ ஒரு வகையில் பாடங்களைக் கற்பிக்கின்றன. புரட்சிகர அமைப்புகளிலிருந்து விலகி பல்வேறு குழுக்களாக இன்று செயல்படுகின்ற பல தோழர்களிடம் உள்ள பல்வேறு குறைபாடுகளுக்கும் மத்தியில் இத்தகைய பன்மைத் தன்மை உரையாடல், கருத்து மாறுபாடுகளுடன் கூடிய கூட்டுச் செயல்பாடுகள முதலியவை வளர்ந்து வருவது நம்பிக்கையூட்டக் கூடியதாக அமைகின்றது.

இந்த விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த பின்னணியில் எழுதப்பட்டவைதான் இந்நூலிலுள்ள கட்டுரைகள். அவை முழுமையாக தொகுக்கப்பட்டுள்ளன. பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவை என்பதால் மிகச் சில விசயங்கள் ஆங்காங்கு திருப்பிச் சொல்லப்பட்டிருக்கலாம். அவற்றின் விசய முக்கியத்துவம் கருதி அவை அப்படியே விடப்பட்டுள்ளன. பெரும்பாலும் ரசிய/சீன அனுபவங்களடியான கட்டுரைகளாக இவை அமைந்துள்ளன. ஏற்கெனவே 'தோழமை' வெளியீடாக வந்துள்ள (1989) 'ரசியாவில் நடப்பதென்ன?' தொகுப்பிலுள்ள கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை. ஆழமான பல்வேறு செய்திகள் விவாதிக்கப்பட்டிருந்தாலும் இவை தொடக்க முயற்சிகளே. இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன என்பதே இக்கட்டுரைகளை மீண்டும் படிக்கும்போது தோன்றுவது......

□ □ □

www.padippakam.com

# 2. "சோசலிசக் கட்டுமானம்- தத்துவமும், நடைமுறையும்" *

## (அ)

வினோத் மிஸ்ரா குழுவினர் என்று பரவலாக அழைக்கப்படும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ)யின் மத்திய பத்திரிக்கையான "லிபரேஷனி"ல் சுமார் இரண்டாண்டு காலம் தொடராக எழுதப்பட்டு வந்த கட்டுரையின் தமிழாக்கமான இந்நூல் அக்கட்சியின் தமிழ் மாநிலப் 'பேச்சாளராக' அறிமுகப்படுத்தப்படும் சிதம்பரநாதனால் வெளியிடப்பட்டுள்ளது ரசிய, சீன நிகழ்வுகள் குறித்த அக்கட்சியின் அறிக்கைகள் சிலவும் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளன. சோசலிசக் கட்டுமானம் குறித்த ஒட்டுமொத்தமான குறிப்புரை எனவும், தமிழில் இது குறித்து வெளிவரும் முதல் நூல் எனவும் இந்நூல் குறித்து அதன் பதிப்புரை, முன்னுரை ஆகியவற்றில் குறிப்பிடப்படுகிறது (பக். 2,4)

"ரசியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அடிக்கட்டுமானம் சோசலிசமாகவே உள்ளது; மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதி கட்டுமானத்துடன் ஒத்தும், ஒரு பகுதி ஒத்துப் போகாமலும் இருக்கிற சோசலிசக் கட்டுமானங்களின் பல வகைகளாகவே இந்நாடுகளைப் பார்க்க

---

* 'அரிந்தாம் சென்' இத்தலைப்பில் எழுதியுள்ள நூலொன்றின் விமர்சனமாய் எழுதப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com


வேண்டும். இன்றைய சீர்திருத்தங்கள் சில தற்காலிகத் தோல்விகளைச் சரி செய்வதற்கான சோசலிசவகைப்பட்ட சீர்திருத்தங்களே; பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இந்நாடுகளில் கைவிடப்படவில்லை'' என்பன இந்நூல் வலியுறுத்தும் முக்கியமான கருத்துக்கள் ''லெனின், மாவோ வாழ்ந்த காலமில்லை இது; சூழல் மாறியுள்ளது. புதிய தீர்வுகள் தேவை. பழைய மேற்கோள்கள் பயனில்லை'' (பக்.1) என்கிற உற்சாகமூட்டும் செய்திகளோடு தொடங்கும் இந்நூலைப் படிக்கும் போது கவனத்திற் பதிகிற சில முக்கிய குறிப்புகள் மட்டும் சுருக்கமாய் இங்கு முன் வைக்கப்படுகின்றன.

1. சோசலிச கட்டுமானம் குறித்து இங்கு ஏற்கெனவே பல நூல்கள் தமிழில் வந்துள்ளன, **சுனில் பவாரின்** சோவியத் யூனியனில் முதலாளித்துவம் மீட்கப்பட்டது எப்படி? **ஜார்ஜ் தாம்சனின்**. முதலாளியமும் அதன்பிறகும்' **பால்ஸ்வீசியின்**'புரட்சிக்குப் பிந்திய சமுதயாம்,' ம.க.இ.க' வெளியீடாகிய 'லெனினிசமா, சமூக ஏகாதிபத்தியமா?' எமது **தோழமை** வெளியீடுகளாகிய 'ரசியக் கரடியின் இன்னொரு முகம்', 'ரசியாவில் நடப்பதென்ன?', 'சீனமும்' போன்றவை இவற்றில் சில. **புறப்பாடு-26இல்** வந்துள்ள **சமிர்அமினின் நூல்** பற்றிய வாசிப்பும் இத்துடன் இணைத்துப் பார்க்கத் தக்கது. எனவே இதனை இது குறிந்து வரும் முதல்நூல் எனச்சொல்வது நியாயமற்றது.

2. இது மற்ற நூல்களைப் போலல்ல. சோசலிசக் கட்டுமானம் குறித்த ஒட்டுமொத்தமான குறிப்புரையாக அமைந்துள்ளது என்று கூறுவதும் அபத்தமே. சோசலிசக் கட்டுமானம் குறித்து இன்று விவாதத்தில் உள்ள எந்த முக்கியப் பிரச்சினையும் இந்நூலுக்குள் தீர்க்கப்படவில்லை. எடுத்துக்காட்டுகளாக சில மட்டும்- நூலுக்குள் காணப்படும் சில வாக்குமூலங்கள்:

படிப்பகம்

www.padippakam.com



(i) சோவியத் யூனியனின் 'தாறுமாறான' தன்மைகள் பற்றி: ஆழமான ஆய்வுகளும் விவாதங்களும் தேவைப்படுகின்றன (பிற்சேர்க்கை பக்:7)

(ii) ஹங்கேரி/ சீனா போன்று உலக முதலாளியத்தில் இணைந்து பணவீக்கத்திற்குப் பலியாவது சரியா இல்லை ரசியா/போலந்துபோல அதீத மத்தியத்துவத்திற்கு முக்கியம் கொடுத்து தேக்கத்தில் முடிவது சரியா? பரிசோதனைகள் சென்று கொண்டிருக்கின்றன, விவாதங்கள் தொடர்கின்றன. நடைமுறையிலிருந்து பெறப்படும் விடை இன்னும் உதித்தெழ வேண்டியிருக்கிறது' (பி. சே. 40)

(iii) கலாச்சார புரட்சி பற்றிய கருத்துகள் சர்ச்சைக் குரியவை (பக் 66).

(iv) யூகோஸ்லேவியா சோசலிச சமூகமா? விலகலா? தேசிய விசையை பாதுகாத்தது சரியா? இவை விவாதப் பொருளாகவே இருந்து வருகிறது (பக். 77)

(v) சீன மாணவர் போராட்டம் பற்றி: விவாதத்துக் குரிய விசயமாய் இருக்கிறது (பக். 106).

(vi) சீன மாற்றங்களின் மூலம் ஏற்படவிருக்கும் முதலாளிய மாற்றங்களை ஒட்டுமொத்த அரசு கட்டுப்பாடு முதலியவை எந்த அளவு நடுநிலைப்படுத்தும்? நடை முறை மட்டுமே பதில் சொல்லக்கூடும்.

(vii) சோவியத்/ அமெரிக்க ஆயுதப்போட்டி குறித்த பெத்தல்ஹீம்/ ஸ்வீஸி விவாதம்: இரண்டிலுமே தவறுகளும் உண்மைகளும் உள்ளன. இந்தப் பிரச்சினை ஆழ்ந்த விவாதம் மற்றும் படிப்பைக் கோருகிறது.

இப்படி மேலும் பல உதாரணங்களை காட்ட முடியும். இந்த கேள்விகளுக்கெல்லாம் உடனடி பதில் என்பது சாத்தியமில்லை என்பது உண்மைதான். எனில்

படிப்பகம்

www.padippakam.com



ஒட்டு மொத்தமான குறிப்புரை என்று சொல்லிக்கொள்வது என்ன நியாயம்?

3. ''இந்த ஆய்வு ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட எந்த நிலைப்பாட்டையும் நிலை நிறுத்த மேற்கொள்ளப் பட்டதல்ல விருப்பு வெறுப்புகளின்றி எந்த விதமான முடிவுகட்கும் தயாராக ஆய்வைத் தொடங்கினோம் (பக். IV)''. இதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே இந்தக் கட்சியின் தலைமையிடத்தில் இத்தகைய கருத்து மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன என்பதும் அது குறித்த அணிகளின் மாற்றுக் கருத்துக்களை மாற்றும் முயற்சியில் தலைமை இருந்து வந்தது என்பதும் சகலரும் அறிந்த உண்மை

தவிரவும் இந்நூலைக் கவனமாக வாசித்தால் ரசியா சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சோசலிச நாடுகள், சீர்திருத்தங்கள் வரவேற்கத் தக்கன என்கிற முடிவுகளை நோக்கி தொடக்கம் முதல் இறுதி வரை கவனமாக கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளது தெரியும். வெறும் மேற்கோள்களின் தொகுப்பாகவே அமைந்துள்ள இந்நூலில் இந்த நோக்கிலேயே **மார்க்ஸ், எங்கல்ஸ்; லெனின், மாவோ, டெங், கோர்ப்பசேவ்**, ஆகியோரின் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாய் சில:

(i) மார்க்ஸ் -எங்கல்ஸ் இருவரின் எழுத்துக்களிலும் பொதுவுடைமைச் சமுதாயம், மாறுதல் கட்டம் ஆகியவை குறித்த தூலமான முழுமையான வரையறைகள் இல்லாத போது பல்வேறு தத்துவ விளக்கங்களுக்கு அடிப்படையான சிந்தனைப் பொறிகள் அவற்றில் உண்டு. இவற்றுள் பொதுவுடமை சமுதாயம் என்றால் பழைய சமுதாயத்தின் பிறப்படையாளங்களோடு இருக்கும், தனிச்சொத்து அழிக்கப்படும், உழைப்புசக்தி பண்டமாகாது. நவீனப் படுத்தப்பட்ட தொழில்மயமாதலிருக்கும் என்பன

www.padippakam.com



**போன்ற கருத்துக்கள் மட்டுமே இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.**

''முதலாளியச் சமுதாயத்தின் அனைத்து வடிவங்களும் தகர்த்தெறியப்பட்டு மகத்தான மாற்றங்கள் நிகழ்த்தப் பட வேண்டும்; முதலாளிய ராணுவம் கலைக்கப்பட வேண்டும்; கம்யூனின் தலைமை உறுப்பினர்களிலிருந்து அடிநிலைப் பணியாளர் வரை தொழிலாளரின் ஊதியத் தையே பெற வேண்டும்; பெருமைக்குரிய, உயர் தலைமை யாளர்களின் உயர் ஊதியங்கள் மட்டுமன்றி பெருமைக் குரிய தலைமைகளே நீக்கப்பட வேண்டும்; கம்யூன் தேர்ந் தெடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும்; அதில் பெரும்பான் மையான தொழிலாளிகள் இருக்கவேண்டும்; சட்டத்தை இயற்றுவது மட்டுமல்ல அவற்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூன் உறுப்பினர் களிடமே இருக்க வேண்டும்; தொழிலாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக உயர்த்துவது முதல்படி மட்டுமே. சுதந்திரமான கூட்டு உற்பத்தியாளரின் சமுதாயமாக உருவாகும் போதே அது சோசலிச சமுதாயமாக இருக்க முடியும். இதற்கு தனிச்சொத்தை அழிப்பது மட்டும் போதாது. சமூக உற்பத்தியின் மீதான ஆதிக்க சக்திகளின் ஆதிக்கத்தை ஒழித்து அதனிடத்தில் சமூகத்தின் ஒட்டு மொத்தமான ஆதிக்கத்தை நிறுவவேண்டும். உழைக்கிற மக்களும் உழைப்புக் கருவிகளும் புராதன சமுதாயத்தில் இணைந்திருந்த நிலை இருந்தது. வர்க்க சமுதாயத்தில் இவ்விணைப்பு தகர்க்கப்பட்டது, சோசலிச சமுதாயத்தில் அது மறுஉருவாக்கம் செய்யப்பட வேண்டும் (அதாவது, உற்பத்திப் புள்ளியில் கட்டுப்பாடும், ஆதிக்கமும் சொத்தின் அடிப்படையிலோ, அல்லது தொழில் நுட்ப கல்வி, கட்சிப்பதவி போன்றவற்றின் அடிப்படையிலோ இல்லாமல் உண்மையான உற்பத்தியாளரான தொழிலா ளரின் கையில் இருக்க வேண்டும்).''

படிப்பகம்

www.padippakam.com



—என்பன போன்ற கருத்துகளை மார்க்ஸ்-எங்கல்ஸ் கோதா வேலைத்திட்டம் எட்பர்ட் வேலைத்திட்டம் ஆகியவை குறித்த விமர்சனங்களிலும் பாரிஸ் கம்யூன் பற்றிய எழுத்துக்களிலும், குகல் மானுக்கு எழுதிய கடிதம் போன்றவற்றிலும் வலியுறுத்தியுள்ளனர். இவை விஜோத்மிஸ்ரா குழுவினரின் இன்றைய நிலைப்பாடுகளுக்கு பொருந்தாதவை என்பதால் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

(ii) லெனினது எழுத்துகள், பேச்சுகள் முதலியவை 45 தொகுதிகளாக காலவரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன. பாட்டாளி வர்க்க சனநாயகம், சோசலிச சனநாயகம், சோவியத் அதிகாரம் ஆகியவை குறித்து அவர் தீவிரமாக இயங்கிய முப்பதாண்டுகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியுள்ளார். எனினும் புரட்சிக்குப் பிந்திய புதிய பொருளாதாரக் காலகட்டத்தில் அதிகமாகவே பேசியுள்ளார். இது சோசலிச கட்டுமானத்தில் ஒரு பின்வாங்கல் காலகட்டம். ஏகாதிபத்திய எதிர்ப்பு, போரால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம், பற்றாக் குறை சூழல் ஆகியவற்றின் பின்னணியில் ஓரளவு தனியார் வணிகம், சந்தைச் சக்திகளுக்கு அனுமதி, ஊக்க ஊதியம், வல்லுநர்களுக்கு நிர்வாக மேலாண்மை உரிமை, தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்கின்மை, மேலிருந்து கீழான மையப்படுத்தப்பட்ட நிர்வாகமுறை, முதலாளிய தொழில் நுட்பம் மற்றும் தொழில் ஒழுங்கமைப்புகளைப் பின்பற்றல் ஆகியவற்றிற்கு லெனினும் போல்செவிக் கட்சியும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்த காலகட்டமிது. இந்த நடைமுறைகளின் பல்வேறு அம்சங்களின் மீதும் இடது அணியினர் என அழைக்கப்பட்ட போல்செவிக் கட்சியின் பல முக்கிய உறுப்பினர்களிடமிருந்தும், தொழிற்சாலை நிர்வாகங்கள் தொழிலாளரிடம் கையளிக்கப்பட வேண்டுமென்று போராடிய தொழிற்சாலை கவுன்சில் (factory council) இயக்கத்தினரிடமிருந்தும், சமூகப் புரட்சியாளர், 'அராஜகவாதிகள்' போன்ற சக இடதுசாரி அணியினரிட-

படிப்பகம்

www.padippakam.com



மிருந்தும் கடும் விமர்சனங்கள் வந்தபோது மேற்குறித்த அரசு நடவடிக்கைகளை ஆதரித்து எழுதப்பட்ட லெனினின் எழுத்துக்கள் மட்டுமே அரிந்தாம் சென்னின் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சோசலிசக் கட்டுமானம் குறித்த லெனினின் கருத்துகளாக தொகுக்கப் பட்டுள்ள வற்றில் 95% லெனின் தொகுதி நூல்களில் 31, 32, 33 தொகுதிகளிலிருந்து மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளது இதற்குச் சான்றாகும்.

(iii) ரசிய சோசலிசக் கட்டுமான வழி முறைகளிலிருந்து தொடர்ந்து மாவோ கடுமையாக வேறு பட்டிருந்ததை ஜேம்ஸ்பெக், சமீர்அமின், பெத்தல்ஹீம் போன்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். உற்பத்தி சக்திகள் தத்துவம் பற்றிய மாவோவின் விமர்சனம், கட்சி வழிபாட்டை எதிர்ப்பது, குறிப்பாக தலைமையகத்தைத் தகர்த்தெறிவது போன்ற விஷயங்கள் இந்நூலில் இருட்டடிப்பு செய்யப் பட்டுள்ளன. மாறாக உள்ளூர் அதிகாரத்தில் தலையிடக் கூடாது; பன்முக இயக்கங்களுக்கு அனுமதி போன்ற இன்றைய ரசிய சீன சீர்திருத்தங்களுக்குச் சாதகமான அம்சங்களே மேற்கோள் காட்டப்படுகின்றன. கலகங்களைக் கையாளுவதில் சீன அணுகல்முறை மென்மையானது (!) என்றும் ஒரு குறிப்பு காணப்படுகிறது. யூகோஸ்லேவியாவின் பாதை விலகல்களும் புதிய பாதை குறித்த டெங்கின் கருத்துகளும் பெரிஸ்த்ரோய்கா பற்றிய கோர்ப்பசேவின் கருத்துகளும் இன்றைய மாற்றங்களை ஆதரிக்கும் நோக்கில் ஆதரவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் இப்படிச் சொல்லலாம். அமைப்பியலாளர்கள் சொல்வதுபோல் சோசலிசக் கட்டுமானம் குறித்த மார்க்ஸ் - ஏங்கல்ஸ்-லெனின் - மாவோ ஆகியோரின் கருத்துக்கள் குறித்த ஒரு வாசிப்பே இந்நூல். இது முற்றிலும் தவறு என்பதல்ல. மாறாக இதுவே சரியானது என்பதோ, முழுமையானது என்பதோ தான் தவறானது; வாசகர்களை ஏமாற்றுவது. ஆனால், அப்படிச் சொல்வதுதான்

www.padippakam.com



இந்நூலின் நோக்கம். மார்க்சிய முன்னோடிகளை இப்படியும் வாசிக்கலாம் என்பது போலவே இதற்கு நேரெதிரான இன்னொரு வாசிப்பையும் செய்ய முடியும். குறிப்பிட்ட சூழல்களில் குறிப்பிட்ட நோக்கில் சொல்லப் பட்டவற்றைச் சூழலிலிருந்து விலக்கி "மேற்கோள் களாக்கி" நிழல் யுத்தம் புரிவதன் மூலம் எந்தப் பிரச் சினைகளையும் தீர்த்துவிட முடியாது. பாராளுமன்றப் பாதை சரியா, தவறா என்பது முதல் எந்தப் பிரச்சினை யிலும் மேற்கோள் யுத்தம் புரிந்தவர்கள் இறுதிவரை அவரவர்கள் நிலைபாடே சரியானது என ஆளுக்கொரு மேற்கோள்களில் தொங்கிக் கொண்டிருப்பது இன்றைய வரலாறு. தூலமான சூழலில் வைத்து பழைய வரலாற்றைப் பார்ப்பது என்பது தவிர நடந்த நிகழ்ச்சிப் போக்குகளை அப்படியே ஏற்று மயங்கி நிற்காமல் அன்றைய சூழலில் என்னென்ன சாத்தியங்கள் அவர்கள் முன் இருந்தன. அவற்றுள் இந்த சாத்தியம் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கான பின்னணி என்ன, இந்த சாத்தியமில்லாமல் மாற்றாக நின்ற இதர சாத்தியம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் என்ன நிகழ்ந் திருக்கும் என்ற நோக்கில் வரலாற்றை அணுகுவதே விடுதலைக்கான அணுகல்முறையாக இருக்கமுடியும். வரலாற் றிலிருந்து பாடம் கற்றுக்கொள்வது என்பது இதுதான். முற்றிலும் வேறுபட்ட இன்றைய சூழலை எதிர்கொள்வதற்கு வரலாற்று ஆய்வுகள் ஓரளவே பயன்படும் என்பது இன்னொரு முக்கிய விஷயம்.

இறுதியாக: மார்க்சிய முன்னோடிகளின் எழுத்து களில் புதிய பொருளாதாரக் கொள்கை காலத்திய லெனினது எழுத்துகளே இவர்களின் இன்றைய நிலை பாட்டை நியாயப்படுத்துவதற்குத் தோதாக இருப்பதால் மார்க்ஸ், ஏங்கல்சின் கருத்துக்கள் சோசலிசக் கட்டுமானத் தின் இன்றைய பிரச்சினைகளுக்குப் பொருந்தாது எனவும், மாவோவின் சில பங்களிப்புகள் மட்டுமே பயன் படும் எனவும் கூறுகிற அரிந்தாம் சென், லெனின் கருத்துக்

www.padippakam.com



களே புதிய வரையறைகள் உருவாகும் வரை பயன்படும் எனவும் முத்தாய்ப்பு வைப்பது குறிப்பிடத் தக்கது. (பக்.123).

4. "முதலாளிய மீட்சி, சமூக ஏகாதிபத்தியம் ஆகியவை குறித்த வரையறைகள் போதாது. தூலமான ஆய்வுகள் இல்லாமல் சீனாவைப் பின்பற்றி அக்குற்றச் சாட்டுகள் வைக்கப்பட்டன. ரசியாவில் தனிச் சொத்துரிமை இல்லை. பன்னாட்டு நிறுவனங்களில்லை. மூலதன ஏற்றுமதி இல்லை. கச்சாப் பொருட்களே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வணிக உறவுகள் அத்தனை மோசமில்லை. எனவே ராணுவ பலத்தைப் பெருக்குதல், அதிகார மயமாக்குதல், சோசலிச மதிப்புகள் சீர்குலைதல் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் சமூக ஏகாதிபத்தியம் என வரையறுக்க முடியாது. குருச்சேவின் திரிபுவாதத்தை எதிர்த்த மாயெரும் விவாதத்தின் நிலைப்பாடு சரிதான். ஆனால் உலகை மறுபங்கீடு செய்வதில் அமெரிக்காவைக் காட்டிலும் ரசியா ஆபத்தானது என்றெல்லாம் சொல்ல முடியாது" என்பனபோன்ற இந்நூல் வலியுறுத்துகிற கருத்துகளில் எனக்கு உடன்பாடு உண்டு. பிரச்சினை என்னவெனில் இவற்றின் அடிப்படையில் எந்த நியாயமான காரணங்களும், ஆழமான ஆய்வுகளுமின்றி ரசியாவை வர்க்கமற்ற சமூகம் எனவும் சோசலிச நாடு எனவும், கோர்ப்பசேவ் சீர்திருத்தங்கள் சோசலிசத்தை நோக்கியவையே என்றும் வலியுறுத்தப்படுவதுதான் வியப்பாக இருக்கிறது. சமூக ஏகாதிபத்திய வரையறையின் போதாமைக்கும் சோசலிச நாடாக ஏற்றுக்கொள்வதற்குமான இடைவெளி நிரப்பப்படாமலேயே சோசலிச நாடு எனச் சொல்வதால்தான் இதனை சந்தர்ப்பவாதம் என்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படையான கட்சியாக மாறுதல், தேர்தல் பாதையை ஏற்றுக்கொள்ளுதல், திரிபுவாதக் கட்சிகளுடன் தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com



கூட்டுஅமைத்தல் ஆகிய வினோத் மிஸ்ரா கட்சியின் நிலைபாடுகளோடு இணைத்துப்பார்க்கப்பட வேண்டியது இது.

ஆப்கானிஸ்தானத்திலிருந்து படைகளை திரும்பப் பெறுதல், சீனாவுடன் எல்லைத் தகராறு முடிவுக்குக் கொண்டு வரப்படுதல், கம்பூச்சிய பிரச்சினைக்கு முடிவு காணுதல் ஆகியவை வரவேற்கத் தக்கவை (பக் 9) என்கின்றனர். எப்படி ராணுவமயமாதல், ஆக்கிரமிப்பு ஆகியவற்றை வைத்து சமூக ஏகாதிபத்தியம் என்று வரையறுக்க முடியாதோ அப்படியே மேற்குறித்தவற்றின் அடிப்படையில் சோசலிச நாடு என்றும் சொல்லிவிட முடியாது. அப்படியானால் இலங்கையிலிருந்து 'அமைதிப் படை'யை திரும்பப் பெற்றுக் கொண்ட இந்தியா மிகப் பெரிய சோசலிச நாடாகி விடும்.

சோசலிச உறவுகள் நிலவுகின்றன என்பதற்கு இந்நூலில் முன்வைக்கப்படும் ஒரே வாதம் தனிச் சொத்துரிமை அழிக்கப்பட்டு விட்டது என்பதுதான். இதைத்தான் பொருளாதார வாதம் என்கிறோம். தனிச் சொத்துரிமையை அழிப்பது மட்டும் சோசலிசமாகாது. அப்படி நினைப்பது 'பண்டமாயை' என்பது போல 'சொத்து மாயை' (Property fetishism) யாகும். இது குறித்த ஏங்கல்சின் கருத்து ஏற்கெனவே இக்கட்டுரையில சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தனிச் சொத்துரிமையின பண்புகளாகக் கூறப்படும் அனுபவ உரிமை, விற்கும் உரிமை, வாரிசுக்கு வழங்கும் உரிமை ஆகிய மூன்றும் முதலாளிய காலகட்டத்திற்கு உரியனவாகும். முதலாளியத்திற்கு முற்பட்ட சமூகங்களில் இது முழுமையாகப் பொருந்தாது. குறிப்பாக ஆசிய நிலவுடைமை முறையில் தனிச்சொத்துடைமை இல்லாமலேயே- கூட்டுடைமையின் அடிப்படையிலேயே- கொடுமையான சுரண்டலும் ஆதிக்கமும் நிலவியுள்ளன. வர்க்கச் சொத்து (Clan Property) என்கிற கருத்தாக்கத்தையும் முன்னோடிகள் பயன்படுத்தியுள்ளனர். சைவ மடங்கள் மற்றும்

www.padippakam.com



பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட பிரமதேயங்கள் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.*

எனவே சட்டபூர்வமான தனிச்சொத்தை ஒழித்தாலும் கூட அரசு கருவி மூலமாகவோ, நிர்வாக மேலாண்மை மூலமாகவோ, கட்சி அதிகாரத்தின் மூலமாகவோ உற்பத்தி சூழல்களில் ஆதிக்கம் செலுத்துவதன்மூலம், உடனடி உற்பத்தியாளர்களாகிய தொழிலாளர்கள் தங்கள் வர்க்கத்தின் ஆட்சி நிலவுகிறது என்ற பிரக்ஞை அடையாமல், வர்க்க ஒருமை உணர்வு பெறாமல், தனித்தனி துகள்களாக்கப்பட்ட, உழைப்பு சக்தியைப் பண்டமாய் உழைப்புச் சந்தையில் கூவி விற்கும் வெறும் கூலி உழைப்பாளர்களாகத் தக்க வைக்கப்படும் வாய்ப்புகள் சொத்துடைமை ஒழிக்கப்பட்ட சமுதாயத்திலும் கூட நிலவ வாய்ப்புண்டு. இதுவே ரசியாவில் நடந்தது. இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாது, தனிச்சொத்துரிமையை ஒழித்தல் + மத்தியப்படுத்தப் பட்ட திட்டமிடுதல் + உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி= சோசலிசம் என்பது பொருளாதார வாதம். மேற்குறித்தவை சோசலிசத்துக்கான **அவசிய நிபந்தனைகள்** (Necessary Conditions) என்பதில் கருத்துமாறுபாடில்லை. ஆனால் இவை சோசலிசத்துக்கான **போதுமான நிபந்தனைகள்** (Sufficient Conditions) ஆகாது. தல நிறுவன அளவிலும், ஒட்டுமொத்தமான பொருளாதார மற்றும் சமூக நிர்வாக அளவிலும், இவை தொடர்பான கருத்துருவாக்கத்திலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும், நேரடியான பங்கும், உற்பத்தியின் மீதும் தொழில் இடங்களிலும் கட்டுப்பாடு செலுத்தும் உரிமையும் பாட்டாளி வர்க்கத்துக்கு நேரடியாக- கட்சி அதிகாரவர்க்க/ அரசு அதிகார

* முதலாளிய முறையிலும்கூட கூட்டுக் கம்பெனிகளில் இத்தகைய சொத்துரிமை குறித்த வரையறை பொருந்தாது.

www.padippakam.com



வர்க்க/ தொழில்நுட்ப அதிகாரவர்க்க இடையூறின்றி வழங்கப்படும்போதே உண்மையான பொருளில் பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாக ஆகிறது. இத்தகைய உரிமைகள் சரியாக வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்ய எழுத்துரிமை, பேச்சுரிமை கருத்துகளுக்காகப் போராடும் உரிமை, இயக்கம் அமைக்கும் உரிமை ஆகிய சோசலிச ஜனநாயக உரிமைகள் பாட்டாளிகட்கு வழங்கப்படுவது அவசியம். இவை ரசியாவில் எந்நாளுமே வழங்கப்பட்டதில்லை என்பதே உண்மை.

சோசலிசக் கட்டுமானத்திற்கான போதுமான நிபந்தனைகள் நிறைவேற்றப்படாததை லெனின் உணர்ந்திருந்தார். அதிகாரத்துவம் பெருகிப்போனது குறித்த அவரது இறுதிக்கால வேதனைக்குரல்களிலும், அரை ஆசிய உடைமைபற்றிய குறிப்புகளிலும் தவிர 'முதலாளிய சனநாயகப் புரட்சியின் கடமைகளை மட்டுமே நமது புரட்சி நிறைவேற்றியுள்ளது', 'சோசலிச அடித்தளத்தை நாம் இன்னும் இட்டு விடவில்லை. அப்படிச் செய்து விட்டதாகப் பெருமிதம் கொள்ளும் கம்யூனிஸ்டுகள் பெருந் தவறிழைக்கிறார்கள்' என்பன போன்ற இறுதிக் கால எழுத்துக்களிலும் இதனைக் காணலாம்.

இறுதியாக : சோசலிசம் என்றால் சக்திக்கேற்ற உழைப்பு; உழைப்புக்கேற்ற ஊதியம்; பொதுவுடைமை என்றால் சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற ஊதியம் என்று சோசலிசக் கட்டுமானத்தை வெறும் வினியோக அடிப்படையில் பார்ப்பதும் தவறு. உற்பத்தி, நிர்வாகம், விநியோகம் ஆகிய அனைத்திலும் கட்டுப்பாட்டு உரிமையை சாத்தியமாக்கும் உற்பத்தி நிலைமைகளின் மீதான ஆதிக்கத்தின் அடிப்படையிலேயே சோசலிசத்தை வரையறுக்க வேண்டும். வினியோக அடிப்படையில் சோசலிசத்தை வரையறுப்பதை **குட்டி முதலாளியச் சோசலிசக் கருத்தாக்கம் என்பார் மர்லீன் டிக்ஸன்.**

www.padippakam.com



5. 'இது லெனின், மாவோ காலமில்லை. சூழல்கள் மாறியுள்ளன; புதிய தீர்வுகள் தேவைப் படுகின்றன (பக் 1)'. 'புராதன மார்க்சிய வரையறை என்ற சதுரக் கட்டையை கணிசமாக மாறியுள்ள எதார்த்தம் என்ற வட்டத்துளைக்குள் பொருத்துவது கேலிக்குரியது (பக்.122)' என்றெல்லாம் நூலில் கூறப்பட்டுள்ளது. மார்க்சிய லெனினியத்தை கேள்வி கேட்கக் கூடாத புனித வேதமாக பார்க்கத் தேவையில்லை என்பதெல்லாம் ரொம்பவும் கவனமாகவும் எச்சரிக்கையாயும் பேச வேண்டிய விசயங்கள். நமது சந்தர்ப்பவாத நிலைபாடுகளை நியாயப் படுத்துவதற்காக இப்படிச் சொல்லிவிட முடியாது. ''ஏகபோக முதலாளியமானது மூலதனத்தை ஏற்று மதிசெய்யும் பொருளாதார அடிப்படையில் ஒரு நாட்டை ஏகாதிபத்தியம் என வரையறுப்பதே லெனினியம்; மாறாக ராணுவ மேலாதிக்க நடவடிக்கைகளை வைத்து சமூக ஏகாதிபத்தியம் என்பது லெனினியமல்ல. அவ்வாறு சொல்பவர்கள் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை கடந்து சென்று சாதனை நிகழ்த்தியவர்கள்'' (பக் 170) என சமூக ஏகாதிபத்தியம் என்று சொல்பவர்களை கேலி செய்யும் இந்நூல் ''ஏகாதிபத்தியத்திற்கும், சோசலிசத்துக்குமுள்ள போட்டி அமைதிவழியில் மட்டுமே இன்று சாத்தியம்'' எனப் பிரகடனம் செய்யும் கோர்ப்பசேவை செல்லமாகக் கண்டிப்பதோடு நிறுத்திக் கொள்கிறது (பி சே. பக். 15-30). அவரை வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தைத் தாண்டிய கனவான் என்று கேலி செய்யத் துணியவில்லை. தவிர எதார்த்தம் மாறிவிட்டதால் வரையறையையும் மாற்றிக் கொள்ளலாம் என்பது உங்கள் கருத்தானால் சமூக ஏகாதிபத்தியம் என்று சொல்பவர்கள் லெனினிய வரையறையில் மாற்றம் செய்து கொள்ளவும் நீங்கள் அனுமதிப்பதுதானே நியாயம்? இன்று பிரச்சினை என்னவெனில், சமூக ஏகாதிபத்தியம் எனப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பவர்கள் லெனினிய வரையறையையும் கைவிட முடியாமல், சமூக ஏகாதிபத்தியம் என்ற

படிப்பகம்

www.padippakam.com



திலைபாட்டையும் கைவிட முடியாமல் விழி பிதுங்குவதும் நியாயமான கேள்விகளை எழுப்புபவர்களைக் கண்டு எரிச்சல் அடைவதும்தான்.

6. ஆக, ஒன்று தெளிவாகிறது. சமூக ஏகாதிபத்தியம் என்று வரையறுப்பவர்கள் இது குறித்து எழுப்பப்பட்டுள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் விழி பிதுங்குகின்றனர். சோசலிசம் என்று சொல்பவர்கள் இன்றைய நிகழ்வுகளை விளக்க முடியாமல் திணறுகிறார்கள். ஸ்டாலின் இருக்கும்போது ஸ்டாலின் சொன்னது சரி; குருச்சேவ் இருக்கும் போது குருச்சேவ் சொன்னது சரி; இன்று கோர்ப்பசேவ் சொல்வதெல்லாம் சரி என்று கொஞ்சமும் நேர்மையும், வெட்கமும், சுய விமர்சனமும் இன்றி அரசியல் டண்ணித் திரிகின்றனர். இந்த இரண்டு எல்லை நிலைகளையும் மறுதலித்து விட்டு ரசிய, சீன சமூகங்கள் அரசியல்/பொருளாதாரம்/கலாச்சாரம் ஆகிய பல துறைகளிலும் சீரழிந்துள்ளன என்பதனை ஏற்றுக்கொண்டு இத்தகைய திரிபுவாத சீரழிவுப் பாதையில் சரிய நேர்ந்ததற்கான சரியான காரணங்களை நோக்கிக் கவனத்தை குவிப்பவர்களே ரசிய/சீன மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள முடியும்.

சோசலிசச் சமுதாயங்களாகத் தொடங்கியவை சோசலிச மனிதனை, சோசலிசக் கலாச்சாரத்தை, சோசலிச சனநாயகத்தை உருவாக்க இயலாமற்போன காரணங்களில் சிலவற்றை இது குறித்த எனது சமீபத்திய எழுத்துக்களில் வலியுறுத்தியுள்ளேன். 'ரசியாவில் நடப்பதென்ன', 'சீனமும்' ஆகிய பிரசுரங்கள் மற்றும் புறப்பாடு 25-இல் வெளி வந்த சமீர் அமின் நூல் பற்றிய கட்டுரை ஆகியவற்றில் சொல்லப்பட்டவற்றை நச் சுருக்கம் கருதி தவிர்த்து இங்கு இன்னொரு முக்கிய அம்சத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

www.padippakam.com



## (ஆ)

முதலாளிய தொழில் நுட்பம், பொருளாதார ஒழுங்கமைப்பு, அரசியல் நிர்வாகம் ஆகியவற்றைப் புரட்சிக்குப் பிந்திய சமுதாயத்தில் குறிப்பாக சோசலிசச் சமூக உருவாக்கத்திற்கான இடைக் காலத்தில் பயன்படுத்துவது குறித்தும் கட்சி, தொழிற்சங்கங்கள், சோவியத்துக்கள், தொழிற்சாலை கவுன்சில்கள் ஆகியவற்றுக்கு இடையேயான உறவுகள் குறித்தும் போல்செவிக் கட்சி கொண்டிருந்த கருத்துக்களை இன்று கவனமாகப் பரிசீலித்தாக வேண்டும். 1917—பிப்ரவரிப் புரட்சியைத் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிப் போக்குகள், கட்சிக்குள்ளும் தோழமைக் கட்சியுடனும் நடந்த விவாதங்கள், எடுக்கப்பட்ட முடிவுகள் ஆகியவற்றை தூலமாகப்பார்ப்பது நாம் ரசியப் புரட்சி குறித்துக் கொண்டுள்ள பல மாயைகளிலிருந்து விடுபட உதவும். ஒரு நூலளவில் விரித்துச் சொல்லப்பட வேண்டிய விசயங்களை சுருக்கம் கருதி குறிப்புகளாக இங்கே தருகிறேன்.

i. முதல் உலகப் போருக்குப்பின் உலகெங்கிலுமுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிற்சாலை நிர்வாகங்களை கையிலெடுத்துக் கொள்ளும் தொழிற்சாலை கவுன்சில் இயக்கங்கள் வளர்ந்தன. வெறும் கூலி உயர்வுக் கோரிக்கையை வைத்துப் போராடும் அதிகாரத்துவமயமான தொழிற்சங்கங்கள் இவற்றை எதிராகப் பார்த்தன. முதலாளிகளும் கூடத் தொழிற்சங்கங்களைக் காட்டிலும் இவற்றைக் கடுமையாகப்பார்த்தனர். தொழிற்சாலை கவுன்சில்களின் வளர்ச்சியும் அரசு மற்றும் முதலாளிகளின் சதிக்கெதிரான இவற்றின் ஒருங்கிணைவும் அரசு தவிர்த்த ஒரு இணை அதிகார அமைப்பை இந்நாடுகளில் உருவாக்கின. இச்சூழலை இரட்டை அதிகாரம் (diarchy) என வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். இதே காலக் கட்டத்தில்தான் இந்தியாவிலும் இரட்டையாட்சி புகுத்தப்

www.padippakam.com



பட்டது கவனத்துக்குரியது. திறன்சார் தொழிலாளர்கள் ஆதிக்கம் வகித்த தொழிற்சாலை கவுன்சில்கள் இயக்கத்திலும் இரட்டை அதிகார முறையிலும் பல குறைபாடுகள் இருந்தபோதிலும் அரசு மற்றும் ஆதிக்கச் சக்திகளின் கேள்வி கேட்க முடியாத அதிகார எல்லையைக் குறுக்குவதாக இவை அமைந்ததால் மீண்டும் மேலிருந்து கீழான, அதிகாரத்துவம் மிக்க, செறிவாக மையப்படுத்தப்பட்ட ஒற்றை அதிகார அமைப்பை உருவாக்குவதில் முனைப்பாய் இருந்த ஆதிக்க சக்திகள் விரைவில் வெற்றிபெற்றன. சுமார் 1930 வாக்கில் உலகெங்கிலும் மையப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை மீண்டும் உருவாகியது. இந்தியாவில் கூட இதனைக் காணலாம்.

ii) இந்த நடைமுறைகள் அனைத்தும் ரசியாவிலும் பிரதிபலித்தன. பிப்ரவரிப் புரட்சியைத் தொடர்ந்து தொழிற்சாலை கவுன்சில் இயக்கங்களும் அவற்றின் கூட்டமைப்புகளும் இவற்றைக் கூறாய்க் கொண்டு கட்டமைக்கப்பட்ட சோவியத்துகளும் இணை அதிகார அமைப்புகளாக உருவாகின. வன்மையற்ற பொம்மை அரசாகவே **கெரன்ஸ்கி** தலைமையிலான தற்காலிக அரசாங்கம் இருந்தது. தொழிற்சாலைக் கவுன்சில்கள், தொழிற் சங்கங்கள் தவிர இக்கால கட்டத்திலும் பின் உருவான அக்டோபர் புரட்சியிலும் செல்வாக்குச் செலுத்திய இதர இயக்கங்களாக போல்செவிக்குகள், மென்செவிக்குகள், சமூகப் புரட்சியாளர்கள், அராஜக சிண்டிகலிஸ்டுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவக் கமிட்டிகள், நகர்ப்புற நுகர்வோர் கூட்டுறவு அமைப்புகள்,கிராமப்புற விவசாயக் கம்யூன்கள் (மிர்) ஆகியவற்றைச் சொல்லலாம். எழுச்சி பெற்ற தொழிலாளர்களுக்குச் சரியான தலைமை கொடுப்பது என்கிற சரியான போர்த் தந்திரத்தை மேற்கொண்ட வகையில் போல்செவிக்குகள் இதரர்களைக் காட்டிலும் முன்னணியில் இருந்ததன் விளைவாகவே அக்டோபருக்குப் பின் அவர்கள் தலைமையிலான ஆட்சி அமைந்தது. இந்த

www.padippakam.com



இடைக்காலத்திலும் 1917-க்கு முன்னும் சோவியத்துகளிலும் தொழிற்சங்கங்களிலும் எப்போதுமே போல்செவிக்குகள் தான் பெரும்பான்மையாக இருந்தனர் எனச் சொல்லிவிட முடியாது. மேற்குறிப்பிட்ட இதர அமைப்புகள் பல சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையாக இருந்தன. அக்டோபருக்கு பின்னுமகூட இவை கணிசமான செல்வாக்குடையனவாக இருந்தன.

iii) போல்செவிக் கட்சி ஒற்றைக் கருத்துடைய இறுகிய அமைப்பாகத் தொடக்கத்தில் இருந்ததில்லை. குழுத்தன்மையுடனும், கருத்து மாறுபாடுகளுடனும் அது விளங்கியது, **புகாரின், டிராஸ்ட்கி** போன்ற நமக்குத் தெரிந்த பெயர்கள் தவிர இன்று மறக்கடிக்கப்பட்ட பல தலைவர்கள் லெனினுடனும், கட்சித்தலைமையுடனும் கருத்து மாறுபாடுடையவர்களாக இருந்தனர். போல்செவிக் கட்சியின் முக்கியத் தலைவர்களாக இருந்த **ஓசின்ஸ்கி** போன்றோர் மாறுபட்ட கருத்துகளைப் பகிரங்கமாகப் பத்திரிக்கைகளில் எழுதினர். இவற்றிற்கு லெனின் பதில் எழுதினார். சில பொது மாநாடுகளில் போல்செவிக் கட்சியின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டோர் இரு வேறு கருத்துகளை வைத்த வரலாறுகளும் உண்டு.

iv) இவற்றின் விளைவாக சோவியத் அதிகாரம், தொழிற்சாலைக் கவுன்சில்கள் ஆகியவை குறித்து போல்செவிக்கட்சியின் கருத்துகள் எல்லாச் சமயங்களிலும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. ''எல்லா அதிகாரங்களும் சோவியத்துக்கே'' என்ற முழக்கம் தவிர்க்க இயலாது பிற்காலத்தில் வைக்கப்பட்டபோதிலும் மக்களுக்கு அதிகாரம் வழங்கும் சோவியத் வடிவத்தை கோட்பாட்டு ரீதியாய் போல்செவிக் கட்சியின் தலைமை எல்லாச் காலங்களிலும் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டதில்லை. ''வடிவம் என்ற அளவில் சோவியத்துகள் எங்களுக்கு முக்கியமில்லை.

www.padippakam.com



எந்த வர்க்கத்தை அவை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதே எங்களுக்கு முக்கியம்'' என்றார் லெனின். மேலோட்டமாகப் பார்க்கும்போது இது சரியான பாட்டாளி வர்க்க நிலைபாடுதானே என்று தோன்றலாம். ஆனால் நடைமுறையில் இவ்வாறு உள்ளடக்கத்துக்கு முன்னுரிமை கொடுத்து வடிவத்தை உதாசீனப்படுத்துவ தென்பது அடிப்படை நோக்கத்தையே பாழடித்தது. எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவது என்பது உண்மையில் எந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்து வது என்கிற கேள்வியாக உருவெடுத்தது. ஸ்டாலின் இதனை வெளிப்படையாகவே சொன்னார்: ''தான் பெரும்பான்மையாக இருக்கிற சோவியத்துக்களை மாத்திரமே கட்சி ஆதரிக்கிறது. மையமான விசயம் நிறுவ னங்களல்ல. எந்த வர்க்கம் நிறுவனங்களில் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதே''. ஆக, போல்செவிக் கட்சி செல்வாக்கு செலுத்தியவை ஆதரிக்கப்பட்டன. மற்றவை மூர்க்கமாக எதிர்க்கப்பட்டன. கிட்டத்தட்ட இதே போன்ற நிலைபாடுகளை இன்று தொழிற்சங்க களத்தில் வலது, இடது கட்சிகள் மேற்கொள்வது கவனிக்கத்தக்கது. அக்டோபருக்குப் பின் ஆட்சி அதிகாரத்தின் துணையோடு இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கொஞ்சம் கொஞ்சமாக தொழிற்சாலைக் கவுன்சில்கள் தொழிற் சங்கங்களுக்கும், கட்சிக்கும், நிறுவன மேலாளர்களின் கட்டுப்பாட்டிற்குள்ளும் திட்டமிட்டு படிப்படியாக கொண்டு வரப்பட்டன. சமயங்களில் போட்டிச் சங்கங் களை அங்கீகரிப்பது, அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற நடைமுறைகளும் கையாளப் பட்டன.

v) தொழிற்சாலைக் கவுன்சில்களின் அதிகாரத்துக்கு போல்செவிக் கட்சி தொடர்ந்து எதிராகவே இருந்தது. தொழிலாளர்களின் அதிகாரம் என்பது கணக்கு வழக்கு களைப் பரிசீலிப்பது என்கிற அளவில் இருந்தால் போதும்

www.padippakam.com



மானது என்பதே லெனினது கருத்தாக இருந்தது. தொழிற்சாலை நிர்வாகங்கள் என்பன முதலாளிய வல்லுனர்கள் மற்றும் மேலாளர்களின் கையிலேயே இருக்க வேண்டும்என்பதும் இதற்காக அவர்களுக்கு அதிகஊதியம் கொடுக்கவேண்டும் என்பதும் முதலாளியத்தொழில் ஒழுங்கமைப்புகள் அப்படியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் லெனினது கோட்பாடுகளாக இருந்தன. ஒரு மிகப் பெரிய எஃகுத் தொழிற்சாலையின் நிர்வாகத்தை மீண்டும் அதன் முதலாளிகளிடமே ஒப்படைக்க முயன்ற லெனினின் முயற்சி தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. ''முதலாளிகளைக் காப்பியடிப்போம்'' என்கிற முழக்கம் முன் வைக்கப்பட்டது. சோசலிசத்திற்கான தயாரிப்பின் முதற்படி அரசு ஏகபோக முதலாளித்துவமே என்றார் லெனின். வளர்ச்சி ஏணியில் முதலாளியத்திற்கும் சோசலிசத்திற்கும் இடைப்பட்ட படி இல்லை என்றார். உற்பத்தி சக்திகள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவை நடுநிலையானவை; வர்க்கம் சார்ந்தவை அல்ல என்கிற கருத்தைக் கொண்டிருந்த லெனின் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் அரசியல் மேற்கட்டுமானத்தை மாற்றினால் போதும் என்றே கருதினார். மேற்பகுதியை நீக்கிவிட்டு மற்றதை அப்படியே பாட்டாளி வர்க்கத்திடம் கொடுத்தால் போதும் என்றார். எல்லாவற்றைக் காட்டிலும் உற்பத்தியை பெருக்குவதே முக்கியம். அதற்காக எந்த விலையைக் கொடுக்கவும் தயார் என்றார். உழைப்புச் சக்திகளை கூலிவிற்கும் கூலித்தொழிலாளிச் சுரண்டலுக்கு வழிவகுக்கும் டெய்லரிசம், ஃபோர்டிசம் போன்றவற்றின் ஆதரவாளராக இருந்த கேஸ்டவ்விற்கு கட்சியில் பெரும் செல்வாக்கிருந்தது. மனிதர்களை எந்திரங்களுடன் ஒப்பிட்ட கேஸ்டவ் ''விஞ்ஞான'' நிர்வாக முறையை வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் பிரயோகிக்க வேண்டும் என்றார். படை, சிறைச் சாலை, மடங்கள்

www.padippakam.com



ஆகியவையே மனித ஒழுங்கமைப்புகளுக்கான லட்சிய வடிவம் என்பது கேஸ்டவ்-வின் கருத்து.

vi) இந்த அடிப்படையில் மேலிருந்து கீழான நிர்வாக முறைகள் அதீத மையப்படுத்துதலுடன் கொண்டுவரப் பட்டன. உள்நாட்டு யுத்தம், பஞ்சம் ஆகியவை, மையப் படுத்தும் நடை முறைக்கு சாதகமாக அமைந்தன. இதற்கு இணையாக ஒற்றைக்கட்சி ஆட்சி முறை வலியுறுத்தப் பட்டது. பாட்டாளி வர்க்கம் முழுமையையும் ஒரேகட்சி பிரதிபலிக்க முடியும் என்பது மட்டுமல்லாமல் அந்த ஒரு கட்சிக்குள்ளேயே கூட கருத்து மாறுபடுவது, கேள்வி கேட்பது ஆகியவை நடைமுறைக்கு ஊறுவிளைவிப்பதா கவும், நிர்வாகத்தில் தலையிடுவதாகவும் தொழிலாளி வர்க்க ஒற்றுமையைச் சிதைப்பதாகவும் கருதப்பட்டன. இதன் உச்சக்கட்ட மாகவே பத்தாவது காங்கிரசில் கருத்து மாறுபாட்டின் அடிப்படையிலான குழுக்கள் தடை செய் யப்பட்டன. நடைமுறையில் அது கருத்து மாறுபாடு களையே தடை செய்வதாக அமைந்தது.

vii) முதலாளியத் தொழில் நுட்பங்களையும் தொழில் ஒழுங்கமைப்புகளையும் அப்படியே பின்பற்றுவது, அதீத மையப்படுத்துவது ஆகியவற்றிற்கு கட்சிக்குள்ளும் (இவர் கள் இடதுசாரிகள் என அழைக்கப்பட்டனர்), கட்சிக்கு வெளியிலும் ('தொழிலாளர் எதிர்ப்பு' முதலியவை) கடும் எதிர்ப்புகள் இருந்தன. கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான **ஒசின்ஸ்கி** போன்றோர் ''மூலதனத் திரட்டல் மற்றும் லாபநோக்கிலான முதலாளியத் தொழில் ஒழுங் கமைப்பு தொழிலாளிகளுக்கு விடுதலை தேடித் தராது; மாறாக மிகக் கொடுமையான சுரண்டலுக்கும் செயலூக்க மற்ற தன்மைக்கும் ஆளாக்கும்'' என்கிற கருத்தை முன் வைத்தனர். மிக விரிவாகவும் நியாயமாகவும் தர்க்க பூர்வ மாகவும் தனது கருத்துகளை முன்வைத்த ஒசின்ஸ்கி இறுதியில் இத்தகைய நடவடிக்கைகள் தொழிலாளி வர்க்க அதிகாரத்துவம் வேறு சமூகப் பொறுப்புகளில் தொழி

www.padippakam.com



லாளர் ஈடுபட முடியாத பௌதீகக் களைப்பு, பொது வான செயலூக்க மற்ற தன்மை, அதிகார மையத்துவம், பாட்டாளி வர்க்க அதிகாரத்திற்குப் பதிலாக கமிசார் களின் அதிகாரம், உள்ளூர் சோவியத்துகளின் அதிகாரம் பறிபோதல், அரசு கம்யூன்கள் புறக்கணிக்கப்படுதல் ஆகியவற்றிற்கு இட்டுச் செல்லும் என்றார். வியக்கத்தக்க வகையில் இவையெல்லாம் பின்னாளில் உண்மையாயின என்பதை இன்று நாம் உணர்கிறோம். ஆனால் அன்று லெனின் இவற்றைக் கோட்பாட்டு உளறல் (Utter theoritical nonsense) என்றும் குட்டி முதலாளியப் பிதற்றல் என்றும் புறக்கணித்து நகையாடினார். அன்றைய நடைமுறைகள் தொழிலாளரைச் சிதைக்கும் என்கிற குற்றச்சாட்டிற்கோ மேலும் சனநாயகமான பொருளாதாரக் கவுன்சில்கள் பற்றிய ஓசின்ஸ்கியின் ஆலோசனைகளுக்கோ லெனின் பதி லளிக்காமற் போனது குறிப்பிடத்தக்கது. பொதுவாகவே மையப்படுத்துதலுக்கு எதிராக இருந்தவர்கள் "அரா ஜக வாதிகள்" என முத்திரை குத்தப்பட்டு கேலி செய்யப் பட்டனர். தொழிற்சாலைக் கவுன்சில்களின் கூட்டமைப்பு உட்பட்ட எல்லாவிதமான மையப்படுத்துதல்களுக்கும் எதிராக இருந்ததாலும் பொருளாதாரக் கோரிக்கைகளை முற்றாகப் புறக்கணித்ததாலும் சிண்டிகலிஸ்டுகள் தாங் களாகவே தங்களுக்கு குழிதோண்டிக் கொண்டனர். எனினும் அவர்களும் கட்சிக்குள்ளிருந்த இடதுசாரியி னரும் அன்று முன்வைத்த வாதங்கள் எல்லாமே புறக் கணிக்கத்தக்கதல்ல என்பதற்குப் பிற்கால நடைமுறைகள் சாட்சியம் பகரும்.

viii) முதலாளிய வல்லுனர்களையும் நவீன தொழில் நுட்பங்களையும் முற்றாகப் புறக்கணித்திருக்க வேண்டும் என்பதல்ல நமது வாதம். வல்லுனர்கள் தொழிலாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் கீழி ருந்து தொழிலாளரால் கட்டுப்படுத்தப்பட்டவராகவும் இருக்கவேண்டும். கருத்துருவாக்கத்திலும், நிர்வாகத்

www.padippakam.com



திலும் தொழிலாளர் பங்கு பெற வேண்டும். நவீன தொழில் நுட்பங்கள் என்பன அதன் ஒழுங்கமைப்பிலேயே மேலிருந்து கீழான அதிகாரம் செலுத்தும் கருவிகளாக உள்ளது பற்றிய பிரக்ஞையோடு அவை கையகப்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக கம்ப்யூட்டர்கள் நிர்வாகப் பரவலுக்கு வழிவகுக்காது அதீத மையப்படுத்துதலுக்கே வழிவகுக்கும். அடித்தட்டிலிருப்பவர்களை கருத்துருவாக்கத்திலிருந்து விலக்கும். மாநில நிர்வாகங்களின் கீழுள்ள மாவட்டங்கள் இன்று நேரடியாக மைய அரசுடன் கம்ப்யூட்டர்கள் மூலம் இணைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் கம்ப்யூட்டர்கள் மனித ஒற்றுமையைக் காட்டிலும் (Solidarity) சிதறலுக்கே (atomisation) வழிவகுக்கும். இன்றைய தொழில் நுட்பங்களின் இத்தகைய சார்புத்தன்மைகள் மிகுந்த கவனத்துக்குரியன. எனவே அவற்றை ஒரு சோசலிச சமுதாயம் உள்வாங்கும்போது அதைத் தனக்குரிய வகையில் மாற்றியமைக்க வேண்டும். முதலாளிய ஒழுங்கமைப்பைச் சிதைக்க வேண்டும். இது நடைமுறையில் சாத்தியமானதே. சாத்தியமில்லாதவற்றைத் தூக்கி எறிவோம்.

ix) இதனால்தான் மார்க்ஸ் வடிவங்களைத் தகர்த்தெறிவது பற்றி அதிகம் பேசினார். ஆனால் புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் மார்க்ஸ் எதிர்பார்த்ததுபோல் ராணுவம் கலைக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகார வர்க்கம் உருவாக்கப்படவில்லை. அன்றைய தூலமான நிலைமைகள் ராணுவத்தைக் கலைப்பது போன்றவற்றையெல்லாம் சாத்தியமாக்க இயலாவிட்டாலும் முழுமையாகப் பழைய பாணியிலேயே ராணுவத்தைக் கட்டமைத்தது சரிதானா என்கிற கேள்வியை நாம் இன்று எழுப்புவதோடு அந்த நிலைமைகளை பொதுமையாக்குவதையும் எல்லாக் காலங்களுக்குமான விதியாக்குவதையும் எதிர்க்க வேண்டும்.

www.padippakam.com



x) மிக விரைவில் பொதுவுடைமைச் சமுதாயம் மலர்ந்துவிடும் (இன்னும் பதினைந்து ஆண்டுகளில், இருபது ஆண்டுகளில் என்றெல்லாம் லெனின் பேசுவார்), அரசு உதிர்ந்துவிடும், எல்லாவிதமான அதிகார மையங்களும் தகர்ந்து விடும் என்கிற நம்பிக்கையின் விளைவாகவும் ஆளும் வர்க்கம் என்கிற உள்ளடக்கத்தை மாற்றிவிட்டோம்; எனவே அரசு மற்றும் நிறுவன வடிவங்கள் பற்றிய கவலை முக்கியமானதல்ல என்ற கருத்தினடிப் படையிலும் சோவியத் அதிகார நிறுவனங்கள் பற்றிய ஆய்வுகளையும், செயல் திட்டங்களையும், கோட்பாட்டு உருவாக்கங்களையும் போல்செவிக் கட்சி செய்யாததை லெனினியத்தின் முக்கியக் குறைபாடுகளில் ஒன்றாகப் பார்க்க வேண்டும். அவைபற்றிய பிரக்ஞையை நாம் இன்றே உருவாக்கிக் கொள்ள வேண்டும். புரட்சிகர கட்சிகளை வடிவமைக்கும் நாம் கட்சி வடிவம், உள்கட்சி ஜனநாயகம், அணிகளைப் பயிற்றுவித்தல ஆகிய விசயங்களில் மரபுவழிப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளின் நடைமுறைகளை மறு பரீசீலனை செய்யவேண்டும். இதையெல்லாம் செய்வதால் "ஸ்டாலினை விமர்சித்தான்; லெனினை விமர்சித்தான்; இப்போது கட்சியையே வேண்டாமென்கிறான். இவன் உள்நோக்கம் புரிகிறதா?" என்றெல்லாம் கொம்புசீவி பயனில்லை. மார்க்சிஸ்டாக உள்ள எவனும் கட்சி என்ற முன்னோடிப் படையின் முக்கியத்துவத்தை மறுக்கமாட்டான். கட்சியின்றி புரட்சியில்லை என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடில்லை. ஆனால் மேலிருந்து கீழான முதலாளியக் கம்பெனி நிர்வாக அமைப்பில் ஒழுங்கமைக்கப்பட்ட இன்றைய கட்சி வடிவம் எந்த அளவுக்கு சரியானது என்பதே நம் கேள்வி போல்செவிக் கட்சி, ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டது. ஜெர்மன் கட்சி முதலாளியக் கம்பெனி நிர்வாக மாதிரியில் வடிவமைக்கப்பட்டது என்பர். வரலாறு பூராவும் கம்யூனிஸ்ட் கட்சிகள் போல்செவிக் கட்சியின் மாதிரியிலேயே வடிவமைக்கப்

www.padippakam.com



பட்டன. தலைமையகத்தைத் தகர்த்தெறிய சொன்ன மவோவால் கூட இதனை மாற்றியமைக்க முடியவில்லை, இதன் விளைவே அதிகாரத்துவமும், தனிநபர் வழிபாடும், கட்சிகள் சிதறுண்டு போவதும் என்று சொல்வது மிகையாகாது.

முடிவாக: ஒரு குறிப்பிட்ட நோக்கில் சில முக்கிய விசயங்களில மட்டும் கவனத்தைக் குவித்துள்ளேன். இப்படியெல்லாம் சொல்வதால் லெனின் முற்றிலும் தவறாக இருந்தார் என்றோ டிராட்ஸ்கி, புகாரின் போன்றவர்கள் எப்போதுமே சரியாக இருந்தனர் என்றோ பொருளில்லை. லெனினின் மகத்தான பங்களிப்புகளோடு ஒப்பிடுகையில் இக்குறைபாடுகள் மிகச் சொற்பமே. இன்று எழும்பியுள்ள பிரச்சனைகளை நாம் எதிர்கொள்வதற்கு இவற்றையெல்லாம் பரிசிலிக்க வேண்டியிருக்கிறது. டிராட்ஸ்கி போன்றோர் அதிகாரத்தின் உச்சத்திலிருந்தபோது மிக மோசமான அதிகாரத்துவப் போக்கில் செயல்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இதேபோல ஸ்டாலின் காலத்திய குளறுபடிக்கெல்லாம் ஸ்டாலின் என்கிற தனிநபரைச் சாடிப் பயனில்லை. அமைப்பின் வெளிப்பாடு அது. ஸ்டாலின் இடத்தில் வேறு யாரும் இருந்திருந்தாலும் அன்று அப்படித்தான் நடந்திருக்கும். நான் சொல்வதெல்லாம் இதுதான்: வரலாறு என்பது ஒரு பிரதியே. ஸ்டாலின் எழுதிய போல்செவிக் வரலாறும், டிராட்ஸ்கி எழுதிய வரலாறும், குருச்சேவ் காலத்தில் எழுதப்பட்டதும் வெவ்வேறு வரலாற்றுப் பிரதிகளே, எதனையும் சூழலிலிருந்து பிரித்து முழுமுதலான ஆதாரப் பிரதியாகப் பார்க்கத் தேவையில்லை. மேற்கோள்களை வைத்து சண்டை போட்டுப் பயனில்லை என்பது தான்.

அரிந்தாம்சென்னின் புத்தகமும் இப்படி ஒரு குறிப்பிட்ட நோக்கில் தொகுக்கப்பட்டதே. இன்றைய பிரச்சனைகளை எதிர்கொள்ள இது பயன்படாது. நாம் மேலே

www.padippakam.com



பேசிய பல விசயங்களை இந்நூல் புறக்கணித்துள்ளது; அல்லது அவ்விசயங்களில் தவறான பார்வைகளைக் கொண்டுள்ளது

''புதிய தொழில்நுட்பத்தை தொழிலாளர் வர்க்கத்திற்கும் சோசலிசத்திற்கும் சாதகமாக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதில் மார்க்சீய- லெனினியம் தெளிவாகவே இருந்திருக்கிறது'' (பக். 156) என்றும், ரசியாவில் தோன்றியுள்ள அதிகார வர்க்கக் கொடுமையைப் பற்றிய வாதத்தை எதிர்நோக்கும்போது ''அரசாகப் பாட்டாளி வர்க்கம் கட்டமைக்கப்பட்டுள்ளபோது அதனுடைய சொந்த அதிகார வர்க்கத்தை- மேலும் இந்த தொழில் நுட்ப யுகத்தில் அதன் சொந்த தொழில்நுட்ப வர்க்கத்தைக்- கொண்டிருப்பதென்பது இயற்கையானதாகாதா?'' (பக். 171) என்றும்,இன்றைய ரசிய-சீன சீர்திருத்தங்களைப் பற்றி பேச வரும்போது—

''இது வருந்திப் பெற்ற வர்க்க சர்வாதிகாரம் என்ற ஆயுதத்தைத் தொடர்ந்து மேலும் உறுதியாகப் பிரயோகிக்கவே செய்யும். மற்றும் எப்போதும்போல் இது தன்னுடைய உயர்ந்தபட்ச வர்க்க அமைப்பான கம்யூனிஸ்டு கட்சி மூலம் வழி நடத்தப்படும்'' (பக். 169) என்றும் இந்நூலில் வலியுறுத்தப்படும் கருத்துகள் நாம் மேலே கூறியவற்றிற்கு சான்றாக அமையும். கட்சி, சர்வாதிகாரம் பற்றிய மரபுவழிப் பார்வையை அப்படியே முன்வைப்பதையும் தொழில்நுட்ப இறக்குமதியை அந்நியசார்புக்கு வழிவகுக்கும் என்கிற நோக்கில் மட்டுமே விமர்சித்து வடிவம் பற்றிய பிரச்சனையை கைவிடுவதையும், நம்முடைய கட்சி ஆட்சியின் கீழ் அதிகாரத்தை சகித்துக் கொண்டால் என்ன என்கிற மமதையையும் தோழர்கள் இக்கூற்றுகளில் கவனிக்க வேண்டும்.

அதிகாரம் என்றால் அது யாருடைய அதிகாரமாயிருந்தால் என்ன? நம்முடைய கட்சி அல்லது நம்முடைய கணவன் என்று அதிகாரங்களை சகித்துக்கொள்வது எங்கே கொண்டு போய் நிறுத்தும்?

— புறப்பாடு 27, ஜூன் - ஜூலை' 90.

www.padippakam.com

# ''மாவோயிசத்தின் எதிர்காலம்''

''முதலில் ரசியாவும் அப்புறம் சீனமும் முதலாளியப் பாதைக்குச் சிரழிந்துவிட்டன''.

''அது மட்டுமா, போலந்து, அங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், யுகோஸ்லாவியா, அல்பேனியா, வட கொரியா, வட வியட்னாம் எலலாமே முதலாளியத் திரிபுவாதப் பாதையில் தான் சரிந்து கொண்டிருக்கின்றன. எங்கும் சோசலிசமில்லை.''

சோசலிசப் பாதையில் தொடங்கிய இந்நாடுகள் அனைத்தின் வளர்ச்சிப் பாதைகட்குமிடையேயான நுண்மையான வேறுபாடுகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாது, இப்படிப் பொதுமைப்படுத்துவது (abstract) இன்று உலகக் கம்யூனிச இயக்கங்களின் முன் சில ஐயங்களை எழுப்பியுள்ளது. அவற்றை இப்படிச் சுருக்கலாம்.

> ''சோசலிசம் இப்போது சாத்தியமில்லை. உலகளவில் புராதன மூலதனத் திரட்டல் இன்னும் முடிந்தபாடில்லை. உற்பத்திச் சக்திகளை வளர்த்தெடுத்து சமூகங்களை, முதலாளி X தொழிலாளி என இரு எதிரெதிர் வர்க்கங்களாகக் குறுக்காதவரை சோசலிசம் சாத்தியமில்லை''

இது சரிதானா?

இந்த அவ நம்பிக்கைதானா நம் கதி?

குறை வளர்ச்சிநாடுகள் (under developed countries) சரியான முறையில் வளர்ச்சியடைவதற்கான வழிகாட்டுத்

www.padippakam.com



தத்துவமாக **மாவோயிசம்**- மார்க்சியத்தின் **சமீபத்திய** பரிணாமம்- காலாவதியாகிவிட்டதா?

இல்லை என்கிறார் இன்றைய உலகின் மிகச் சிறந்த பொருளியல் அறிஞர்களில் ஒருவரும், **எகிப்தைச்** சேர்ந்த மார்க்சியருமாகிய **சமிர்அமிர்.** இவரது **'மாவோயிசத்தின் எதிர்காலம்'** என்னும் நூல் 1981-இல் **பிரெஞ்சு** மொழியில் வெளியிடப்பட்டுப் பின் **ஆங்கிலத்தில்** மொழி பெயர்க்கப் பட்டது.

நேற்றைய நிகழ்ச்சிகளையும் அனுமானங்களையும் இன்றைய நிகழ்ச்சிகள் தகர்த்தெறிந்து செல்கிற அதிவேக மான மாற்றங்கள், சீனத்தில் நிகழ்ந்துவரும் சூழலிது. **மாவோவுக்குப்** பிந்திய சீனம் **புதிய பாதைக்குத் (New-Course)** திரும்பிய (1978) மூன்றாண்டுகட்குப் பின்னர் எழுதப்பட்ட இந்நூலைப் பற்றிய அறிமுகம் இன்று தேவைதானா என்கிற கேள்வி உங்களைப் போலவே எனக்கும் தோன்றியது; **புறப்பாடு** ஆசிரியர் குழு இந்தப் பணியைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டபோது, சிறிது தயக்கத்திற்குப் பின் இரு காரணங்களுக்காக இதனை நான் ஏற்றுக கொண்டேன்.

1. மார்க்சிய அடிப்படையிலான வரலாற்று நோக்கு, தந்துவ நோக்கு, இலக்கிய நோக்கு ஆகியவற்றின் அடிப் படையில் மட்டுமே பிரச்சினைகளைப் பார்த்துப் பழக்கப் பட்டவர்கள் நாம். நம்மில் பலரும் மார்க்சியப் பொருளா தாரத்தைப் பயில்வதில் ஆர்வம் செலுத்தியதில்லை. சோசலிச நிர்மாணத்தின் அடியாக மார்க்சியத்தில் இன்று எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள மார்க்சியப் பொருளாதார அறிவு மிகவும் அவசியமானது. இந்நிலையில் இது குறித்த ஒரு பொருளியல் அறிஞரின் பார்வையை அறிமுகம் செய்து கொள்வது பயனளிக்கும். 1984 வரை அமின் தனது கருத்துக்களில் அதிகம் மாற்றம் செய்துகொள்ளவில்லை என்பது அவரது கட்டுரை

www.padippakam.com



ஒன்றைப் படிக்கும்போது தெரியவருகிறது (contemporary Marxism, 1984)

2. இன்றைய நிகழ்ச்சிகளின் பின்னணியில் அமினது கருத்துக்கள் மீது தீர்ப்புச் சொல்வதும், தூக்கி எறிவதும் எளிதாய்த் தோன்றினாலும் அவர் சோசலிச நிர்மாணம் குறித்து எழுப்பும் கேள்விகள் இன்றளவும் தீவிர மானவை; விவாதத்திற்குரியவை; கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை.

அமினின் கருத்துக்கள் அனைத்திலும் எனக்கு உடன்பாடு இருப்பதாகச் சொல்ல முடியாது என்கிற எச்சரிக்கையோடு அவர் விரிக்கும் கருத்துலகிற்குள் நுழைவோம்.

II

சோசலிச வளர்ச்சிப் போக்கின் பிரதான அம்சங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

1. உலக முதலாளிய அமைப்பிலிருந்து (world capitalist system) துண்டித்துக் கொண்டு 'பன்னாட்டு வேலைப்பிரிவினை' என்கிற வலையிலிருந்து மீள்வதன் மூலம் ஒரு **தேசிய பொருளாதாரத்**தைக் (National Economy) கட்டமைப்பது.

2. நகரம்/ கிராமம்; தொழிலாளி/ விவசாயி; மூளையுழைப்பு/ உடலுழைப்பு முதலிய சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல். **கூலி அளவில்** (wage scale) அதிக ஏற்றத் தாழ்வுகள் இல்லாதிருத்தல்.

3. உற்பத்தி சக்திகளின் மீது அடிப்படை வர்க்கத்தின் (தொழிலாளர் + விவசாயிகள்) கட்டுப்பாட்டை மீண்டும் நிறுவுதல்.

4. உண்மையான அரசியல் மற்றும் சமூக சனநாயகத்தை நிறுவுதல்.

படிப்பகம்

www.padippakam.com



சோசலிச வளர்ச்சிப் பாதை என்கிற பெயரில் தொடங்கிய நாடுகள் அனைத்தும், எந்த அளவிற்கு இந்தப் போக்குகளிலிருந்து வழுவாமல் முன்னேறின என்பதை மதிப்பீடு செய்யு முன், சோசலிச வளர்ச்சிப்போக்கு குறித்த ஒரு த்வறான புரிதலிலிருந்து நாம் மீள வேண்டியிருக்கிறது. அது,

> ''உழைப்பு மற்றும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மதிப்பை நிர்ணயிக்கும் ''மதிப்பு விதி'' என்பது சோசலிசத்திற்கு முந்திய சமூக அமைப்புகளில் மட்டுமே செயற்படும். சோசலிசத்தில் மதிப்பு விதி இல்லை.''

இந்தக் கருத்தை வன்மையாக மறுக்கிறார் அமின். கம்யூனிச சமூக அமைப்பு என்பது நிகழ்ச்சி நிரலில் இல்லாதவரை மதிப்பு விதி செயல்பட்டே தீரும். கம்யூன்களுக்கிடையேயும் உற்பத்தியின் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கும் பொருள்கள் பரிமாற்றம் செய்யப்படும் போது ''தேவைக்கேற்ற ஊதியம்'' என்கிற கம்யூனிசக் குறிக்கோள் ஆணையில் இல்லாதவரை சராசரியாய்த் தேவையான சமூக உழைப்பே இறுதி ஆய்வில் பொருள்களின் மதிப்பைத் தீர்மானிக்கிறது. இதன்மூலம் இந்த உற்பத்திப்பொருள் பண்ட (commodity) மாகிறது. ஆனால் இது இறுதி நிலையில் தான். இடைநிலையாக ஆணையில் வைக்கப்படும் அரசியல் செயற்படுகிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் வண்ணமாக இந்த அரசியல் முன் வைக்கப்படுகிறது.

மதிப்பு விதிதான் (அதன் நீக்கம் அல்ல) விவசாயியின் ஓராண்டு சராசரி உழைப்பிற்கும் தொழிலாளியின் ஓராண்டு சராசரி உழைப்பிற்கு சமமான ஊதியம் கிடைக்கச் செய்வதற்கும் கூலி அளவு குறுகலாக வைக்கப்படுவதற்கும் காரணமாக அமைகிறது. தொழிலாளர்க்கும், விவசாயிகட்கும் அவரவர்கள் உழைப்பிற்கான சமமான

www.padippakam.com



வரத்து என்பது சோசலிச உறவுகளின் பிரதான அம்ச மாகும். எந்த ஒரு பகுதியின் மீதான பொருளியல் மற்றும் அரசியல் ரீதியான ஒடுக்குமுறையின் அடிப்படையில் சமூகவளர்ச்சி என்பது கட்டமைக்கப்படாதவாறு பார்த்துக்கொள்வது, ஆணையில் வைக்கப்பட்டுள்ள அரசியலின் பணியாகிறது. இத்தகைய சோசலிச உறவுகளினூடாக மதிப்பு விதி செயல்படுகிறது.

ஆக, மதிப்புவிதி செயல்படுகிறதா இல்லையா என்பதை வைத்து ஒரு சமூகம் சோசலிசமா இல்லை முதலாளியமா என்று சொல்ல முடியாது.

இதன் பொருள், மதிப்பு விதி என்றென்றைக்கும் சாசுவதமானது என்பதோ, முதலாளியச் சமூக அமைவிலும் சோசலிசச் சமூக அமைவிலும் ஒரேமாதிரியான மதிப்பு விதிதான் செயல்படுகிறது என்பதோ அல்ல. எத்தகைய சமூக வரலாற்று நிலைகளினடியாக மதிப்புவிதி தோன்றியதோ அந்நிலை அழியும்போது மதிப்பு விதியும் அழியும். அதுவரை அதாவது, சோசலிச சமூகத்திற்கு முந்திய சமூகங்களில் செயல்படும் மதிப்பு விதியிலிருந்து சோசலிசத்திற்கு மாறும் காலகட்டத்திய மதிப்புவிதி கீழ்க்கண்ட அம்சங்களில் வேறுபடும்.

1. முதலாளியம் என்பது ஒரு உலகம் தழுவிய நிகழ்வு உலக முதலாளிய அமைப்பின் மையங்களாக (centres) வளர்ச்சியடைந்த நாடுகளும் சுற்றெல்லைகளாக (peripheries) குறை வளர்ச்சி நாடுகளும் (இந்தியா போன்றவை) அமைந்துள்ளன. இவ்வாறு ஒரு நாடு தன்னை இணைத்துக் கொள்ளும்போது அந்நாட்டிற்குள் உலக முதலாளிய அமைப்பின் செல்வாக்கில் மதிப்பு விதி செயல்படுகிறது. வளர்ச்சியடைந்த முதலாளிய மையங்களில் ஒரு பொருளின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பின் (இது அங்கு குறைவாக இருக்கும்) விலையே சுற்றெல்லைகளில் அதே பொரு-

படிப்பகம்

www.padippakam.com



ளின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பிற்கும் (இங்கு இது அதிகமாக இருக்கும்) கொடுக்கப்படுகிறது. இவ்வாறு உலக முதலாளிய அமைப்பிற்குள் உள்ள ஒரு நாட்டிற்கும், இன்னொரு நாட்டிற்குமிடையே உழைப்பின் விலையில் அதாவது, கூலியில் அதிக வேறுபாடு ஏற்படுகிறது. மேலும் இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தேசிய வருமானத்தின் ஒரு பகுதி சுற்றெல்லையிலிருந்து மையத்தை நோக்கிச் செல்கிறது. சோசலிச நாட்டில் இந்நிலை இருக்க முடியாது. இருக்கக் கூடாது. **எனவே ஒரு நாடு சோசலிசப் பாதையில் செல்ல, உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்வது மிக முக்கியமான முன் நிபந்தனையாகிறது.** மாவோவுக்கு முந்திய சீனமும் ரசியாவும் இந்த அம்சத்தில் சோசலிசப் போக்குடையதாகவும் கருதப்படல் தகும்.

2. முதலாளியத்தில் **பண்டஉறவுகள் (Commodity relations)** சர்வ வியாபகமாய் இருப்பதாலும், உழைப்புச் சக்தியே ஒருபண்டமாவதாலும் மதிப்பு விதி எளிதில் மர்மப்படுத்தப்பட்டதாய் (opaque) கைக்கு அகப்படாததாய் இயற்கை விதிகளைப் போல சமூகத்திற்கு அப்பால் நின்று செயல்படுவதாய்த் தோற்றமளிக்கிறது. சமூக அந்நியமாதல் பொருளாதார வடிவை எடுக்கிறது. சோசலிசத்தில், பண்ட உறவுகளைச் சமூகம் தன் ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கிறது. தேசியப் பொருளாதாரத் திட்டமிடுதல் மூலம் "அரிசி விலைக்கும் கூலிக்கும்" இடையேயான உறவு தீர்மானிக்கப் படுகிறது. கூலி வேறுபாடுகள் சனநாயக பூர்வமாய் நிறுவப்படுகிறது. இவ்வாறு சோசலிசத்தில் மதிப்பு விதி ஒப்பீட்டளவிலேனும் கையகப்படக் கூடியதாய் (transparent) இருக்கிறது.

சோசலிச நாடுகளில், மதிப்புவிதி செயல்படும் இந்த வேறுபட்ட நிலைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல்

படிப்பகம்

www.padippakam.com



மதிப்புவிதி, சந்தை, பண்ட உறவுகள் என்றாலே அது முதலாளியம் தான் என வரட்டுத் தனமாய்ப் பார்த்ததன் விளைவாகவே சோசலிச நாடுகள் மதிப்புவிதிக்குத் திரும்பியதாக அறிவித்துக் கொண்ட கட்டங்களிலெல்லாம் (உ-ம்; குருச்சேவ்) பின்னடைவுகள் நிகழ்ந்தன.

உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொண்டாலுங்கூட, நாம் முன்பு குறிப்பிட்டவாறு விவசாயி மற்றும் தொழிலாளி ஆகிய இரு சாராரின் ஆண்டுச் சராசரி உழைப்பிற்குச் சமமான கூலி வழங்கப்படாத போது சோசலிசப் போக்கு வளர்வதில்லை. சீனத்தின் வளர்ச்சிப் பாதைக்கும், ரசியாவின் வளர்ச்சிப் பாதைக்கும் இடையேயான வேறுபாடு இங்கு தான் எழுகிறது. சீனத்தில் இந்நிலை இருந்ததால் இங்கு தொழிலாளி-விவசாயி ஐக்கியமிருந்தது. இத்தகைய சமநிலையான சமூக உறவிற்குள் இங்கு மதிப்பு விதி செயல்பட்டது. ஆனால் ரசியாவில் மூலதனத் திரட்டலுக்கு விவசாயிகள் சுரண்டப்பட்டனர். இதனால் அங்கு தொழிலாளி விவசாயி ஐக்கியம் தகர்ந்தது. சோசலிச சமூக உருவாக்கம் ஒரு கனவாக முடிந்தது.

III

அதிக அளவில் கிராமப்புறங்கள் நிறைந்தவையும், விவசாய ரீதியாய் மிகவும் பின் தங்கியவையும், குறைந்த அளவே தொழில் வளர்ச்சி - அதுவும் கூடச் சமச்சீரற்ற முறையில் பெற்றிருப்பதுமான சமகாலக் குறைவளர்ச்சி நாடுகளின் (under developed peripheries) வளர்ச்சிக்கான மூன்று வெவ்வேறான மாதிரிகளுக்கிடையேயான அமைப்பியல் வேறுபாடுகளைக் குறித்த ஆய்வே தனது நோக்கம் என்று நூலைத் தொடங்கும் அமின், முன் குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் இம் மூன்று வளர்ச்சி மாதிரிகளையும் கீழ்க்கண்டவாறு வேறுபடுத்துகிறார்.

www.padippakam.com

| | தேசிய சுய மைய வளர்ச்சி (National Autocentric) | அரசாதிக்க சமூக வளர்சி (Statist) | சுற்றெல்லை முதலாளிய வளர்ச்சி (Peripheral Capitalist)) |
|---|---|---|---|
| 1. | உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டிக்கப்படும் | உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டிக்கப்படும். | உலக முதலாளிய அமைப்பின் ஓரங்கமாய்ச், சுற்றெல்லையாய் அமையும். |
| 2. | நிலம், தொழில்துறை ஆகியவற்றில் தனிச் சொத்துரிமை நீக்கப்படும். | நிலம், தொழில்துறை ஆகியவற்றில் தனிச் சொத்துரிமை நீக்கப்படும். | தனிச்சொத்துரிமை அனுமதிக்கப்படும். |
| 3. | விவசாயத்திற்கு முன்னுரிமை; நகரம், கிராமப்புறம் ஆகியவற்றுக்கிடையே சம பரிவர்த்தனை. விவசாயிகட்கும் தொழிலாளிகட்கும் சமமான வருமானப் பகிர்வு. | தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை, கிராமம் நகரம், திறன் சாராத் தொழிளாளி / திறன் சார் தொழிலாளி, உற்பத்தித் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடும் வருமான வேறுபாடு. புராதனச் | வர்க்கமாய்ப் பிளவுண்ட சமுதாயங்களுக்கான முதலாளியத் திரட்டல் விதிகள் அனுமதிக்கப்படும். இதர பண்டங்களைப் போலவே உழைப்புச் சக்தியும் கருதப்படும். |

படிப்பகம்

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| | | சோசலிசத் திரட்டல் என்கிற பெயரில் விவசாயிகளின் உழைப்புக்கான கூலியில் 5J சதம் கப்பமாய் வசூலிக்கப்படும். | |
| 4. | எல்லோருக்கும் வேலை உண்டு. | எல்லோருக்கும் வேலை உண்டு. | வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கும். |
| 5. | குறுகலான வருமான வேறுபாடு. | குறுகலான வருமான வேறுபாடு. | அதிக அளவில் வருமான வேறுபாடு. |
| 6. | தொழிலாளி + விவசாயி கூட்டின் மேலாண்மை நிலவும். | அரசு முதலாளிகள் + புதிய மத்திய தரவர்க்கக் கூட்டின் மேலாண்மை. | ஏகாதிபத்தியம் + உள்ளூர் சுரண்டல் பங்காளிகளுடன் ஓரளவு நிலப்பிரபுக்கள் ஆகியோரது கூட்டின் மேலாண்மை. |
| 7. | நுகர் தேவை அமைப்பு (demand structure) சாதாரண மக்களின் தேவையை அடிப்படையாகக் கொண்டிருக்கும். | சாதாரண மக்களின் தேவைக்கான உற்பத்தி படிப்படியாய்க்குறைந்து கொண்டே போகும். மத்திய தர வர்க்கம் மற்றும் கடசி அணிகளின் | உற்பத்தியில் 50 சதம் மட்டும் சாதாரண மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாய் இருக்கும். மீதி 50 சதம் சொகுசுப்பொருட்களின் உற்பத்தி |

படிப்பகம்

www.padippakam.com

| | சீனா | ரசியா | இந்தியா |
|---|---|---|---|
| | | தேவையை நிறைவு செய்யும் சொகுசுப் பொருள் உற்பத்தி படிப்படியாய் அதிகரித்துக் கொண்டே போகும். நிர்வாக மற்றும் ராணுவத் தேவைக்கான உற்பத்தியும் அதிகரிக்கும். சுமார் பத்தாண்டுகளில் இம் மூன்றில் ஒவ்வொன்றும் மூன்றில் ஒரு பங்காக ஆகிவிடும். | யாக அமையும். மேலாண்மை வகிக்கும் சிறுபான்மையினர் மேற்கத்திய வசதிகளுடன் வாழ்வை அனுபவிக்கும் வகையில் குறைந்த அளவிலேயே வளர்ச்சியுற்றிருக்கும் உற்பத்தி சக்தியும் கூட இயக்கப்படும். |
| 8. | சுதந்திரமான தேசிய வளர்ச்சி. | சுதந்திரமான தேசிய வளர்ச்சி | அந்நிய ஏகாதிபத்தியசார்பு. சர்வ தேச வேலைப்பிரிவினையின் அங்கம். லாபத்தில் ஒரு பகுதி மையத்தை நோக்கிச் சென்று கொண்டே இருக்கும். மொத்தத்தில் தேசிய வருமானத்தில் சுமார் 7 சதம் இவ்வாறு ஆண்டுதோறும் போய்ச் சேரும். விவசாய மற்றும் கச்சாப் பொருள்கள் ஏற்றுமதியாகும். |
| 9. | எடுத்துக்காட்டு : மாவோ காலத்திய சீனம் | ரசியா | இந்தியா |

படிப்பகம்

www.padippakam.com


நூல் முழுமையும் அமின் சுட்டிக் காட்டும் வேறுபாடுகளில் பிரதானமான சிலவற்றை மட்டுமே இங்கே தொகுத்துள்ளேன், உதாரணம் குறிப்பிடாமல் மூன்று வளர்ச்சி மாதிரிகளின் பண்புகளோடும் தொடங்கும் அமின் அவற்றின் அடிப்படையில் வளர்ச்சி குறித்த சில பொதுப்படையான முடிவுகட்கு வருகிறார். சமத்துவமான சமூக வளர்ச்சி என்கிற பிரதான அம்சம் தவிர மொத்த தேசிய உற்பத்தி, தனி நபர் வருமானம், ஆண்டு வளர்ச்சி வீதம் போன்ற பொருளாதார வகையினங்களின் ஒப்பீட்டு அடிப்படையில் இம் மூன்று மாதிரிகளில் தேசிய சுய மைய வளர்ச்சி அதாவது மாவோயிச வழிகாட்டலில் அமைந்த சோசலிச மாதிரியே குறைவளர்ச்சி நாடுகட்கான சரியான வளர்ச்சி மாதிரியாக இருக்கமுடியும் என நிறுவும் அமின் இறுதியில் எதார்த்தமாய் நிலவும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் இவை முறையே சீனம், ரசியா, இந்தியா ஆகியவற்றுடன் பொருந்துகிறது என நிறுவும்போது அசந்து போகிறோம்.

## IV

வரலாறு இதுவரை கண்டறியாத மகத்தான சோசலிசச் சமூக அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற மாபெரும் நோக்குடன் அடியெடுத்து வைத்த **போல்செவியம்,** திரிபுவாதமாய்ச் சீரழிந்து போனதன் காரணங்களை ஆராய்வது அமினின் நோக்கமில்லையெனினும் நூல் முழுமையும் இது குறித்து ஆங்காங்கு அவர் உதிர்த்துள்ள கருத்துக்களைத் தொகுத்துக்கொள்வது இன்று மார்க்சியம் சந்தித்துள்ள பல நெருக்கடிகளிலிருந்து மீள உதவும். சுருக்கமாய் அவற்றைக் காண்போம்.

வர்க்க சமுதாயத்திலிருந்து பொதுவுடமைச் சமுதாயமாக மாறுவதென்பது ஒரு நீண்ட காலப் பாதை. ஏனெனில்,

படிப்பகம்

www.padippakam.com



1. உலக முதலாளியம் சமச்சீரற்ற வளர்ச்சியை நிறுவி யுள்ளது. இதன் விளைவாய் இன்று புரட்சியென்பது சுற்றெல்லைகளில் மட்டுமே சாத்தியமாய் உள்ளது. (இது ஏனெனில் மையங்களிலுள்ள தொழிலாளர் ஏகாதிபத்தியக் கொள்ளையில் பங்கு பெறுவதால் அவர்கள் புரட்சிகரத் தன்மையை இழக்கின்றனர்). எனவே புரட்சிக்குப் பின் இந்த வளர்ச்சியற்ற நாடு களில் உற்பத்தி சக்திகளை வளர்த்தெடுப்பது முக்கிய பணியாகிறது. சனநாயகப் பாரம்பரியம் என்பது இந்நாடுகளில் இருந்ததில்லை என்பதும் பன்முகப் பட்ட அகப்புற அழுத்தங்களினூடேதான் இந்த வளர்ச்சியையும் நிலைநாட்ட வேண்டும் என்பதும் கவனத்திற்குரியவை.

2. வளர்ச்சியடைந்த மையங்களில் புரட்சி ஏற்படாததன் விளைவாய் மூன்றாம் உலக நாடுகளின் மீதான கொள்ளைச் சுரண்டலின் அடிப்படையிலேயே இந் நாடுகளில் 'தேசிய' உணர்வு நிறுவப்பட்டுள்ளது.

3. சமச்சீரற்ற வளர்ச்சி இருக்கும் வரை 'தேசம்' என்கிற இந்தக் காரணி செயல்பட்டே தீரும். எனவே அரசு இருந்தே தீரும், அரசுகளுக்கான அமைப்பியல் தேவை அழியும் போதே அரசு உதிரும்.

எனவே பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம் என்பதும் அரசு மூலமாகவே செயல்படுகிறது. வர்க்க வேறுபாடு களின் விளை பொருளான அரசு சமூக வர்க்கங்களுக்குச் சற்றே அப்பால் நிற்கிற அளவிற்கு ஒப்பீட்டளவில் சிறி தளவு சுயாட்சித் தன்மை கொண்டுள்ளது (அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறைக் கருவியே என்கிற மரபு வழிப்பட்ட மார்க்சியக் கருத்தாக்கத்திற்கும் இதற்கு முள்ள வேறுபாட்டைக்கவனியுங்கள்).எனவே புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் மக்களுக்கிடையேயான முரண்பாடு களைச் சரியாகக் கையாளாதபோது அரசு என்பது

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளி+விவசாயி வர்க்கக் கூட்டின் சர்வாதிகாரம் என்கிற நிலையிலிருந்து வழுவுகிறது. இந்த இரண்டிற்கும் அப்பாற்பட்ட இன்னொரு வர்க்கம் தன்னை ஆதிக்க நிலையில் நிறுவிக்கொள்ளும் சட்டமாக அதே அரசு மாறுகிறது. அதாவது அரசு தனது தொழிலாளி + விவசாயி உள்ளடக்கத்தை இழக்கிறது. அரசும் இவ்வாறு உருவான சுரண்டும் வர்க்கமும் ஒரு புறமாகவும் மக்கள் எதிர்ப்புறமாகவும் நிற்க நேருகிறது. திரிபுவாதம் தலைதூக்குகிறது.

சோசலிச மூலதனத் திரட்டல் என்கிற நோக்கில் மக்களுக்கிடையேயான முரண்பாடுகள் சரியாய்க் கையாளப் படாத தவறு ரசியாவில் நிகழ்ந்தது என்பதை முன்பே பார்த்தோம் **வலுக்கட்டாய கூட்டுப் பண்ணையாக்கம் (Forced Collectivisation)** என்கிற வடிவில் இது நிகழ்ந்தது. விவசாயிகளின் வருமானம் தொழிலாளிகளுடன் ஒப்பிடும் போது பாதியாகக் குறைந்தது. இவ்வாறு கப்பம் வசூலிப்பதால் ஏற்படும் விவசாயிகளின் எதிர்ப்பைச் சமாளிக்க கடும் அடக்குமுறைக் கருவியாகப் **போலீஸ்-எதேச்சாதிகார** அரசு உருவாகியது. **அதிகார வர்க்க மயமான மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலும் (bureacratic centralised planning)** இதற்கேற்ற வகையில் உருவாக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் உற்பத்தியில் ஆர்வமிழந்தனர். எந்தப் ''புராதன சோசலிச மூலதனத் திரட்டல்'' என்கிற நோக்குடன் இச்சமத்துவமற்ற நடைமுறை புகுத்தப்பட்டதோ அதிலும் தோல்வியே ஏற்பட்டது. சந்தையில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்களுக்கும் பற்றாமை ஏற்பட்டது.

விவசாயிகளிடமிருந்து இவ்வாறு பறித்தெடுக்கப்பட்ட உபரி நகர்ப்புற மத்தியதர வர்க்கம் மற்றும் கட்சி அணிகளின் வருமான அதிகரிப்பிற்குக் காரணமாகியது. கொஞ்சம் கொஞ்சமாக ஒரு **புதியவர்க்கமும்** அதனடியான **அடக்குமுறை அரசமைவும்** தோன்றின. முதலாளிய

www.padippakam.com



சனநாயகம் வழங்கிய உரிமைகளுங்கூட மக்களுக்கு மறுக்கப்படுவது தொடர்ந்தது. இவ்வாறு ஒரு ஆதிக்க வர்க்கம் தன்னை உறுதியாய் நிறுவிக்கொண்டது. வேறு நல்ல சொற்கோவை கிடைக்காததால் இந்த வர்க்கத்தை **அரசு முதலாளி வர்க்கம் (state bourgeoisie)** என்போம். ரசிய அரசின் தன்மையை இந்த வர்க்கப் பகுப்பாய்வின் அடிப்படையிலேயே வரையறுக்க வேண்டும்.

அடுத்த கட்டமாகக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ப்புறத் தொழிலாளர் மத்தியிலும் கடுமையான கூலி வேறுபாடுகளை இவ்வமைப்பு உருவாக்கியது. போனஸ் முதலியன முதலாளிய நாடுகளைப் போலவே தொழிலாளி வர்க்கத்தைப் பிளக்கவே பயன்படுத்தப்பட்டன. தொழிலாளிகளின் வேலைப்பளுவை அதிகரித்து உரிமைகளைப் பறித்தெடுப்பதற்கான அரசு முதலாளிகளின் கருவியாகத் தொழிற்சங்கங்கள் செயல்படத் தொடங்கின. உற்பத்தியில் சமூக/அரசியல்/ராணுவத் தேவைகளில் எதற்கு முன்னுரிமை கொடுப்பதென்பதிலும் அரசு முதலாளி வர்க்கத்தின் நலனே கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. கவனியுங்கள். அதிகாரவர்க்க மயமான மத்தியப் படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பது கூட இந்நோக்கிலேயே உருவாகியது. மாறாகப் பலர் குறிப்பிடுவது போல மதிப்பு, சந்தை போன்ற முதலாளிய வகையினங்களாகக் (தவறாக) கருதப்பட்டவற்றைக்கட்டுக்குள் வைத்திருக்கும் நோக்கில் இத்திட்டுமிடுதல் உருவாக்கப்படவில்லை. அடிப்படை வர்க்கங்களின் நலன்களுக்கு எதிரான ஒரு உற்பத்தி அமைப்பைத் திணிக்கும் நடைமுறையினூடையே இத்தகைய அதிகார வர்க்கமயமான மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் உருவானது. சனநாயக மறுப்பு கருத்து மாறுபாடுகளை வெளிப்படுத்தும் உரிமையின்மை, தொழிலாளர் தம் நலனைக் காத்துக் கொள்ள வாய்ப்பும் அமைப்பும் மறுக்கப்படுதல் ஆகியவை இதன் அரசியல் வடிவமாயின.

www.padippakam.com



இத்தகைய திரிபுவாதப் பாதைக்கான மூல காரணங்களாகச் சிலவற்றைச் சுட்டிக் காட்டுகிறார் அமின். முதலாவதாகப் போல்செவிசக் கட்சி என்பது (விவசாயப் பிரச்சினை தீர்க்கப் பட்டிருந்த) ஐரோப்பாவிலுள்ள தொழிலாளி வர்க்க இயக்கப் பாரம்பரியத்தில் உருவாகியது. எனவே போல்செவிக்குகளுக்கு விவசாயிகள் மீது அடிப்படையாக ஒரு அவநம்பிக்கை இருந்தது. போல்செவிக் கட்சி ஓர் நகர்ப்புறக் கட்சியாகவே இருந்தது. கிராமப்புறத்தில் அதற்குச் செல்வாக்கு இருந்ததில்லை. இவ்வாறு தொழிலாளி+விவசாயி கூட்டு என்பது அங்கு சரியாக நிறுவப்படவில்லை. அடுத்து லெனினிசத்திலேயே இந்தத் தவறுகளுக்கான மூலவித்துக்கள் உண்டு என்கிறார் அமின். முதலாளியத்தை ஓர் உலகந் தழுவிய அமைப்பாகப் பார்க்கிற விசயத்தில் இரண்டாம் அகிலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதில் மிகச் சரியாகச் செயல்பட்ட லெனின் இரண்டாம் அகிலத்தின் பொருளாதாரவாதத்திலிருந்து (Economism) தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ளவில்லை. **தொழில்நுட்பத்தை வர்க்கம் சாராததாகப் பார்க்கும் தவறும் திரிபுவாதத்திற்குக் காரணமாகியது.**

ஆக, ரசியாவிலுள்ளது சோசலிச அரசோ, அரைச் சோசலிச அரசோ இல்லை. இதன் உள்நாட்டுக் கொள்கையின் மறுதலையாகவே விரிவாக்கத் தன்மையிலான வெளியுறவுக் கொள்கையையும் பார்க்க வேண்டும். ரசியச் சமூகத்தின் மீள முடியாத தேக்கத்திற்கும், ரசியாவுக்கெதிரான கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கலகங்களுக்கும் அடிப்படையாக இருப்பது ரசிய ஏகாதிபத்தியத்தின் இத்தகைய காலனிய விரிவாக்கக் கொள்கையே என்பது அமின் கூற்று.

எனவே உலகை இனி முதலாளியப் பகுதி எனவும் சோசலிசப் பகுதி எனவும் பிரிக்க முடியாது. உலக அளவிலான மோதல்களையும் முதலாளிய சக்திகட்கும் சோசலிசச் சக்திகட்குமான மோதல்களாகப் பார்க்க

www.padippakam.com



வேண்டியதில்லை. சுற்றெல்லைகளில் ஏற்படும் நெருக்கடிகளின் விளைவாகத் தோன்றுகிற மக்கள் எழுச்சிகளின் மீது செல்வாக்குச் செலுத்துகிற தகுதி இனி மேலை முதலாளிய நாடுகளுக்கோ அல்லது ரசியாவிற்கோ இல்லை. சாத்தியமுமில்லை.

## V

சீனத்தின் வளர்ச்சிப் பாதைக்கு வழிகோலிய மாவோயிசம், ஆரம்பம் முதல் (1949) இறுதிவரை (1978) ரசியத் திரிபுவாதத்தின் பிரதான அம்சங்களிலிருந்து துண்டித்துக் கொண்டிருந்தது என்கிறார் அமின். இதன் பொருள், சீனத்தின் வளர்ச்சிப் பாதை முப்பதாண்டு காலமும் ஒரே சீராக இருந்தது என்பதல்ல. மாறாகக் கீழ்க்கண்டவாறு காலப் பாகுபாடு செய்வதற்குச் சாத்தியமிருக்கிறது.

1. 1949 — 1952

புத்துருவாக்கக் காலம். மாவோவின் 'புதிய சனநாயகத்தின்' அடிப்படையில் செயல் திட்டங்களும் போர்த் திட்டங்களும் அமைந்தன.

2. 1953 — 1957

கூட்டுப்பண்ணை மயமாக்கலும் முதல் ஐந்தாண்டுத் திட்டமும்.

3. 1958 — 1959

மாபெரும் பாய்ச்சல்.

4. 1960 — 1965

சீன-சோவியத் பிளவும் அதனடியான தகவமைப்பும்.

5. 1966 — 1968

மாபெரும் தொழிலாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி.

மா—5

www.padippakam.com



6. 1969 — 1976
கலாச்சாரப் புரட்சியால் குலைந்த பொருளியல் சம நிலையின் மறு தகவமைப்பும் உறுதிப்படுத்துதலும்.

7. 1977 — 1980 — புதிய பாதை.

1956 வரை சோவியத் அனுபவங்களின் அடிப் படையே சீனத்தின் வளர்ச்சி மாதிரியாக இருந்தது இதன் விளைவாக ரசியா போலவே சீன மண்ணிலும் அதிகார வர்க்கமயமான மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் உருவாகியது எனினும் நகர்ப்புறத்திற்கும் கிராமப் புறத் திற்குமிடையே சமபரிவர்த்தனை என்கிற மாவோயிசக் கோட்பாடு இந்தக் காலகட்டத்தில் கூட கைவிடப்பட வில்லை. இத்தகைய அரசியலின் ஆணையிலேயே சீனத்தில் கூட்டுப் பண்ணை மயமாக்கல் (கம்யூன் மயமாக்கல் என்று சொல்வது பொருத்தம்) மேற்கொள்ளப்பட்டது. விவசாய உற்பத்தி அதிசயிக்கத் தக்க அளவில் வளர்ச்சியுற்றது.

சோவியத் பாதையைப் பின்பற்றியதால் தொழில் துறையில் பல கடுமையான பிறழ்வுகள் (distortion) ஏற் படத்தான் செய்தன. ஆனாலும் அவை திருத்த முடியா தவையாக அமையவில்லை இத்தகைய பிறழ்வுகளும் அதிகார வர்க்க மயமாதலும் ஏற்படுத்திய சிதைவுகளிலி ருந்து மீள்வதற்கான போராட்டத்தை மாவோயிசம் இறுதி வரை கைவிடவில்லை. 1957 - ஆம் ஆண்டின் **நூறு பூக்கள் இயக்கமாகட்டும்,** 1960 களின் பிற்பகுதியில தோற்றுவிக்கப்பட்ட **கலாச்சாரப் புரட்சி** (க பு). "**தலைமை யகத்தை தகர்த்தெறியுங்கள்**" போன்ற முழக்கங்களா கட்டும் இத்தகைய நோக்கிலேயே அமைந்தன. 1960 தொடக்கத்தில் முற்றிலுமாக ரசியப் பாதையிலிருந்து விடுவித்துக் கொண்ட சீனம் மாவோவின் "**பத்து பெரும் உறவுகள்**" வரையறுத்த கோட்பாடுகளின் அடிப்படையில் **அன்சான் பிரகடனத்தை** (Anshan charter) உருவாக்கியது. "கட்சி அணிகளே அனைத்தையும் தீர்மானிக்கும்"

www.padippakam.com



என்கிற ரசியாவின் **மேக்னிடார்ங்க்** அணுகல் முறைக்கு மாறாக, சோசலிச நிர்மாணம் என்பது தொழிலாளர்கள் அணியினர், கட்சி ஆகியவற்றின் கூட்டு முயற்சியே என அன்சான் பிரகடனம் அறிவித்தது. (அ) அரசியலை ஆணையில் வைத்தல், (ஆ) பொருளியல் வாழ்வின் ஒழுங்கமைப்பு என்பது தொழில் நுட்ப வல்லுநர்களின் பணி அல்ல; அது கட்சியின் பொறுப்பு, (இ) பொதுவான மற்றும் குறிப்பிட்ட வகையான குறிக்கோள்களை வரையறுப்பதில் மக்களின் தலையீடு அவசியம், (ஈ) அணியினர் (Cadre) உழைப்பில் பங்கேற்க வேண்டும், (உ) தொழிலாளர்கள் நிர்வாகத்திலும், புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதிலும் பங்கேற்க வேண்டும் என்பன அன்சான் பிரகடனத்தின் பிரதான அம்சங்களாகும்.

மொத்தத்தில் இந்த முப்பதாண்டுக் காலத்திற்குமான ஒரு குறை-நிறைப் பட்டியலைத் தயாரித்தால் அதிலிருந்து கீழ்க்கண்ட உண்மைகளைத் தருவிக்க முடியும்.

1. நிலச் சீர்திருத்தமும் கம்யூன்மயமாதலும் மகத்தான வெற்றிகளாய் அமைந்தன.

2. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின்னும் சோவியத் மாதிரி பின்பற்றப்பட்டிருந்தால் விவசாயிகளின் மீது கடும் கப்பம் விதிக்கப்பட்டிருக்கும்.

3. மூலதனத் திரட்டல், அவசர வளர்ச்சி ஆகியவை குறித்த கூடுதல் நம்பிக்கை (over estimate)யின் விளைவாக சீனத்தின் பொருளியல் சமநிலை இந்தக் கட்டங்களில் (எ-டு: மாபெரும் பாய்ச்சல், க-பு) ஆட்டங் கண்டது.

4. 1960-களில் ரசியா தனது உதவிகளை வெட்டிக் கொண்டதால் பல பிரச்சனைகளை சீனம் எதிர் கொள்ள நேர்ந்தாலும் விரைவிலேயே அவற்றிற்குத் தீர்வு காணப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



**5. 1969-லிருந்து 1976-க்குள் கம்யூன் போன்ற உறுதியாய் வேரோடியிருந்த அமைப்புகள் மூலம் புதிய சமநிலை எட்டப்பட்டது.**

பொதுவாக **வலப்பாதைக்கும்**, இடப்பாதை எனச் சொல்லப்பட்ட ஒருவகை இடக் குருங்குழுப் (Left Sectarian) பாதைக்கும், இடது-மத்திய (Left Centrist) பாதைக்குமிடையேயான ஒரு போராட்டம் என்பது தொடர்ந்து இருந்து வந்தது. 1960-களின் தொடக்கத்தில் **லியூசோசியாலும்** 1970-களில் **டெங்சியோபிங்காலும்** முன் வைக்கப்பட்ட வலதுசாரிக்கோட்பாடுகள் (குடும்பப் பொருளாதாரம், கிராமப்புற ஏற்றத்தாழ்வுகளை அனுமதித்தல் போன்றவை) விவசாய உற்பத்தியில் எத்தகைய முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை இடது சாரிப்பாதை என உரிமை கொண்டாடப்பட்ட **மாபெரும் பாய்ச்சல் (Great Leap Forward)** காலகட்டமும். **''நால்வர் குழு''** எனப்படும் குறுங்குழுவின் ஆதிக்கம் மேலோங்கிய கலாச்சாரப் புரட்சியும்கூட வளர்ச்சி வீதத்தில் சரிவையே ஏற்படுத்தன. (இக்காலகட்டங்கள் மக்களின் எழுச்சிக்கும் முன் முயற்சிக்கும் தூண்டுதலாய் அமையவே செய்தன). கனரகத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க முயற்சிக்கப்பட்டபோதெல்லாம் சீனப் பொருளா தாரத்தில் பிறழ்வுகள் ஏற்படவே செய்தன.

முடிவாக, இப்படிச் சொல்லலாம். 1970 களில் ஒரு புதிய மையப்பாதை கடைப்பிடிக்கப்பட்ட போதே சீனப் பொருளாதாரத்தில் சமநிலை ஏற்பட்டது. குறிப்பிடத் தக்க சாதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. கட்சிக் குள்ளும் கூட இந்த மூன்று பாதைகளுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் இருந்து வந்தன. மாவோ இருந்த வரை இந்த மூன்று பாதைகளிலும் சரியான இடதுபாதை அதாவது மாவோயிசப் பாதை சோசலிச நிர்மாணத்தில் முக்கியப் பங்காற்றியது. மாவோ இதனை ''இடது— மத்தியப் பாதை'' என அழைத்துக் கொண்டார். பெரும்

படிப்பகம்

www.padippakam.com



பான்மையான தொழிலாளிகள், விவசாயகள், போரா ளிகள் ஆகியோர் ஈர்க்கப்படுகிற நடுப்பாதையை இடப் பாதையுடன் இணைத்து இதனை மாவோ உருவாக் கினார். சௌ-என்-லாய், ஹிவா கோபெங் ஆகியோரை இந்தக் கூட்டின் குறியீடாகக் காணலாம்.

ஆனால் ஒன்று. இதைத்தான் அமின் நூல் முழுமையும் வற்புறுத்துகிறார். சீன வளர்ச்சிப் பாதையின் இந்தப் பல்வேறு கட்டங்களையும் முற்றிலுமாய் வேறுபடுத்தி விட முடியாதபடி ஒரு தொடர்ச்சி ஒன்று இருந்து வந்தது. போல்செவிசத்திலிருந்து வேறுபட்டு அதன் அடுத்தகட்ட வளர்ச்சியால் மாவோயிசம் தன்னை நிறுவிக் கொள்வதும் இந்த அம்சத்தில்தான். அதுதான் தொழிலாளி—விவசாயி ஐக்கியம். எந்தக் கட்டத்திலும் இது சிதையவே இல்லை. விவசாயியின் உழைப்பு சுரண்டப்பட்டதேயில்லை. **விவசாயி, தொழிலாளி சமத்துவம் இறுதிவரை நீடிக்கப் பட்டது**

## VI

அப்படியானால் சீனத்தின் வளர்ச்சிப் பாதையிலும் அதை வழி நடத்திய மாவோயிசத்திலும் குறைகளே இல்லையா? அப்படி ஒன்றும் சொல்லிட வில்லை அமின். **எந்த அம்சத்தில் மாவோயிசம் போல்செவிசத்திலிருந்து வேறு பட்டு நின்றதோ அந்த அம்சத்தை கோட்பாட்டுருவாக்கம் செய்யத் தவறியது மாவோயிசத்தின் மிகப் பெரிய குறை.** ரசியத்கிரிபுவாதத்திலிருந்து சீனம் விலகியதென்பது ரொம் பவும் தன்னெழுச்சியாக நிகழ்ந்தது. விவசாயப் பிரச் சினைகள் தீர்க்கப்படாத சீனத்தில் தோன்றிய பொது வுடைமைக் கட்சி விவசாயிகளையும் கிராமப்புறத்தையும் முதன்மையாய்க் கொண்டு வளர்ந்தது. இந்த அடிப்படை யிலேயே விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுப்பது, விவ சாயிகளின் மீதான கப்பத்தின் மீது சோசலிச மூலதனம் திரட்டப்படாமை ஆகியவையெல்லாம் மேற்கொள்ளப்

www.padippakam.com



பட்டன. ரசிய மாதிரி பின்பற்றப்பட்ட காலத்திலுங்கூட தொழிலாளி+விவசாயி உள்ளடக்கத்தை ஆட்சியும் கட்சியும் இழக்காததற்கு இதுவே காரணம்.

ரசியர்களுடன் நடத்திய மாபெரும் விவாதத்திலுங்கூட சீனர்கள் இந்த மையமான கோட்பாட்டுப் பிரச்சினையைத் தொடாது அமைதி காத்தது துரதிர்ஷ்டமே. மூன்றாம் அகிலம், ஸ்டாலினியம் ஆகியவற்றுடன் மாவோயிஸ்டுகள் கொண்ட இரண்டக உறவு, ரசியாவை முழுமையாகப் பின்பற்றவுமில்லாமல், முற்றாகத் துறக்கவுமில்லாமல் நெளிவு சுழிவுகளுடன் நடந்து கொண்ட தன்மை ஆகியவற்றை இந்தப் பின்னணியிலேயே நாம் காண வேண்டும். இந்த அமைதிக்குக் கொடுக்கப்பட்ட விலையாகவே திரிபுவாதம் குறித்த மாவோயிச விமர்சனத்தின் போதாமையை நாம் காண வேண்டும். திரிபுவாதத்திற்கெதிரான போராட்டம் என்பது தங்களது நாட்டிற்குள் எழுந்த பிரச்சினைகளைத் தீர்வுகாணும் நோக்கில் எழாமல், ரசியாவில் நடைபெற்ற நிகழ்வுகளின் (சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைக் கருவியாக ரசியா மாறியது, உலக அளவில் சீனம் உட்படப் பல நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் வல்லரசாக மாறியது போன்றவை) அடியாகத் தோன்றியதும் இந்தப் போதாமைக்கு ஒரு காரணமாக அமைகிறது.

ரசியாவிலிருந்து முற்றாகத் துண்டித்துக்கொண்ட பின்னுங்கூட திரிபுவாதத்திற்கெதிரான விமர்சனத்தை அதன் தர்க்க பூர்வமான இறுதிக்கு மாவோயிசம் இட்டுச் செல்லவில்லை. இதன் விளைவே ஸ்டாலின் குறித்த சீனர்களின் நிலையற்ற (inconsistant) மதிப்பீடுகள், போல்செவிசப் பாரம்பரியம் என்பது இத்தகைய ஒரு கோட்பாட்டுருவாக்கத்தை அனுமதிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ட்ராட்ஸ்கி உட்பட (புக்காரின் மட்டும் விதிவிலக்கு) போல்செவிக்குகள் அனைவரும் விவசாயிகள்

www.padippakam.com



மீது இப்படி ஒரு கப்பம் விதிப்பதை ஆதரித்தே வந்துள்ளனர். மாவோயிஸ்டுகள் போல்செவிசத்திலிருந்து சில அம்சங்களில் சரியாக மாறுபட்டுநின்றபோதும் தங்களைப் போல்செவிசப் பாரம்பரியத்தில் வந்தவர்களாகவே கருதிக் கொண்டது என்பது அவர்கள் நடைமுறையில் மேற்கொண்ட சரியான பாதையைக் கோட்பாட்டு ரீதியாய் முன்வைப்பதிலிருந்து அவர்களைத் தடுத்தது. ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். மாவோயிச அனுபவத்தைக் கோட்பாட்டுருவாக்கம் செய்த ஆவணம் மட்டும் உருவாக்கப்பட்டிருந்தால் மாவோயிசத்தின் இடது திரிபும் (நிர்வாக ஒடுக்குமுறை மூலம் சமத்துவத்தை நிறுவுதல்) வலதுதிரிபும் (உற்பத்தித் திறனுக்கேற்ற கூலி/லாபம்) தோலுரிக்கப்பட்டு இன்னும் முழுமையாகத் தூக்கி எறியப்பட்டிருக்கும்.

திரிபுவாதத்திற்கெதிரான விமர்சனத்தின் இன்னொரு குறைபாடு, ரசியாவில் அரசு முதலாளி வர்க்கம் தன் நிலையை உறுதிசெய்து கொண்டதில் அதிகார வர்க்கமயமான மையப் படுத்தப்பட்ட திட்டமிடுதலின் (அ.மை.தி) பங்கை முழுமையாக விளங்கிக் கொள்ளாதது. எதேச்சதிகாரத்தனமான அரசுக்கும் அ.மை.திக்.குள்ள உறவும் கூட சமீபகாலம் வரை சரியாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. கம்யூன்களின் தோற்றகாலத்தில்அதிகாரவர்க்கப் போக்கு வலிமையாகச் செயல்பட்டது. அரை ராணுவத்தனமான நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு உழைப்புச் சக்தி கசக்கிப் பிழியப்பட்டது. க.பு வின் போது இந்தக் கொடுமை உச்சத்தை அடைந்தது. இதன் விளைவாகவே க.பு வுக்கு உற்பத்தியிலிருந்து ஒதுங்கிய இளைஞர்களின் ஆதரவும் தொழிலாளர்களின் எதிர்ப்பும் கிடைத்ததை நாம் பார்க்க வேண்டும். மேலும் க.பு.வின் போது ஒருவகையான அராஜகமான முறையில் **அதிகாரப் பரவல் (decentralisation)** என்கிற முழக்கம் முன் வைக்கப்பட்ட போதிலும் சந்தைக்குப் பதிலாக அதிகாரவர்க்க

www.padippakam.com



நிர்வாகமே (administrative management) முன் வைக்கப் பட்டது.

மேலும் அதிகாரப் பரவலாகப்பட்ட சுய நிர்வாகம் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட போதும் அ. மை. தி. நீக்கப்படவில்லை. இதன் விளைவாகவே அன்சான் பிரகடனம் வலியுறுத்திய தொழிற்சாலைகளில் தொழி லாளர் ஆதிக்கம் என்பதையும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கலேற்பட்டது. பிரகடனத்திற்கு எதிராகக் கட்சி அணிகள் நின்றது என்பதும் இத்துடன் சேர்ந்து கொண்டு பிரகடனம் சரிவதற்கு வழிகோலியது. அ. மை. தி. க்கு சரியான மாற்றீடு செய்யப்படாததனாலேயே க.பு.வின் போது மக்களது முன் முயற்சிக்காக விளிக்கப்பட்ட அழைப்புகளெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குக ளாயின. எனவே க.பு. குழப்பமானபோராட்டங்களிலேயே போய் முடிந்தது. இந்தக் குழப்பம் + திரிபுவாதம் / அ. மை. தி. ஆகியவற்றின் மீதான விமர்சனத்தின் குறை பாடு இவையெல்லாம் சேர்ந்து ஒய்ந்து கிடந்த உள்ளூர் நிலப்பிரபுத்துவ சக்திகள் மேலெழுவதற்குக் காரண மாகின.

ஐரோப்பியத் தொழிலாளர் வர்க்க இயக்கம், போல்செ விசம், மூன்றாம் அகிலம் ஆகியவற்றின் பாரம்பரியத் தோடு தன்னை இணைத்துக் கொண்டதால் மாவோயிசத் திற்கு ஏற்பட்ட இன்னொரு பெரிய இழப்பு கட்சி, சனநாயகம் ஆகியவை குறித்த அதன் குறுகலான பார்வைகள். "என்ன செய்யவேண்டும்?" என்கிற லெனினது புகழ்பெற்ற நூலில் வரையறுக்கப்படுகிற **கட்சி** பற்றிய பார்வையிலிருந்து சற்று மாறுபடுகிறார் அமின். கட்சி என்பது மார்க்சிய வரட்டுத் தலங்களி லிருந்து விடுபட வேண்டும். கட்சியை ஒரே கருத்தை மட்டும் உள்ளடக்கிய ஒற்றைப் பரிமாண வடிவமாக (monolith) பார்க்கக்கூடாது. புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் கட்சி என்பது நிர்வாக அதிகாரங்கள் இல்லாத

படிப்பகம்

www.padippakam.com



ஒரு நிறுவனமாகவே இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் கட்சி என்றென்றைக்கும் எதிர்க்கட்சி தான்.

புரட்சிக்குப் பிந்திய சமூக உருவாக்கத்தில் பொருளாதார ஒழுங்கமைப்பைக் காட்டிலும் அரசியல் மற்றும் சமூக வாழ்க்கையை ஒழுங்கமைப்பது முக்கிய பங்கு வகிக்கிறது. சனநாயகம் குறித்த விவாதம் மாவோவிற்குப் பிந்திய சீனத்தின் தொடக்க காலத்தில் அனுமதிக்கப் பட்ட அளவிற்குக்கூட மாவோவின் காலத்தில் அனுமதிக்கப்படவில்லை. முதலாளியப் புரட்சியின் விளை பொருளான சனநாயகம் மனித சமூக வளர்ச்சியில் இன்னொரு மைல்கல். சோசலிச சனநாயகம் என்பது முதலாளிய சனநாயகத்தின் உயர் வடிவம். முதலாளியப் புரட்சியினூடாக வென்றெடுக்கப்பட்ட (எழுத்து/பேச்சுரிமைகள்; சங்கம்/அமைப்புகள் தோற்றுவிக்கும்உரிமை; வேலை நிறுத்த உரிமை போன்ற) சனநாயக உரிமைகளை 'மேலான நலன்கள்' என்கிற பெயரில் கைவிடமுடியாது. உண்மையான சனநாயக உரிமைகளுக்குத் தனிச் சொத்துரிமைதான் தடையாக இருந்தது என்கிறபோது தனிச் சொத்தின் அழிவு என்பது முதலாளிய சனநாயக உரிமைகளின் வளர்ச்சிக் கட்டத்திற்கல்லவா வழிகோல வேண்டும்! இந்த நோக்கில் பார்க்கும்போதுதான் வேலை உரிமையையும் கல்வி உரிமையையும் மட்டும் வழங்குகிற 'சோவியத் சனநாயகம்' உண்மையில் ஒரு சனநாயக மறுப்பே என்பது புரியும். முதலாளிய சனநாயகமும் கூட இல்லை என்பது சோவியத் அரசு சுரண்டல் தன்மையானது, ஒடுக்குமுறை நிறைந்தது என்பவற்றிற்கு அடையாளமாகவே அமைகிறது.

மாவோவுக்கு முந்திய சீனம் ஒப்பீட்டுளவில் ரசியாவைக் காட்டிலும் சனநாயகத் தன்மை மிக்கதாய் இருந்த போதிலும் மாவோயிசத்தின் சனநாயகம் பற்றிய பார்வை

www.padippakam.com



இது குறித்தபோல் செவிசக் குறைபாட்டைக் களைந்ததாக அமையவில்லை. 1957இல் தோற்றுவிக்கப்பட்ட நூறு பூக்கள் இயக்கம் சனநாயகத்தின் எல்லைகளை விரிவாக்க முயற்சித்தாலும் அதன் விளைவாக தோன்றிய சோசலிச எதிர்ப்பு விமர்சனங்கள் எதிர்ப்புரட்சிகரமானதாய் அறிவிக்கப்பட்டு அந்த இயக்கமே அவசர அவசரமாய்க் கைவிடப்பட்டது இதையே காட்டுகிறது.

மாவோயிசத்தின் இக்குறைபாடுகளின் விளைவாக சீன வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட மேற்குறித்த சரிவுகள் தவிர இன்னும் சிலவற்றைச் சுட்டலாம்.

1. ஒப்பீட்டளவில் உலக நாடுகள் எதைக் காட்டிலும் சீனம் வேலை வாய்ப்பில் முன் நின்றாலும் மறைமுகமாக அங்கு வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவுகிறது. கம்யூன்களிலும் நிறுவனங்களிலுமுள்ள தொழிலாளர்களை வீட்டிற்கு அனுப்பினால்கூட உற்பத்தி பாதிக்காது என்கிற வடிவில் இது இருக்கிறது.

2. ஒப்பீட்டளவில் உலக நாடுகள் எதைக் காட்டிலும் சமூக சமத்துவம் சீனத்தில் நிலவியதெனினும் கம்யூன்களுக்கிடையேயும் அதற்குட்பட்ட நிலைகளிலும் வேறுபாடுகள் நிலவவே செய்கின்றன. இதற்கு அடிப்படையாக வரலாற்று /புவியியற் காரணிகள் அமைந்தபோதிலும் இக்குறைபாடுகள் தொடர்ந்து நீடிக்கவே செய்தன.

5. ஒப்பீட்டளவில் கூலி வேறுபாடு குறைவாகவே இருந்தபோதிலும் சட்ட பூர்வமான சிறப்புச் சலுகைகள் மூலமாகவும், சட்டத்திற்கப்பாற்பட்ட நடவடிக்கைகள் மூலமாகவும் ஒரு சில கட்சி அணியினர் மற்றும் நிர்வாகிகள் சமூக நலன்களைச் சுருட்டிக் கொள்வதில் முன் நிற்கவே செய்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



ஆக இப்படிச் சொல்லலாம். இக்கட்டுரையின் இரண்டாவது பகுதியில் சோசலிசப் போக்குகளாகக் குறிப்பிட்ட நான்கில் முதலிரண்டில் சரியான சோசலிசப்பானதயை மேற்கொண்ட சீனம் அடுத்த இரண்டில் குறைபாடுடையதாய் இருந்தது. எல்லாம் சொன்ன பிறகும்கூட முதலாளிய நாடுகளுடனும், ரசியா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஒப்பிடும்போது மொத்தத்தில் மாவோ காலத்திய சீனம் வரவேற்கத் தக்கதாகவே அமைந்திருந்தது.

## VII

எல்லாம் சரி. மாவோவுக்குப் பிந்திய, குறிப்பாக 1978க்குப் பிந்திய சீனத்தின் வளர்ச்சிப் பாதை மாவோ காலத்திய பாதையில் தொடர்கிறதா? வேறுபடுகிறதா? குறை வளர்ச்சி நாடுகட்கான மிகச்சிறந்த வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த சீனம் அதன் தர்க்க பூர்வமான இலக்கை அடையுமா? இல்லை ரசியா போலத் திரிபுவாதத்தில் சரியுமா?

1981 இல் எழுதப்பட்ட இந்நூலில் இக்கேள்விகள் அனைத்திற்கும் சமிர் அமின் அறுதியான பதில்கள் என எதையும் கூறிவிடவில்லை.

1976-இல் மாவோ மறைந்தபின் ஹ்வா குவாபெங்கிடம் அரசியலதிகாரம் சென்றது. டெங்சியோ பெங்கிடம் அரசியலதிகராம் திரும்பிய கையோடு புதிய பாதைக்குக் கதவு திறக்கப்பட்டது. நவீனமயமாக்கல், பொருளாதார அதிகாரப்பரவல், நிறுவனங்களுக்கு நிர்வாகத்தில் சுயாட்சி, மேலை நாடுகளுக்குக் கதவு திறப்பு, நேரடியாகவும் மறைமுகமாகவும் மாவோயிசத்தின் மீது தாக்குதல் போன்றவை புதிய பாதையின் முக்கிய அம்சங்கள். நால்வர் குழுவின் அரசியல் பாதை தூக்கி எறியப்பட்டது. சனநாயகம் குறித்த விவாதங்கள் அனுமதிக்கப்பட்டன.

www.padippakam.com



(நினைவிருக்கட்டும் 1981-இல்) பண்ட உறவுகட்குத் தடையின்றி வழிகோலப்பட்டது.

இந்த நடைமுறைகள் இன்று பல்வேறு முக்கிய பிரச்சினைகளை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளன. சந்தை உறவுகட்கும் சோசலிசத்திட்டமிடுதலுக்குமான சரியான உறவு புரிந்து கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. சோசலிசமும் திட்டமிடுதலும் எதேச்சாதிகாரத்தின் விதைகளை தன்னுள் அடக்கிக்கொண்டே பிறக்கின்றன என்கிற வில்லங்கத்தனமான முதலாளியக் கருத்திற்கான (கவனியுங்கள் இன்றைய பிரச்சினைகள் குறித்தமுதலாளிய பத்திரிகைகளின் கூக்குரல்கள். இதே நேரத்தில் **தென் கொரியா**வில் மாணவர் கொடூரமாக அடக்கப்படுவதைக் கண்டும் காணாத இவர்கள் சீனத்தை மையமாக வைத்து உலக வரலாற்றில் ஏழை பாழைகளின் நலனைப் பற்றிக் கரிசனப்பட்ட ஒரே தத்துவமாகிய மார்க்சியத்தை எதிர்த்து எவ்வளவு வெறித்தனமான கூச்சல் இடுகின்றனர்!) சரியான பதிலை, எத்தகைய சமூக உறவுகளின் அடிப்படையில் இத்தகைய திட்டமிடுதல் ரசியாவில் எதேச்சாதிகாரத்திற்கு இட்டுச் சென்றது என்பதை மையமாக வைத்து விவாதத்தை நடத்திச் செல்வதன் மூலமே பெறமுடியும்.

''சொத்துக்களையும் அதிகாரத்தையும் அரசு மற்றும் கட்சி அணிகளின் கையிலிருந்து பற்றி தொழிலாளர் கூட்டுக்களின் கரங்களில் ஒப்புவிப்பது'' என்கிற முழக்கமும் எழுப்பப்படுகிறது. இது அதிகார வர்க்கத்திடமிருந்து அதிகாரங்களைப் பறித்து நிர்வாக இயக்குநர்களின் கையில் திணித்த **குருச்சேவிசத்**தைக் காட்டிலும் உயர்ந்தது, கிட்டத்தட்ட **யுகோஸ்லாவியா** மாதிரியான தொழிலாளர் சுய நிர்வாக முறையை இது ஒத்திருக்கிறது. தொழிலாளர்கள் இந்நிலையைப் பயன்படுத்திக் கொள்வார்களா? கட்சி அணிகள் இதனை அனுமதிக்குமா?

www.padippakam.com



நவீனமயமாக்கல் என்பதன் மூலம் தொழிலாளரின் நலன்கள் புறக்கணிக்கப்படும் அபாயமும் சீனத்தில் இருப்பதாக அமின் நம்பவில்லை. தொழிலாளரை மூலதனத்திற்கு அடிமையாக்கும் டெய்லரிச ஆபத்து கிழக்கு ஐரோப்பா அளவுக்குச் சீனத்தில் இல்லையெனினும் உற்பத்தி அதிகரிப்பிற்கு மிக அதிகமான முன்னுரிமை கொடுப்பது, உள்வாங்கிக் கொள்வதற்குச் சாத்தியமானதைக் காட்டிலும் அதிக வேகத்தில் அந்நியத் தொழில் நுட்பங்களைப் புகுத்துவது போன்ற நடைமுறைகள் எதிர்காலத்தில் டெய்லரிச ஆபத்திற்கும் இட்டுச் செல்லலாம். (கவனியுங்கள் : டெய்லரிசத்தை ஓரளவு லெனின் ஆதரித்தார்). தொழில்நுட்ப இறக்குமதியில் மிகக் கவனமாக இருப்பது அவசியம். இந்த விசயத்தில் 'தாராளமாக' நடந்து கொண்ட எந்த நாடும் உருப்பட்டதில்லை. சீன அரசு வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது கட்டுப்பாட்டை நிலைநாட்டுவது போலத் தோன்றினாலும் இத்தகைய விரிவாக்கத்தின் மூலம் லாபமடைகிற நிறுவனங்களின் அழுத்தத்திற்குப் பணிந்து இதனை விட்டுக் கொடுக்கக் கூடிய ஆபத்தும் நிகழலாம்.

லாபம், சுதந்திர வணிக மையம், திறமையானவர்களுக்கு அதிக ஊதியம் எனச் சோசலிச உள்ளடக்கம் சிதைவதற்கு இட்டுச்செல்வதா- இல்லை, குறுகிய கூலி அளவை மாறாது வைத்திருத்தல், ஒரு சில துறைகளில் மட்டுமே அந்நியக் கூட்டை அனுமதிப்பதா என்கிற இரண்டு பாதைகளில் இந்தச் சூழலில் எது சரியானது எனக் கேட்டால் இந்த இரண்டிற்குமிடையே ஒரு மையமான பாதையைத் தேர்ந்தெடுத்தலே சரியாக இருக்க முடியும் என்பது அமினின் கருத்து.

அரசியல் மற்றும் சமூக வாழ்வைச் சனநாயகப்படுத்துவது தொடர்பாகப் புதிய பாதையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சனநாயகம் பற்றிய விவாதத்தை மிக்க

www.padippakam.com


நம்பிக்கையோடு பார்க்கிறார் அமின். முன் வைக்கப்படும் (அரசைச் சனநாயகப்படுத்துவது, கட்சியை இந்நோக்கில் தகவமைப்பது, சிவில் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது போன்ற) இத்தகைய சனநாயக ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது என்பது தொழிலாளி - விவசாயி சர்வாதிகாரத்தை வலுப்படுத்தச் செய்யுமேயொழிய அதற்கு எதிரானதாக அமையாது. இதுவே மக்களுக்கிடையேயான சரியான தீர்வை நோக்கி இட்டுச் செல்லும். எனவே இவ்விவாதங்களின் முக்கியத்துவம் குறைந்து மதிப்பிடக் கூடியதல்ல. எனினும் இவை எதுவும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. மாற்றங்கள் முதற்கட்டத்திலேயே நிற்கின்றன. அடுத்தகட்டத்திற்குப் போகாதவரை பின்னோக்கிய சரிவுக்கு வாய்ப்புண்டு.

சீனத்தின் பிரபுத்துவப் பழமை, **கன்பூசியஸ்** சிந்தனைப் பாரம்பரியம், முதலாளியப் புரட்சி நிறைவேற்றப்படாமை போன்ற அம்சங்கள் சனநாயகப் பண்பாட்டிற்குத் தடைக்கற்களாக அமைய வாய்ப்புண்டு. எனினும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்றைக்கும் ஒற்றைப் பரிமாணமாய் இல்லாதிருந்ததும், கருத்து மாறுபாடுகட்காக ஆட்கள் தீர்த்துக் கட்டப்பட்ட வழக்கம் கடைப்பிடிக்கப்படாததும் நம்பிக்கையூட்டக் கூடிய அம்சங்கள் முதலாளியரைக் கூட அழித்தொழிக்கும் முயற்சி இதுவரை (1981) மேற்கொள்ளப்பட்டதில்லை. எனினும் மாவோயிசத்தைக் கவிழ்த்து அதன் ஆதரவாளர்களை வேரறுக்கும் ஒரு முயற்சியும் இப்போது இருக்கத்தான் செய்கிறது. கலாச்சாரப் புரட்சியை விமரிசிக்கும் அதே நேரத்தில் எத்தகைய சமூக முரண்பாடுகள் க-பு.விற்கு இட்டுச்சென்றன என்பது குறித்து இன்றைய ஆட்சியாளர்கள் வாய் திறக்கவில்லை.

மாவோயிசப்பாதையில் சீனம் தொடர்ந்து நிலைக்குமா என்கிற கேள்வியை மறுபடியும் எழுப்புகிற அமின்

www.padippakam.com



தேவைக்கதிகமான நம்பிக்கையோடு எதிர்காலத்தைப் பார்த்திருக்கிறார். பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பதிலும் நிர்வகிப்பதிலும் ஒரு இடைப்பட்ட பாதை (கவனிக்கவும் வலப்பாதை அல்ல) கடைப்பிடிக்கப்படும் என உறுதியாக நம்பலாம் என்றும், இதன் மூலம் வளர்ச்சி முடுக்கப்படும், நான்குவித நவீனமயமாக்கல் நிறைவேற்றப்படும் என்கிறார்.

மக்கள் கம்யூன்களைத் தகர்த்தெறிந்து நிலத்தில் தனிச் சொத்துரிமையையும் உழைப்புச் சுரண்டலையும் நிலைநாட்டும் முயற்சிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்றாலும் 'குலக்' (நிலப்பிரபுத்துவ) அபாயம் சீனத்தில் இல்லை. நடுத்தர மற்றும் ஏழை விவசாயிகள் இதனை அனுமதிக்கமாட்டார்கள்.

1979-'80 இல் இந்தப் புதிய பாதை அப்படி ஒன்றும் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்திவிடவில்லை என ஏற்றுக்கொள்ளும் அமின் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாட்டை இழந்து பன்னாட்டு வேலைப் பிரிவினை என்னும் வலைக்குள் சிக்கிவிடும் அபாயம் இன்னும் சீனத்தில் ஏற்பட்டு விடவில்லை என ஆருடம் கூறுகிறார்.

புதிய பாதையின் அரசியல் தோல்விகள் சுய நிர்வாக உரிமை வழங்கப்படுவதில் உள்ளார்ந்துள்ள இடர்களையே குறிக்கின்றன. சந்தைப் போட்டிக்குக் கொடுக்கப்படும் அதிக அழுத்தம் திட்டமிடுதலில் குழப்பத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. கட்சி ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சிறப்புச்சலுகைகள் பரவலான விரக்திக்கு இட்டுச் சென்றுள்ளன. வெகுமக்கள் பாதை கைவிடப்பட்டு படிநிலைச் சமூக அமைப்பிற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. வெகு மக்களுக்குச் சனநாயகம் வழங்கப்படும் போதே வர்க்கமற்ற சமூகத்திற்கான நீண்ட பாதையின் அடுத்த கட்டத்தைத்

www.padippakam.com



தாண்ட முடியும். இவற்றையும் அமின் குறிப்பிடத் தவறவில்லை.

மொத்தத்தில் சீனச்சமுதாயம் கீழ்க்கண்ட மூன்று திசைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

1. மையப் பாதை. இது வரவேற்கத் தக்கது. 1950-1978 காலகட்டத்தைக் காட்டிலும் இது ஒருபடி மேலானதாக அமையும். சோசலிச சனநாயகத்திற்கும் வழி வகுக்கும்.

2. யுகோஸ்லாவியா மாதிரியான திரிபுவாதப் பாதை. அவ்வளவு வரவேற்கத் தக்கதில்லையாயினும் முற்போக்கான திசை வழியில் செல்லும் திறன் முற்றாக அழிந்து விடாது.

3. உலக முதலாளிய அமைப்பில் இணைந்து அரைக் காலனியாக மாறுதல்.

முதற்பாதைக்கு வழி திறந்தாலுங்கூட அதுவும் ஒரு முழுமையான சோசலிசச் சமுதாயத்தை அமைக்காது என்பது வேறு கதை. செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்களின் அடிப்படையில் எதிரேயுள்ள சாத்தியக் கூறுகளில் மூன்றில் முதல் பாதை பரவாயில்லை; அவ்வளவுதான்.

## VIII

அமினின் நம்பிக்கைகள் பல தகர்ந்துள்ளன என்பதைச் சமீபத்திய நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. இது குறித்த விவாதங்களைச் சற்று ஒத்தி வைத்துவிட்டு, குறை வளர்ச்சி நாடுகளுக்கான சரியான வளர்ச்சிப் பாதை என்கிற வகையில் மாவோயிசத்தின் எதிர்காலம் குறித்த அமினின் கருத்துக்களைத் தொகுப்போம்.

www.padippakam.com



முதலாளியப் புரட்சி நடைபெறாத குறை வளர்ச்சியுடைய மூன்றாம் உலக நாடுகளிலும் சோசலிசக் கட்டுமானம் சாத்தியமே என மாவோயிசம் நிறுவியது என்பதையும் குறை வளர்ச்சிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முதலாளியப்பாதை படுதோல்வியே அடையும் என்பதையும் மூன்று வளர்ச்சி மாதிரிகளின் ஒப்பீடு நமக்கு உணர்த்தியது. சமச்சீரற்ற வளர்ச்சியின் விளைவாக வளர்ச்சியடைந்த முதலாளிய மையங்களில் இன்று சோசலிசப் புரட்சி சாத்தியமில்லை. உலக முதலாளிய அமைப்பு தீராத நெருக்கடியில் சிக்கியுள்ளவரை சோசலிசத்திற்கான சாத்தியக்கூறுகள் சுற்றெல்லைகளில் இன்றும் சாத்தியமே. ஆனால் இத்தகைய புரட்சிக்கு மையங்களில் உள்ள அரசுகளோ இல்லை திரிபுவாதப்பாதையில் சீரழிந்து விட்ட அரசுகளோ எந்த விதத்திலும் துணை நிற்கப் போவதில்லை. இந்த வகையில் சமகால உலக அரசியலின் எதார்த்தத்தை 'மூன்று உலகக்கோட்பாடு' நன்கு பிரதிபலிக்கிறது. மேல்நிலை வல்லரசுகளுக்கிடையேயான இணைவுகள், மோதல்கள், மூன்றாம் உலக நாடுகளின் விடுதலை இயக்கங்கள் ஆகியவற்றை விளக்கிக் கொள்ள இந்தக் கோட்பாடு பெரிதும் பயன்படும்.

> "மூன்றாம் உலக நாடுகளின் தேசிய விடுதலைக் கட்டம் முடிந்து விட்டது; இங்குள்ள அரசுகள் ஏகாதிபத்தியக் கட்டத்திலான தரகு முதலாளிய அரசுகளல்ல; மாறாக இவை தேசிய முதலாளிய அரசுகள்; இத்தகைய சமூகங்களின் இயல்பான தோழனாக ரசியா விளங்குகிறது"

என்கிற கோட்பாட்டை (இந்தியத் திரிபுவாதிகளான சி. பி. ஐ., சி. பி. எம் கட்சிகளின் சித்தாந்தம்) வன்மையாக மறுக்கும் அமின் இத்தகைய கோட்பாடு மூன்றாம் உலகநாட்டு தேசிய முதலாளிகள் மீது அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com



தகுதிக்கு மீறிய நம்பிக்கையை முன்வைக்கிறது என்கிறார். அலண்டேயின் சிலியையும் பூமெடினின் அல்ஜீரியாவையும் சுட்டிக்காட்டும் அமின் இங்கெல்லாம் பன்னாட்டு நிறுவனமயமாதலைக் தடுத்துவிட முடிந்ததா என வினவுகிறார். இந்தத் தோல்விகள் அனைத்தும் நமது சகாப்தத்தில் தேசிய முதலாளி வளர்ச்சி சாத்தியமில்லை என்பதையே நிறுவுகிறது தேசிய முதலாளிகள் தரகு மயமாவதென்பது இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் தலைவிதி.

இன்றைய மூன்றாம் உலக நாட்டு அரசுகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. **தரகு முதலாளிய அரசுகள்:** (உ-ம்) ஆப்பிரிக்க சகாராப் பகுதி நாடுகளில் பல. பண்புகள் : பின் தங்கிய உற்பத்தி சக்திகள்; தேசிய விடுதலை மிகக் குறைந்த அளவே நிறைவேற்றப்பட்டிருத்தல்; சோசலிஸ்டு அரசாகச் சொல்லிக் கொள்ளல், பிரபுத்துவ விவசாய/வணிக/ ஒப்பந்த ரீதியான குட்டித் தரகு முதலாளிய/அதிகாரவர்க்கத் தரகு முதலாளிய சக்திகளுக்கிடையே நெருக்கமான பிணைப்பு, விவசாயிகளை உலக ஏக போகங்கள் கொள்ளையடிப்பதில் இவர்கள் இடைத் தரகர்களாகச் செயல்படுவர். பலவீனமான ரசிய ஆதரவு என்பது உலக முதலாளிய அமைப்பிலிருந்து இவர்கள் தப்புவதற்குப் பயன்படாது.

2. **தேசிய முதலாளிய அரசுகள்** (உ-ம்) மெக்சிகோ, பிரேசில், அர்ஜென்டினா, சிலி போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் சவூதி அரேபியா, தென் கொரியா போன்ற அராபிய ஆசிய நாடுகள். பண்புகள்: வெளிப்படையான முதலாளிய வளர்ச்சி முறை; பன்னாட்டு வேலைப் பிரிவினையில் அங்கம். (இந்தத் தேசிய முதலாளிகள் தரகுமயமாதல் தவிர்க்க இயலாது என்பதோடு இதனை இணைத்துப் பார்க்க வேண்டும்.)

www.padippakam.com



3. **''மார்க்சிய அரசுகள்'' எனத் தம்மை அழைத்துக் கொள்பவை: (உ-ம்): சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா** போன்றவை. இவற்றில் கியூபாவும் வியட்நாமும் ரசிய ஆதிக்க வேலைப் பிரிவினைக்குள் வந்தவை. சீனமும் வடகொரியாவும் மட்டுமே கூடிய மட்டும் சுய மைய வளர்ச்சித்தன்மையுடையவை (கவனிக்கவும்: ரசியாவைச் சாராத சுய வளர்ச்சியுடைய நாடாக அல்பேனியாவையும் அமின் குறிப்பிடுகிறார்.)

ஆக, இப்படிச் சொல்லலாம்: உலக முதலாளிய நாடுகளிலிருந்து துண்டித்துக்கொண்ட நாடுகளில் மட்டுமே தேசியப் பொருளாதாரம் சாத்தியம்.

மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமே சோசலிசம் சாத்தியம் என்கிறபோது ஒன்றைச் சொல்லவேண்டியிருக்கிறது. போலந்திலும் இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்று நடைபெறும் கலகங்கள் நம்பிக்கையூட்டக் கூடியனவாக இருக்கின்றன. இவற்றை சோசலிசப் பாதைக்கான முன்னோடிகளாகத்தான் பார்க்கவேண்டுமேயன்றி எதிர்ப்புரட்சிகளாகாது என்கிறார் அமின்.

மார்க்சியத் தத்துவமும், சோசலிச இயக்கங்களும் படிப்படியாய் வளர்ந்து வந்துள்ளன. ஒவ்வொரு கட்டத்திலும் மார்க்சியம் தனது தேய்மானங்களையும், காலாவதியாகிப் போன பாகங்களையும் தூக்கி எறிந்துவிட்டுத் தன்னை வளப்படுத்திக் கொண்டு வந்துள்ளது உலக ஏகாதிபத்திய அமைப்பு நிறுவப்படுவதற்கு முன்பான 19-ஆம் நூற்றாண்டு முதலாளிய ஐரோப்பாவின் சோசலிசப் புரட்சிக்கான வழிமுறைகளை மார்க்ஸ் கால மார்க்சியம் சொல்லியது. முதலாளியம் ஏகாதிபத்தியக் கட்டத்தை அடையும்போது முதலாளிய விதிகளின் இயக்கம் ஒரு நாட்டிற்குள் முடங்காமல் சர்வவியாபகமாயின. இரண்டாம் அகிலம் இதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் லெனின் எடுத்துக் கொண்டார். லெனினுக்குப் பிறகு

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்திய அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை மாவோ கணக்கிலெடுத்துக்கொண்ட தன் விளைவாகவே இரண்டாவது சோசலிசப் புரட்சி ஒரு சுற்றெல்லை நாட்டில் ஏற்பட்டது. புரட்சியின் விவசாய உள்ளடக்கமும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் முக்கியத்துவம் பெற்றன. உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்வதையும், தொழிலாளி-விவசாயி கூட்டையும் மாவோயிசம் ஏகாதிபத்தியக் கட்டத்தில் சோசலிச நிர்மாணத்திற்கான முன் நிபந்தனைகளாக முன் வைத்தது.

(லெனினியப் பொருளில்) ஏகாதிபத்தியக் கட்டம் காலாவதியாகிவிட்டதெனக் கொண்டால் அன்றைய ஐரோப்பியக் கண்டத்திற்கான புரட்சி பற்றிய மார்க்சின் கருத்துக்கள் இன்று உலகம் முழுமையும் பொருந்தும் எனலாம். இது ஏகாதிபத்தியக் கட்டமே; இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய மாற்றங்களை மைய-சுற்றெல்லை மாதிரியே விளக்கும் எனக் கொண்டால் சோசலிச மாற்றம் குறித்த பிரச்சினைகட்கு இன்று உள்ள ஒரே தீர்வு மார்க்சியத்தின் இன்றைய வளர்ச்சியாகிய மாவோயிசமே.

இந்த இரு கருத்துக்களில் எது சரியென்பதை வரலாறு நிறுவும் எனத் தனது நூலை முடிக்கிறார் அமின்.

## IX

சீனப்பாதை, மாவோயிசம் ஆகியவற்றின் எதிர்காலம் குறித்து சமிர் அமின் கூறுபவற்றின் மீது தமக்குப் பல கேள்விகள் எழுகின்றன. அவற்றில் சிலவற்றைத் தொகுத்துக் கொள்வது பயன் தரும்.

சீனப்பாதை பின்னோக்கிச் சரிவதற்கான வாய்ப்புகள் இருப்பதை அமின் அடிக்கடி சுட்டிக் காட்டினாலும் மொத்தத்தில் சரியான ஒரு மையப் பாதையே நிலவும்

www.padippakam.com



என்கிற நம்பிக்கைக்கே அவர் முக்கியத்துவம் அளிக்கிறார். 1981 வரை சீனப் பாதையைத் திரிபுவாதம் என்று சொல்லி விட முடியாது என்பதுதான் அவரது கருத்து. டெங் அறிமுகப்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்கள் மாவோயிசப் பாதையிலிருந்து சீனத்தை விலக்கிவிடாது என்பதே அமினின் கருத்தாக உள்ளார்ந்து வெளிப்படு கிறது. அதாவது சீனப்பாதையின் பிரதானமான அம்சங் களான உலக முதலாளியத்திலிருந்து துண்டித்துக் கொள்ளல், தொழிலாளி விவசாயி கூட்டைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் சிதைவு இருக்காது என்பது அமினின் கருத்து. இது சரிதானா? சீனம் இன்னும் மையப்பாதையில் தான் சென்று கொண்டிருக் கிறதா?

வளர்ச்சி முடுக்கப்படும் என அமின் சொல்கிறார். ஆனால் நுகர்பொருள் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம், கடுமையான பணவீக்கம் (30 சதம் வரை), ஊதிய வேறு பாடு, வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகியவை நிலவு கின்றதே? இது மையப்பாதையின் விளைவா? இல்லை வலப்பாதையின் விளைவா?

பொருளியலில் ஏற்படுத்தும் முதலாளிய மாற்றங் களுக்கிணையான கருத்தியல் நடவடிக்கை தான் ரசிய 'கிளாஸ்நாஸ்ட்' என்றால் அத்தகைய சனநாயக பாட்டையை சீனத்திலும் அனுமதித்து விட்டால் என்ன? எது டெங்கைத் தடுக்கிறது?

நிறுவனங்களுக்குச் சுயாட்சி, மக்களுக்குச் சனநாயகம், மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலை நீக்குதல் ஆகிய வற்றிற்கிடையேயான உறவு என்ன? மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலை அப்படியே வைத்துக் கொண்டு சனநாயக உரிமைகளை வழங்கிவிட முடியாதா?

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் ஒற்றைப் பரிமாண முடையதாய் இருந்ததில்லை. கருத்து வேறுபாடுகளுக்காக ஆட்கள் கொல்லப்பட்டதில்லை என்கிறார் அமின்.

www.padippakam.com



கலாச்சாரப் புரட்சியின்போது ஏராளமானோர் கொல்லப்பட்டதாக இன்று நமக்குச் செய்திகள் கிடைக்கின்றன. இதை வெறும் முதலாளியப் பசப்பல் என்று ஒதுக்கிவிடுவதா இல்லை அமின் தனது கணிப்பில் தவறு செய்துவிட்டாரா?

அமினின் நம்பிக்கைகள் எல்லாமே பொய்த்துப் போய் அவர் எழுப்பிய ஐயங்கள் மட்டுமே உண்மையானது போல் தோன்றுகிறதே, இது சரிதானா? சரி என்றால் சீனத்தின் புதிய பாதை குறித்த மதிப்பீட்டில் அமின் எங்கே தவறு செய்கிறார்?

ஜூன் 4, 1989 வரை கட்சிக்குள் இரண்டு பாதை-குறிப்பாக சனநாயக உரிமைகள் வழங்குவது குறித்து-இருந்து வந்தன என்பது (சீனக்கட்சி ஒற்றைப் பரிமாணமானதல்ல என்கிற) அமினின் கருத்திற்கு ஒத்து வருகிறது. ஆனால் அதற்குப் பின் கருத்து மாறுபடுபவர்கள் 'எதிர்ப் புரட்சியாளர்கள்' எனப் பட்டம் சூட்டப்பட்டு அரசியல் ரீதியாக நீக்கப்படுதலும், கொலை செய்யப்படுதலும் மேற்கொள்ளப்படுகின்றன. மாவோவுக்குப் பிந்திய சீனத்தில் நடைபெற்ற சனநாயகம் பற்றிய விவாதத்தை எத்தனை நம்பிக்கையோடு பார்க்கிறார் அமின்! ஆனால் என்ன நடந்தது? சனநாயகம் கோரி நடைபெற்ற போராட்டத்தை ஒடுக்க 3000 பேருக்கு மேல் கொல்லப் பட்டது எதைக் காட்டுகிறது? தொடர்ந்து நடைபெறும் ஒடுக்குமுறைகள் சீனமும் ரசியாபோல ஒரு போலீஸ் எதேச்சாதிகார அரசாக மாறி விட்டதைக் காட்ட வில்லையா? இது திடீரென ஜூன் 4-ந் தேதி முதல் தொடங்கியதாகப் பார்ப்பதா இல்லை மாவோயிசத்தில் கலந்துள்ள போல்செவிசக் கூறுகளில் ஒன்றாகப் பார்ப் பதா?

சீனப் பாதையின் எதிர்காலம் குறித்து அமின் முன் வைக்கும் மூன்று சாத்தியங்களில் ரசியா போன்ற

www.padippakam.com



திரிபுவாதப் பாதையைத் தவிர்க்கிறார். சோசலிசக் கட்டு மானத்தின் பிரதான அம்சங்களாக அமின் குறிப்பிடும் இரண்டில் வரைமுறையற்ற அந்நியத்தொழில் நுட்பக் கூட்டு என்பதன் விளைவாக சீனா அரைக் காலனியாகக் கூட மாறும் ஆபத்து இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளும் அமின் புதிய பாதையில் தொழிலாளி, விவசாயி கூட்டு சிதையாது என நம்புவதாலேயே ரசிய மாதிரியான திரிபுவாதம் சாத்தியமில்லை என நிம்மதிப் பெருமூச்சுவிட நேர்கிறது. இன்று நடைபெறும் போராட் டத்திலும் நகர்ப்புற மக்களும், தொழிலாளரும் மாணவர் களுக்கு ஆதரவாகப் பங்கு பெறுவதாகத் தெரிகிறது. அப்படியானால் இன்னும்- அதாவது கம்யூன்கள் அழிக்கப்பட்ட பின்பும்- விவசாயிகளின் ஆதரவு இன்றைய ஆட்சிக்கு இருப்பதாகப் பொருளா?

அப்படியானால், விவசாயி - தொழிலாளி கூட்டு என்கிற அடிப்படையில், விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுப்பது என்கிற பெயரில் (ரசியாவில் விவசாயிகள் சுரண்டப்பட்டது போல) சீனத்தில் நகரப்புறத் தொழிலாளர் கொடுமைக்கு ஆளாயினர் என்கிற கருத்து உண்மையா?

கம்யூன்கள் அழிக்கப்பட்டாலுங்கூட சீனத்தில் 'குலாக்' அபாயம் இல்லை என அமின் திருப்திபட்டுக் கொள்கிறாரே, 'குலாக்' அபாயம் இல்லாவிட்டால் போதுமா? இன்றைய சீர்திருத்தங்கள் கடுமையான கிராமப்புற ஏற்றத் தாழ்வுகளை உருவாக்காதா? கம்யூன்கள் அழிக்கப்பட்டதற்கு விவசாயிகளிடமிருந்து எதிர்ப்பிருந்ததாகத் தெரியவில்லையே. இது எதைக் காட்டுகிறது?

இப்படிச் சொல்லலாமா? அமின் 1981இல் எதிர்பார்த் ததற்கு மாறாக சீனம் அதிக அளவில் உலக முதலாளிய அமைப்பில் இணைத்துக் கொண்டதன் விளைவாக அமின் எதிர்ப்பார்த்த மூன்று மாதிரிகளும் அல்லாமல், ரசியா

www.padippakam.com



போலவுமில்லாமல் இன்னொரு விதமான திரிபுவாதத்தின் சென்று கொண்டிருக்கிறது எனலாமா? எப்படி முதலாளியப் பாதைக்குள் பல்வேறு தனித்தனி வேறுபாடுகள் உண்டோ அதே போல திரிபுவாதத்திற்குள்ளும் பல்வேறு பாதைகள் உண்டா? அப்படியானால் திரிபுவாதத்தின் பொது அம்சங்களாக எவ்வெவற்றைக் குறிப்பிடலாம்?

சீனத்தின் பாதை திரிபுவாதப் பாதை என்றால் அமின் போலந்து எழுச்சி பற்றிக் குறிப்பிடுவது போல, சனநாயக உரிமைக்கான மாணவர் போராட்டத்தை எதிர்ப்புரட்சி என ஒதுக்காமல் புரட்சிகரமாய்த் தானே பார்க்க வேண்டும். ஆனால் இங்குள்ள புரட்சிகரக் குழுக்கள் பல மாணவர் போராட்டத்தை எதிர்ப்புரட்சிகரமானது எனக் கூறுவதன் மூலம் சீனப்பாதை இன்னும் மாவோயிசம் தான் என்கிற பொருள் ஏற்படுகிறது என்பதை அவர்கள் உணர்கிறார்களா? இரண்டு எதிர்ப்புரட்சி சக்திகளுக்கிடையேயான மோதல் எனச் சுலபமாகப் பதில் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடுமா?

சோசலிசப் போக்கின் நான்கு அம்சங்களாக அமின் குறிப்பிடுபவற்றில் முதல் இரண்டு பிரதான அம்சங்கள் கடைப்பிடிக்கப்பட்டும் அடுத்த இரண்டு (குறிப்பாக சனநாயக நடைமுறைகள்) கடைப்பிடிக்கப் படாததன் விளைவாக இன்றைய சீனத் திரிபுவாதத்தைப் பார்க்கலாமா? எனவே அவற்றிற்கான முக்கியத்துவம் முதலிரண்டிற்கு எந்த அளவிலும் குறைந்ததல்ல என்கிற முடிவுக்கு வரலாமா? புரட்சிக்கு முந்திய பணிகளை மேற்கொண்டிருக்கும் நாம் கட்சி கட்டுவது, திட்டம் உருவாக்குவது ஆகியவற்றில் மேற்குறித்தவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் அம்சங்கள் என்னென்ன?

சமிர் அமின் முடிவுகளை இன்றைய சூழலுடன் இணைத்துப் பார்க்கும் போது எழும் கேள்விகளில் சிலவற்றைமட்டும் கொடுத்துள்ளேன். கடந்த இரண்டாண்டு

www.padippakam.com



களாக இது குறித்து விவாதித்துக் கொண்டு வருவதன் அடிப்படையில் மேற்குறித்த கேள்விகள் பலவற்றிற்கு என்னிடத்தில் தோன்றுகிற பதில்களை உங்களிடம் திணிப்பதைக் காட்டிலும் இந்தத் திசையில் நமது சிந்தனையையும் படைப்புத்திறனையும் ஊக்கிச் செல்லும் வகையில் இவற்றைக் கேள்விகளாகவே நிறுத்திச் சொல்கிறேன்.

இப்படி முடிப்பது குழப்புவதாகாதா? இதுதானே உங்களது இறுதி நோக்கம்? என்கிற கேள்விகள் எழுப்பப் படப்போவது எனக்குப் புரிகிறது. இது குழப்புவதாகாது, மாறாக இவற்றிற்கெல்லாம் ஏதோ ஒரு பதிலைச்சொல்லி அதுதான் சரி என ஊற்றி மூடுவதுதான் மோசமானது. மூன்றாம் உலக நாடுகளில் இன்னும் புரட்சி சாத்தியம், அதனை முன்னெடுப்பதே நமது பணி. மூன்றாம் உலக நாடுகளில் சோசலிச நிர்மாணத்திற்கு மாவோயிசமே சரியான வழி, மூன்றாம் உலக முதலாளி வர்க்கம் தரகு மயமாவது தவிர்க்க இயலாது. இந்தியப் புரட்சிக்கு ரசியத் திரிபுவாத அரசு பயன்படாது என்கிற கருத்துக் களை அமின் உறுதியாகவே முன்வைக்கிறார். அவற்றில் எனக்கு உடன்பாடுண்டு. இவை மனசில் தைக்கும் வண்ணமாகவே இக்கட்டுரைப் போக்கும் அமைந்துள்ளது. எனவே இந்நிலையில் நின்று பணிகளை மேற்கொள்வதில் எந்தக் குழப்பத்தையும் இந்த நிலைபாடு விளைவிக்காது. இந்த நடைமுறைகளினூடேயே மேற்குறித்த கேள்வி களுக்குப் பதில் காணும் தூண்டுதலை அளிப்பது குழப்பு வதாகாது. மாறாக எண்ணற்ற தியாகங்களினடியாக நிறைவேறப் போகிற நமது புரட்சியேனும் திரிபுவாதப் பாதையில் சரியாமல் இருப்பதற்கு இந்தச் சிந்தனை உசுப்பல் பயன்படும்.

—SAMIR AMIN: The Future of Maoism. Monthly Review Press, Newyork, 1981, Pages 154.

படிப்பகம்

www.padippakam.com

# 4. சீனமும்...

உலகப் பொதுவுடைமை இயக்கங்களைத் தர்மசங்கடத்திற்குள்ளாக்கி இருக்கும் சமீபத்திய நெருக்கடி சீன மாணவர் போராட்டம். இந்திய இடதுசாரி இயக்கங்கள் இதனை அணுகுவதில் தமக்குள் நுண்மையான பல வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் பொதுவில் இவற்றை இரண்டாகப் பிரிக்கலாம்.

(i) மாவோ காலத்தில், முக்கியமாகக் கலாச்சாரப்புரட்சி (க.பு)யின் போது ஏற்பட்ட தேக்கங்களையும், இடது தீவிரச் சீர்குலைவுகளையும் நீக்கி, சோசலிசக் கட்டுமானத்தைச் சரியமைக்கும் டெங்கின் பாதை ஒப்பீட்டளவில் சிறந்தது. எனினும் போராட்டத்தை இப்படிக் கையாண்டிருக்கக்கூடாது. திரிபுவாதத்தின் இந்தியப் பிரதிநிதிகளான இடது, வலது கட்சிகள்மற்றும் அவர்களின் சமீபத்தியக் கூட்டாளியான வினோத் மிஸ்ரா குழுவினர் ஆகியோரின் நிலைபாடு இது. இவற்றுள் மார்க்சிஸ்ட் கட்சி சீன அரசை முழுமையாகவே ஆதரித்துள்ளது.

(ii) மாவோவின் பாதையும் க.பு.வும் சரியானது. சீனத்தை முதலாளியப் பாதைக்கு இட்டுச் சென்றவர் டெங். மேலை முதலாளிய நாடுகளின் தூண்டுதலில் நடைபெறும் மாணவர் போராட்டம் எதிர்ப்புரட்சிகரமானது. பெரும்பாலான மா.லெ. புரட்சிகரக் குழுக்களின் நிலைபாடு இதுதான். மாணவர் போராட்டத்தைக் கொடுமையாக ஒடுக்கியதை

www.padippakam.com



அதற்குரிய வன்மையோடு கண்டிக்காதது கவனிக்கத்தக்கது.

இவ்விரு அணுகல் முறைகளுமே பிரச்சினையின் சகல பரிமாணங்களையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாதவைகளாகவே உள்ளன. சீனத்தையும் ரசியாவையும் சாக்காக வைத்துக் கொண்டு உலக முதலாளியம், இன்று மார்க்சிய சித்தாந்தத்தின் மீது தொடுத்திருக்கும் மாபெரும் யுத்தத்தை எதிர்கொள்ள இத்தகைய போக்குகளால் இயலாது என்பது இப்பிரச்சினை எழுப்பியுள்ள சில கேள்விகளைச் சந்திக்கும்போது விளங்கும். இந்தக் கேள்விகளைத் தொகுப்பதற்கு முன்னதாக டெங்கின் இந்தப் பத்தாண்டுக் காலச் ''சீர்திருத்தங்களின்'' முக்கியமான போக்குகளையும் விளைவுகளையும் தொகுத்துக் கொள்வோம்.

## II

முதலில் டெங் தனது சீர்திருத்தங்கள் குறித்து என்ன சொல்கிறார் என்பதை இந்தப் பத்தாண்டுக் காலத்தில் அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசிய பேச்சுகளின் வாயிலாகப் பார்ப்போம்.

> மார்க்சிய— லெனினியத் தத்துவத்தைச் சீனத்தின் தனித்தன்மைக்கேற்ப மாற்றியமைத்து நவசீனத்தையும், சீனப் பொதுவுடைமைக் கட்சியையும் நிறுவியவர் தலைவர் மாவோ. (எ.டு): கிராமப்புறங்களை வென்றெடுத்துப் பின் நகரங்களை வளைப்பது என்பது மாவோ சீனச் சூழலுக்கெனவே உருவாக்கிய நடைமுறை. எதார்த்தங்களிலிருந்து உண்மைக்குச் செல்லல் என்கிற மாவோவின் பாதையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். மாவோ தவறுகளே செய்யாதவரல்லர். 1960க்குப் பின் குறிப்பாகக் க.பு. காலத்திய அவரது நடவடிக்கைகள் பல

www.padippakam.com



தவறானவை. எனினும் மாவோவின் சாதனைகளே முதன்மையானவை; தவறுகள் இரண்டாம் பட்க்மானவையே.

மாவோ விட்டுச் சென்ற சீனத்தில் உற்பத்திச் சக்திகள் மிகவும் பின்தங்கி இருந்தன. எல்லாருக்கும் எல்லாமும் என்கிற சோசலிச லட்சியத்தின் முன்தேவை வளமிக்க பொருளாதாரம். சோசலிச உற்பத்திச் சக்திகள் முதலாளியத்தைக் காட்டிலும் தாழ்ந்திருப்பது கேலிக்குரியது. மேற்கத்திய தொழில் நுட்பத்தையும் மூலதனத்தையும் சீனத்திற்குள் அனுமதிக்காததே இதற்குக் காரணம். இந்நிலையை மாற்றியாக வேண்டும். சீனத்தின் தனித்தன்மைக்கேற்ப ''விவசாயம், தொழில் துறை, இராணுவம், விஞ்ஞானம்/தொழில் நுட்பம்'' ஆகிய நான்கையும் நவீனப்படுத்த வேண்டும். கம்யூன் முறையை மாற்றிக் குடும்பப் பொறுப்பு ஒப்பந்த முறை கொண்டுவரப்பட வேண்டும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இந்நடவடிக்கைகள் அனைத்தும் ''சோசலிசப் பாதையிலிருந்து வழுவாதிருத்தல், மக்கள் சனநாயகச் சர்வாதிகாரத்தை உயர்த்திப்பிடித்தல், பொதுவுடைமைக் கட்சியின் தலைமையை உயர்த்திப்பிடித்தல், மார்க்சிய—லெனினிய— மாவோயிசச் சித்தாந்தவழி காட்டல்'' என்கிற நான்கு முதன்மையான கோட்பாடுகளினடியாகவே நிறைவேற்றப்படுகின்றன. சோசலிச உடைமை முறையின் கட்டுக்குள்ளேயே அந்நிய மூலதனமும் சந்தைச் சக்திகளும் அனுமதிக்கப்படுகின்றன. எனவே நிலவும் சோசலிசக் கட்டுமானம் பாதிக்கப்படாது.

சீனத்தைச் சோசலிசப் பாதையிலிருந்து விலக்கி முற்றாக முதலாளியப் பாதைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன் சிலர் செயல்படுகின்றனர். சனநாயக

www.padippakam.com



உரிமைகளுக்கான போராட்டம் என்கிற பெயரில் முதலாளியத் தாராளவாதிகளும் க.பு. சக்திகளும் ஒன்றுசேர்ந்துள்ளனர். இங்கே சர்வாதிகாரம் இல்லாமல் ஒன்றும் நடக்காது எனவேதான் எழுத்துரிமை/பேச்சுரிமை போன்றவற்றை வழங்கும் அரசியல் சட்டத்தின் 45 ஆவது பிரிவை 1980 இல் மாற்றியமைத்தோம். இவற்றை மீண்டும் வழங்கும் உத்தேசம் கிஞ்சித்தும் இல்லை.

க பு. போலவே சுவரொட்டிகள் ஒட்டுகின்றனர். பிரசுரங்களை வெளியிடுகின்றனர். 'சர்வாதிகாரம்' என வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என நினைக்காதீர்கள். சமயம் வரும்போது நடைமுறைப்படுத்துவோம். இந்த ஒழுங்கீனங்களை ஒடுக்குவோம்.

சோசலிச அமைப்பை உறுதி செய்வது, உற்பத்திச் சக்திகளை வளர்த்தெடுப்பது, சோசலிச சனநாயகத்தை விரிவாக்குவது என்கிற பொதுக்குறிக்கோள் களிலிருந்து விலகமாட்டோம். சீனத்தின் தனித் தன்மைக்கேற்ற சோசலிசப் பாதையை உருவாக்கு வோம்.

இவற்றைத் திருப்பத் திரும்ப டெங் வலியுறுத்தியுள்ளார். நடவடிக்கைகளையும் தொடங்கினார். மாவோவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களது ஆதரவாளர்கள் சகல மட்டங்களிலும் நீக்கப்பட்டு வெளிப்படையாகவே வலதுசாரிகள் என அறிமுகமாயிருந்த டெங்கின் ஆதரவாளர்கள் அமர்த்தப் பட்டனர். க.பு. முடிவுக்குக் கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்பட்டது. வெளிப்படையாகவும் மறைமுக மாகவும் மாவோ விமர்சிக்கப்பட்டார்.

ஜார்ஜ் தாம்சன், சமீர் அமின், சார்லஸ் பெத்தல்ஹீம் போன்ற மாவோயிசச் சீனாவின் நண்பர்களால் மகத்தான

www.padippakam.com



சாதனை எனப் புகழப்பட்ட கம்யூன் முறை முற்றிலும் அழிக்கப்பட்டது. பதினைந்து ஆண்டுகட்குப் போடப் பட்ட ஒப்பந்தங்களில் நிலம் குடும்பங்களுக்குச் சொந்த மானது. குறிப்பிட்ட 'லெவி' போக எஞ்சியது திறந்த சந்தையில் விற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டதால் விவசாயிகளின் வருமானம் சுமார் 40 சதம்வரை அதிகரித்தது.

பண்டப் பொருளாதாரம், உழைப்புச்சந்தை உள்ளிட்ட பல்வேறு சந்தைகள், ஊக்க ஊதியம் ஆகியவை அனுமதிக்கப்பட்டன. சிறு தொழில்களில் ஒப்பந்த முறையும் (3 ஆண்டுகள்) தொழில் நிறுவனங்களுக்குச் சுயாட்சியும் அதிகரித்தன.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற பெயர்களில் வெளிநாட்டு முதலீடுகள் பெருமளவில் அனுமதிக்கப்பட்டன. இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட திட்டங்களில் தொழில் நுட்ப இறக்குமதியும் அந்நிய முதலீடும் அனுமதிக்கப்பட்டன. உலக முதலாளிய மதிப்பு விதியின் கீழ்ப்பட்ட சுரண்டலில் சீனப் பொருளாதாரமும் சிக்கியது. மார்க்சிய எதிரிகள் ஆரவாரித்தனர். நமக்குச் சற்றே ஆயாசம் ஏற்பட்டது.

டெங் எதிர்பார்த்தது போலவே விவசாயத்திலும் தொழில் துறையிலும் உற்பத்தி அதிகரித்தது. தொழில் நுட்பம் நவீனமாகத் தொடங்கியது. மொத்த தேசிய உற்பத்தி, தனி நபர் சராசரி உற்பத்திபோன்ற முதலாளிய அளவுகோல்களின்படி இந்நடை முறைகளின் மூலம் சீனம் வளர்ச்சியுற்றது என்பதில் ஐயமில்லை.

முதலாளிய "வளர்ச்சி" என்பது அதற்கே உரித்தான எதிர்மறை அம்சங்களைத் தவிர்க்கவே முடியாது என்கிற உண்மையை டெங் மறந்தார் என்பதற்காக அது செயல் படாமல் போய்விடுமா? கடந்த ஆண்டு மட்டும் விவசாயத் தில் 20மில்லியன் பேர் உபரியாக்கப்பட்டனர். கிராமப்புற

www.padippakam.com



வருமானம் அதிகரித்த போதும்கூட, உலக முதலாளிய விதிக்குத் தொழில்துறை ஆட்பட்டதன் விளைவாக நகர்ப் புறத் தொழிலாளர், ஆசிரியர், அரசு ஊழியர் போன்றோரின் வருமானம் விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்ட வில்லை. பணவீக்கம் 30 சதம் வரை அதிகரித்தது. பெரு முதலாளிகளும் குலாக்குகளும் உருவாகவில்லை என்றாலும் சமூக ஏற்றத் தாழ்வுகள் மிக அதிகமாயின. அந்நியத் தொடர்பாலும், ஒப்பந்த முறைகளாலும், அதிகார வர்க்க நடை முறைகளாலும் வளத்தைச் சுருட்டிக் கொண்டவர்கள் புதிய ஆதிக்க சக்திகளாகவும், அதிகாரமையங்களாகவும் மாறினர். லஞ்சமும் ஊழலும் வரலாறு காணாத வகையில் பெருகின. கட்சி அதிகார வர்க்கத்திற்கான சிறப்புச் சலுகைகள், இரட்டை விலைமுறை முதலியன ஊழலுக்கு வழிவகுத்தன. டெங்கின் மகன் டெங் பூ பானும் இன்று பதவி நீக்கப்பட்டுள்ள கட்சிச் செயலாளர் ஜாவோ ஜியாங்கின் மகன் ஜாவோ டாஜ னும் அந்நியத் தொடர்பு மூலம் ஏராளமான பணத்தைச் சுருட்டிக் கொண்டனர். கருத்துச் சுதந்திரமின்மையின் காரணமாக இத்தகைய கொடுமைகளை அம்பலப் படுத்தவும் எதிர்க்கவும் வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன.

ஏற்றத் தாழ்வுகளின் அதிகரிப்பும், நுகர் பொருள் கலாச்சாரமும் அடிப்படைத் தேவைக்கான பொருள்களின் உற்பத்தி குறைவதற்கும் நுகர் பொருள் உற்பததியின் அதிகரிப்பிற்கும் வழி வகுத்தன. நுகர் பொருள் இறக்குமதியின் விளைவாக அந்நியச் செலாவணி குறைந்தது. ஏற்றுமதி இறக்குமதி ஏற்றத்தாழ்வு 1985 லேயே எட்டு மில்லியன் டாலராக இருந்தது. சுதந்திர வணிக மையங்கள் பல, திட்டமிட்ட ஏற்றுமதி இலக்கின் மூன்றில் ஒரு பங்கைக்கூட எட்ட முடியவில்லை.

மாவோ காலக் கம்யூன்களின் அனைத்து மக்களுக்கும் மருத்துவம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள்

www.padippakam.com



சனநாயகப்படுத்தப்பட்டுப் பரவலாக்கப்பட்ட தன்மையை முதலாளியப் பத்திரிகையாளரும் கூடத் தவிர்க்க இயலா மற் பாராட்டி வந்துள்ளதை நாம் அறிவோம். கம்யூன் களின் வீழ்ச்சியோடு சாதாரண மக்கள் இந்த வசதிகளை யும் இழந்தனர். குழந்தை இறப்பு வீதம்- குறிப்பாகப் பெண் குழந்தை இறப்பு வீதம் இந்தப் பத்தாண்டுகளில் அதிகரித்திருக்கிறது. குடும்பப் பொருளாதாரக் கட்ட மைப்பிற்குள் மீண்டும் பெண்கள் ஆணாதிக்கத்திற்குள் ளாயினர்.

இந்தப் பின்னணியில் இன்று போராட்டம் வெடித் திருக்கிறது. கல்வி ஊழல்களை எதிர்த்த மாணவர் போராட்டமாகத் தொடங்கி நகர்ப்புறத் தொழிலாளர், மத்திய தரவர்க்கம், அறிவு ஜீவிகள், பத்திரிகையாளர், சாதாரண மக்கள் ஆகியோர் ஆதரவு பெற்ற போராட்ட மாக இது இன்று வடிவெடுத்திருக்கிறது. இந்த இணைவு அரசியல் ரீதியாய் ஒருபடித்தானது என்று சொல்ல முடியாது. டெங்கும் சீனப் பொதுவுடைமைக் கட்சியும் அடிக்கடி கூறி வந்திருப்பதைப் போல க.பு.வின் ஆதர வாளர் முதல் முதலாளியப் பாதைக்கு முற்றாகத் திரும்ப வேண்டும் என்கிற கருத்துடையோர் வரை இதிலுள்ளனர். சனநாயக உரிமைகள், லஞ்ச ஊழல் ஒழிப்பு, வெளிப் படையான பேச்சு வார்த்தை ஆகியவை பிரதான கோரிக் கைகளாக முன் வைக்கப்பட்டன. போராட்ட வழிகாட்டி களில் ஒருவராகிய பாங்லிஸி போன்றோர் வெளிப்படை யான மார்க்சிய எதிரிகளாகவும், அமெரிக்க ஆதரவாளர் களாகவும் இருந்தனர். முதலாளிய நாடுகள் அனைத்தும் போராட்டத்தைக் கடுமையாக ஆதரித்தன. அடக்குமுறை நடவடிக்கைகட்கு எதிராகச் சீன அரசுக்குக் கடும் நெருக் கடிகளை ஏற்படுத்தின. வெளிப்படையான சோசலிச எதிர்ப்பு முழக்கங்களைப் போராட்டக்காரர்கள் முன் வைக்காத போதும் மொத்தத்தில் இவர்களின் சாய்வு முதலாளியத்தை நோக்கியே இருந்தது என்கிற விமரிசனத்

www.padippakam.com



தில் பொருளில்லாமல் இல்லை. ஜூன் 2-ந் தேதிய தியானாமன் பிரகடனம் ''வர்க்கப் போராட்டம் என்கிற அரசியல் கலாச்சாரம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்'' என்று அறைகூவலிட்டது.

## III

இந்தப் பின்னணியில் சீனப் பிரச்சினை எழுப்பும் கேள்விகளைத் தொகுத்துக் கொள்வோம்.

1. இந்தியா, சீனா போன்ற குறைவளர்ச்சி விவசாய நாடுகட்கான சரியான வளர்ச்சிப் பாதை மாவோயிசச் சோசலிசப் பாதை என்று கூறிய மார்க்சியர்கள், நிலவும் தரவுகளுடன் ஒப்பிட்டு இதனை நிறுவியுள்ளனர். சூசிங் போன்ற டெங் ஆதரவு சீன நிபுணர்கள்கூட மாவோ காலத்திய சீனவளர்ச்சி முதலாளிய நாடுகளுடன் ஒப்பிடும் போது அதிகமாகத்தான் இருந்தது என ஏற்றுக் கொள்கின்றனர். உற்பத்திச் சக்தியின் வளர்ச்சியின்மைக்குக்கூட புரட்சிக்கு முந்திய அந்நியச் சுரண்டல்தான் காரணம் என்கிறார் அவர். இந்நிலையில் மாவோவின் பாதையைக் காட்டிலும் டெங்கின் ''சீர்திருத்தங்கள்'' சரியானது என்றால் இவற்றின் விளைவாக ஏற்பட்டுப் போன சீர்குலைவுகட்குக் காரணமென்ன? இத்தகைய ''வளர்ச்சி' தேவைதானா?

2. மாவோவின் பாதையும் க.பு.வும் முற்றிலும் சரி என்றால், 1976இல் மாவோவால் அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்ட வெளிப்படையான வலதுசாரியாகிய டெங்கும் அவரது ஆதரவாளர்களும் ஆட்சியைக் கைப்பற்றியபோதும், நால்வர் கைது செய்யப்பட்டுக் க.பு. முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதும், கம்யூன்களைக் கலைத்தபோதும் சீன



படிப்பகம்

www.padippakam.com



**மக்கள் ஏன் குறிப்பிடத்தக்க எதிர்ப்பு எதையும் காட்டவில்லை?**

**3. புரட்சிக்குப் பிந்திய முப்பதாண்டுகளில் இல்லாத அளவிற்குச் சீனப் பொருளாதாரம் மேலை முதலாளியச் சுரண்டலுக்குப் படிப்படியாகத் திறந்துவிடப்பட்ட சூழலில் பொன் முட்டையிடும் வாத்தை வயிற்றைக் கிழிப்பதற்கு ஒப்பாக மேலை முதலாளியம் மாணவர்களைத் தூண்டிவிட்டது என்பது தர்க்கபூர்வமாக இல்லையே? முழுமையான சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் ஏற்ற வகையில் முதலாளிய மாற்றம் வேண்டிதான் மாணவர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்று பதில் சொன்னால் டெங்கின் சீனம் ஏதோ ஒரு வகையில் உலக முதலாளிய அமைப்பிற்குச் சிக்கலைத் தருகிறது என்று பொருளாகிறது. எந்த வகையில் இன்றைய சீனத்தின் அரசியலும் பொருளாதாரக் கட்டுமானமும் உலக முதலாளியச் சுரண்டலுக்குச் சிக்கலாக இருக்கிறது?**

**4. முதலாளியச் சனநாயகத்திற்கும் சோசலிசச் சனநாயகத்திற்குமுள்ள பருண்மையான வேறுபாடுகள் என்ன? முதலாளிய சனநாயகம் என்றால் முதலாளிகளுக்குச் சனநாயகம், பெரும்பான்மையான அடித்தட்டு வர்க்கத்திற்குச் சர்வாதிகாரம்; சோசலிசச் சனநாயகம் அல்லது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது இதற்கு நேரெதிரானது என்கிற மாதிரியான பதில் போதாது. இதைத்தான் 'Tautology' என்கிறோம். முதலாளியச் சனநாயகம் என்றால் முதலாளியச் சனநாயகம், சோசலிசச் சனநாயகம் என்றால் சோசலிசச் சனநாயகம் என்பதற்கு ஒப்பானது இது. மாறாக இப்பிரச்சினைக்குத் தூலமான பதில் தேவை. பேச்சுரிமை,எழுத்துரிமை, வேலை நிறுத்தம் செய்யும்உரிமை, குறிப்பிட்ட பிரச்சினைகட்காக இயக்கம் நடத்தும் உரிமை போன்ற சனநாயக உரிமைகளை வழங்குவதில் முதலாளிய சனநாயகத்திலும் சோசலிச**

www.padippakam.com



சனநாயகத்திலும் என்ன மாதிரி தூலமான வேறுபாடுகள் இருக்கும் என்கிற கேள்விக்குப் பதில் அளிக்காமலேயே சோசலிசச் சனநாயகம் வழங்கிவிட வேண்டியதுதான் எனச் சிலர் தீர்மானம் போட்டுள்ளனர். டெங் கூட இதையே கூறியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

மேற்குறித்த கேள்விகள் அனைத்திற்கும் இங்கேயுள்ள தேர்தல் சார்ந்த இடதுசாரிக் கட்சிகளும், மா-லெ புரட்சிகரக் குழுக்களும் முழுமையான பதில்களைச் சொல்லிவிடவில்லை என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன். உடனடியாய்ப் பதில் சொல்லிவிடுவது அத்தனை எளிதில்லை என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். இதனை ஏற்றுக் கொள்வதும் நமது இடையறாத புரட்சிகரப் பணிகளினூடே இவற்றிற்கான பதில்களைத் தேடுவதும் மட்டுமே சரியாக இருக்க முடியும். மாறாக இவற்றிற்குப் பதிலளிக்காமல் கள்ள மௌனம் சாதிப்பதோ அல்லது பதில் இருப்பதாகச் சுய ஏமாற்று செய்து கொள்வதோ எள்ளளவும் பயன் படாது.

## IV

இந்தக் கேள்விகளுக்கான பதிலை நோக்கிய முயற்சியில் நாம் கவனம் குவிக்க வேண்டிய சில பிரதானமான அம்சங்களைப் பார்ப்போம்.

1. க.பு.வை முழுமையாக ஆதரிப்போர் கூட இரண்டு அம்சங்களில் வேறுபடுவர். மாவோ எதிர்பார்த்த அளவிற்கு மக்கள் பங்கேற்பு இல்லை என்பது ஒன்று. பல சமயங்களில் நால்வரின் நடவடிக்கைகள் இடது தீவிரம் என்கிற எல்லைவரை சென்றன என்பது மற்றது. மாவோவின் இறுதிக் காலத்திலேயே, சூ-என்-லாய்க்கு அஞ்சலி செலுத்துவது என்ற பெயரில் இதே தியானாமன் சதுக்கத்தில் சுமார் ஓர் இலட்சம் பேர் கூடி மாவோவுக்கு எதிரான வலதுசாரிப் பிரச்சாரம் மேற்கொண்டதும்,

www.padippakam.com



டிரக்குகளைக் கொளுத்தியதும், பின் இந்த "எதிர்ப் புரட்சி" நடவடிக்கைக்காக டெங் சகல பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டதும் நினைவு கூரத்தக்கன ஆக. க.பு. நிறுத்தப் பட்டதும் தொடர்ந்த நடவடிக்கைகளும் பெரிய எதிர்ப் பிற்குக் காரணமாகவில்லை, கம்யூன்களைக் கலைத் ததையும் மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்பது கம்யூன் களில் கூட மக்களின் ஈடுபாடான பங்கேற்பு இல்லை என்பதையே காட்டுகிறது. கட்சி அதிகார வர்க்கம் கோலோச்சிய சூழலில் அடிப்படையான சனநாயக உரிமைகளுமில்லாமல் மக்கள் கம்யூன் அதிகாரத்திலிருந்து மிகவும் அந்நியப்பட்டிருந்தனர். நிறுவன அதிகாரமும், நிறுவனத்தைக் கேள்விக் குள்ளாக்கும் எதிர் நிறுவன அதி காரமும் ஒரே அதிகார மையத்தில் குவியும் போது அந்த அதிகார மையம் பன்மடங்கு அதிக அதிகாரச்செறிவுடைய தாய் ஆகிவிடுகிறது. (உம்): ஒரு நிறுவன மேலாளரே அந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர் சங்கத்தின் தலைவராகவும் இருக்கிறார் என்று வைத்துக் கொள் ளுங்கள். அவரிடம் குவியும் அதிகாரம், இரு அதிகாரங் களின் வெறும் கூட்டுத் தொகையாக மட்டும் அமையாது. மாறாகப் பெருக்கல் மடங்கில் அபரிமிதமானதாகும். சோசலிச நாடுகளில் அரசு அதிகாரமும், நிறுவன அதி காரமும், தொழிற் சங்க அதிகாரமும் ஒரே மையத்தில் குவிந்தபோது மக்கள் எந்த அளவிற்கு இந்த அமைப்புகளி லிருந்தும், அதிகாரங்களிலிருந்தும் அந்நியப்பட்டுப் போயிருப்பார்கள் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள்! இப்படித்தான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது எதார்த்தத்தில் பாட்டாளி வர்க்கத்தின் மீதான சர்வாதி காரமாக ஆனது. இந்த அந்நியமாதலின் விளைவாகவே 'சோசலிச' அரசமைப்புகளில் அதிகாரத்திலிருந்தவர்களில் ஒருவர் தூக்கி எறியப் பட்டு இன்னொருவர் வருவதும் பின்னர் அவர் தூக்கி எறியப்பட்டு முன்னவரோ இல்லை அடுத்தவரோவருவதும் மக்களிடம் பெரிய எதிர்ப்பையோ வரவேற்பையோ ஏற்படுத்திவிடவில்லை. மாவோ இந்

www.padippakam.com



நிலையை உணர்ந்திருந்தார். இந்நிலையிலிருந்து தப்பவே க. பு. வையும் கூட உருவாக்கினார். "எதிர்க் கிளர்ச்சிகள் அனைத்தும் நியாயமானதே" என்றார். ஆனால் மேற் குறிப்பிட்ட இந்த அதிகாரக் குவியலுக்கு மாற்று அமைப் பைப் பற்றிச் சிந்திக்காமல் அரசு, கட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகியவை குறித்த போல்செவிசப் பாரம்பரியத்தில் நின்ற தன் விளைவாகவே க. பு. மக்கள் பங்கேற்பின்றி வெறும் குழப்பங்களில் முடிந்தது.

2. முதலாளியச் சனநாயகம் அனைத்து மக்களுக்கு மான சனநாயகமாக அமையாததற்குக் காரணம் தனிச் சொத்துடைமையின் தடைகளே என்றால் தனிச் சொத் துடைமை நீக்கப்பட்ட சோசலிச அமைப்பில் இந்தத் தடைகள் நீங்கி அனைத்து மக்களுக்கும் சனநாயக உரிமைகள் முழுமையாக விகசிக்க வேண்டும் என்பதே சரியாக இருக்கமுடியும். எனில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்கிற பெயரில் அனைத்து மக்களுக்குமே இவை மறுக்கப்படுவது என்ன நியாயம்? சோசலிச கட்டு மானத்திற்குள் நின்று குறிப்பிட்ட பிரச்சினைகட்காக இயக்கம் அமைத்துப் போராடும் உரிமைகளை மக்களிட மிருந்து பறிக்கக் கூடாது. புரட்சிக்குப் பிந்திய சமூக அமைவில் பொதுவுடைமைக் கட்சி என்பது தொடர்ந்து எதிர்க் கட்சியாகவே இருக்கட்டும். கேள்வி கேட்க முடி யாத அரச அதிகாரத்தைக் கட்சி தன்னில் குவித்துக் கொள்ள வேண்டாம். முதலாளியக் கருத்தியலின் எச்ச சொச்சங்களுக்கும் மறுமீட்பு முயற்சிக்கும் எதிரான கடுமையான போராட்டத்தைப் பாட்டாளிவர்க்க அரசின் துணையோடு நடத்தும் அமைப்பாகவே கட்சி இருக் கட்டும். அதிகாரக் குவியலுக்கும் சலுகைக் கடைச் சொகுசுகட்கும் ஆசைப்படாதவர்களாகவே கட்சி அணிகள் புரட்சிக்குப் பின்னும் நீடிக்க வேண்டும்.

3. உற்பத்திக் கருவிகள்/தொழில் நுட்பம் ஆகிய வற்றின் வளர்ச்சியில் சோசலிசக் கட்டுமானத்திற்கும்

www.padippakam.com



முதலாளியக் கட்டுமானத்திற்கும் அதிக வேறுபாடு இருக்கத் தேவையில்லை என்கிற போல்செவிசத்தின் **உற்பத்திச் சக்திகள் கோட்பாடு,** ரசியாவில் திரிபுவாதமும் அதிகார வர்க்கமும் வளர்ந்ததற்கான காரணங்களி லொன்று என்பர். உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்வது என்கிற சரியான சோசலிச நடை முறையை மேற்கொண்ட போல்செவிசம், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத் திரட்ட லுக்குப் 'பிற்போக்கான 'விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து உபரியைத் திரட்டல் என்கிற தவறான நடைமுறையைப் பின்பற்றியது. முதலாளியத்திற்குச் சமமான வகையில் உற்பததிச் சக்திகளை வளர்ப்பது, மூலதனத் திரட்ட லுக்கு விவசாயிகளிடமிருந்து உபரியை அபகரிப்பது என்கிற நடைமுறைகளில் மாவோ, போல்செவிசப் பாதையிலிருந்து விலகினார். உற்பத்திச் சக்திகளை முதலாளிய அமைப்புடன் போட்டி போடத் தக்க அளவிற்கு வளர்த்தெடுப்பதுஎன்கிற அம்சத்தில் போல்செ விசத்தைப் பின்பற்றிய டெங் (இப்படிச் சொல்வது பலருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். என்ன செய்வது?) இதற்கான மூலதனத் திரட்டலுக்கு விவசாயிகளைக் கசக் கிப் பிழியக் கூடாது என்கிற அம்சத்தில் மாவோயிசப் பாதையைத் தொடர்ந்தார். பின் மூலதனத் திரட்டலுக்கு என்ன செய்வது? இந்த விசயத்தில் போல்செவிசப் பாதை, மாவோயிசப்பாதை இரண்டிலிருந்துமே விலகி உலக முதலாளிய அமைப்புடன் இணைத்துக் கொண்டு அந்நிய மூலதனத்தைப் பயன்படுத்துவது, ஓரளவிற்கு நகர்ப்புறத் தொழிலாளிகள் / மத்திய தர வர்க்கம் ஆகியோரிடம் உபரியை உறிஞ்சுவது என்கிற நடைமுறைகளை மேற் கொண்டது. டெங்கின் சீனம். இந்நிலைமையின் தர்க்கப் பூர்வமான நீட்சி, கொஞ்சம் கொஞ்சமாக விவசாயிகளிட மிருந்தும் உபரியைப் பறிப்பது என்பதில்தான் போய் முடியும். மில்லியன் கணக்கில் விவசாயிகள் உபரியாக்கப் பட்டு நகர்ப்புறத்தை நோக்கி நகர்வதில் இதன் தொடக்

www.padippakam.com



க்த்தைக் காணலாம். ஆக, முதலாளிகளும் குலாக்குகளும் பெரிய அளவில் தோன்றாமலேயே முதலாளியச் சீரழிவுகள் வந்தடைந்தன. இவற்றோடு கட்சி, அரசு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகியவை குறித்த மரபு வழி அணுகல் முறையும் இணைந்தபோது சீரழிவுகள் இரட்டிப்பாயின.

4. தனது நாட்டின் தேசிய சுயாட்சித் (National Autonomy) தன்மையை இழக்காமலும் நாட்டை அரைக் காலனியாகவோ நவகாலனியாகவோ மாற்றாமலும் பொருளாதாரச் "சீர்திருத்தங்களை" நிறைவேற்றி விட முயன்றார் டெங். உடைமை முறை முற்றிலும் தனியுடைமையாக அமையாத சீனப் பொருளாதார அகக் கட்டுமானம் இந்நடவடிக்கைகளில் டெங்கிற்கு மிகவும் உதவியது, பால்ஸ்வீசி போன்றோர் சீனப் பொருளாதாரம் ஒப்பீட்டளவில் உலக முதலாளியத்திலிருந்து சுயேச்சையாக இயங்குகிறது. என்று கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இத்தகைய சூழலிலேயே அந்நிய முதலீடுகளும் அனுமதிக்கப்பட்டன. இந்நிலைமை, மேலே முதலாளியத்திற்கு உவப்பளிக்கக் கூடியதாக இருக்காது என்பது தெளிவு. எனவே உலக முதலாளிய அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டவைதான் என்றாலும் இந்தியாவிற்கும், தென் கொரியாவிற்கும், டெங்கின் சீனத்திற்குமிடையே நிறைய வேறுபாடுகள் உண்டு. எனவேதான் டெங்கையும் இவரது நான்கு "வழி காட்டும்" தத்துவங்களையும் தூக்கி எறிய மாணவர் போராட்டத்தைப் பூதாகரப் படுத்தும் மேலை முதலாளியம், தென் கொரியாவில் நடைபெறும் மாணவர் போராட்டத்தை மூடி மறைத்து முலாம் பூசுகிறது.

5. தொகுத்துப் பார்க்கும் போது மாவோவின் சீனத்திற்கும் டெங்கின் சீனத்திற்குமிடையே பாதை விலகல் மட்டுமன்றி ஒரு தொடர்ச்சியும் இருப்பது தெரிகிறது.

www.padippakam.com



பாதை விலகல் வெளிப்படையாகத் தெரிகிறது. அமைப்புத் தொடர்ச்சியை விளங்கிக் கொள்ள இரண்டு விசயங்களை நாம் இணைத்துப் பார்க்க வேண்டும். ஒன்று : டெங்கின் பாதை விலகலைச் சீன மக்கள் அமைதியாக ஏற்றுக் கொண்டது. மற்றது: முற்றிலும் வேறுபட்ட ஒரு தளத்தில் நின்று முற்றிலும் வேறுபட்ட கோரிக்கைகளை முன் வைத்து இன்று அவர்கள் போராடுவது. இரு வேறுபட்ட விசயங்களாகத் தோன்றினாலும் சமூக அதிகாரத்திலிருந்து மக்கள் அந்நியப்பட்டுப் போயிருந்ததன் விளைவுகளே இரண்டும். அன்று போராடாமல் இருந்ததும் இன்று போரா டுவதும் இந்த அதிகாரத்துவத்திற்கு எதிராகவே.

## V

அதிகாரத்துவத்திற்கு எதிரான இந்தப் போராட்டம் மார்க்சியப் பதாகையின் கீழல்லாமல் மேலை முதலாளிய ஆசீர்வாதங்களுடன், மேற்கத்திய சனநாயக அடையாளக் குறியீடுகளுடன் (சுதந்திரச் சிலை) நடைபெறும்போது அதனை மார்க்சியர்களாகிய நாம் எப்படி ஆதரிக்க முடியும் என்கிற சிக்கலான கேள்விக்கான பதிலைப் பெறு வதற்கு முற்றிலும் புதிய பார்வைக் கோணத்தில் இப்பிரச் சினைகளை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

சோசலிசப் பாதையையோ, மாவோவையோ, மார்க் சியச் சித்தாந்தத்தையோ மாணவர்கள் வெளிப்படையாக ஆதரிக்கவில்லை என்பது போலவே இவற்றிற்கு எதிரான முழக்கங்களையும் அவர்கள் முன் வைக்க வில்லை. போராட்டம் முழுவதும் தொடர்ந்து சர்வதேச கீதம் இசைக்கப்பட்டு வந்ததையும், க. பு. சக்திகள் ஊடுருவி விட்டதாக டெங் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்ததை யும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

சோசலிச நாடுகளாகத் தொடங்கி திரிபுவாதமாகத் தரமழிந்த நாடுகள் அனைத்திலும் அதிகாரத்துவமும், சன

www.padippakam.com



நாயக மறுப்பும், பொய்யும், லஞ்சமும், ஊழலும் சோசலி சத்தின் பெயராலும் மார்க்சியத்தின் பெயராலுமே நடை பெற்றன. (டெங்கின் நான்கு முக்கிய தத்துவங்களை நினைவுகூர்ந்து பாருங்கள்). கருத்துச் சுதந்திரமும் எதிர்ப்புச் சுதந்திரமும் முற்றாக மறுக்கப்பட்டு அனைத் துத் தொடர்புச் சாதனங்கள் வழியாகவும் தொடர்ந்து மக்கள் விரோதப் பொய்ப் பிரச்சாரங்களே, பரப்பப்பட்டு வந்ததால் ஆட்சியாளர்கள் "மக்களின் வெறுப்புக்கு ஆளானது தவிர வேறொரு ஆபத்தும் நிகழ்ந்தது. மார்க் சியக் கருத்தாக்கங்களின் மூலம் நேரெதிரான அர்த்தங் களைப் பன்னிப் பன்னிப் பேசி வந்ததன் விளைவாகச் சொற்கள் அவற்றின் இயல்பான அர்த்தங்களை இழந்தன. போலந்தைச் சேர்ந்த சமூகவியலாளர் ஒருவர் குறிப்பிட்ட தைப் போல, 'சோசலிசம்', 'சமூகமயமாதல்','சர்வதேசியம்' 'எதிர்ப்புரட்சிகர சக்தி' போன்ற போலந்துச் சொற் களின் அர்த்தங்கள் முறையே 'நிலவுகிற சமூக', 'அமைப்பு 'அரசுடைமை', 'ரசிய நலன்களுக்குப் பணிதல்', 'அரசியல் எதிர்ப்பு' என்றாகி விட்டன. இந்தச் சூழலில் அரசுத் தொடர்புச் சாதனம் ஒன்று ஒரு முதலாளிய நாட்டிற்கு எதிராகவோ, இல்லை கத்தோலிக்க மதத்திற்கெதிராக வோ ஒன்றைச் சொன்னால்—அது உண்மையாக இருந்தா லும் கூட— அதற்கு நேரெதிரான அர்த்தங்களை மக்கள் உருவாக்கிக் கொள்ளும் அவலம் நேர்ந்தது. எனவே சொற்கள் தங்களின் குறிப்புப் பொருளை இழந்தது மட்டு மல்லாமல் அதற்கு நேரெதிரான பொருள்களையும் கொள்ளத் தொடங்கின. சமீபத்திய போலந்துத் தேர் தலில் பொதுவுடமைக் கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தோற்கடிக்கப் பட்டதும், போலந்தைச் சேர்ந்தவர் போப் பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஒவ்வொரு வீடும் மகிழ்ச்சிக் கொண்டாட்டம் போட்டதும் நினைவு கூரத் தக்கன. இத்தனைக்கும் பல சந்தர்ப்பங்களில் போலந்தின் ரோமன் கத்தோலிக்க மதபீடம் அரசுக்கு ஆதரவாகச்

www.padippakam.com



'சாலிடாரிடி' அமைப்பை வேலை நிறுத்தத்தை நிறுத்திக் கொள்ளச்சொல்லிக் கேட்டுக் கொண்ட செய்திகள் குறிப்பிடத்தக்கன.

சோசலிசத்துடனும், மா-லெ தத்துவங்களுடனும் தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட அனைத்துக் கொடுமைகளையும் இங்கேயுள்ள பொதுவுடைமைக் கட்சிகள் நிறைவேற்றிக் கொண்டிருந்ததன் விளைவாகவும், நிலவுகிற சர்வாதிகார அமைப்பிற்கெதிரான தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த இடதுசாரி எதிர்ப்புக் களம் ஏதுமில்லாததன் விளைவாகவும் இங்கே தோன்றிய அதிகாரத்துவத்திற்கு எதிரான கிளர்ச்சிகள் மரபு வழிப் பட்ட வலது சாரிக் குறிகளையும், அடையாளங்களையும் கைக்கொள்ள நேர்ந்ததை நாம் சற்று அனுதாபத்தோடு பார்க்க வேண்டும். இந்த நிலைகளை நாம் அவற்றிற்குரிய சூழலில் வைத்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

தங்களது நீடித்தலுக்கான (legitimacy) இழந்த இந்தச் சர்வாதிகார அதிகாரத்துவ அரசுகளை எதிர்க்கும் இந்தக் கிளர்ச்சிகள் ஓர் அரசியல் இயக்கம் என்கிற பரிமாணத்தை அடையாமல் ஓர் கலகச் சக்தியாக வெளிப்படுகின்றன. முற்றிலும் வேறுபட்ட ஒரு புதிய சூழலில் முற்றிலும் ஓர் அரசியல் மொழியில் இவர்கள் பேச வேண்டியிருக்கிறது. வன்முறை/ அகிம்சை போன்ற அறவியற் பிரச்சனைகளில் எப்படி எல்லாக் காலத்திற்குமான, எல்லாச் சூழலுக்குமான ஒரே தீர்வை வழங்கி விட முடியாதோ அதே போல இத்தகைய எதிர்க்கிளர்ச்சி முழக்கங்களையும் பருண்மையாக அணுக வேண்டும்.

இந்தச் சூழலை விளங்கிக் கொண்டு உலகெங்கிலுமுள்ள புரட்சிகரச் சக்திகள் இத்தகைய கிளர்ச்சிகளை ஆதரிப்பதற்குப் பதிலாக, முரட்டுத்தனமாக எதிர்ப்பதென்பது மேலும் மேலும் அக் கிளர்ச்சியாளர்கள் முதலாளியத்தைச் சார்வதற்கே வழி வகுக்கும். தவிரவும், இதர சனநாயக சக்திகளிடமிருந்து நாம் தனிமைப்படுவதற்கும் இது இட்டுச் செல்லும்.

06-08-89

படிப்பகம்

www.padippakam.com



## இணைப்பு 1 :

### 1989 ஏப்ரல் 21 ஆம் தேதியன்று பெய்ஜிங் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு அறிவித்த ஏழு கோரிக்கைகள்

1. மறைந்த ஹூயாவோ பாங்கின் பங்களிப்புகள் மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். சனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்குமான மகத்தான ஒத்திசைவை அவர் ஏற்றுக் கொண்ட தகைமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

2. மாணவர்களையும் மக்களையும் தாக்கிய குண்டர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இதற்குக் காரணமானவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

3. பத்திரிகைச் சுதந்திரம் குறித்த சட்டம் வெளியிடுவதை விரைவுபடுத்த வேண்டும். மக்கள் வெளியிடும் பத்திரிகைகள் அங்கீகரிக்கப் படவேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

4. அரசுத் தலைவர்கள் தங்களது மற்றும் தங்கள் குடும்பத்தினரது சொத்துக்களையும் வருமானத்தையும் நாட்டுக்கும் மக்களுக்கும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். ஊழல் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை நடத்த வேண்டும். விசாரணை விவரங்களை வெளியிட வேண்டும்.

5. கல்வி தொடர்பான கொள்கைத் தவறுகளில் சம்பந்தப்பட்ட அரசுத் தலைவர்கள் மக்கள் முன் சுய

www.padippakam.com



விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைப் போதுமான அளவிற்கு அதிகரிக்க வேண்டும். கூடவே ஆசிரியர்களின் ஊதியத்தையும் அதிகரிக்க வேண்டும்.

6. ''முதலாளியத் தாராளவாதம்'' என்கிற பெயர் சூட்டி அவிழ்த்து விடப்படும் எதிர்ப்பிரச்சாரங்களை மறு மதிப்பீடு செய்ய வேண்டும், இந்த அடிப்படையில் தேவை யற்ற அநீதிகளுக்கு ஆளான குடிமக்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க வேண்டும்.

7. இந்தச் சனநாயக/ நாட்டுப் பற்று இயக்கம் குறித்த பக்கச் சார்பற்ற உண்மையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

## இணைப்பு : 2

கடந்த மூன்றாண்டு காலமாகவே மாணவர்கள் கல்விச் சீர்த்திருத்தங்களுக்காகவும், சனநாயகக் கோரிக்கை களை முன் வைத்தும் போராடிக் கொண்டிருந்தாலும் இதன் உச்சகட்டமாய் அமைந்த 1989 ஜுன் 4 கொடுமைக்கு முன்னும் பின்னும் நடைபெற்ற சிலமுக்கிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு :

**ஏப்ரல் 15 :** 1987 இல் பதவி நீக்கம் செய்யப்பட்ட கட்சிப் பொதுச் செயலர் **ஹுயாவோ பாங்** மரணம். இவருக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு மாணவர்கள் நகர மையங்களிலும் **பெய்ஜிங் கில் தியானாமன்** சதுக்கத்திலும் கூடத் தொடங்குகின்றனர். தலைவர்கள் மரணத் தின்போது அஞ்சலி செலுத்தும் பொருட்டு மாணவர் கூடுவது சீனத்தில வழக்கம். 1976, ஏப்ரல் 5 இல் **சூ என் லாய்** மரணமடைந்த போது இதே தியானாமன் சதுக்கத்தில் மாணவர்களும், தொழிலாளரும் திரண்டு

www.padippakam.com



ஆர்ப்பாட்டம் செய்ததே நால்வரின் வீழ்ச்சிக்கும் டெங் குழுவினர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் காரணமாக அமைந்தது என்பர்.

**ஏப்ரல் 21 :** பெய்ஜிங் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைக்கிறது. (பார்க்க இணைப்பு : 1)

**ஏப்ரல் 22 :** ஹூவின் இறுதிச் சடங்கு. இரண்டு லட்சம் மாணவர் தியானாமன்னில். ஷங்காய், சங்ஷா, சியான் நகரங்களிலும் மாணவர் ஆர்ப்பாட்டம். மாணவர் தொடர்ந்து வகுப்புகளைப் புறக்கணிக்கின்றனர். 'சனநாயகக்' கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டம் தொடர்கிறது. கட்சிப் பொதுச் செயலர் ஜாவோ ஜியாங் ஹூவைப் பாராட்டுகிறார்.

**ஏப்ரல் 26:** 'மக்கள் தினசரி' என்னும் சீனப் பொதுவுடைமைக் கட்சி நாளிதழ் மாணவர் போராட்டத்தை, உள் நோக்கத்துடன் ஒரு சிலரால் தூண்டி விடப்பட்ட 'குழப்பம்' (Turmoil) எனத் தலையங்கம் எழுதுகின்றது.

**மே 4 :** 'மே நான்கு' இயக்கத்தின் எழுபதாம் ஆண்டு தினம். மாபெரும் பேரணி ஒன்றை மாணவர் நடத்துகின்றனர். ஜாவோ ஜியாங் கட்சியின் சனநாயக ஈடுபாட்டை வலியுறுத்திப் பேசுகிறார்.

**மே 5 :** மாணவர் போராட்டத்தின் முதற்கட்டம் முடிகிறது. மாணவரில் ஒரு பகுதியினர் வகுப்புகளுக்குத் திரும்புகின்றனர். இன்னொரு பகுதியினர் போராட்டத்தைத் தொடங்குகின்றனர்.

www.padippakam.com



மே 13 : சதுக்கத்தில் 500 மாணவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்குகின்றனர். விரைவில் உண்ணா விரதம் இருப்போரின் எண்ணிக்கை 10, 000 ஆகிறது.

மே 14 : சீன மாணவர்களின் சனநாயகக் கோரிக்கை கட்கு முன்னோடியாக இருந்த ''ரசியச் சீர் திருத்தங்களின்'' நாயகன் கோர்ப்பசேவ் சீனம் வருகை.

மே 18 : கோர்ப்பசேவ் பயணம் முடிவு. உண்ணா விரதம் இருக்கும் மாணவர்க்கு ஆதரவாகத் தொழிலாளர், பத்திரிகையாளர், நகர மக்கள் அணி திரள்கின்றனர். உண்ணாவிரதம் இருக்கும் மாணவரைச் சந்திக்க பிரதமர் லீ பெங்கும் பொதுச் செயலர் ஜாவோவும் தியானாமன் வருகின்றனர். ஒரு சில வன்முறைச் சம்பவங்கள் இருந்தாலும் மாணவர் போராட்டம் அமைதியாய் நடைபெறுகிறது என லீ பாராட்டுகிறார். தாமதமாய் மாணவர்களைச் சந்திக்க வந்ததற்காக கலங்கிய கண்களுடன் ஜாவோ வருத்தம் தெரிவிக்கிறார். ''உங்கள் விமர்சனங்களுக்கு நாங்கள் தகுதியானவர்களே. நாங்கள் உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.''

மே 19 : மாணவர்கள் தம் கோரிக்கைகளை இரண்டாகச் சுருக்கி முன் வைக்கின்றனர். (1) தேசபக்தி மிக்க தமது போராட்டதைக் ''குழப்பம்'' என விவரித்த 'மக்கள் தினசரி' தலையங்கம் திரும்பப் பெறப்பட வேண்டும். (2) அரசு மாணவர்களுடன் வெளிப்படையான பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இந்தப் பேச்சு

www.padippakam.com



வார்த்தை தொலைக்காட்சியில் காட்டப்பட வேண்டும்.

மே 20 : பொலிட்பீரோவின் செயற்குழு (Standing committee) கூடுகிறது, ஜாவோவுக்குப் பெரும் பான்மையான ஆதரவு இல்லை. ராணுவச் சட்டம் அமலாக்க முடிவெடுக்கப் படுகிறது, தொடர்ந்து நடைபெறும் கட்சி ஊழியர் கூட்டத்தில் மாணவர் பழிவாங்கப் படமாட்டார் என பிரதமரும் தலைவர் யாங் சாங் குன்னும் கூறுகின்றனர். போலீசிற்கு ''உதவியாக'' மக்கள் விடுதலைப்படை பெய்ஜிங்கிற்குள் நுழையும் எனு அறிவிக்கப் படுகிறது.

ராணுவச் சட்டம் அறிவிக்கப்பட்ட பின் மக்கள் ஆதரவு மேலும் பெருகுகிறது. சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. பல் கலைக் கழகத் தலைவர்கள், ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற தலைவர்கள் ஆகியோர் மாணவர் மீது பலப் பிரயோகம் செய்யக்கூடாது என அறிக்கைகள் விடுகின்றனர். ராணுவம் தயங்கித் தயங்கி நுழைகிறது.

மே 30 : 33 அடி உயர சுதந்திரச் சிலையை தியானாமன் சதுக்கத்தில் மாணவர் நிறுவுகின்றனர். போராட்டத்தை ஒத்திவைக்கப் பெரும்பான்மையான மாணவர் விரும்புகின்றனர். மாநிலங்களிலிருந்து வந்த மாணவர்கள் செயற்குழு கூடுகிற ஜூன் 20 வரை போராட்டத்தைத் தொடர விருப்பம் தெரிவிக்கின்றனர். சுகாதாரப் பிரச்சினைகளையும் ராணுவத் தாக்குதல் அச்சத்தையும் மீறி மாணவர் தொடர்ந்து நிற்கின்றனர்.

www.padippakam.com



லீ பெங் அரசு டாங்கிப் படையை நகர்த்த உத்தர விடுகிறது. 38 ஆவது படைப்பிரிவு தாக்குதல் தொடுக்கத் தயங்குவதைத் தொடர்ந்து சாங்சியிலிருந்து 27 ஆவது படைப்பிரிவு கொண்டு வரப்படுகிறது.

ஜூன் 2 : மாணவர்களின் தியானாமன் பிரகடனம் வர்க்கப் போராட்டம் என்கிற கருத்து காலத்திற்கு ஒவ்வாதது, இன்றைய தேவை அமைதியும் ஒத்துழைப்புமே என அறிவிக்கிறது.

ஜூன் 3 : இரவு
ஜூன் 4 : } மக்கள் விடுதலைப் படை மாணவர்மீது கொடூரமான தாக்குதலைத் தொடுக்கிறது. மூவாயிரம் முதல் ஏழாயிரம் பேர் வரை கொல்லப்பட்டதாகவும் பத்தாயிரம் வரை காயமடைந்ததாகவும் அதிகாரபூர்வமற்ற செய்திகள் அறிவிக்கின்றன. சீன அரசுத் தரப்பிலிருந்து 23 மாணவர்கள் மட்டுமே கொல்லப்பட்டதாகவும் சுமார் 300 ராணுவ வீரர்கள் செத்துப்போனதாகவும் அறிவிக்கப்படுகிறது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், ரப்பர் குண்டுகளும் கைவசம் இல்லாததால் இவ்வாறு தாக்குதல் தொடுக்கப்பட்டது என்றும் அரசு அறிவித்தது.

ஜூன் 5, 6, 7 : மேலை முதலாளிய நாடுகள் கண்டனம். சீனாவிற்கு எதிரான பொருளாதாரத் தடைகள் பற்றிப் பேசத் தொடங்குகின்றனர். சோசலிசச் சனநாயகம் பற்றி வாய் கிழியும் ரசிய கோர்ப்பசேவ் அரசு போராட்டத் தொடக்கம் முதல் இன்றுவரை கள்ள மௌனம் சாதிப்பது குறிப்பிடத் தக்கது.

ஜூன் 9 : தொலைக்காட்சியில் தோன்றி எதிர்ப்புரட்சிகர சக்திகளைக் கடிந்த டெங் மாணவர் போராட்

www.padippakam.com



டத்தில் உயிர்நீத்த ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

**ஜூன் 13 :** 'எதிர்ப்புரட்சியாளர்' 21 பேரின் படங்கள் தொலைக்காட்சியில் காட்டப்பட்டன.

**ஜூன் 14 :** அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

**ஜூன் 15 :** எதிர்ப்புரட்சியாளர் மூவருக்குத் தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது.

**ஜூன் 20 :** தொடர்ந்து தூக்குத் தண்டனைகள் அறிவிக்கப்பட்டன. கட்சிப் பொதுச் செயலாளர் ஜாவோ ஜியாங் மாணவர் போராட்டத்தை ஆதரித்ததற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுப் புதிய பொதுச் செயலர் அறிவிக்கப்படுகிறார்.

**இணைப்பு 3 :** சில முக்கிய தகவல்கள் :

1. மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சிப் பட்டியல். ஆண்டுக்கு இத்தனை சதவீதம் என்கிற அடிப்படையில்.

| நாடு | 1960 களில் | 1970 களில் | 1980 முதல் 1988 வரை |
|---|---|---|---|
| சீனா | 4.0 | 5 8 | 9.9 |
| கொரியக் குடியரசு | 8.4 | 8.0 | 9.3 |
| வளரும் நாடுகள் | 5.6 | 5.3 | 3 0 |
| இந்தியா | 3.7 | 3.2 | 4.7 |

மா—8

www.padippakam.com



2 சீனத்தில் வெளிநாட்டுக் கடன்களும் முதலீடுகளும் (100 மில்லியன் டாலர்களில்)

| | 1979-84 (சராசரி) | 1985-87 (சராசரி) | 1988 |
|---|---|---|---|
| அந்நியக் கடன் | 21.7 | 45.0 | 58.1 |
| நேரடி அந்நிய முதலீடு (ஹாங்காங், அமெரிக்கா, ஜப்பான் மட்டும்) | 5.1 | 19.5 | 23.1 |
| மொத்தம் | 28 6 | 67.9 | 84.5 |

3. பட்ஜெட் பற்றாக்குறை 1978 இல் + 0.2 ஆக இருந்தது 1976 இல் — 2.3 ஆக உயர்ந்துள்ளது. சராசரி பணவீக்கம் கிட்டத்தட்ட 20 சதம். 1988 இல் 26 சதமாக இருந்தது. ஏற்றுமதி இறக்குமதி வணிகப் பற்றாக்குறை 1988 இன் இறுதியில் 23 பில்லியன் டாலர்களாக இருந்தது கூலி உயர்வு 14.6 சதத்தைத் தாண்டவில்லை. 1987-88இல் மின்சாரம், எண்ணெய், நிலக்கரி, இரும்பு போன்றவற்றின் உற்பத்தி 10 சதம் குறைந்துள்ளது. கலர் டெலிவிஷன் உற்பத்தி 54 சதமும் குளிர் சாதனப் பெட்டிகளின் உற்பத்தி 86 சதமும் அதிகரித்துள்ளன.

நன்றி EPW, June 24, 1989

குறிப்பு : கட்டுரையிலும் இணைப்புகளிலுமுள்ள பல தகவல்கள் EPW, Frontier. Guardian Mainstream, Indian Express போன்ற பத்திரிகைகளிலிருந்து எடுக்கப் பட்டவை. டெங் சியோ பிங்கின் கருத்துக்கள் ஓரியானா ஃபலாசி என்கிற இத்தாலிய நிருபருக்கு அவர் அளித்த பேட்டியிலிருந்தும் டெங்கின் சொற்பொழிவுகளின் தொகுப்பாகிய Fundamental Issue in Present—Day China, Beijing, 1987 என்கிற நூலிலிருந்தும் தொகுக்கப் பட்டவை.

படிப்பகம்

www.padippakam.com

# 5. மார்க்சியம் தோற்கவில்லை!

## (அ)

மார்க்சியத்தின் எதிரிகளுக்கு — அதாவது எல்லாவித மான ஏற்றத்தாழ்வுகளும் சுரண்டலுமற்ற ஒரு உலகை யும் மனித சமூகத்தையும் உருவாக்க வேண்டும் என்ற கருத்தின் எதிரிகளுக்குக் கொண்டாட்டமான காலமிது. பொதுவுடைமைத் தத்துவம் என்கிற பூதத்தால் அரண்டு கிடந்த இந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் இவர்கள் இன்றளவிற்கு என்றும் மகிழ்ச்சியாய் இருந்ததில்லை. ரசியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதாவது புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் (பு.பி.ச.) ஏற்பட்டுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிகளின் அடிப் படையில் இவர்கள் பொதுவுடைமைத் தத்துவத்திற்குக் கல்லறை வாசகங்கள் எழுதுவதில் சுறுசுறுப்பாய் இருக் கிறார்கள். வெவ்வேறு வடிவங்களில் இந்தக் கல்லறை வாசகங்கள் ஒலிக்கின்றன. அவற்றில் சில :

- ☐ சோசலிசக் கட்டுமானம் என்பது எதார்த்தத்தில் சாத்தியமற்ற வெறும் கனவே!
- ☐ சோசலிசமும் சனநாயகமும் ஒன்றாக இருப்பது சாத்தியமில்லை; முதலாளியமும் சனநாயகமுமே ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்!
- ☐ மார்க்சியம் மரணத்தைத் தழுவிவிட்டது, பொது வுடைமைத் தத்துவம் காலாவதியாகி விட்டது!

www.padippakam.com



□ பொருள் முதலியத்தைக் கருத்து முதலியமும், அறிவியலை அறவியலும் வென்று விட்டன!

இந்தக் குரல்களின் தர்க்க நியாயங்களைப் பரிசீலிக்கும் முன்பாக ஒன்றை நாம் நினைவூட்டிக் கொள்வது உசிதம் எம் என். கோவிந்தப் பிள்ளை சொல்வதுபோல கடந்த நூறாண்டு காலமாகவே இவ்வாறு மார்க்சியத்திற்குக் கல்லறை வாசகங்கள் எழுதும் முயற்சிகள் தொடர்கின்றன. எங்கல்சின் மரணத்தைத் தொடர்ந்து வெளியிடப்பட்டுப் பல ஐரோப்பிய மொழிகளில் பெயர்த்துக் கொண்டாடப்பட்ட யூகின் பாம்பாவெர்க்கின் "கார்ல் மார்க்சும் அவரது அமைப்பின் இறுதியும்" என்கிற நூல் தொடங்கி ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கம் சீர்திருத்தவாதத்தில் சீரழிந்த போதும், ஸ்டாலினியக் கொடுமைகள் உலகிற்கு வெளிப்பட்ட போதும், சீன-சோவியத் பிளவின் போதும், மாவோவின் மரணத்திற்குப் பிந்திய சீனப் பாதை விலகலின் போதும் இத்தகைய முயற்சிகளை உலக முதலாளியம் உற்சாகத்தோடு மேற்கொண்டதை உலகறியும். ஒவ்வொரு முறையும் இவர்களது எதிர்பார்ப்புகள் முழுமையாக நிறைவேறவில்லை என்கிற உண்மை ஒருபுறம் கிடக்கட்டும். இங்கே நாம் கவனிக்க வேண்டியது வேறொன்றை. மேற்குறித்தச் சந்தர்ப்பங்கள் அனைத்தின்போதும் உலகெங்கிலுமிருந்த அமைப்பு ரீதியாய் திரட்டப்பட்டப் பொதுவுடைமைக் கட்சிகள் எல்லாம் இக் கூற்றுக்களைக் கடுமையாய் எதிர்த்திருக்கின்றன கருத்தியற் களத்தில் கடும் போராட்டத்தை நடத்தியிருக்கின்றன. ஒரு உன்னதமான சமூக நிர்மாணத்திற்கான சரியான பாதை சோசலிசக் கட்டுமானமே என்றும் காலாவதியாகியிருப்பது நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் முதலாளியமே என்றும் உரத்த குரலில் முழங்கியிருக்கின்றன.

ஆனால் இன்று......?

www.padippakam.com



நிலைமை நேரெதிராக இருக்கிறது. ஒரு பக்கம் கருத்தியல் மட்டத்தில் முதலாளிய சக்திகள் நடத்தும் சமரசமேயில்லாத கடுந்தாக்குதல். இன்னொரு பக்கம் பு.பி. சமூகங்களிலுள்ள பொதுவுடமைக் கட்சிகளின் முழுமையான சரணாகதி.

- ஆம், சோசலிசக் கட்டுமான முயற்சியும் மையப் படுத்தப்பட்ட திட்டமிடுதலும் தோற்றுத்தான் விட்டன.
- தனிச்சொத்துரிமையையும் சந்தைப் பொருளாதாரத்தையும் அனுமதிக்காமல் சனநாயகமும் சிவில் உரிமைகளும் சாத்தியமில்லை.
- சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றில் உறுப்பினராவது உட்பட உலக முதலாளியக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளாமல் 'சோசலிசம்' நெருக்கடியிலிருந்து தப்புவது இயலாது.
- உலக முதலாளியக் கட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு, ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நின்று முதலாளியப் பாதையை மேற்கொள்வதொன்றே மூன்றாம் உலக நாடுகளுக்கான சரியான வளர்ச்சிப் பாதை.
- எல்லோருக்கும் வேலை, பணவீக்கமின்மை, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் அனைவருக்கும் பூர்த்தி செய்யப்படுதல் என்பதெல்லாம் சோசலிச கட்டுமானத்தின் பிரதான அம்சங்கள் எனக் கொள்ள வேண்டியதில்லை.

என்பன போன்ற கருத்துக்களை இன்று முழங்கிக் கொண்டிருப்பவர்கள் மார்க்கிய எதிரிகள் மட்டுமல்ல. பு. பி. சமூகங்களிலுள்ள பொதுவுடைமைக் கட்சியினரும், அறிவாளிகளும், ரசியப் பொதுவுடைமைக் கட்சியுடன் தங்க

www.padippakam.com



ளைத் தகவமைத்துக் கொண்ட உலகெங்கிலுமுள்ள பொதுவுடைமைக் கட்சியினரும் மேற்படிக் கருத்துக்களின் ஊது குழல்களாக மாறியுள்ளனர்.

இது தவிர, இன்றைய நெருக்கடிகளின் அடிப்படையில் மார்க்சியத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதலுக்கும், இவர்கள் யாரும் எந்தப் பதிலையும் முன் வைப்பதில்லை. முதலாளியம் சந்தித்துக் கொண்டிருக்கும் கடும் நெருக்கடிகளையும் சுட்டிக் காட்டுவதில்லை. கருத்தியற் சரணாகதி என்பது தவிர மேற்படி கருத்துக்களின் அடிப்படையில் மையப்படுத்தப்பட்டத் திட்ட/மிடுதலின் பங்கைக் குறைத்துச் சந்தைச் சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவது, சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறுவது, பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது. தனிச் சொத்துரிமைக்கான தடையை நீக்குவது, வேலை இல்லாத் திண்டாட்டப்/பணவீக்கம் ஆகியவற்றை அனுமதிப்பது, வெளியுறவுகளில் சகல அம்சங்களிலும் மேலை முதலாளியங்களுடன் சமரசமாகிப் போவது போன்ற நடவடிக்கைகளைப் பு.பி. சமூகங்களிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகள் நடைமுறையில் மேற்கொண்டு வருவதையும் நாம் காண்கிறோம். இதற்குச் சமமான நல்லெண்ண அடிப்படையிலான மறு நடவடிக்கைகள் எதையும் மேலை ஏகாதிபத்தியங்கள் மேற்கொண்டு விடவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாகக் கோர்ப்பசேவ் தனது நாட்டின் படைபல எண்ணிக்கையையும் பாதுகாப்புச் செலவையும் நிபந்தனையின்றிக் குறைத்துக் கொண்டுள்ளார். அமெரிக்காவோ பாதுகாப்புச் செலவை அதிகரித்துள்ளது. மரபு வழிப்பட்ட ஆயுதங்களையும் அணு ஆயுதங்களையும் மத்திய ஐரோப்பாவில் குறைத்துக் கொள்கிறார் கோர்ப்பசேவ். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் தங்களது பழைய ஆயுதங்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள மறுத்து விட்டன. பேச்சு வார்த்

www.padippakam.com



தைகள் மூலம் ஆப்கானிஸ்தானில் அதிகாரப் பங்கீட்டைச் செய்து கொள்ளலாம் என்றார் கோர்ப்பசேவ், நிபந்தனையின்றிப் படைகளை அழைத்துக் கொள்ள வேண்டும் என்றது அமெரிக்கா. ரசியா பணிய வேண்டியதாயிற்று. அங்கோலா, மொசாம்பிக் போன்ற தனது ஆதரவு நாடுகளைக் கட்டாயப்படுத்தி உலக முதலாளியச் சக்திகளுடன் ஒத்துப்போகச் சொல்கிறது ரசியா. அமெரிக்காவோ தனது ஆதரவு நாடுகளின் அடாவடித் தனங்களை ஊக்குவிப்பதை தொடர்கிறது. கம்போடியாவை விட்டு வியட்நாமை வெளியேறச் செய்து ரசியா. அமெரிக்காவோ தொடர்ந்து போல்பாட்டையும் கேமர்ரூஜையும் ஆதரித்து வருகிறது. கியூபாவுக்கான மான்யங்களையும் உதவிகளையும் நிறுத்திக் கொண்டது ரசியா. அமெரிக்காவோ தொடர்ந்து கியூபாவைப் பகைமையாகவே பார்க்கிறது. போலந்தின் கத்தோலிக்கச் சார்பான அரசை ரசியா ஏற்றுக் கொண்டு விட்டது; அங்கு நடை பெற்ற தேர்தலில் முற்றிலுமாகத் தலையிடவுமில்லை. அமெரிக்காவோ, நிகரகுவா தேர்தலில் இடதுசாரிகளுக்கெதிராக எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. பணயக் கைதிகளை விடுதலை செய்யச் சொல்லி ஈரான்-சிரியா ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுத்தது ரசியா. ஆனால் போர்க்கைதிகளை விடுதலை செய்யச் சொல்லி இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கத் தயாராக இல்லை அமெரிக்கா. பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலம் மூன்றாம் உலக நாடுகளை விருப்பம் போலக் கையாளும் சுதந்திரத்தை மேலை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்த்திருக்கிறது ரசியா. இப்படி நிறையச் சொல்லலாம். மேலை முதலாளியம் கோர்ப்பசேவைப் பிரபலப்படுத்துவதெல்லாம் பத்திரிகைகளில்தான். அரசியல் நடைமுறை என்பதென்னவோ ஒரு பக்கச் சரணாகதிதான்.

www.padippakam.com



பு.பி. சமுதாயங்களின் இந்தச் சரணாகதிக்குப் பொதுவுடைமைக் கட்சிகளை மட்டுமே காரணமாகச் சொல்லிவிட முடியாது. அங்குள்ள மக்களின் மன நிலையே அப்படித்தான் இருக்கிறது. மேற்கத்தியப் பண்பாடு மதிப்பீடுகள், பொருளுற்பத்திமுறை ஆகியவை குறித்த கவர்ச்சி அங்கே தலைவிரித்தாடுகிறது. மேற்கிலுள்ள சகலத்தையும் மேலானதாகப் பார்க்கும் மனநிலை அங்கு ஏற்பட்டுப் போனதை நாம் மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துக்களுக்காகப் போராடும் உரிமை, 'ஹேபியஸ் கார்ப்பஸ்' உரிமை போன்ற மிக அடிப்படையான மனித உரிமைகளும் அரசியல் உரிமைகளும் மறுக்கப்படுதல், நுகர் பொருட்களுக்கான நீண்ட வரிசை, பற்றாக்குறை, அதிகார வர்க்கக் கொடுங்கோன்மை, சகலத்திலிருந்தும் அந்நியமாகி நிற்கும் பரிதாபம், தங்களது தேசிய இன உரிமைகளையும் இழந்து நிற்கும் வேதனை ஆகியவற்றோடு கடந்த பல பத்தாண்டுகளைக் கழித்தவர்கள் இந்த மக்கள். இந்தக் கொடுமைகள் அனைத்தும் மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் சோசலிசக் கட்டுமானம் என்ற பெயரில் தான் நடைபெற்றன. ஒட்டுமொத்தமான அடித்தட்டு மக்களின் ஏகப் பிரதிநிதியாகிய பொதுவுடைமைக் கட்சியே மக்களின் நலனைப் பற்றிச் சிந்திக்க வல்லது; அதனைப் பலவீனப்படுத்துவது எதிரியைப் பலப்படுத்துவதற்குச் சமம் என்கிற அடிப்படையில் கருத்து மாறுபாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டன. கட்சித் தலைவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. கருத்து மாறுபடுகிறவர்கள் முதலாளிய ஆதரவாளர்கள், ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என 'முத்திரை குத்தப்பட்டுக் குரல்களை நெறிக்கப் பட்டனர். பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் (பா.வ.ச) பெயரிலேயே பாட்டாளிகள் சகல விதமான அதிகாரங்களிலிருந்தும் அந்நியப் படுத்தப்பட்டனர். இந்த நிலைமையில் இருக்கிற நிறுவன வடிவங்களுக்

www.padippakam.com



குள்ளும் தத்துவச் சட்டகத்திற்குள்ளும் தங்களது எதிர்ப்பை வடிவமைக்க முடியாத இம்மக்கள் பொங்கி வெடித்துச் சிதற ஒரு வாய்ப்புக் கிடைத்தபோது தங்களது ஆட்சியாளர் இதுவரை பேசிவந்த மொழியிலிருந்து முற்றிலும வேறுபட்ட இன்னொரு மொழியில் பேச நேர்ந்தது. மேலை முதலாளியம் வழங்கியுள்ள முதலாளியச் சனநாயக உரிமைகளில் மயங்கி.

முதலாளியக் கட்டுமானம் = சந்தைப் பொருளாதாரம் = சனநாயகம்.

சோசலிசக் கட்டுமானம் = மையப்படுத்தப் பட்ட திட்டமிடுதல் = அதிகார வரக்கமயமாதல் = சனநாயக உரிமைகள் பறிக்கப்படுதல் எனப் புரிந்து கொள்ள நேர்ந்தது.

இதைத்தான் இன்று மார்க்சியம் சந்தித்துள்ள நெருக்கடி என்கிறோம். இதன் எதிரொலி உலகெங்கும் மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் மக்களைத் திரட்ட முனையும் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இத்தாலியப் பொதுவுடமைக் கட்சியும், பு பி. சமுதாயங்களிலுள்ள பல பொதுவுடமைக் கட்சிகளும் தங்களின் பெயரிலிருந்தே 'பொதுவுடமை' என்கிற சொல்லை நீக்கிவிட்டன மொசாம்பிக்கில் வளர்ந்து வந்த ஒரு இடதுசாரி இயக்கம் தனது வழிகாட்டும் தத்துவம் மார்க்சியமல்ல என அறிவித்திருக்கிறது, மூன்றாம் உலக நாடுகளின் பல பொதுவுடைமைக் கட்சிகள் வர்க்கப் போராட்டம் பற்றி பேசுவதை நிறுத்திவிட்டுத் தன்னுரிமை போன்ற முழக்கங்களை முன்வைக்கத் தொடங்கி விட்டன.

இச்சூழலை எதிர்கொண்டுள்ள வகையில் உலகெங்கிலுமுள்ள மார்க்சியரை இரு சாரராகப் பிரிக்கலாய்.

www.padippakam.com



(அ) மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கருத்தியற் களத்தில் முதலாளியத்திடம் சரணாகதியடைவோர், இன்றைய நெருக்கடிகளுக்கு மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலையும் ஸ்டாலினியத்தையும் காரணமாகக் காட்டி முதலாளியப்பாதையை நோக்கிச் சரிவதை ஆதரிக்கும் பெரிஸ்த்ரோய்க்கா ஆதரவாளர்கள் இவர்கள்.

(ஆ) மார்க்சியம் காலாவதியாகிவிடவில்லை ஸ்டாலினுக்குப் பின் வந்தவர்கள் திரிபுவாதப் பாதையில் சரிந்ததே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதல் போன்ற மரபு வழிப்பட்ட போல்செவிசக் கருத்தாக்கங்களை விமர்சிப்போர் மார்க்சியத்தின் எதிரிகள் என்றெல்லாம் நம்புபவர்கள் இவர்கள். இவர்கள் பெரும்பாலும் தங்களை 'மாவோயிஸ்டுகள்' என அழைத்துக் கொள்கிறார்கள்.*

இரண்டாமவர்கள் கடந்த இருபதாண்டு காலமாகவே ரசியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சோசலிசக் கட்டமைப்பலிருந்து பாதை விலகி முதலாளிய மீட்சிக்கு ஆளாகிவிட்டன எனச் சொல்லி வருபவர்கள். ரசியா, சமூக ஏகாதிபத்தியமாகி மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டுகிறது என்றும் நம்புபவர்கள். அரசியல்/பொருளாதார / பண்பாட்டுத் துறைகளில் ரசியாவில் ஏற்பட்டுள்ள

---

* சோசலிசக கட்டுமானம், கட்சியின முன்னோடிப் பாத்திரம் ஆகியவற்றில் போல்செவிசத்திலிருந்து கடுமையாக மாறுபட்டவர் மாவோ, ஆனால் மாவோயிஸ்டுகளாகத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கட்சியின் முன்னோடிப் பாத்திரம் போன்ற கருத்தாக்கங்களில் போல்செவிச நிலைபாட்டையே மேற்கொள்கின்றனர் என்பது கவனிக்கத் தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



முப்பெரும் நெருக்கடிகளை, கடந்த பல ஆண்டுகளாகவே சுட்டிக் காட்டி வந்தவர்கள் என்கிற அடிப்படையில் இன்று ஏற்பட்டுள்ள கொந்தளிப்புகள் தங்களின் கருத்துக்களுக்கு ஒரு நிரூபணம் என்பது இவர்களின் வாதம். இநத நெருக்கடிகளை அன்று இவர்கள் சுட்டிக் காட்டியபோது அமெரிக்க ஏஜெண்டுகள் எனக் குற்றம் சாட்டிய முதலாமவர் இன்று எள்ளளவும் சுய விமர்சனமின்றி இதே கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளது உண்மைதான்.

ஆனாலும் இன்றைய கொந்தளிப்புகளும் மக்கள் எழுச்சிகளும் மாவோயிஸ்டுகளை எந்தவிதமான தர்ம சங்கடத்திற்கும் ஆளாக்கிவிடவில்லை என்றும் சொல்லி விட முடியாது. ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் திரிபுவாதத்திற்கு இழிய நேர்ந்ததைக் கணக்கிலெடுத்துக் கொண்டு முற்றிலும் புதிய ஒரு சோசலிசக் கட்டுமானப் பாதையையும் கலாச்சார புரட்சியையும் மாவோ மேற்கொண்டதை விமர்சனங்களின்றி உயர்த்திப் பிடிப்பவர்கள் இவர்கள். எல்லாந்தான் செய்தாலும் மாவோவுக்குப் பிந்திய சீனமும் திரிபுவாதமாய்ச் சீரழிந்ததென்றால் உலகெங்கிலுமுள்ள பு.பி. சமுதாயங்கள் ஏதொன்றிலுமே சரியான சோசலிசக் கட்டுமானத்தை நிறுவ முடியவில்லையென்றால் — மார்க்சியத்தின் அடிப்படையிலேயே ஏதேனும் கோளாறு இருக்கிறதா, இல்லை எதார்த்தத்தில் கடைபிடிக்கவே முடியாத வெறும் கனவுதானா மார்க்சியம் என்கிற பாமர நியாயங்களுக்கு இவர்களிடம் பதில் இல்லை. ஆனாலும் மார்க்சியப் பதாகையின் கீழ் மக்களைத் திரட்டியாக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் நாம் இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இதற்கு முன் நாம் ஓருண்மையைத் தெளிவுபடுத்திக் கொள்வோம். மார்க்சியம் உண்மையிலேயே காலாவதியாகிவிட்டால் நாம் அது பற்றி அதிகம் கவலைப்பட

www.padippakam.com



வேண்டியதில்லை என்பதுதான் அது. காலத்தின் தேவையை ஒட்டியே எந்த ஒரு தீர்வும் உருவாகிறது. தேவை பூர்த்தி செய்யப்படும் போது அந்தத் தீர்வு தனது பயன்பாட்டை இழக்கிறது. ஏனெனில் அதன் பின் தோன்றுகிற புதிய பிரச்சினைகள் சகல அம்சங்களிலும் பழைய பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டிருப்பதால் பழைய தீர்வுகள் பயன்படாது போகிறது. இதனை மார்க்ஸ் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். நாம் அடைந்துள்ள அறிவுமட்டம் இறுதியானது அல்ல நாம் எத்தனை மட்டங்களைத் தாண்டி வந்துள்ளோமோ அது போல நம்முடைய அறிவு மட்டமும் தாண்டப்படும். நாம் தாண்டி வந்தவை போலவே நம்முடையதும் தற்காலிகமானதே. நாம் எத்தனை தலைமுறைகளின் தவறுகளைத் திருத்தியிருக்கிறோமோ அவற்றைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமான தலைமுறைகள் நம்முடைய தவறுகளைத் திருத்தும் என்றெல்லாம் சொன்னார் மார்க்ஸ். புனித வேதங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டுவதுபோல எங்கள் புத்தகங்களை வாய்ப்பாடுகளாக்கி விடாதீர்கள்; மார்க்சின் சிந்தனை முறையின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவதே மார்க்சியம் என்கிற பொருள்பட மொழிந்தார் எங்கல்ஸ். ஆக, மார்க்சியத்தின் நோக்கம் பூர்த்தியாகி அதன் தேவை அழிந்திருந்தால் நாம் அதற்காக ஒப்பாரி வைக்க வேண்டியதில்லை. கடந்த ஐயாயிரம் ஆண்டு கால வரலாற்றில் ஒடுக்கப் பட்ட அடித்தட்டு மக்களின் விடுதலை பற்றிப் பேசிய, ஆய்வு செய்த, கோட்பாட்டுருவாக்கம் செய்த தத்துவம் மார்க்சியம். மனிதனை மனிதன், சமூகங்களைச் சமூகங்கள், நாடுகளை நாடுகள் சுரண்டுவதையும் ஒடுக்குவதையும் முடிவிற்குக் கொண்டுவருவதன் தேவையை வலியுறுத்திய சிந்தனை மார்க்சியம். தனது கால முதலாளிய சமூகத்தை விஞ்ஞான பூர்வமாகப் பகுப்பாய்வு செய்து அதன் இயக்க விதிகளை வெளிப்படுத்திய ஆய்வுமுறை மார்க்சியம். சமத்துவமான உலகையும் சமத்துவமான

www.padippakam.com



மதிப்பீடுகளையும் இந்த அடிப்படையில் ஒரு புதிய மனிதனையும் ஒரு புதிய பண்பாட்டையும் உருவாக்குவதைப் பற்றிச் சிந்தித்த சிந்தனை முறை மார்க்சியம். மார்க்ஸ் காலத்திய சமூகம் இன்று பெரிய அளவில் மாறுபட்டிருந்தாலும், பிரச்சனைகளின் பரிமாணங்கள் வேறுபட்டிருந்தாலும், இன்றும் உலகளவில் உற்பத்தி முறை முதலாளியத் தன்மையிலானதாகவே இருக்கிறது. இன்றளவும் மார்க்சியம் கண்டு சொன்ன முரண்பாடுகள் நீடிக்கும்வரை மார்க்சியத்தின் தேவையும் நீடிக்கும். இதன் பொருள், மார்க்சுக்குப் பிந்திய நூறாண்டு கால வளர்ச்சியையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மார்க்சியக் கருத்துக்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற உண்மையை மறுப்பதல்ல. தவிரவும், மார்க்சியம் காலாவதியாகிவிட்டதாகக் கூக்குரலிடும் யாரும் தங்கள் கூற்றை விஞ்ஞான பூர்வமான தர்க்க அடிப்படையில் நிறுவிடவில்லை, இதனைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

## (ஆ)

சோசலிசக் கட்டுமான முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன எனக் குரலெழுப்புகிற யாரும் இதனைத் தர்க்க பூர்வமாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் நிறுவிடவில்லை என்றோம். முதலாளியத்தின் தவிர்க்க இயலாத நெருக்கடிகள் குறித்து மார்க்சியம் இதுவரை முன் வைத்துள்ள கோட்பாடுகள் எதற்கும் இவர்கள பதிலளிக்கவுமில்லை. சோசலிசமும் சனநாயகமும் இணைந்திருப்பது எவ்வாறு சாத்தியமில்லை என்பதையோ, மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பது எவ்வாறு உற்பத்தித் தேக்கத்திற்கும், அறிவியல் / தொழில்நுட்ப வளர்ச்சியின்மைக்கும் தவிர்க்க இயலாமல் இட்டுச் செல்லும் என்றோ, தனிச் சொத்தும் சந்தைப் பொருளாதாரமும் சனநாயகம் செழித்தோங்குவதற்கான நிபந்தனைகளாக எவ்வாறு விளங்குகின்றன என்பது பற்றியோ, இன்று மார்க்சியம்

www.padippakam.com



காலாவதியாகிவிட்டது என்று பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி மகிழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு முதலாளிய அரசியல்வாதியோ பொருளாதார நிபுணரோ கோட்பாட்டு ரீதியாக நிரூபணம் எதையும் மக்கள் முன் வைத்துவிடவில்லை என்பது கவனத்தில் நிறுத்த வேண்டிய மிக முக்கியமான விசயம். தங்களது முதலாளிய வழுவல்களுக்கு வக்காலத்து வாங்கும் பு பி. சமுதாயங்களிலுள்ள பொதுவுடமைக் கட்சியினரும் லியோனால்ட் அபால்கின், அபேல் அபென்பெக்யான், அலெக்சி கிவா போன்ற ரசிய நிபுணர்களும் கூட தங்கள் நாட்டுப் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு, இதற்கான தீர்வு முதலாளியச் சீர்திருத்தங்களே என்றுதான் சொல்கிறார்களே யொழிய சோசலிசக் கட்டுமானம் எவ்வாறு இப் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது என்பதைத் தர்க்க பூர்வமாக விளக்கியதில்லை.

சோசலிசக் கட்டுமானமும் மார்க்சியமும் காலாவதியாகிவிட்டன என்று இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்வதற்குச் சுட்டிக் காட்டுகிற ஆதாரமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிதான் அது. எழுச்சி கொண்ட மக்கள் அதிகாரத்துவத்திற்கு எதிராக ஒன்றிணைந்து நின்று ஒரே குரலில் முழங்கி சீசெஸ்குவையும் ஹோனேக்கரையும் தூக்கி எறிந்ததும் லெனின் சிலைகள் உடைக்கப் படுவதும் மார்க்சிய நூலகங்கள் எரிக்கப்படுவதும் நடைபெறும் தேர்தல்களில் பொதுவுடமைக் கட்சிகள் துடைத்தெறியப்படுவதும், மேற்கத்திய நுகர் பொருள் பண்பாட்டின் மீது பு.பி. சமுதாயங்களிலுள்ள மக்கள் காட்டும் ஆர்வமும் மட்டுமே இவர்கள் காட்டும் சான்றாதாரங்கள். கண்முன் நிகழ்ந்துள்ள இந்தச் சம்பவங்களை யாரும் மறுத்துவிட முடியாது. இவை சோசலிசக் கட்டுமானம் குறித்த மிக அடிப்படையான சில பிரச்சினைகளை எழுப்பியுள்ளன என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது ஆனால் இவற்றின் அடிப்படையில் இவர்கள்

www.padippakam.com



வந்தடைகிற முடிவு பொதுவுடைமை என்கிற கோட்பாடு, மார்க்சியம் என்கிற தத்துவம், சோசலிசம் என்கிற நடைமுறை தோற்றுவிட்டன என்பது எந்த அளவிற்குச் சரியானது, இவர்கள் சுட்டிக்காட்டும் காரணவிளைவுத் தொடர்பு எந்த அளவிற்குத் தர்க்கபூர்வமானது என்பதைக் கண்டறிய நாமாவது சற்றுத் தர்க்க அடிப்படையில் சிந்தித்தாக வேண்டும்.

முதலில், பு. பி. சமுதாயங்கள் எதுவும் பொதுவுடைமைச் சமுதாயங்கள் அல்ல என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்வோம். லெனினோ, ஸ்டாலினோ, குருச்சேவோ, கோர்ப்பசேவோ, மாவோவோ, சீசெஸ்குவோ அல்லது வேறு யாருமோ எந்நாளும் இப்படி உரிமை கொண்டாடியது மில்லை. சோசலிச உறவுகள் நிலைநாட்டப்பட்டு விட்டதா என்கிற விசயமே மார்க்சியர்கள் மத்தியில் விவாதப் பொருளாக இருந்து வந்துள்ளபோது பொதுவுடைமை உறவுகள் நிலைநாட்டப்பட்டுவிட்டதா என்கிற கேள்விக்கே இடமில்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தின் இயக்க விதிகள், நிறுவன வடிவங்கள் ஆகியவை குறித்த முழுமையான பார்வையை முன்வைத்துவிட்டதாகவும் மார்க்சியம் உரிமை கொண்டாடியதில்லை. எதிர்கால அமைப்பு குறித்த ஒரு முழுமையான வரைபடத்தை உருவாக்குவதற்கு மார்க்ஸ் என்றுமே உடன்பட்டதில்லை. நிலவுகிற அமைப்பு குறித்து சமரசமில்லாத விமர்சனங்களை முன் வைப்பது மட்டுமே நமது கடமை; எதிர்காலத்திற்கான எல்லாவிதமான தீர்வுகளையும் முன் வைப்பது நமது பணியல்ல என்பதை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

எனவே பு. பி. சமுதாயங்களின் நெருக்கடிகளின் அடிப்படையில் கூறப்படுகிற பொதுவுடைமைச் சமுதாயம் என்கிற கோட்பாடே தவறானது என்கிற கூற்றில் எந்த நியாயமுமில்லை. அதேபோல மார்க்சியம் என்பது பு.பி. சமுதாயங்கள் குறித்த ஒரு அறிவியலுமல்ல. அதன்

படிப்பகம்

www.padippakam.com



பல்வேறு பரிமாணங்களில் இது ஒன்று என வேண்டுமானால் சொல்லலாம். உண்மையில் முதலாளியச் சமுதாயத்தின் இயக்க விதிகளைக் கண்டறிந்ததே அதன் பிரதான பணி. எனவே, முதலாளியம் உள்ள வரை மார்க்சியத்தின் தேவையும் இருந்தே தீரும். தவிரவும் பு.பி. சமுதாயங்கள் என்பவை எந்த அளவிற்கு மார்க்சியப்பாதையில் சென்றன என்பதே கேள்விக் குறியாக இருக்கும்போது இந்தக் கேள்விக்குப் பதிலைச் சொல்லாமல் இன்றைய நெருக்கடிகளின் அடிப்படையில் மார்க்சியம் தோற்றுவிட்டது எனச் சொல்வது அடிப்படையில் நேர்மையற்ற செயலாகும். லெனினது நடைமுறைகட்கும் ஸ்டாலினுடையதற்கும் வேறுபாடுகள் உண்டு. லெனின், ஸ்டாலின் நடைமுறைகளிலிருந்து குருச்சேவும், மாவோவும் தனித்தனி வழிகளில் வேறுபட்டனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிற்கு மிடையே சில பொதுவான அம்சங்கள் இருந்த போதிலும் அவற்றின் சோசலிசக் கட்டுமானங் களிடையே தனித்துவமான வேறுபாடுகள் உண்டு. டிட்டோவும், அன்வர் ஹோஜாவும் இவர்கள் எல்லோரிடமிருந்தும் வேறுபட்டனர். இந்தப் பாதைகளிடையே எது சரியான மார்க்சியப் பாதை என்பதில் உலக மார்க்சியரிடையே கடும் கருத்து மாறுபாடுகள் உண்டு.

தவிரவும், மாவோயிஸ்டுகள் யாரும் ரசியாவையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சோசலிசச் சமுதாயங்களாக ஏற்றுக் கொள்வதில்லை. இத்தாலி தவிர இதர மேற்கு ஐரோப்பியப் பொதுவுடைமைக் கட்சிகளும், அமெரிக்கப் 'புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சி' யும் கூட ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் திரிபுவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டன என்கிற கருத்தையே ஏற்றுக் கொள்கின்றன. இவர்களில் பலர், இந்நாடுகள் அரசு முதலாளியச் சமுதாயங்கள் எனவும் ரசியாவைச் சமூக ஏகாதிபத்தியம் எனவும் குறிப்பிடுகின்றனர். இந்தக் கருத்துக்களை முற்றாகப் புறக்கணித்து மௌனம் சாதித்

படிப்பகம்

www.padippakam.com



துக்கொண்டே இந்தச் சமூகங்களின் நெருக்கடிகளை மார்க்சியம் மற்றும் சோசலிசக் கட்டுமானம் ஆகிய வற்றின் தோல்வியாகச் சித்தரிப்பது அறியாமை அல்லது அயோக்கியத்தனத்தின் உச்சக் கட்டமாகும். வேண்டு மானால் அவர்கள் இப்படிச் சொல்லட்டும்: 'புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் நிலவுகிற கட்டுமானங்கள் எதார்த்தத்தில் தோல்வியுற்றுள்ளன.'

கோட்பாட்டு நியாயமும் தர்க்க பலமும் இல்லாத இவர்கள் கூற்றின் இன்னொரு பக்கமான முதலாளியக் கட்டுமானம் வெற்றி பெற்றுவிட்டது என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. முதலாளியம் என்றால் அமெரிக்கா வும் ஜப்பானும் மட்டுமல்ல. இந்தியா, வங்க தேசம், பிரேசில், காணா இன்னும் பல வறுமையில் உழலும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் முதலாளியப் பாதையில் சென்று கொண்டிருப்பவைதான். அதேசமயத்தில் பு.பி. சமுதாயங்கள் எதிலும் பட்டினிச் சாவுகளோ வேலை இல்லாத் திண்டாட்டமோ கிஞ்சித்தும் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதலாளியமும் சனநாயகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்கிற கூற்றும் இப்படிப்பட்டதுதான். முதலாளியச் சனநாயகம் என்பது வெறும் ''முதலாளியச்'' சனநாயகம் மட்டுமே; அது உண்மையான சனநாயகமாகாது என்பதை மார்க்சியம் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறது. இந்தியா போன்ற முதலாளியச் சனநாயகம் கொடிகட்டிப் பறக்கும் நாடு களில் எந்த அளவிற்கு சனநாயக மனித உரிமைகள் பாது காக்கப்படுகின்றன என்பதை நாம் அனுபவபூர்வமாக அறிவோம், அமெரிக்க ஆதரவுக் கோன்ட்ரா படையி னரின் அட்டூழியங்களால் அமைதி கடுமையாகப் பாதிக்கப் பட்டிருந்த நிகரகுவாவின் இடதுசாரி அரசின் கீழ் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்ட அளவிற்குக்கூட இந்தியா போன்ற நாடுகளில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட



படிப்பகம்

www.padippakam.com



வில்லை. உலகிலேயே மிக மோசமாக மனித உரிமைகள் பறிக்கப்படும் நாடுகளில் ஒன்று இந்தியா என்று கூறுவது நாம் மட்டுமல்ல; சர்வதேசப் பொது மன்னிப்பு அவை போன்ற நிறுவனங்களே இதைச் சொல்லியுள்ளன. இந்தியா போன்ற நாடுகளில் முழுமையான சனநாயகம் இல்லை என்றாலும் கூட பு. பி. சமுதாய அரசுகளுடன் ஒப்பிடும்போது பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை போன்றவை இங்கே வழங்கப்பட்டுள்ளதல்லவா என்கிற கேள்வி நியாயமானதே. இதற்கான பதிலை நாம் இறுதியில் விரிவாய்ப் பார்ப்போம். இங்கே நாம் வலியுறுத்த விரும்புவதெல்லாம் இதுதான். மேற்படி உரிமைகள் வழங்கப்பட்ட நாடுகள் எல்லாம் முதலாளியக் கட்டுமானப் பாதையை மேற்கொண்ட நாடுகளாக இருக்கலாம். ஆனால் முதலாளியக் கட்டுமானப் பாதையை மேற்கொண்டுள்ள நாடுகள் அனைத்திலும் மேற்படி உரிமைகள் உள்ளன என்று சொல்லிவிட முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலைத் தவிர்ப்பதும் சந்தைப் பொருளாதாரத்தையும் தனிச் சொத்தையும் அடிப்படையாகக் கொள்வதும் முதலாளிபச் சனநாயக உரிமைகளுக்குக் கூட உத்தரவாதமாகிவிடாது என்பதற்கு தென்ஆப்பிரிக்கா, சிலி, ஈரான், மார்க்கோசின் பிலிப்பைன்ஸ், பர்மா போன்றவை எடுத்துக்காட்டுகளில்லையா?

வளர்ச்சியில் தேக்கம், மறைமுகமான பணவீக்கம், வேலை இல்லாத் திண்டாட்டம், லஞ்ச ஊழல், பண்பாட்டுச் சீரழிவு, மூலதனப் பங்கீட்டைத் திறமையாகச் செய்யாததன் விளைவாகக் கடும் விரயம் ஆகியவை சந்தைப் பொருளாதாரம் ஆணையில் வைக்கப்படாமையின் விளைவு எனச் சொல்லப்படுகிறது. மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்ட பு. பி. சமுதாயங்களில் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் உள்ளன

www.padippakam.com



என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் முதலாளியக் கட்டுமானமும் சந்தைப் பொருளாதாரமும் நிலவுகிற சமூகங்களிலும் இதே பிரச்சினைகள் உள்ளன என்பதையும் நாம் மறந்து விடலாகாது. கடந்த பத்தாண்டுகளில் உலக முதலாளியம் இதே நெருக்கடிகளை இன்னும் அதிகப் பரிமாணத்தில் சந்தித்திருக்கிறது. வளர்ச்சித் தேக்கம், பத்து சதத்திற்கும் மேல் பணவீக்கம், கடும்வேலைஇல்லாத் திண்டாட்டம், மோசமான லஞ்ச ஊழல் ஆகியவை அமெரிக்க-ஜப்பான் உள்ளிட்ட முதலாளிய நாடுகளை ஆட்டிப்படைப்பதை நாம் புள்ளி விவரங்கள்கூறி விளக்கத் தேவையில்லை. இந்நாடுகளில் லாபவிகிதங்கள் குறைந்து வருகின்றன. (1966—13 4%; 1976—9.27); தேசிய வருமானத்தில் கூலியின் பங்கு குறையும் [1970—74%; 1986—61%); அதே வேளையில் வாழ்க்கைச் செலவு கடுமையாக அதிகரித்துள்ளது. [1950—2%; 1984—6.7% (USA)]. முதலாளிய நாடுகளின் பண்பாட்டுச் சீரழிவை நாம் விளக்கத் தேவையில்லை. அமெரிக்காவின் ஈரான்-கோன்ட்ரா ஊழல், இந்தியா / ஸ்வீடனின் போபார்ஸ் ஊழல், ஊழல் குற்றச்சாட்டில் ஜப்பான் பிரதமர் பதவி விலக நேர்ந்தமை, கருப்புப்பணம், கள்ளச் சந்தை, போதைப் பொருள் கடத்தல், மேலைப் பொருளாதாரங்கள் ஆட்டங்கண்டிருப்பது என அடுக்கிக் கொண்டே போகலாம்.

அவ்வளவு ஏன்? ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக் காடாக மாறுகிற சாத்தியத்தை மறுத்த ஒரு வளர்ச்சிப் பாதையை மூன்றாம் உலக நாடுகளுக்கு முதலாளியம் தந்துவிட முடியும் என இன்று எந்த ஒரு முதலாளியப் பொருளாதார நிபுணராவது பரிந்துரைப்பதற்குத் தயாராக இருக்கிறாரா? இந்த வளர்ச்சிப் பாதை என்பது ஏகாதிபத்தியங்களுக்கும் அதன் உள்ளூர்த் தரகர்களுக்கும் மட்டுமே உகந்ததாக இருக்கும் என்பதை வரலாறும் நிரூபித்திருக்கிறது.

www.padippakam.com



பு.பி. சமுதாயங்களில் கடும் ஏற்றத்தாழ்வுகள் நிலவு கின்றன என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் இந்த நாடுகள் எதிலும் ஒரு பக்கம் பல அடுக்கு மாளிகைகளும் இன்னொரு பக்கம் குடிசைக்குள்ளேயே மலங்கழித்துப் பொட்டலம் கட்டிவைக்க வேண்டிய கொடுமையும் எனச் சமூகம் பிளவுபட்டிருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது. பு.பி. சமுதாயங்களில் தனியார்கள் அரசுக்குத் தெரியாத கள்ள உற்பத்திகளில் ஈடுபட்டிருக்க லாம். ஆனால் யூனியன் கார்பைடு போன்ற மக்களைக் கொன்று பணத்தை அள்ளும் பாதகசுரப் பன்னாட்டு நிறுவனங்கள் எதுவும் இங்கு கிடையாது. சுமார் நூறு பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் இன்று உலகப் பொருளாதாரம் மட்டுமல்ல உலக அரசியலே சிக்கியிருக் கிற உண்மையை யாரும் மறுத்துவிட முடியுமா? கல்வி/ மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் அனைவருக்கும் வழங்கப்படுதல், ஒப்பீட்டளவில் பெண்கள் விடுதலை பெற்றிருத்தல் ஆகிய அம்சங்களில் பு.பி. சமூகங்களின் சாதனைகளை **ஏ. என். சிவராமன்** போன்ற மார்க்சிய எதிரிகள் கூட மறுக்கத் துணிந்ததில்லையே.

நுகர் பொருள் உற்பத்தியின் அடிப்படையிலும் கூட மையப் படுத்தப்பட்ட திட்டமிடுதலைக் காட்டிலும் சந்தைப் பொருளாதாரத்தை மேலாக வைத்துவிட முடியாது. முதலாளியம் நுகர் பொருள் உற்பத்தியில் முன் நிற்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது நுகர் பொருளை உற்பத்தி செய்வதோடு நிற்கவில்லை. நுகர் பொருள் பண்பாடு ஒன்றை உருவாக்குவதற்காக விளம்பரங்கள் மூலமாகவும் வேறு வழிகளிலும் பல்லா யிரம் கோடி டாலர்களை ஆண்டுதோறும் விரயமும் செய்து கொண்டிருக்கிறது. பரிமாற்ற மதிப்பு அதிக அளவில் இருந்த போதிலும் பயன் மதிப்பு சுழியாக உள்ள கோடானு கோடி நுகர் பொருள் குப்பைகளை உற்பத்தி செய்து குவிக்கும் ராட்சத எந்திரமாக இன்று முதலாளியம்

www.padippakam.com



சீரழிந்திருக்கிறது. இந்த உற்பத்தியை நிறுத்தி விட்டு ஒரு நிமிடம்கூட இன்று அது உயிர் வாழ்ந்துவிட முடியாது. மனித உறவுகளை வெறும் பண்ட உறவுகளாகச் சீரழிக்கும் எந்தப் "பண்ட மாயையை" ஒழித்துக் கட்டுவதை ஒரு புதிய மனிதனின் தோற்றத்துக்கான நிபந்தனையாக மார்க்சியம் நிறுவியதோ அந்தப் பண்ட மாயையை ஒரு அளவு கோலாக வைத்துக் கொண்டு இன்று முதலாளியத்தின் 'வெற்றியை' நாம் தீர்மானித்து விட முடியாது. விற்பனையில் லஞ்சம், பெரு முதலாளிகளுக்கு வரிச் சலுகை, பெரு நிறுவனங்களுக்கு அரசுமான்யம், பல நிறுவனங்கள் மூடப்படுதல், தானியங்கி எந்திரங்கள் புகுத்தப் படுவதன் மூலமாக ஏராளமானோர் வேலை இழத்தல், வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுச் சூழல் நாசம், போர் வெறிக்குக் காரணமான ஆயுதத் தளவாட உற்பத்தி இவை எல்லாம் சேர்ந்ததுதான் இன்றைய முதலாளியம். ஏகாதிபத்தியக் கால கட்டத்திலான இன்றைய முதலாளியம் அதன் தோற்ற காலத்தியச் சனநாயகத் தன்மைகளை எல்லாம் இழந்து தனது சுய உருவை வெளிப்படுத்திக் கொண்டு நிற்கிறது. இன்றைய நிலைமை நீடித்தால் இன்னும் சில பத்தாண்டுகளில் உலக மக்களில் பெரும்பான்மையோர் உற்பத்தியில் எந்தப் பங்குமின்றி அந்தந்த நாட்டு அரசுகள் வழங்கும் உணவுப் பொட்டலங்களையும் பண்டிகைத் துணிகளையும் நம்பிக் கையேந்திக் கிடக்கும் செயலூக்கமற்ற மந்தைகளாக மாறுவது உறுதி என அறிஞர்கள் எச்சரிப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொன்றையும் நாம் இங்கு இணைத்துப் பார்க்க வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் நுகர் பொருள் உற்பத்தியில் தேக்கம் என்பது பு.பி.சமூகங்களின் மிகப் பெரிய தோல்வி என நாம் ஏற்றுக் கொள்ளும் போதே இதற்கான காரணங்களை மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலிலும் மார்க்சியத்தின் அடிப்படையிலும் மட்டுமே தேடிவிட முடியாது என்பதையும் சொல்லியாக

www.padippakam.com



வேண்டும். நுகர் பொருள் உற்பத்தியில் தேக்கத்தைச் சந்தித்துள்ள ரசியாதான் ஆயுத உற்பத்தியிலும், விண் வெளி ஆய்விலும் மிக வளர்ச்சியடைந்த பல ஏகாதிபத் தியங்களுடன் ஒப்பிடத்தக்க அளவில் முன்னேறியிருக் கிறது. எனவே இன்றையப் பொருளாதாரத் தேக்கத் திற்கான காரணத்தை மூலதன ஒதுக்கீடு மற்றும் ஆய்வு களில் முன்னுரிமை அளிப்பது உட்பட மேலும் பல அம்சங் களில் தேட வேண்டியிருக்கிறதேயொழிய இந்த அடிப் படையில் சோசலிசக் கட்டுமானத்திற்கும் மார்க்சியத் திற்கும் கல்லறை வாசகங்கள் எழுதுபவர்களை நாம் வரவேற்றுவிட முடியாது.

நீண்ட நாள்களுக்கு முன்பாகவே ஆஸ்கார், லாங்கே போன்றவர்கள் நுகர் பொருள் தேவையை ஈடுகட்டும் உற்பத்திச் சமநிலையை அடைவதற்கு உற்பத்திச் சாதனங் கள் தனியார் உடைமையில் இருப்பதும் லாபத்தை உச்ச மாக்குவதும் அவசிய நிபந்தனைகளாக இருக்க முடியாது என்பதைக் கோட்பாட்டு ரீதியாக நிறுவியுள்ளனர். சில வரையறுக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றுவதொன்றே தேவை / உற்பத்திச் சமநிலை பெறுவதற்குப் போதும் என்பது லாங்கேயின் கருத்து. மருத்துவம், கல்வி, பொது நலன் போன்றவற்றை மையப் படுத்துகிற நீண்டகால வளர்ச்சிக்கான முதலீடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நிஜமான அல்லது நிழலான சந்தைச் சக்திகளின் செயல்பாட்டின் அடிப்படையில் தீர்மானித்துவிட முடியாது என்பதை மார்க்சியப் பொருளாதார அறிஞர் மாரிஸ்டோப் கோட்பாட்டுரீதியாக நிறுவியுள்ளார். டோப், லாங்கே போன்றோரின் சிந்தனைகள் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் முறையாகக் கடைபிடிக்கப்படவில்லை என்பதுதான் குறைபாடேயொழிய இத்தகையக் கோட் பாடுகளை இன்றுவரை எந்த முதலாளியப் பொருளாதார நிபுணரும் கோட்பாட்டு ரீதியாகவும் தர்க்க அடிப்படை யிலும் மறுத்ததில்லை என்பதை முதலாளியத்திற்கும்

www.padippakam.com



கோர்ப்பசேவியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கும் வக்காலத்து வாங்குவோர் ப றந்துவிடலாகாது. தவிரவும் குறிப்பிட்டபொருளாதாரத் திட்டங்களை மதிப்பீடு செய் வதற்குச் சந்தை விலைகளை ஒரு அளவு கோலாகப் பயன் படுத்த முடியாது என நவீன முதலாளியப் பொருளாதார நிபுணர்கள் சொல்கின்றனர் மூலதன மற்றும் கச்சாப் பொருட்களின் பற்றாக்குறையைச் சந்தை விலைகள் சரி யாகப் பிரதிபலிப்பதில்லை என்பதால் அவற்றை விட்டு விட்டு கணக்கிடப்பட்ட விலைகளைக் கொண்டு மதிப்பிட வேண்டும் என்பது அயான்லிட்டில் போன்றோரின் வாதம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மூலதனத் திரட்டல் மற்றும் முதலீட்டு ஒதுக்கீடுகளுக்கு மேலை முதலாளியம் சந்தை விலைகளைப் புறக்கணிக்கத் தொடங் கியிருக்கிற அதே நேரத்தில் பு.பி. சமுதாயப் பொருளா தார நிபுணர்களும், பெரிஸ்த்ரோய்க்கா ஆதரவளர்களும் 'திறமையான' மூலதன ஒதுக்கீட்டிற்குச் சந்தை விலை களைச் சரணடைகின்றனர் சனநாயக உரிமைகளையும் சந்தைப் பொருளாதாரத்தையும் சயாமிய இரட்டையர் களாக முன் நிறுத்துகின்றனர். இவர்களிடம் தங்கள் நாட்டுப் பிரச்சினைகள் குறித்த பட்டியல் இருக்கிற அளவிற்கு அவை குறித்த முறையான ஆய்வுகளில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஒன்றை நாம் நினைவூட்டிக்கொள்ள வேண்டும். சந்தை என்பது உற்பத்திப் பொருள்களின் சந்தை மட்டு மல்ல. மூலதனச் சந்தையையும், உழைப்புச் சந்தையை யும் உள்ளிட்டது தான் சந்தைப் பொருளாதாரம். அரசிய லின் ஆணையிலிருந்து உற்பத்தியை விடுதலை செய்து சந்தையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது லாபத்தை முன்னிறுத்தித் தொழிற்சாலை/நிறுவனங்களின் தேவையை நிர்ணயிப்பது. வேலை இல்லாப் பட்டாளம் ஒன்றை உருவாக்குவது, ஊக்க ஊதியம், ஒப்பந்த வேலை, பணவீக்கம், விலைவாசி உயர்வு, மருத்துவம், கல்வி

www.padippakam.com



ஆகியவற்றை வணிகமயப்படுத்துவது ஆகியவற்றோடு இணைந்ததேயாகும். ஏற்கெனவே இவை அனைத்தும் பு.பி. சமுதாயங்களில் எதார்த்தமாகிவிட்டன. போலந்தில் 'சீர்திருத்தத்தை' யொட்டி நாலு லட்சம் தொழிலாளர் வேலை இழப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பத்து லட்சமாக உயரும் எனச் சர்வதேச நிதி நிறுவனம் மதிப்பிட்டுள்ளதாக அந் நாட்டின் தொழிலாளர் அமைச்சர் ஜேசக்குரான் கூறுகிறார். பணவீக்கம் அங்கே 1000 சதத்தைத் தாண்டிவிட்டது என்கிறார்கள்! நுகர்பொருள்களின் விலை 50 சதம் வரை ஏறிவிட்டது. ஒரு சோற்றுப் பதமாகச் சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன். டெங்கின் சீனம் உட்பட முதலாளியச் சீர்திருத்தங்களை விரும்பி ஏற்றுக்கொண்ட பு.பி.சமுதாயங்கள் அனைத்தின் கதியும் இதுதான் என்பதற்கு ஏராளமான புள்ளி விவரங்கள் தினந்தோறும் பத்திரிகைகளில் வருகின்றன. பொருளாதாரத் துறையில் எத்தகைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகக் கோர்ப்பசேவ் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தாரோ அவை அந்த நெருக்கடிகளை மேலும் தீவிரப் படுத்தியுள்ளன என்பது சமீபத்திய செய்தி.

பு.பி. சமுதாயங்களில் மேற்கொள்ளப்படும் முதலாளியச் சீர்திருத்தங்கள் பற்றி ஒரு வார்த்தை. இந்தச் சீர்த்திருத்தங்கள் கோர்ப்பசேவின் கண்டுபிடிப்பல்ல. தனியார் வணிகம், ஊக்க ஊதியம், சந்தைச் சக்திகளுக்கு அனுமதி போன்ற முதலாளியப் பின்வாங்கல்கள் மூலம் நெருக்கடிகளைச் சமாளிப்பது என்பதன் வரலாற்றை நாம் லெனினின் 'புதிய பொருளாதாரக் கொள்கை'யிலிருந்து தொடங்க வேண்டும். அங்கேரி (ஜேனஸ்காடரின் புதிய பொருளாதாரச் செயற்பாடு—1968). கியூபா, யூகோஸ்லாவியா, போலந்து, குருச்சேவ் காலத்து ரசியா, டெங்கின் சீனம், வியட்நாம் ஆகிய அனைத்தும் 1960களில் தொடங்கி இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி, சர்வ

www.padippakam.com



தேச நிதி நிறுவனங்களில் உறுப்பினராவது உட்பட இதில் அடக்கம். இந்தச் சீர்திருத்தங்களை ஐ நா. சர்வ தேச நிதி நிறுவனம் போன்ற முதலாளிய அமைப்புகளைச் சேர்ந்தோர் உட்படப் பலர் மதிப்பீடு செய்துள்ளனர். இவை அனைத்துமே முதலாளியச் சீர் திருத்தங்கள் என்பன பு.பி. சமுதாயங்களின் நெருக்கடிகளை மேலும் தீவிரப் படுத்தியுள்ளன என்றே கூறுகின்றன. மையப்படுத்தப் பட்ட திட்டமிடுதலின் கொடைகளாகிய சகலருக்கும் அடிப்படை வசதிகள் என்பது ஒழிக்கப்படுதல், வேலை இல்லாத் திண்டாட்டம், பண்பாட்டுச் சீரழிவு, மக்களின் அதிருப்தி ஆகியவையே இச் சீர்திருத்தங்களின் விளைப் பொருட்களாக இருந்துள்ளன என்பதை ஜாய்ஸ்,கோல்கோ போன்றோரின் ஆய்வுகளும் நிறுவியுள்ளன. அதிகாரப் பரவல் என்பது மேலாளர்களின் அதிகாரக் குவியலுக்கு வழிவகுத்தது. தொழிலாளர் மேலும் அந்நியப்பட்டனர். முழுமையான மையப்படுத்தப்பட்ட திட்டமில்லாமல் முழுமையான சந்தைப் பொருளாதாரச் செயல்பாடும் இல்லாமல் இரண்டுங்கெட்டனாகி விரயங்கள் அதிகமா யின. உலக முதலாளிய நோக்கிலான முதலீடு என்பது உள்நாட்டுத் தேவைகளை அலட்சியப்படுத்தியது. இவை அனைத்தும் நம் கண்முன் நடந்தேறியவைதான்

பெரிஸ்த்ரோய்க்காவாதிகள் இந்த வரலாற்றை மறந் தாலும் மக்கள் எப்படி மறப்பார்கள்? மேலை முதலாளியக் கவர்ச்சியில் கிளர்ந்தெழுந்து உள்நாட்டுக் கொடுங்கோன் மையைத் தூக்கி எறிந்த பு பி. சமுதாய மக்கள் கொஞ்சம் கொஞ்சமாய் இந்த வரலாற்றைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கியுள்ளனர். போலந்தில் 'சாலிடார்டி' அமைப் புக்கு மக்கள் ஆதரவு குறைந்துவிட்டது என்கிறார்கள். தொழிலாளர் நலன்களைக் காட்டிக் கொடுத்து விட்ட அமைப்பாகச் 'சாலிடாரிடியைத்" தொழிலாளர்கள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர் என ஆய்வுகள் கூறு கின்றன. பொதுவுடைமைக் கட்சியின் தலைமையிலான

www.padippakam.com



தொழிற்சங்கத்தில் 'சாலிடாரிடி'யைக் காட்டிலும் மூன்று மடங்கு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் ஆகியவற்றை ரசியர்கள் உட்படப் பல பு.பி. சமுதாய மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தாங்கள் ஏற்கெனவே பெற்றிருந்த சுயச் சார்பை இழந்து மீண்டும்முழுமையாக ஆணாதிக்கத்திற்கு ஆட்படநேருமோ எனக் கிழக்குஜெர்மானியப் பெண்கள் கவலைப்படத் தொடங்கியுள்ளனர் எனப் பத்திரிகைகளில் செய்திகள் பார்க்கிறோம். வேலை இல்லாத் திண்டாட்டத்தின் விளைவாக முதலில் பாதிக்கப் படுபவர் பெண்கள்தான். குழந்தைக் காப்பகங்கள் முதலியவற்றை அரசு மூடிவிட இருப்பதால் மீண்டும் மரபு வழிப் பட்டக் குடும்பப் பொறுப்புக்களைப் பெண்கள் மட்டும் சுமக்கப் போவது குறித்து அச்சம் அவர்கள் மத்தியில் வேர் விட்டு இருக்கிறது.

பு.பி. சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் சோசலிச கட்டுமானம், மார்க்சியம் ஆகியவை காலாவதியாகிவிட்டன என்ற கூற்றிற்குச் சான்றாக முடியாது என்பதற்கு இவைகளெல்லாம் ஆதாரமாகின்றன. அப்படியானால் பு.பி. சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் பொருளென்ன? பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார (பா.வ.ச.) அரசுகள் இப்படி மக்களிடமிருநது அந்நியப் பட்டிருப்பதன் அர்த்தமென்ன? எதுவுமே இந் நாடுகளில் காலாவதியாகிவிடவில்லையா? இந்தக் கேள்விகளுக்குப் பதிலை அடைய நாம் சோசலிச கட்டுமானமாக அறியப் பட்டிருந்த அம்சங்களை மறு பரிசீலனை செய்வதிலிருந்து தொடங்க வேண்டும்.

## (இ)

சோசலிசக் கட்டுமானம் தோற்றுவிட்டது எனச் சொல்பவர்களும் சோசலிசக் கட்டுமானம் சரியாகக்

படிப்பகம்

www.padippakam.com



கடைபிடிக்கப்படாததே இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம் என்று சொல்பவர்களும் சோசலிசக்கட்டுமானம் என்பது குறித்து ஒரே கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இவர்களது வரையறையின் படி சோசலிசக் கட்டுமானத்தின் பிரதான அம்சங்கள்:

(அ) உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை ஒழிக்கப்படுதல்.

(ஆ) மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதலின் கீழ் முதலாளியத்திற்குச் சமமாக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி; அரசியலை ஆணையில் வைத்தல். வேலை இல்லாத் திண்டாட்டம், பண வீக்கமின்மை, அடிப்படை வசதிகள் அனைவர்க்கும் அளிக்கப்படுதல்.

(இ) உலக முதலாளிய அமைப்பிலிருந்து துண்டித்துக் கொள்ளுதல்; வெளி நாட்டு வணிகத்தில் அரசு ஏகபோகம்.

(ஈ) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்கிற பொதுவுடமைக் கட்சியின் மேலாண்மையிலான ஒரு கட்சி ஆட்சி முறை. கருத்து வேறுபாடுகளுக்கு இடமின்மை.

(உ) வர்க்க சர்வாதிகாரம் என்கிற வகையில் எல்லோருக்கும் சமமான அடிப்படைஉரிமைகள் என்கிற கருத்தை மறுத்தல்.

பு.பி. சமுதாயங்களின் பல்வேறுபட்ட தனித்துவமான வேறுபாடுகளுக்கு மத்தியிலும் மேற்படி அம்சங்கள் பொதுமையாக விளங்கியதை நாம் காண முடியும். சோசலிசக் கட்டுமானம் குறித்த அமைப்பு சார்ந்த மார்க்சியரிடையே நடைபெற்ற விவாதங்களில் கூட முதல மூன்று அம்சங்களில் கருத்து வேறுபாடு இருந்ததில்லை. மாவோ போன்றவர்கள் கடைசி இரண்டு அம்சங்களில்

www.padippakam.com



கருத்து வேறுபட்டனர். மூலதனத் திரட்டல் குறித்தும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மாதிரி குறித்தும் கூட மாவோவுக்குச் சில கருத்து மாறுபாடுகள் உண்டு. கட்சி முன்னோடிப் படை என்கிற கருத்தாக்கத்தை மறுத்த மாவோ கட்சியையும் மக்களையும் இரட்டை எதிர்வாகப் பார்த்தார். தொடர்ந்து கட்சிமேலாண்மைக்கு எதிரானப் போராட்டங்களை ஊக்குவித்தார் என்ற போதிலும் நடைமுறையில் மூலதனத் திரட்டல் என்கிற ஓரம்சம் தவிர இதர அம்சங்களில் சீனமும் வேறுபடவில்லை. *

மேற்படி அம்சங்கள் அனைத்தும் சோசலிசக் கட்டுமானத்திற்கான சரியான மார்க்சிய வழி முறைகள் தானா? செவ்வியல் மார்க்சியத்தில் சோசலிசக் கட்டுமானத்திற்கான வேறு சாத்தியக் கூறுகள் ஏதும் தென்படுகின்றனவா? என்கிற கேள்விகள் இப்போது எழுகின்றன. இவற்றிற்குப் பதில் தேடுமுன்பாக சோசலிசக் கட்டுமானத்தின் பொதுப்படையான நோக்கங்களாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவற்றைத் தொகுத்துக் கொள்வோம்.

(அ) நகரம் / கிராமம்; தொழிலாளர் / விவசாயி; மூளையுழைப்பு/ உடலுழைப்பு போன்ற சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல்; கூலி அளவில் அதிக வேறுபாடு இல்லாதிருத்தல்; சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் என்கிற நிலையை உருவாக்க உழைப்புச் சுரண்டலை முடிவுக்குக் கொண்டு வருதல்.

(ஆ) உண்மையான அரசியல் மற்றும் சமூக ஜனநாயகத்தை நிறுவுதல்; சோசலிசப் பண்பாட்

* பார்க்க: புறப்பாடு- 25இல் வெளியான சமீர் அமினின் 'மாவோயிசத்தின் எதிர்காலம்' என்கிற நூல் அறிமுகம்.

www.padippakam.com



டையும் அதனடிப்படையிலான ஒரு புதிய மனிதனையும் படைத்தல்.

முதலாவது நோக்கத்தை மரபு மார்க்சியர் ஏற்றுக் கொள்வர். இரண்டாவது நோக்கத்தை வெளிப்படையாக மறுக்க முடியாவிட்டாலும் மறைமுகமாக மறுப்பர். உண்மையான அரசியல் மற்றும் சமூக ஜனநாயகம் என்றெல்லாம் பொத்தாம் பொதுவாகப் பேச முடியாது, வர்க்க அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும். எந்த வர்க்கத்திற்கு சனநாயகம் என்பதல்லவா முக்கியம்?— என்கிற பாணியில்பேசுவது மட்டுமல்ல, பு.பி. சமுதாயங்களில் இந்த அடிப்படையில் முதலாளியச் சனநாயகம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்து வேறுபடும் உரிமை, போராடும் உரிமை, ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை போன்றவை அனைத்துத் தரப்பினருக்குமே மறுக்கப்பட்டன. மரபுவழி மார்க்சியர் வழக்கமாகச் சொல்கிற பா.வ. சர்வாதிகாரம் என்றால் பெரும்பான்மையான பாட்டாளிகளுக்குச் சனநாயகம்; இதர வர்க்கத்தினர் மீது சர்வாதிகாரம் என்கிற வாய்ப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவன வடிவங்கள் எதைப்பற்றியும் பு.பி. சமுதாயங்களில் சிந்தனையோ முயற்சியோ இல்லை. ரோசா போன்றோர் இதனை எப்படி நீங்கள் நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் என எழுப்பிய ஐயங்களெல்லாம் எள்ளி நகையாடப் பட்டன. பாட்டாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதி பொதுவுடமைக் கட்சி, அதனிடம் சர்வ அதிகாரங்களும் குவிந்துவிட்டன என்பதே பாட்டாளி வர்க்கச் சனநாயகத்திற்கான உத்தரவாதம் என்பதே பதிலாக அமைந்தது.

எனவே இந்த அதிகாரத்தையும், அதிகாரப் பிரயோகத்தில் ஏற்படும் தவறுகளையும் தட்டிக் கேட்பது என்பது பா.வ. சர்வாதிகாரத்தையே கேள்விக்குள்ளாக்குவதாகக் கருதப்பட்டது. அப்படிக் கேள்விக்குள்ளாக்கத்-

www.padippakam.com



துணிபவர் யார்? எதிரி வர்க்கந்தான். எதிரி வர்க்கத்திற்கு இரக்கம் காட்டுவது தேவையா? தேவையில்லை. இந்த விஷயங்களில் இரக்கங் காட்டுவதென்பது பா.வ. அரசைக் கவிழ்த்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் உள் நாட்டு/வெளிநாட்டுச் சக்திகளுக்குத் துணை புரிவதாகவே அமையும். இதைவிட முட்டாள்தனம் ஏதுமிருக்க முடியாது.

கட்சிக்கு வெளியில் மட்டுமல்ல, கட்சிக்குள் கருத்து மாறுபாடுகளை அனுமதிப்பதில்கூட பா.வ. சர்வாதிகா ரத்தைப் பலவீனப்படுத்தவே செய்யும். பாட்டாளி வர்க் கத்தின் நலன்களையும் தேவைகளையும் பா.வ. கட்சி தீர்மானித்துவிட முடியாதா என்ன, இதற்கெல்லாம் கூட விவாதங்கள் வேண்டுமா? இந்த அடிப்படையில் பத்தாவது காங்கிரசில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் தடை செய்யப்பட்டன. கட்சி சரியானது. கட்சி எப்போதுமே சரியானது கட்சியை விட யாரும் சரியாக இருக்க முடியாது. கட்சி தீர்மானிப்பதே உண்மை. உண்மையை அறியக் கட்சியைவிட நமக்கு வேறென்ன வழி இருக்கிறது என்றெல்லாம் கேட்கப்பட்டது. பாட்டாளி வர்க்கம் ஒருபடித்தானதாக இல்லை; அதனு டைய வளர்ச்சி மட்டம், தேவைகள், ரசனைகள் என்ப தெல்லாம் ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்பன போன்ற உண்மைகள் புறக்கணிக்கப்பட்டன. கட்சியைச் சந்தேகிப்பவன் எதிர்வர்க்க ஏஜண்டாக மட்டுமே இருக்க முடியும் என்று நம்பப்பட்டது.

சுமார் ஐயாயிரம் ஆண்டு காலமாக வர்க்கச் சமூகத்தின் கருத்தியலால் வளர்க்கப்பட்டவர்கள் மக்கள். அவர்களின் ஓரங்கமான தொழிலாளி வர்க்கத்திற்கு அதிகபட்சம் தொழிற் சங்க உணர்வு மட்டுமே இருக்க முடியும். அனைத்து வர்க்கங்களுக்குமான விடுதலையைச் சாத்தியப் படுத்தும் கடமையுணர்வை பா.வ. உணர்வைக் கட்சியே பாட்டாளிகளுக்கு ஊட்ட முடியும்;

www.padippakam.com



ஊட்ட வேண்டும். இந்த அறிவையும் உணர்வையும் பா. வ. முன்னோடிப்படையான கட்சி மா.லெ. சித்தாந்தங்களின் அடிப்படையில் பெறுகிறது மா. லெ. சித்தாந்தம் என்பது உலகின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் தன்னகத்துக் கொண்ட ஒரு முழுமையான விஞ்ஞானம். இந்த விஞ்ஞானத்தின் அடிப்படை விதிகளை முன்னோடிப் படை உறுப்பினர்கள் கற்றுத் தெளிய வேண்டும். இந்த விதிகளின் அடிப்படையில் கட்சித் தலைமை மேற்கொள்ளும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதும், அவற்றை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதுமே கட்சியின் கீழ்க் கமிட்டிகள் மற்றும் அடிப் படை அணிகளின் ஒரே வேலை, இந்தச் சூழலில் கட்சி அணிகள் கருத்து வேறுபடுவதற்கு என்ன அவசியம்? கட்சியின் ஒரு படித்தான குரலைச் சிதைப்பதாகாதா?

நமது எதிரி மிகப்பலமானவன். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் வெளிப்படையாக எல்லாவற்றையும் செய்துவிட முடியாது ரகசியம் மிகவும் அவசியம். மேலே நடக்கிற விவாதங்களும், முடிவெடுக்கும் நடைமுறைகளும் வெளியே தெரிந்துவிடக் கூடாது. மக்களும் இவற்றைத் தெரிந்து கொள்வதில் ஆர்வங் காட்டக் கூடாது. மக்கள் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கட்சி தீர்மானிக்கும். பு.பி சமுதாயங்களில் இவ்வாறு தீர்மானிக்கப்படுபவை மட்டுமே பத்திரிகைகளிலும் வானொலிகளிலும் அறிவிக்கப்படும். கட்சியும், அரசும் ஊடுருவ முடியாத இரும்புத் திரைகளாகவே இருக்க முடியும்.

வளர்ச்சியடைந்த முதலாளியச் சமூகங்களுக்கு இணையாக நமது தொழில் துறையையும் உற்பத்தி சக்திகளையும் வளர்த்தாக வேண்டும் எனவே வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சமமான தொழில் நுட்பத்தையும் அதற்குரிய தொழில் ஒழுங்கமைப்பையும் இங்கே புகுத்தியாக வேண்டும். இது வெறும் தொழில் நுட்பம்

படிப்பகம்

www.padippakam.com



என்கிற அளவில் மட்டுமின்றி தொழில் நிர்வாகம் என்கிற அளவிலும் உள்வாங்கப்படும் போதே வெற்றியடையும். வல்லுனர்களிடமும் மேலாளர்களிடமும் திட்டமிடல் உட்பட அனைத்து அதிகாரங்களையும் அளிப்பது, ஊக்க ஊதியத்தின் அடிப்படையில் தொழிலாளரிடம் வேலை வாங்குவது. லாபத்தை முன் வைத்து உற்பத்தியை ஒழுங்கமைப்பது போன்ற முதலாளிய நடைமுறைகள் பு.பி. சமுதாயங்களிலும் உயிரோடிருந்தன. இதன் விளைவாகத் தொழிலாளி உற்பத்திப் புள்ளியில் அந்நியமாவது தொடர்ந்தது.

மேற்குறித்த நடவடிக்கைகளின் விளைவாக உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாக்கப்பட்ட போதிலும் அரசியல் சமத்துவமின்மை கடுமையாக நிலவியது.

அரசு என்பது உதிரும் வரை ஒரு அடக்குமுறைக் கருவியாகவே இருக்கும். இதுவரை அது உடமை வர்க்கங்களின் கையில் இருந்தது. இப்போது அது பா. வர்க்கத்தின் கையில் இருக்கிறது என்பதொன்றே வேறுபாடு. மற்றபடி முதலாளிய அரசு வடிவத்திற்கும் பா.வ அரசு வடிவத்திற்குமிடையே பெரும் வேறுபாடுகள் இருக்க முடியாது. அரசு என்பது மட்டுமல்ல. குடும்பம் உட்பட அனைத்து அதிகார நிறுவனங்களும் பொதுவுடைமைச் சமுதாயம் மலரும்வரை பு. பி. சமுதாயங்களில் முதலாளிய வடிவமைப்புடனேயே கட்டமைக்கப் பட்டிருக்கும். எனவே சோசலிசக் கட்டுமானத்திற்கு தனித்துவமான நிறுவன வடிவங்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. பு பி. சமுதாயங்களில் இலக்கியக் கொள்கை கல்விக் கொள்கை என்பதெல்லாம் வடிவத்தை அப்படியே வைத்துக் கொண்டு உள்ளடக்கங்களை மாற்றினால் போதும் என்பதாகவே இருந்தது, வடிவமும் உள்ளடக்கமும் பரஸ்பரம் ஒன்றையொன்று பாதிக்கும்; வாய்ப்பான சூழல்களில் வடிவமே கூட உள்ளடக்கத்தை மாற்றிவிடும் என்கிற சிந்தனையெல்லாம் புறக்கணிக்கப்பட்டது.

www.padippakam.com



அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல், ஒரு கட்சி ஆட்சி, பா.வ ச. அரசும் ஒரு அடக்குமுறைக் கருவியா கவே இருக்கும் என்கிற கருத்தாக்கம், வர்க்க முரண் களைச் சரியாகக் கையாளாமை ஆகியவற்றின் விளை வாகப் பா.வ.ச. அரசு தனது தொழிலாளி விவசாயி உள்ளடக்கத்தை இழந்தது. ஒரு போலீஸ் எச்சதிகார அரசாக மாறியது. அரசியலை ஆணையில் வைப்பது என்கிற மார்க்சியக் கோட்பாடு ''அரசியல் நிறுவனத்தை'' அதாவது கட்சியை ஆணையில் வைப்பது என்பதாகத் திரிந்தபோது கட்சியும் அரசும் பிரிக்க இயலாத தாகியது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பது 'அதிகார வர்க்கமயமான மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலாக (அ.மை தி.) மாறியது. அரசு, நிறுவனம், தல நிர்வாகம், ஆகிய அனைத்திலிருந்தும் மக்கள் குறிப்பாக, அடித்தட்டு மக்கள் அந்நியப் பட்டனர்.

கட்சி/ தொழில்நுட்ப/ ராணுவ அதிகார வர்க்கங்கள் புதிய ஆளும் வர்க்கமாயின. அரசுடமையாக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமான மக்களின் சமூகமயமான கூட்டுச்சொத்து என்கிற நிலையிலிருந்து வழுவி, வெறும் அரசுச் சொத்தாகவும் அரசு மூலதனமாகவும் மாறின. தொழிலாளரும் விவசாயி களும் அரசுடமையாக்கப்பட்டச் சொத்துக்களின் மீது உண்மையான உடமையாளர்கள் என்கிற உணர்வை இழந்தனர்.

எனவே முதலாளிய நாடுகளில் அடித்தட்டு வர்க்கங் களுக்குக் கிடைக்கும் மாயையான 'சொந்த' உணர்வு கூட பு பி. சமூகங்களிலுள்ள சாதாரண மனிதனுக்குக் கிடைக்காத அவலம் நிகழ்ந்தது. இந்தச் சூழல் சோசலிசம், மார்க்சியம் போன்றவற்றின் மீது ஒரு



படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்புணர்வையும் அவையல்லாத எல்லாவற்றின் மீதும் ஒரு கவர்ச்சியையும் ஏற்படுத்தியது.

நாம் ஏற்கெனவே பலமுறை சுட்டிக் காட்டியபடி மேற் குறித்த நடவடிக்கை அனைத்திற்கும் ஆதாரங்கள் மார்க் சிய-லெனினியத்திலிருந்தே காட்டப்பட்டன. டெங்கின் "நான்கு வழிகாட்டும் தத்துவங்கள்" இதற்கொரு சான்று. இவ்வாறு ஆதாரங்கள் சுட்டிக் காட்டுவதற்கான வாய்ப் புகள் செவ்வியல் மார்க்சியத்தில் இருந்தன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சமூக வளர்ச்சிப் போக்கில் முதலாளியம் என்கிற இடைக் கட்டம் தவிர்க்க இயலாதது; இன்றைய வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளின் மாதிரியைக் கடந்தே இன்றைய பின்தங்கிய நாடுகள் வளர்ந்து வர வேண்டும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பது தொழிலாளியை முற்போக்காகப் பார்க்கும் அதே நேரத் தில் விவசாயிகளை உடமை உணர்வுடைய பிற்போக் காளராய்ப் பார்ப்பது என்கிற சிந்தனைகள் மார்க்ஸ்-எங்கல்சிடமே உண்டு என்கிற கருத்து இங்குக் கவனிக்கத் தக்கது.

சுற்றுச் சூழல், இயற்கை வளங்களின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கெல்லாம் உரிய முக்கியத்துவம் அளிக்காமல் முதலாளியக் கட்டுமானங்களில் உள்ளதற்கொப்ப கனரகத் தொழில்களை உருவாக்குவது என்பதற்கெல்லாம் மார்க் சியத்தையே ஒருவர் ஆதாரம் காட்ட முடியும். பு.பி. சமூ கங்களில் இவையே நடைமுறைப்படுத்தப் பட்டன. இந்த வகையில் பு.பி சமுதாய நிர்மாணிகளாகிய லெனின், ஸ்டாலின், மாவோ, பிரெஷ்னேவ், கோர்ப்பசேவ், போல்பாட், ஹொனேக்கர், ஷிவ்கோ, சீசெஸ்கு வரை ஒரு பாரம்பரியத் தொடர்ச்சியை நாம் காண முடியும் என்று சொல்லும்போது யாரும் அதிர்ச்சியடையக் கூடாது. மார்க்சும் எங்கல்சும் லெனினும் சிகிச்சைக்காகக் கூட

www.padippakam.com



வெளிநாடு செல்ல மறுத்த மாவோவும் கனவு கண்ட புரட்சிகரச் சமூக உருவாக்கம், புதிய பண்பாட்டையும், புதிய மனிதனையும் படைக்கும் முயற்சி ஆகியவற்றுடன் கூலிப்படைகளையும் உல்லாச வாழ்க்கையையும் அமைத்துக் கொண்ட சீசெஸ்குவின் நடைமுறைக்குமுள்ள தொடர்ச்சியின்மையைப் போலவே மேற்குறித்த பாரம்பரிய தொடர்ச்சியையும் நாம் பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது. எனினும் லெனின், மாவோ போன்ற மாமேதைகள் தங்கள் வாழ்நாளிலேயே நிகழ்ச்சிப் போக்குகளின் திசையை உணர்ந்து சரியான பாதைக்குத் திரும்பத் துடித்ததற்கு அதிகார வர்க்கமயமாதல் குறித்த லெனினின் கடைசிக்காலக் கருத்துகளும் மாவோவின் கலாச்சாரப் புரட்சி முயற்சியும் சான்றுகள்.

ஜார் காலத்திய கடுமையான ஒடுக்குமுறையின் கீழ் மிகவும் ரகசியமான உருக்குப்போன்ற ஒரு கட்சியைக் கட்டமைக்கும் வரலாற்றுப் பணியை மேற்கொண்டவர் லெனின். முதலாளியம் ஏகாதிபத்தியமாக மாறியதைத் தொடர்ந்து அந்நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் வர்க்க உணர்வு குறைந்து சீர்திருத்தவாதச் சேற்றில் மூழ்கியிருந்த சூழலில் முன்னோடிப்படையாகப் பா. வ. கட்சியைக் கட்டவேண்டிய அவசியம் லெனினுக்கு அன்றிருந்தது. மிகவும் பின்தங்கிய பொருளாதாரமும், பற்றாக்குறையும் மிக்க ஒருசூழலில் சோசலிசத்தைக் கட்டமைக்க வேண்டிய அவசியத்தில் சிறையுண்டவர் லெனின். பு பி சமூகங்களின் நிறுவன வடிவங்கள் குறித்த ஆய்வுகளில் தன் மேதமையைச் செலவழிக்காத குறையை இறுதிவரை முழுமையாக அவர் உணர்ந்து கொள்ளாத போதும் அதிகாரமயமாதல் பற்றிய ஆய்வுகளின் அவசியத்தைக் கண்டு கொண்டவர் அவர். தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்கிற மகத்தான சனநாயகக் கொடையை மார்க்சியத்திற்கு வழங்கிய அவர் தன் கண் முன்னாலேயே அது வன்மையாகப் பறிக்கப்படுவதைக் கண்டு துடித்தவர்.

www.padippakam.com



ஏதேனும் செய்தாக வேண்டும் என இறுதிவரை முயன்றவர்.

எனினும் லெனினுக்குப் பின்னர் இந்தச் சனநாயகக் கரிசனங்கள் எல்லாம் புறந்தள்ளப்பட்டு நாம் முன் குறிப்பிட்ட தவறுகள் அனைத்தும் அதிக அளவில் வளர்ச்சியடைந்தன. மௌனம் அல்லது மரணம் என்பது மனச்சாட்சியுடையவர்களின் விதியாயிற்று. தொடக்க காலத்திய "நமது அரசு" என்கிற உணர்வும், பாசிசத்திற்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டத் தேசிய எழுச்சியும் 1930-40 களில் ரசியா உற்பத்தியிலும், தொழிலிலும், ராணுவத்திலும் இதர ஏகாதிபத்தியங்களுடன் போட்டி போட்டு வளர்ந்து வல்லரசாக உருப்பெறுவதற்குக் காரணமாயின. பாசிசத்திற்கெதிரான அதன் உறுதியான எதிர்ப்பு உலக மக்கள் மத்தியில் அதற்கு மகத்தான செல்வாக்கையும் உலகப் பொதுவுடமைக் கட்சிகளை வழிநடத்தும் 'தகுதியை'யும் அளித்தது.

பாசிசத்தின் கொடுங்கரங்கள் அன்று கிழக்கு ஐரோப்பாவைச் சுற்றி வளைத்தபோது அங்கிருந்த முதலாளியக் கட்சிகளும் அரசுகளும் உறுதியாய் நிற்க முடியாமல் சரணடைந்தன; சமரசத்தில் இறங்கின. மகத்தான தியாகங்களின் மத்தியில் ஒரு வலுமிக்க எதிர்ப்பை அங்கிருந்த பொதுவுடைமைக் கட்சிகளே மேற்கொண்டன. எனவே போரின் இறுதியில் ரசியாவால் பாசிசம் வீழ்த்தப்பட்டு மீண்டும் இந்த நாடுகளில் 'சுதந்திர" அரசுகள் உருவாகக்கூடிய சூழல் ஏற்பட்டபோது அவற்றிற்குத் தலைமை தாங்கும் தகுதியையும் வாய்ப்பையும் சமரசம் செய்து கொண்ட முதலாளியக் கட்சிகள் இழந்தன. அதுவரைப் பாசிசத்தை வன்மையாக எதிர்த்து நின்ற அந்நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகள் ரசிய ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அன்று ஒரு தர்க்கபூர்வமான நியாயம் இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இதே காலகட்டத்தில் ஸ்டாலினது கொடுமைகள் கொஞ்சம் கொஞ்சமாய் உலகிற்கு வெளிப்படத் தொடங்கியிருந்தன. அதிகாரத்துவமும் அச்சமும் அடிமைத்தனமும் மிகுந்த ஒரு இறுக்கமான சூழல் ரசியாவில் விளங்கியதைக் கிழக்கு ஐரோப்பிய மக்கள் அறிந்திருந்தனர். இவர்கள் மீது அன்று நிறுவப்பட்ட பா. வ. ச. அரசுகள் அவற்றின் பாதுகாவலான ரசிய அரசின் முன்மாதிரியிலேயே கட்டமைக்கப்பட்டன. இவ்வாறு தோன்றும்போதே அதிகார வர்க்கமயமான, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒரு கட்சி ஆட்சி நிலவுகிற சமூகங்களாகவே கிழக்கு ஐரோப்பாவின் பு. பி. சமுதாயங்கள் பிறப்பெடுத்தன. மக்களிடமிருந்து அந்நியமுமாயின. தங்களது பாதுகாப்பிற்கும் ஆதரவிற்கும் ரசிய அரசையே கிழக்கு ஐரோப்பிய அரசுகள் நம்பியிருக்க வேண்டிய சூழலில் இம் மக்கள் ரசிய ஆதிக்கம் என்ற உணர்விற்கு ஆட்பட்டு தேசிய உணர்வு வயப்பட்டவர்களாக மாறினர். போலந்து போன்ற நாடுகள் தங்களின் தேசிய அடையாளத்தைக் கத்தோலிக்க மதத்தில் தேடவும் நேர்ந்தது.

இவ் அரசுகள் அனைத்துமே குறிப்பிடத்தக்க அளவிற்கு அடிப்படை வசதிகளை மக்களுக்கு அளித்த போதும் கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகள் குறிப்பிடத் தக்கப் பொருளாதார வளர்ச்சியைக் காட்டிய போதும், மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலின் பயன்களான வேலை இல்லாத் திண்டாட்டமின்மை பணவீக்கமின்மை என்பதெல்லாம் மக்களுக்கு கிடைத்த போதும் ரசியா போலவே இங்கும் மக்கள் அந்நியப்பட்டதன் விளைவாகப் போகப் போக இச்சமூகங்கள் அனைத்தும் பல்வேறு விதமான அரசியல் / பொருளாதார / பண்பாட்டு நெருக்கடிகளுக்கு ஆளாயின. அதிகாரவர்க்கமயமான மையப் படுத்தப்பட்டத் திட்டமிடுதலை முழுமையாகக் கைவிடாமலேயே முதலாளியச் சீர்த்திருத்தங்களை இவ் அரசுகள் மேற்கொண்டதென்பது நாம் முன்பு கூறியதுபோல இந்-

www.padippakam.com



நெருக்கடிகள் முற்றுவதற்குக் காரணமாயிருந்ததே யொழிய இவற்றிலிருந்து விடுபடுவதற்கு வழி சொல்ல வில்லை. இந்த நெருக்கடிகளின் உச்ச கட்டத்தைத்தான் 1980 களின் இறுதியில் நாம் சந்தித்தோம்.

ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இந்த நெருக் கடிகளுக்கு உள்ளார்ந்த காரணிகள் உள்ளன. தும்பை விட்டுவிட்டு வாலைப்பிடிப்பதைப் போல இந்தக் காரணி களை விட்டு விட்டு முதலாளியச் சீர்திருத்தங்களை விடி வாக நினைத்து மயங்கிய போதெல்லாம் தோல்விகளே நிகழ்ந்திருக்கின்றன. இநத உள்ளார்ந்த காரணிகளைக் கண்டு பிடிப்பதற்குத்தான் நாம் மீண்டும் மார்க்ஸ்– எங்கல்ஸ் தொடங்கி சோசலிசக் கட்டுமானம் தொடர்பாக மார்க்சியரிடையே நடைபெற்ற விவாதங்களையெல் லாம் மீண்டும் ஆழமாய்ப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

ஈ

முதலாளியச் சமூக அமைப்பின் இயக்க விதிகளைப் பகுப்பாய்வு செய்து கண்டறிந்தது போல மார்க்சியம் அது தொட்டுச் சென்ற அனைத்தையும் முழுமையாகப் பகுத்துக் கோட்பாட்டுருவாக்கம் செய்து விடவுமில்லை. பல முயற் சிகள் மார்க்சின் வாழ்நாளில் முழுமையடையாதத் திட்டங் களாகவே இருந்து விட்டன. அரசியல், பொதுவுடமைச் சமுதாயம் பற்றிய கருத்தாக்கங்கள் முதலியவை இவற்றில் அடக்கம். பல விசயங்கள் செவ்வியல் மார்க்சியத்தில் இட்டு நிரப்பப்படாத இடைவெளிகளாகவே உள்ளன. சுற்றுச்சூழல், சாதியம் தொடர்பானவற்றை நாம் இதில் அடக்க முடியும். சில அம்சங்கள் மேலும் வளர்த்தெடுக்கப் பட வேண்டியவைகளாக இருக்கின்றன. பெண்ணியம், சனநாயகம், தேசிய இன உணர்வு போன்ற மார்க்சியக் கருத்தாக்கங்களை நாம் இதில் அடக்க முடியும். இந்த

www.padippakam.com



அம்சங்கள் அனைத்தும் மார்க்சியரிடையே கடும் விவாதத்திற்குரிய விசயங்களாகவே இருந்து வந்துள்ளதை மார்க்சியச் சிந்தனை வரலாற்றைக் கற்போர் எளிதில் உணர முடியும். ஆனால் இந்த விவாதத்திற்குரிய அம்சங்கள் அனைத்திலும் முன் வைக்கப்பட்ட ஒரு சில கருத்துக்கள் அதிகாரபூர்வமான மார்க்சியக் கருத்தாக்கங்களாக நிலை பெற்று வாய்ப்பாடுகளாக இறுதி செய்யப்பட்டுவிட்டன. இப்படி அவை நிலைபெற்றுவிட்டதற்கான ஒரே தகுதி புரட்சிகள் வெற்றியடைந்த சமுதாயங்களால் — குறிப்பாக ஸ்டாலின் காலத்து ரசியாவால் அவை முன் வைக்கப்பட்டதேயாகும். தங்கள் நாட்டில் நடைமுறையில் இருந்த சோசலிசக் கட்டுமானத்திற்கு ஏற்புடையதாகவே இக்கருத்துக்கள் அச் சமுதாயங்களால் முன் வைக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ப்ரெக்ட், கிராம்சி போன்றவர்கள் மேற்குறிப்பிட்ட அம்சங்களில் பலவற்றைக் குறித்து மிக ஆழமாய்ச் சிந்தித்துப் பல மாற்றுக் கருத்துக்களை முன் வைத்த போதும் அவர்கள் சிந்தனைகளுக்குக் கிடைக்காத மார்க்சிய அங்கீகாரம் ரசிய பாணியிலான மார்க்சியத்திற்கும் சீன- சோவியத் பிளவிற்குப் பிறகு ஒரு சாரரால் மாவோயிசத்திற்கும் கிடைத்தது. மாவோயிசத்திற்குக் கிடைத்த அங்கீகாரத்திலும்கூட நான் முன்பே குறிப்பிட்டபடி மாவோவின் தனித்துவமிக்க கொடை எனக் கருதப்படுகிற கட்சி அதிகாரத்துவத்தை எதிர்ப்பது, கருத்துக்களில் பன்மைத் தனத்தை ஏற்றுக் கொள்வது போன்ற அம்சங்கள் புறக் கணிக்கப்பட்டன. 'நூறு பூக்கள் மலரட்டும்', 'தலைமையகத்தைத் தகர்த்தெறிவோம்' என்பன போன்ற முழக்கங்கள் வெறும் வாயளவில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் பட்டன. நடைமுறையில் இந்த அம்சங்களில் மாவோயிஸ்டுகளும் போல்செவிசக் கருத்துக்களையே கொண்டிருந்தனர். ரசியா சமூக ஏகாதிபத்தியமா இல்லையா என்கிற விசயத்தில் சிண்டைப் பிய்த்துக் கொண்டு சண்டை போடுகிற ரசிய பாணி மார்க்சியர்களும் மாவோயிஸ்டு

www.padippakam.com



களும் மார்க்சியத்தில் நிரப்பப்படவேண்டிய இடைவெளி கள், வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கருத்தாக்கங்கள் ஆகிய அம்சங்களில் வியக்கத்தக்க அளவிற்கு ஒத்தக் கருத்துடையவர்களாக இருப்பது கவனிக்கத் தக்கது. இவர்கள் இரு சாராருக்குமே சோசலிசக் கட்டுமானம் என்றால் தனியுடைமையை ஒழித்தல், மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல், ஒரு கட்சி ஆட்சி என்பவையாகவே உள்ளன. பா.வ. சர்வாதிகாரத்தில் நிறுவன வடிவங்கள், சிவில்/சனநாயக உரிமைகள் வழங்கப்படுதல் ஆகியவற்றிலும் இருவரது கருத்துக்களும் ஒன்றே.

இவர்கள் அனைவருக்குமே பா.வ. சர்வாதிகாரம் என்பது முதலாளியச் சர்வாதிகாரத்தின் மறுதலையாகவே இருந்தது. முதலாளியச் சனநாயகத்தின் இடத்தில் பாட்டாளி வர்க்கச் சனநாயகம் அமையவேண்டும் என்கிற கருத்தில் உடன்பாடு இல்லை. இதற்குத் தக்காற்போல 'சனநாயகம்' என்கிற உணர்வையே முதலாளிய உற்பத்தி முறையின் மேற்கட்டுமானமாகப் பார்க்கிற ''மார்க்சிய நெறிமுறை'' உருவாக்கப்பட்டது. சனநாயகம் என்பது மிகவும் அடிப்படையான மனித உணர்வுகளில் ஒன்று. நாலுபேர் இருக்கிற இடத்தில் பொதுவான விசயங்களில் தனியாக ஒருவர் முடிவெடுக்காமல் நாலுபேரும் சேர்ந்து முடிவெடுப்பது என்பது மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. வர்க்கமாய்ச் சமுதாயம் பிளவுறாத போது இந்தச் சனநாயக நெறிமுறைகள் புராதனத் தன்மையாக இருந்த போதிலும் மிகச் சிறப்பாகவே செயற்பட்டு வந்தன. வர்க்கமாயச் சமுதாயம் பிளவுற்றபோது இந்தச் சனநாயகத் தன்மையில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன; சமத்துவத்தன்மை குறைந்தது. அரசு என்கிற நிறுவனம் மிகவும் எதேச்சாதிகாரத் தன்மையானதாகவும், கொடூரமான அடக்குமுறைக் கருவியாகவும் மாறியது எனினும் ஒரு குறிப்பிட்ட அளவில் சனநாயக நெறிமுறைகள் என்பன மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



மத்தியில் நடைமுறையில் இருக்கவே செய்தன. நமது கிராமசபைகள், குடவோலை முறை என்பதெல்லாம் ஒரு குறிப்பிட்ட அளவு சனநாயகத் தன்மை வாய்ந்தவைகளே. குடவோலை முறையில் நிலமுள்ளவர்களின் பெயர்கள் தானே போட்டுக் குலுக்கப்பட்டது, நமது கிராம சபைகளில் பள்ளு - பறையர் அனுமதிக்கப்பட்டதுண்டா- இதையெல்லாம் எப்படிச் சனநாயகம் என்கிறீர்கள் என்கிற கேள்விகள் நியாயமானவையே. இது குறைபாடுடையது, அநீதியானது என்பதில் நமக்கு ஐயமில்லை. வர்க்க/ சாதியச் சமுதாயத்தின் விளைபொருளே இவ் அநீதிகள். ஒரு சோசலிசச் சமுதாயத்தில் இதற்கான தீர்வு என்பது இந்த அநீதிகளையும், குறைபாடுகளையும் நீக்குவதேயாகும். நிலமற்றவர்கள் நிலமுடையவர்கள் என்கிற பிரிவினையே இல்லாமற் செய்து வரலாறு காணாத வகையில் அனைவர்க்கும் உண்மையான சம வாய்ப்பளிப்பதும், இது நாள்வரை ஒதுக்கப்பட்ட பள்ளு பறையர்களைக் கருத்துருவாக்கும் இடத்தில் அமர்வ தற்கானத் தடைகளை நீக்குவதுந்தான் தீர்வேயொழிய இந்தத் தேர்தல் முறையையும், அனைவரும் சேர்ந்து முடிவெடுக்கும் நடைமுறையையுமே ரத்து செய்து விடுவதல்ல. முதலாளியச் சமுதாயத்தில் இவ்வுரிமைகள் பெயரளவுக்குத் தான் இருக்கின்றன, நடைமுறையில் இருப்பதில்லை. சோசலிசச் சமுதாயத்தில் இவை உண்மையிலேயே நடைமுறையில் இருக்கும். இதைத் தான் முதலாளியச் சமூக அமைப்பால் குறுக்கப்பட்ட வரைமுறைகளையெல்லாம் தாண்டிய எல்லையற்ற சனநாயகமாகப் பா.வ. சனநாயகம் அமைய வேண்டும் என்று ரோசா போன்றோர் குறிப்பிட்டனர்.

முதலாளியச் சமூக அமைப்பில் சனநாயகம் என்பது ஒரு கருத்தியலாக வடிவெடுக்கிறது. அரசு வடிவத்துடன் இணைகிறது என்கிற அளவில் முதலாளியத்தையும், சனநாயகத்தையும் இணைப்பதற்கான காரணிகள் இருக்

www.padippakam.com



கிறதே யொழிய சனநாயகம்/ தேசியம் போன்ற உணர்வு களை வெறும் முதலாளிய அடித்தளத்தின் மேற்கட்டு மானங்களாக மட்டுமே பார்த்து விட முடியாது. இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரே வடக்கே திருவேங் கடம் முதல் தெற்கே குமரி வரை தமிழ் கூறும் நல் லுலகம் என்றெல்லாம் வியக்கத்தக்க அளவிற்கு மொழி அடிப் படையிலான நில எல்லை உணர்வோடு **தொல்காப்பியப் பாயிரம்** பாடப்பட்டுள்ளதை நாம் மறந்துவிடலாகாது. என்ல் தேசிய இன உணர்வை வெறும் முதலாளிய மேற்கட்டுமானமாகப் பார்ப்பது எங்ஙனம்? தேசம், தேசிய இனம், தேசிய இன உணர்வு, தேசிய இன அரசு என்பவற்றையெல்லாம் நாம் தனித்தனியே பிரித்துப் பார்த்திருக்கிறோமா? தேசிய இன உணர்வை முதலாளியத் தின் மேற்கட்டுமானமாகப் பார்த்ததன் விளைவே முதலாளியத்திற்குப் பிந்திய சமுதாயத்தில் தேசிய இன உணர்வுகள் தானாவே அழிந்து போயவிடும் என நம்பி இவற்றைத் தவறாகக் கையாண்டு கடும் பிரச்சினைகட்கு உள்ளாகியது.

சனநாயகம்/ தேசிய உணர்வு போன்றவற்றை ஓரளவு வர்க்கம் தீர்மானிக்க இயலாதக் கருத்தியல் களாகவே காண வேண்டும். இதன் பொருள், இககருத்தியல் ஒரு வர்க்கச் சொல்லாடலுக்குள் அடங்காது என்பதல்ல. வர்க்கம் தீர் மானிக்க முடியாதக் கருத்தியல்களை எந்த வர்க்கத்தன் சொல்லாடல்சளுக்குள்ளும் வைத்துவிட முடியும். **அமில்கார் கப்ரால், சேகுவாரா, ஜேம்ஸ் கன்னோலி** போன்றோர் தேசிய இன உணர்வைப் பாட்டாளி வர்க்கச் சொல்லாடலுக்குள் வைத்தனர். **பால்க்லந்துத்** தீவுப் படையெடுப்பு போன்ற வற்றிற்கு ஆதரவு தேட **மார்க்ரெட் தாட்சர்** தேசிய இன உணர்வை முதலாளியச் சொல்லாடலில் வைத்துப் பயன் படுத்தினார். **இட்லர்** அதனைப் பாசிசக் கருத்தாடலில் வைத்துப் பயன்படுத்தியதை உலகறியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சனநாயகத்தை நாம்

www.padippakam.com



மார்க்சியசொல்லாடலிலிருந்துப் புறந்தள்ளி விடவில்லை. முதலாளியச் சொல்லாடலின் முழுச் சொத்தாகச் சனநாயகத்தை நாம் தாரை வார்த்துக் கொடுத்து விடவுமில்லை. பு.பி சமுதாயங்களை சர்வாதிகார முறையில் கட்டமைக்க நேர்ந்த போதுதான் நாமே மனமுவந்து சனநாயக கருத்தியலை முதலாளியச் சொல்லாடலுக்கு விட்டுக் கொடுத்தோம். பா.வ. சொல்லாடலிலிருந்து புறந்தள்ளினோம். அதன் விளைவை இன்று அனுபவிக்கிறோம். சனநாயகம் என்றாலே அது முதலாளியத்தின் மறுபக்கம் எனவும் சோசலிசமும் சனநாயகமும் ஒன்றாகவே இருக்க முடியாது எனவும் பு.பி. சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் உணரக் காரணமானோம்.

இந்தத் தவறின் மூலாதாரத்தை நாம் மார்க்ஸ் எங்கல்சில் பார்த்துவிட முடியாது. பாரிஸ் கம்யூன் பற்றிய எங்கல்சின் எழுத்துக்கள் எதிலும் பா. வ. சர்வாதிகாரம் என்பது அரசுச் சட்டத்தின் மூலம் பிரகடனப் படுத்தப்படுவதாக அறிமுகப்படுத்தப்படவில்லை. பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துடனும் ஆதரவுடனும் உருவாவதே பா. வ. சர்வாதிகாரம். அனைவருக்குமான வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டவரைத் திரும்பி அழைக்கும் உரிமை உடையதாகவும் அமையும் அது. மக்களின் முழுமையான பங்கேற்பை உள்ளடக்கியது அது. ஒரு கட்சி ஆட்சி அமைப்பை மார்க்ஸ்-எங்கல்ஸ் எங்குமே வற்புறுத்தியதில்லை. புரட்சியைத் தொடர்ந்து சில தேசங்கள் மென்செவிக்குகள் உட்பட வேற்றுக் கட்சியினரிடம் இருந்ததையும் 1918-ல் நடைபெற்ற அரசியல் சட்டமன்றத் தேர்தலில் போல்செவிக்குகள் மூன்றில் ஒரு பங்கு வாக்குகள் மட்டுமே பெற்றதையும் கொஞ்சம் கொஞ்சமாக முதலாளியக் கட்சிகள் மட்டுமின்றி தோழமைச் சக்திகளாகக் கருதியிருக்கப்பட வேண்டிய மென்செவிக்குகள், சமூகப் புரட்சியாளர்கள், சிண்டிகலிஸ்டுகள்

www.padippakam.com



எல்லாவற்றிற்கும் மேலாகப் போல்செவிக் கட்சிக்குள்ளேயே மாறுபட்ட கருத்துடையவர்கள் எல்லோரும் நீக்கப்பட்டு, கருத்துரிமை தடை செய்யப்பட்டு மக்களுக்கு ஓட்டுரிமை இல்லாத ஒரு கட்சி ஆட்சிமுறை உறுதியாக்கப் பட்டதையும் நாம் நினைவு கூர வேண்டும்.

மா. ஏ. எழுத்துக்களைக் கூர்ந்து வாசித்தால் தனிச் சொத்துரிமையை ஒழித்தலை சோசலிசத்திற்கான அவசியமான நிபந்தனையாகக் கருதிய போதும் அதுவே போதுமான நிபந்தனை என அவர்கள் கருதவில்லை என்பது விளங்கும். உற்பத்திப் புள்ளியில் உற்பத்திச் சாதனங்கள் மீதும், கருத்துருவாக்கத்திலும், அரசமைப்பிலும்பாட்டாளி வர்க்கம் முழுமையாக ஆளுமை செலுத்தும்போதே அது விடுதலையடைந்ததாகக் கருத முடியும். இத்தகைய நிலை இல்லாத வரை அது வெறும் கூலி அடிமையாகவே இருக்க முடியும். ஆளும் வர்க்கமாக மாறிவிட்டதாகச் சொல்ல முடியாது. புராதன ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தில் உற்பத்தியாளர் உற்பத்திச் சாதனங்களுடன் இணைந்திருந்தனர். வர்க்கச் சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தியாளரிடமிருந்து பிரிக்கப்பட்டன. சோசலிசச் சமுதாயத்தில் மீண்டும் இந்த ஒருமை நிலைநாட்டப்படும். தங்களது சமூக இயக்கத்தைத் தாங்களே தீர்மானிக்கிற எஜமானர்களாகப் பாட்டாளிகள் விளங்குவர். அத்தகைய சுதந்திரமான மனிதர்களின் ஒன்றிணைவே சோசலிச சமுதாயம். இதனைச் சுதந்திரமான கூட்டுழைப்பின் குடியரசு, ஒன்றிணைந்தக் கூட்டு உற்பத்தி முறை — Associated Mode of Production — என்றெல்லாம் சொல்வார் மார்க்ஸ், ஒவ்வொரு மனிதனின் சுதந்திரமே எல்லா மனிதர்களின் சுதந்திரத்திற்குமான முன் நிபந்தனையாக மாறுகிற ஓர் உற்பத்தி முறை அது. இத்தகைய உற்பத்தி முறையில் மக்கள் என்போர் சகல பரிமாணங்களிலும் முழுமையாய் வளர்ச்சியடைந்த தனி நபர்கள், அவர்களது சமூக உறவுகள் என்பன அவர்களது சொந்தக் கூட்டுக்

www.padippakam.com



கட்டுப்பாட்டிற்கு மட்டுமே உரியதாகும் என்றெல்லாம் மார்க்ஸ் சொன்னார். பு.பி சமுதாயங்கள் எதிலும் இந்த நிபந்தனைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைச் சாத்தியப் படுத்துவதற்கான நிறுவன வடிவங்கள் முற்றிலும் வேறுபட்டதாக அமைய வேண்டும் என்பது குறித்தும் மார்க்ஸ் அதிகம் சிந்தித்தார். முதலாளியச் சமுதாயத்தின் அனைத்து வடிவங்களும் தகர்த்தெறியப்பட்டு மகத்தான மாற்றங்கள் நிகழ்த்தப் பட வேண்டும். முதலாளிய ராணுவம் கலைக்கப்பட வேண்டும். கம்யூனின் தலைமை உறுப்பினரிலிருந்து அடி நிலைப் பணியாளர் வரை ஒரே ஊதயத்தையே பெற வேண்டும். பெருமைக்குரிய உயர் தலைமையாளர்களின் உயர் ஊதியங்கள் மட்டுமின்றி பெருமைக்குரிய உயர் தலைமைகளே நீக்கப்படவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனில் பெரும்பான்மையாய்த் தொழிலாளிகளே இருக்க வேண்டும். சட்டத்தை இயற்றுவது மட்டுமல்ல நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் கம்யூன் உறுப்பினர் களிடமே இருக்க வேண்டும் என்றெல்லாம் மார்க்ஸ் கூறி யதை வெறுமனே கற்பனா ரீதியானது என்று தூக்கி எறிந்துவிட முடியாது. ராணுவத்தைக் கலைத்து விடு எனச் சொல்வதெல்லாம் எளிதுதான், அப்படிக் கலைத் திருந்தால் என்ன ஆகி இருக்கும் என்கிற கேள்வி நியாய மானது போலத் தோன்றலாம். பு.பி. சமூகங்களில் உடனடியாக ராணுவம், குடும்பம், அரசு போன்ற அதிகார வடிவங்கள் கலைக்கப்படச்சாத்தியமில்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிற அதே நேரத்தில் இந்த வடிவங்கள் வர்க்க சமுதாயத்தில் இருந்தது போலவே இருக்கமுடியாது என்கிற உண்மையை நாம் மறந்துவிடலாகாது. ஒரு நாள் இவை உதிர்ந்துபோகும் என்கிற உணர்வோடு இடை நிலை வடிவங்கள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் என்ன நடந்தது? பு.பி. சமுதாயத்தில் ராணுவக்

www.padippakam.com



கட்டமைப்பை மேற்கொண்ட **டிராட்ஸ்கி, சார்** காலத்திய பாணியிலேயே அதைக் கட்டமைத்தார். அரசின் மிகச் சிறிய வடிவம் எனக் கேலி செய்யப்பட்ட குடும்பம் என்கிற நிறுவனம் அதன் தந்தை வழிச் சமூக ஒழுக்க மதிப்பீடு களுடன் மேலும் இறுக்கமாக்கப்பட்டது. விளைவு? பு.பி. சமுதாயங்களின் 'மக்கள் ராணுவங்கள்' வழக்கம்போல மக்கள் விரோத ராணுவங்கள் ஆகவே இருந்தன என்பதை நாம் கண்முன்னே பார்க்கவில்லையா?

இத்தகையக் கருத்துக்கள் வெறும் கர்ப்பனா ரீதியான வையே என்கிற குற்றச்சாட்டு **மார்க்ஸ்** காலத்திலேயே எழுப்பப்பட்டதுதான். "என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? ஜெர்மனியில் நாலு கோடிப் பேர் இருக்கிறார்கள். நாலு கோடிப் பேருமே அரசின் உறுப்பினர்களாகி விட முடியுமா?" என்று **பக்குனின்** கேலி செய்தபோது **மார்க்ஸ்** என்ன சொன்னார் தெரியுமா? "சந்தேகமில்லாமல்! ஏனெனில் கம்யூனின் சுய அரசு என்பதிலிருந்துதான் எல்லாமே தொடங்குகிறது". "**புதிய வரலாற்று வடி வங்கள்**" குறித்து யோசிக்க முற்பட்டவர் **மார்க்ஸ்**. அரசு என்பதன் சரியான பொருளில் பார்த்தால் பா. வ. அரசு என்பது அரசாகவே இருக்காது என்றெல்லாம் சொன் னவர் **மார்க்ஸ்**.

ஆனால் புரட்சிக்குப் பிந்திய ஒரு சமுதாயத்தை உரு வாக்கும் மகத்தான வாய்ப்பைப் பெற்ற **லெனின்** இந்த ஆய்வுகளையும் சிந்தனைகளையும் அதன் தர்க்கபூர்வ மான அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதற்குப்போதிய முன்னுரிமை அளிக்கவில்லை. புரட்சிக்குப் பிந்திய நிறுவன வடிவங்கள் குறித்த ஆய்வு லெனினிடம் மிகக் குறைவு. குடும்பம், ராணுவம், சோவியத் கட்சி, சிவில் உரிமை அமைப்பு, மாற்றுக் கருத்தை முன் வைப்பதற்கும் அதற் காகப் போராடுவதற்குமான நிறுவனங்கள் பற்றிய கேள் விகள் புறக்கணிக்கப்பட்டன. குடும்பம், ராணுவம் போன் றவை வர்க்க சமுதாய மாதிரியிலேயே கட்டமைக்கப்பட்ட

www.padippakam.com



அதே நேரத்தில் மாற்றுக் கருத்திற்கான நிறுவனங்கள், சிவில் உரிமை அமைப்புகள் போன்றவை வர்க்க சமுதாயத்தில் இருந்த அளவிற்குக் கூடத் தேவையில்லை எனத் தூக்கி எறியப்பட்டன.

சுருங்கச் சொன்னால், சோசலிசக் கட்டுமானத்தின் அவசிய நிபந்தனைகளில் பல பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் போதுமான நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. மிகவும் நுணுக்கமாக அது பற்றி நாம் இங்கு பேசவில்லையாயினும் ஒரு மேலோட்டமான பார்வையில் அதனை நாம் இப்படிச் சுருக்கலாம்.

அ. உற்பத்திப் புள்ளியில் உற்பத்தியின் மீதும் சகல விதமான கருத்துருவாக்க / நிர்வாக நடவடிக்கைகளிலும் பாட்டாளி வர்க்கத்தின் ஆளுமையை நிறுவி அதனை உண்மையான பொருளில் ஆளும் வர்க்கமாக வளர்த்தெடுத்தல்.

ஆ. புரட்சிக்குப் பிந்திய சமூகங்களுக்கே உரித்தான முறையில் நிறுவன வடிவங்களை மாற்றியமைத்தல்.

நெருக்கடிகளைச் சந்தித்துள்ள பு.பி. அரசுகள் எதுவும் இந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நாமறிவோம். நெருக்கடிகளைச் சந்தித்துள்ள வகையில் பு.பி. அரசுகளை நாம் மூன்றாகப் பிரிக்கலாம்.

அ. கடும் மக்கள் எழுச்சிகளை எதிர்பார்த்து சீர் திருத்தங்களை அரசே மேற்கொள்ளுதல். (எ.டு.) **ரசியா.**

ஆ. முதலாளிய சனநாயகச் சீர் திருத்தங்களுக்கான மக்கள் எழுச்சிகளில் முன்நிற்க முடியாமல் அரசு அதிகாரத்தை இழத்தல். (எ.டு.) **ருமேனியா, போலந்து.**

www.padippakam.com



இ. முதலாளிய சனநாயகச் சீர்த்திருத்தங்களுக்கான எழுச்சிகளைக் கடும் அடக்குமுறையின் மூலம் ஒடுக்கி மேலும் எதேச்சாதிகாரமானக் கட்சிச் சர்வாதிகாரத்தை உருவாக்குதல். (எ.டு) சீனா.

இந்நாடுகள் அனைத்துமே பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க உலக முதலாளியக் கட்டமைப்பில் தம்மை ஆட்படுத்திக் கொள்கின்றன. இதன் மூலம் சோசலிசத்திற்கான அவசியமான நிபந்தனைகளைப் புறக்கணித்துவிட்டன. எழுச்சிகளுக்குப் பயந்து சனநாயக உரிமைகளை வழங்குவதற்குத் தயாராக உள்ள அரசுகள் கூட முதலாளியப் பாணியில் இவற்றை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றனவே யொழிய சோசலிசக் கட்டுமானத்திற்கியைந்த அதற்கே உரித்தான வடிவங்கள் குறித்த ஆய்வோ, சோதனை முயற்சிகளோ இல்லை. சீனா போன்ற நாடுகள் ஒரு கட்சி சர்வாதிகாரம் என்கிறக் கோட்பாட்டையும் கூட கைவிடத் தயாராக இல்லை. உலக முதலாளியத்துடன் இணைத்துக் கொள்வதென்பது நாட்டை மேலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்லும். மைய அரசு தனது இருப்பிற்கான நியாயத்தை இழக்கும்போது தேசிய இன உணர்வுகள் வரப்பெற்று நாடுகள் உடையவும் வாய்ப்பிருக்கின்றது.

உலகெங்கிலுமுள்ள பொதுவுடைமைக் கட்சிகளும் மாவோயிஸ்டுகளும் கூட பன்மைக் கருத்துக்களுக்கும் கருத்து மாறுபாடுகளுக்கும் வாய்ப்பளித்தல், சிவில் மற்றும் சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிறுவன வடிவம் ஆகிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை. "கட்சி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் புரட்சிகரச் சனநாயகத்தை நடைமுறைப் படுத்தியாக வேண்டும். மக்களிடமிருந்து எதையும் மறைக்காதீர்கள். பொய்கள் எதையும் சொல்லாதீர்கள், பொய்களை அம்பலப்படுத்துங்கள். நமது கஷ்டங்கள்,

www.padippakam.com



தோல்விகள், தவறுகள் எதையும் திரையிடாதீர்கள். எளிய வெற்றிகள் பற்றியப் பெருமையடிக்காதீர்கள்" என்கிற அமில்கார் கப்ரால் போன்றோரின் கருத்துக் களுக்கு முழுமையாகச் செவிசாய்க்கத் தயாராக இல்லை.

மொத்தத்தில் இப்படிச் சொல்லலாம். சோசலிசக் கட்டுமானம் குறித்த போல்செவிசக் கருத்தாக்கங்களின் அடிப்படை அம்சங்கள் என்பன 1930-40களில் உலகெங்கி லும் உருவாக்கப்பட்டன. ரசியாவின் அன்றைய தேவை களுக்கு ஏற்றாற்போல மார்க்சியத்தின் சகல கருத்தாக் கங்களும் வாய்ப்பாடுகளாகச் சுருக்கப்பட்டன. இதற் கேற்றாற்போலச் செவ்வியல் மார்க்சியம் வாசிக்கப்பட்டு ஒரு விருப்ப பூர்வமான தேர்வின் அடிப்படையில் இவ்வாறு அடிப்படை அம்சங்கள் உருவாக்கப்பட்டன. மார்க்சியம் என்பது குறைகளற்ற, முழுமையான, எல்லா வற்றிற்கும் பதிலளிக்கக் கூடிய ஒரு விஞ்ஞானமாக முன் வைக்கப்பட்டது. இந்த வாசிப்பிற்குள் அடங்காத அனைத்தையும் **நவ மார்க்சியம்** எனவும் **திரிபுவாதம்** எனவும் **டிராட்ஸ்கியம்** எனவும் **புதிய இடதுக் கருத்துக்கள்** எனவும் ஒதுக்குவது வழக்கமாயிற்று. உலகெங்கிலுமுள்ள பொது வுடைமைக் கட்சிகள் அனைத்தும் மேற்கூறியவாறு வாசிக் கப்பட்ட மார்க்சியத்தையே தங்களது மார்க்சியமாகவும் ஏற்றுக் கொண்டன. இதுவே இன்று **அறியப்பட்ட மார்க்சியமாக** உலகில் நிலவி வருகிறது. **ரசியாவில்** உரு வாக்கப்பட்ட அதிகாரவர்க்கச் சர்வாதிகாரத்தின் நலன் நோக்கில் வாசிக்கப்பட்ட இந்த அறியப்பட்ட மார்க்சியம் அதற்கே உரித்தான நெருக்கடிக் காரணிகளைத் தன்ன கத்தே கொண்டிருந்தது என்பதை முன்பே பார்த்தோம். சோசலிசக் கட்டுமானங்களோடு தோன்றி முற்றிய இந்த அரசியல் / பொருளாதார / பண்பாட்டு நெருக்கடிகள் என்பன இன்று அறியப்பட்ட மார்க்சியத்தின் நெருக்கடி களாக வடிவெடுத்துள்ளன. இந்த நெருக்கடியையும்



படிப்பகம்

www.padippakam.com



அறியப்பட்ட மார்க்சியத்தின் சில அம்சங்கள் விவாதத்திற்கிடமின்றிக் காலாவதியாகிவிட்டதையும் மறைத்துவிட்டு எல்லாமே சரியாக இருக்கிறது எனச் சுயத்திருப்திப்பட்டுக் கொள்வதோ அல்லது காலாவதியாகிவிட்டவற்றை அப்படியே வைத்துக்கொண்டு முதலாளியப் பின்வாங்கல்களுக்கு வக்காலத்து வாங்குவதன் மூலம் ஒட்டுமொத்தமாக மார்க்சியமே காலாவதியாகிவிட்டது என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்வதோ சரியான தந்திரோபாயமாக இருக்க முடியாது என்பதை நாம் உணரவேண்டும்.

மார்க்சியத்தின் தேவை இன்னும் இருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாக வலியுறுத்தும் அதே நேரத்தில் அறியப்பட்ட மார்க்சியம் என்பது எவ்வாறு பு. பி. சமுதாயங்களின் நலநோக்கிலான ஒரு மார்க்சிய வாசிப்பு மட்டுமே என வலியுறுத்துவதும் **மார்க்ஸ், எங்கல்சில்** தொடங்கி **காவுட்ஸ்கி, பிளக்கனாவ், ரோசா, லெனின், மெஹறிங், கிராம்சி, ஸ்டாலின், லூகாக்ஸ், மாவோ, சார்த்தர், மார்க்யூஸ், அல்துஸ்ஸர் பிலிபாண்ட், பௌலண்ட் சாஸ்** என நம் முன் விரிந்து கிடக்கும் மார்க்சிய இலக்கியங்களையும், வாதப் பிரதிவாதங்களையும் இன்றைய சூழல் மற்றும் நூறாண்டு கால வரலாறு ஆகியவற்றின் பின்னணியில் இன்றைய காலகட்டத்திற்கான ஒரு மார்க்சிய வாசிப்பிற்கு நாம் உள்ளாக்க வேண்டும். இந்த வாசிப்பே இறுதியானது. சரியானது என்பதல்ல நமது வாதம். இன்றைய சூழலில் சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் சுரண்டலையும் ஒழித்த ஒரு புதிய சமத்துவச் சமுதாயத்தையும், மனிதனையும், பண்பாட்டையும் உருவாக்கத் தக்க வாசிப்பாக இது இருக்கவேண்டும் என்பதே இதன் பொருள். நம்முன் நீண்டு விரிந்து கிடக்கும் இந்த மார்க்சியச் சிந்தனை வெளிப்பாடுகளையும் மீறி பெண்ணிய நோக்கில், மார்க்சியத்தின் நிரப்பப்படாத இடைவெளிகளையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இவற்றை நிரப்புவதற்காக முயற்சிக்கவும் வேண்டும். அத்தகைய புதிய வாசிப்பு என்பது நிறைவேற்ற முடியாத கம்பசூத்திரமல்ல. இதன் முதற்படி அறியப்பட்ட மார்க்சியத்தின் நெருக்கடிகளையும் புதிய வாசிப்பின் தேவையையும் அங்கீகரிப்பதேயாகும். தந்திரோபாய நோக்கிலுங்கூட இத்தகைய முயற்சியே அறியப்பட்ட மார்க்சியத்தின் நெருக்கடிகள் குறித்த பாமர ஐயங்களை எதிர்கொள்வதற்கான ஒரே வழிமுறையும் ஆகும்.

மறுபடியும் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைய தேவை திறந்த மனது, தெளிந்த அறிவு, கடின உழைப்பு.

குறிப்புகள் :

1. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக EPW, Frontier, Monthly Reivew, New left Review, Indian Express, Hindu — ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ள பல கட்டுரைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள், கருத்துக்கள் முதலியவை இக்கட்டுரையில் உள் வாங்கப்பட்டுள்ளன.

2. 'பாலம்" இதழ்களில் நான்கு இதழ்களில் தொடர்ந்து வெளியிடப்படுவதற்கு ஏற்ப ஜூலை 90இல் எழுதப் பட்ட கட்டுரை இது. இதல் மூன்று பகுதிகள் கடைசி மூன்று பாலம் இதழ்களில் (1990) வெளி வந்தன. நான்காம் கட்டுரை 'பாலம்' ஆசிரியர் குழு விடமிருந்து திரும்பப் பெறப்பட்டு மாற்றங்களின்றி இங்கே சேர்க்கப்பட்டுள்ளது.

# 6. மார்க்சியம் - அறவியல் - வன்முறை

சமகாலச் சூழலே வன்முறை படிந்து கிடக்கிறது. மேலும் மேலும் சனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு அதிகாரங்கள் மையப்படுத்தப்படுதல்; கொஞ்சநஞ்ச உரிமைகளையும் பறிக்கும் கருப்புச் சட்டங்கள்; சமூக விரோதிகள் அதிக அளவில் அரசியலில் வெளிப்படையாகப் பங்கு பெறுதல், வரலாறு காணாதவகையில் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ள அரச வன்முறை, 'மோதல்' என்கிற பெயரில் கிளர்ச்சியாளர்கள் அழித்தொழிக்கப் படுதல், தினந்தோறும் நடக்கும் 'லாக்கப்' கொலைகள், காவல் நிலையங்கள் பாலியல் வன்முறைக் கூடங்களாக மாறுதல், தினந்தோறும் தாழ்த்தப்பட்டவர்கள் மீது நடைபெறும் வன்முறைகள், இவற்றை மறைத்து வெகு மக்களைத் தகவமைக்கும் வகையில் தொடர்புச் சாதனங் கள் மேலும் மேலும் அரசின் கைகளிலும் மூலதன சக்தி களின் கைகளிலும் மையப்படுத்தப்படுதல், மக்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள விளம்பர மற்றும் 'போஸ்டர்' யுத்தம் போன்றவை இவ் வன்முறைச் சூழலின் அடையா ளங்கள், அரசு, தொடர்புச் சாதனங்கள், காவல்துறை இம்மூன்றும் பிரிக்க இயலாமல் ஒன்றிணைந்து போனதன் விளைவாக கிளர்ச்சியாளர்கள் தங்கள் பிரச்சினைகளின் பால் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்குக் கூட சனநாயக வடிவங்களாக, இச்சமூகம் வரையறுத்துள்ள எல்லை களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது. எட்டு உயர்

www.padippakam.com



அதிகாரிகளை ஆந்திர 'மக்கள் யுத்தக் குழு' கடத்திய பின்புதான் அதற்குமுன் தொடர்ந்து அவர்கள் மீது ஏவப் பட்ட அரச வன்முறையின்பால் அகில இந்திய அளவில் கவனம் ஈர்க்கப்பட்டது நினைவிருக்கலாம்.

இன்னொரு பக்கம் அரச வன்முறையையும், ஒடுக்கு முறைகளையும், சுரண்டலையும் எதிர்த்து மக்கள் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு களம் புகுந்த வர்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகள் பல சந்தர்ப்பங் களில் எதிர் வன்முறை என்கிற நிலையைத் தாண்டி மக்கள் மீதே திரும்பி விடுவதையும், சக மாற்றுக் குழுக்கள் மீதும், சமயங்களில் சிவில் உரிமைப் போராளிகளின் மீதுங்கூடத் திரும்பி விடுவதையும் காண்கிறோம்.

புரட்சிக்குப் பிந்திய போல்செவிக் அரசுகளிலும்கூட அதிருப்தியாளருக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகள் என்பன முதலாளிய அரச வன்முறைக்கு எவ்வகையிலும் சளைத்ததாக இல்லாமல் இருந்ததையும் வரலாற்றில் நாம் பார்த்து விட்டோம். வன்முறை குறித்த மார்க்சிய அணுகல் முறையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது இந்தப் பின்னணியை நாம் கவனத்தில் இருத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. ''பயங்கரவாதத் தின் விஞ்ஞானம்'' ('Science of Terror' - Betram D wolfe) என்று அதன் எதிர்ப்பாளர்களால் அவதூறுக்கு ஆளாக் கப்பட்ட சிந்தனை மார்க்சியம். தனிமனித சுதந்திரம், தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப் படாத வன்முறையாளர்கள் என மார்க்சியர்கள் சித்தரிக் கப்பட்டு வந்துள்ளனர். வன்முறை என்பது ஒழுக்கம், அறம் தொடர்பான பிரச்சினையாக அணுகப்பட்டு வந்துள்ளதால் முதலில் அறவியல் (Ethics) குறித்த மார்க் சியக் கருத்துக்களுக்கும் மார்க்சியமல்லாத சிந்தனை களுக்குமிடையேயான வேறுபாடுகளைத் தொகுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. அவற்றில் சில:

படிப்பகம்

www.padippakam.com



(1) மார்க்சியம் ஒழுக்கத்தை தனிமனிதப் பிரச்சினையாகப் பார்ப்பதில்லை. அதனைப் பொதுமைப்படுத்தி சமூகப் பின்னணியில் வைத்துப் பார்க்கிறது. அன்புவழி, அறநெறி, அகிம்சை, எளிய வாழ்வு ஆகியவற்றின் மூலம் தனிமனிதனை மேன்மைப்படுத்தியும், தனிமனித ஒழுக்க மீறல்களைத் 'தண்டித்தும்' சமூகத்தைத் திருத்திவிட முடியும், என்பதை மார்க்சியம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒழுக்கம் ஒரு சமூகப் பிரச்சினை. சமூகத்தில் வாழும் மனிதனுக்குத்தான் ஒழுக்கம் ஒரு பிரச்சினையாகிறது. எனவேதான் சமூக உருவாக்கத்தில் மாற்றம் ஏற்படும் போது அற மதிப்பீடுகளும் மாறுகின்றன. மார்க்சியச் சிந்தனையை ஏற்றுக்கொள்ளாதவர்களும்கூட இதனை மறுக்க முடியவில்லை. எடுத்துக் காட்டாக அறவியல் ஆராய்ச்சியாளர்களில் ஒருவராகிய வில்லியம் வில்லி அறவியல் கோட்பாடுகளின் வளர்ச்சிப் போக்கைக் கீழ்க் கண்டவாறு காலப்பகுப்பு செய்கிறார்.

| எண் | காலம் | பின்னணி | அறவியல் மதிப்பீடுகள் |
|---|---|---|---|
| 1. | தொடக்கக் காலம் (கி.மு. 500- கி.பி. 500 ) | கிரேக்கநகர நாட்டு (City state) அறவியலின் தோற்றம் | நகர நாட்டுக் குடிமகனுக்குரிய கடமைகளைப் புரிதல் |
| 2. | இடைக் காலம் (கி.பி. 500- கி.பி. 1500) | மத்தியகால நிலப் பிரபுத்துவ கிறிஸ்தவ மத ஆளுகை | கிறிஸ்தவ மதப் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வாழ்க்கை வாழ்தல் |
| 3. | தற்காலம் (கி.பி 1500- முதல் | முதலாளிய உரிமைகளின் காலம். | முதலாளியச் சுதந்திரம், தனிமனித உரிமை...... |

www.padippakam.com



(2) எனவே சூழலை எல்லாக் காலத்திற்குமான, எல்லா இடங்களுக்குமான மாறாத பொதுவான சமூக மதிப்பீடுகள், ஒழுக்கங்கள், அறம் முதலியன இல்லை. எனவே ஒழுக்கம் என்பது தூலமானது, பருண்மையானது (Concrete); ஒழுக்கத்தை கருத்துருவமாக்கி (abstract)ப் பார்ப்பது மார்க்சியப் பார்வையல்ல. மனித குல வரலாற்றைச் சுமார் 50,000 ஆண்டுகள் என்றால், முதல் 45,000 ஆண்டுகளின் மனிதன் குடும்பம், அரசு, தனிச்சொத்து போன்ற அதிகார, அடக்குமுறை நிறுவனங்களில்லாமலேயே கழித்திருக்கிறான். இதனை ஒரு அராஜகமான, ஒழுக்க மற்ற வாழ்க்கையாகக் கருதமுடியாது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின்மையின் விளைவாகப் பற்றாமை இருந்திருக்கலாம். ஆனால் அதிகாரமற்ற, சமத்துவமான, பாலாதிக்கமில்லாத சமூகமாகவே அது இருந்தது. மேலிருந்து திணிக்கப்படாத ஒரு இயற்கை ஒழுங்கு (Natural order) அவர்கள் மத்தியில் நிலவத்தான் செய்தது. இதற்கான ஒழுங்குகளும் விதிகளும் பருண்மையானவை. வர்க்கங்களாய்ச் சமூகம் பிரிந்து அடக்குமுறை நிறுவனங்கள் தோன்றிய பின்னரே சூழலிலிருந்து விலக்கப்பட்ட கருத்துருவமான கற்பு, கொல்லாமை, திருடாமை போன்ற ஒழுக்க விதிகளும் ஒழுக்க வாதமும் தோன்றுகின்றன. தமிழக வரலாற்றில்கூட இனக்குழுச் சமூக நிலையிலிருந்து அரசுருவாக்கம் தோன்றி வலுப்பட்ட ஒரு காலகட்டத்தைச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன. தொடக்ககால இலக்கிய வெளிப்பாடுகளில் காணப்படாத ஒழுக்கவாதம் (moralism) பார்ப்பனியம், அரசுருவாக்கம், நிறுவன மயமாதல் முதலியன இறுக்கமாக்கப்பட்ட காலத்திய அறவியல் நூற்களில் (பதினெண் கீழ்க்கணக்கு) மிகுந்து காணப்படுவது கவனிக்கத் தக்கது. ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிப்பதால் மட்டுமே சமூக ஒழுங்கு காக்கப்படும் என்பதையே ஒழுக்க வாதம் என்கிறோம்.

www.padippakam.com



(3) ஒழுக்கவாதம் முன்வைக்கும் ஒழுக்கக் கோட்பாடுகளின் எதிர்மறைத் தன்மையைப் புரிந்துகொள்வது அவசியம். ''பொய் சொல்லாதே, கொலை செய்யாதே, திருடாதே, கற்பு தவறாதே'' என செய்யக் கூடாதவற்றை இவை எதிர்மறையாகச் சுட்டிக் காட்டுகின்றனவே யொழிய எதைச் செய்ய வேண்டும் எனச் சுட்டிக் காட்டுவது இல்லை, அதைச் சொல்வதற்கான தேவையும் அதற்கில்லை. ஒடுக்குமுறைகளுக்கெதிராகவும், வாழ்க்கையின் அத்தியாவசியங்களுக்காகவும் போராடிக் கொண்டிருக்கிற பெரும்பாலன மக்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்பவர்கள் இப்படி எதிர்மறைப் போதம் செய்து கொண்டிருக்க முடியாது. இருப்பின் அடிப்படையே பிரச்சினையானவர்கள் **என்ன செய்ய வேண்டும** என்பதைச் சொல்லியாக வேண்டும். எனவே புரட்சிகர ஒழுக்கக் கோட்பாடு பருண்மையாகச் செயல்படுவதோடு எதிர் மறையாக இல்லாமல் நேர்தன்மையுடனும் இருக்கிறது.

''என்ன செய்ய வேண்டும்'' என்கிற உள்ளுறையற்ற ஒழுக்கக் கோட்பாடுகளை ''எதிர்மறையாக முழுமையானவை'' என்பார் ஹெகல், எதிர்மறையான ஒழுக்கக் கோட்பாடுகளைக் கடைபிடிப்பதன் மூலம் சமூக மனிதன் பெறும் 'ஆற்றலும்' எதிர் மறையான ஆற்றலேயாகும். அடிப்படைப் பொருளாதார வசதிகளைப்பற்றிக் கவலைப் படாத ஆளும் வர்க்கம் இத்தகைய எதிர்மறை ஆற்றலைப் பெறுதலை மனித விடுதலையாய்ச் சொல்கிறது. அடித்தட்டு மக்கள் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது வெளிப்படை. இன்னொன்றும் இங்கு சிந்திக்கத் தக்கது, எதிர்மறையாக மட்டுமே ஆற்றலைப்பெற்ற (நேரான ஆற்றலைப் பெற்றிராத) ஒருவர் ஒழுக்க விதிகளை மீறும் போது அவரைத் தண்டிப்பதன் மூலம் குற்றம் அல்லது தவறு நீங்கப் போவதில்லை. குற்றத்திற்குக் காரணமான சூழல் மாற்றப்படும்போதே 'குற்றம்' ஒழியும். 'பொருள்முதலிய அர்த்தத்தில் மனிதன் விடுதலைபற்றி

www.padippakam.com



ருக்கும் போது குற்றத்திற்கான தண்டனையைத் தனிமனிதனுக்கு அளிக்கக் கூடாது குற்றத்திற்கு அடிப்படையான சமூக விரோதத் தன்மைகள் அழிக்கப்பட வேண்டும். தனது இருப்பின் வன்மையை வெளிப்படுத்தத் தக்க சமூகச் சாத்தியம் ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கப்பட வேண்டும்''— கா. மார்க்ஸ்,

(4) இயற்கை வேறுபாடுகளின் பாற்பட்ட பொது விதிகளின் அடிப்படையில் நீதி வழங்கலையும் மார்க்சியம் மறுக்கிறது. இதனை ஒரு எடுத்துக்காட்டு கொண்டு விளக்கலாம். ''சக்திக்கேற்ற உழைப்பு- உழைப்புக்கேற்ற ஊதியம்'' என்பது சோசலிச கட்டத்தில் நடைமுறையாய் இருக்கும் என்கிற பொருள்படும் மார்க்சின் புகழ்பெற்ற வாசகத்தை அறிவோம் (கோதா வேலைத் திட்டம்). ''சமவேலைக்குச் சம ஊதியம்'' என்கிற இக்கோட்பாடு முதலாளியக் கோட்பாடுதான்; இது சரியாக நடைமுறைப் படுத்தப்படுவதே சோசலிச சமுதாயத்தின் முற்போக்கான மாற்றமாக இருக்கும். மனிதர்களிடையே வேலைத்திறன் சமமாக இராது, மனிதர்களின் வேலைத்திறனில் உள்ள வேறுபாடு இயற்கையானது என்பதை இப்பொதுவிதி ஏற்றுக் கொள்கிறது. பருண்மையாகவும் முழுமையாகவும் மனிதர்களைப் பார்க்காமல் 'வேலைத் திறன்' என்கிற ஒற்றை அம்சத்தை மட்டும் abstract செய்து அவர்களுக்கு நீதி வழங்கப்படுகிறது. ஆனால் ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தில் ''சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற ஊதியம்'' என்கிற நிலை நிலவும். இங்கே இயற்கையாய் ''சமமில்லாத'' மனிதர்கள் சமூகரீதியாய் சமமாக நடத்தப்படுகின்றனர். எனவே மதிப்பீட்டிற்கான அலகு தனிமனிதத் திறன் என்பதாக இல்லாமல் ''சமூகத் தேவை'' என்பதாக ஆகிறது. இந்தத் தேவையை பருண்மையாயும் அரசியல் ரீதியாயும் பல்வேறு அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு ஒரு பருண்மையான சமூகம் தீர்மானிக்கும்.

www.padippakam.com



## இரண்டு

மேற்கூறப்பட்ட தத்துவார்த்தப் பின்புலத்தில் வன்முறை குறித்த மார்க்சிய அணுகல்முறையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒழுக்கவாதிகள் போலன்றி எல்லா வன்முறையையும் சமமாகப் பார்க்காமல் பருண்மையாய்ச் சூழலில் வைத்துப் பார்க்க வேண்டுமென்கிறது மார்க்சியம். தனது வன்முறைச் சாதனங்களின் மூலம் ஒட்டுண்ணிச் சமூக அமைப்பைத் தக்கவைக்கும் அரச வன்முறையையும் மாற்றத்திற்காகப் போராடுபவர்களின் எதிர் வன்முறையையும் சமமான பொதுவிதியைக் கொண்டு மதிப்பிட முடியாது. அடித்தட்டு வர்க்கத்தையும் அதன் எதிரிகளையும் ஒருவன் சமமாக நேசித்துக் கொண்டிருக்க முடியாது. புரட்சிகரமான சூழலில் தன்மீது வன்முறையைப் பிரயோகித்துக் கொண்டிருந்த/ கொண்டிருக்கும் வர்க்க எதிரியை அழித்தொழிப்பதென்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்த பிரச்சினையாகவோ வெறும் உயிர்க்கொலை தொடர்பான அகிம்சைப் பிரச்சினையாகவோ இருக்க முடியாது. இது ஒரு சமூக, அரசியல் பிரச்சினை. 'தன்னைப்போல பிறரையும் நேசி', 'கொலை செய்யாதே' போன்ற எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருத்தமான அறவுரைகளை மனித நேயமற்ற சமூக எதிரிகளே எதிர் வன்முறைக்கெதிராகச் சொல்ல முடியும்.

வர்க்க எதிரியைப் புரட்சிகர வன்முறை மூலம் நீக்குவதென்பது சில குறிப்பிட்ட சூழல்களில் இயக்கவளர்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இல்லாதிருக்கும்பட்சத்தில் புரட்சியாளர்கள் சில சமயங்களில் உடனடிப் பணியிலிருந்து அவற்றைத் தவிர்க்கலாம். இவ்வாறு வன்முறை அல்லது வன்முறையைத் தவிர்ப்பதென்பதெல்லாம் புரட்சியாளர்களைப் பொறுத்த மட்டில் பணி முன்னுரிமை

www.padippakam.com



நடைமுறைத்தந்திரம் தொடர்பான ஒரு பிரச்சினைதானே யொழிய அது ஓர் ஒழுக்கப் பிரச்சினையோ, அகிம்சை, உயிர்வதை தொடர்பான பிரச்சினையோ அல்ல. "பாட்டாளி வர்க்கத்தின் தூலமான வர்க்கப் போராட்ட நலன்களிலிருந்தே நம் ஒழுக்க விதிகள் பிறக்கின்றன" என்பார் லெனின்.

இத்தகைய தூலமான பகுப்பாய்வில்லாமல் மொட்டையாய்ப் பேசுகிற மனித நேயம், அகிம்சா வாதம் முதலியவை தீமைக்கெதிரான செயலூக்கமற்ற நிலைக்கே இட்டுச் செல்லும். கண்முன் நடந்துகொண்டிருக்கும் கொடுமையை வன்முறைப் பிரயோகித்தேனும் தடுக்க முயற்சிக்காமல் சாவகாசமாக அறவியலையும் அகிம்சா வாதத்தையும் 'போதிப்பது'ம், அதன்மூலம் ஒதுங்கிக் கொள்வதும் அந்தத் தீமை தொடர்வதற்கே காரணமாகும் என்கிற வகையில் அது அத்தீமையில் மறைமுகமாய்ப் பங்கு கொள்வதேயாகும். எனவே தீமைக்கெதிரான செயலூக்கமற்ற அகிம்சா வாதத்தை ஓர் ஒழுக்கக்கேடாகவே கருதுகிறது மார்க்சியம். இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். எதிர்வன்முறை மூலம் ஒரு வர்க்க எதிரி நீக்கப்படுதலும், ஒரு வர்க்க சமுதாய நீதிமன்ற ஆணையின் கீழ் ஒரு 'குற்றவாளி' நீக்கப்படுதலும், சமமானவையல்ல. பின்னது எவ்வித சமூக மாற்றத்திற்கும் அடிப்படையாவதில்லை. அதனால் சமூக மாற்றத்தின் மூலமே களையக்கூடிய சமூகத் தீமைகளை அது களைவதுமில்லை.

இனி மார்க்ஸ்-எங்கல்ஸ்-லெனின் ஆகியோர் தங்கள் காலத்திய நடைமுறைகளில் எவ்விதம் வன்முறை குறித்த இக்கருத்தாக்கத்தைப் பயன்படுத்தினர் என மிகச் சுருக்கமாகவேனும் பார்த்துவிடுவது அவசியம். பாரிஸ் கம்யூன் அனுபவத்தினடிப் படையில் முதலாளிய அரசு நிறுவனத்தின் சகல உறுப்புகளும் தகர்க்கப்பட வேண்டிய அவசியத்தை மார்க்ஸ் முன்வைத்துள்ள செய்திகளை நாம்

www.padippakam.com


அறிவோம். புரட்சிகரச் சூழலில் வன்முறையின் அவசியத்தை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளும் மார்க்ஸ், சிறுபான்மையினர் சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதைப் பொதுவில் ஏற்றுக்கொள்ள வில்லையாயினும் 1870களின் பிற்பகுதியில் ருஷ்ய நரோத்னிக்குகளை "எதார்த்தமானவர்கள், வீரமானவர்கள்" எனவும் பாராட்டுகிறார். பின்னால் லெனின் இவர்களது நடைமுறைகளை மிகக் கடுமையாய் விமர்சித்துள்ளது நினைவு கூரத்தக்கது. 1880களின் நடுவில் எங்கல்ஸ் நரோத்னிக்குகளின் தலைமையில் ருஷ்யாவில் ஒரு சிறுபான்மைப் புரட்சி சாத்தியம் எனக் கருதினார். முதலாளிய சனநாயக நாடுகளும்கூட அமைதியான வழியில் பாட்டாளி வர்க்கத்திடம் ஆட்சியை அளிக்கச் சம்மதிக்காமல் போகும் சாத்தியத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள போதிலும் பிரிட்டன் அமெரிக்கா போன்ற சனநாயக நாடுகளில் அமைதி வழியில் ஆட்சி மாற்றத்திற்கான சாத்தியங்களை மார்க்ஸ் ஏற்றுக் கொள்கிறார்.

மேற்கண்ட இரு அம்சங்களிலும் லெனின் மார்க்சிடமிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கிறார். நரோத்னிக்குகளின் போராட்டத்தை அரசியல் சதி என்னும் லெனின் சமூக சனநாயக வாதிகளின் அரசியல் போராட்டத்தில் சதிகளுக்கு இடமில்லை என்கிறார். அதேசமயத்தில் சட்டபூர்வமாக வெளிப்படையான கட்சி ஒன்றைக்கட்டும் சாத்தியமில்லை என்பதை ஏற்றுக்கொள்ளும் லெனின், பாட்டாளிகளை அமைப்பு ரீதியாய் திரட்டுவதற்கும், அரசியல் போராட்டத்திற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்றார். அதிகாரத்திற்கு எதிரான இறுதிக் கட்டப் போராட்டம் எந்த வடிவில் அமையும் என்கிற கேள்வியை எழுப்பிய அவர் அது குறித்து முன்கூட்டிப் பேசுவது வரட்டுவதமாகவே அமையும் என்றார் இன்று ஊகிக்க இயலாத அன்றைய பருண்மையான சூழலிலேயே அது தீர்மானிக்

www.padippakam.com



கப்படும் என்றார், தங்கள் சூழலுக்கேற்ற அமைப்பு வடிவம், பிரச்சாரம் ஆகியவற்றை வலியுறுத்திய லெனின் நரோத்னிக்குகளின் பயங்கரவாதத்தை விமர்சிக்கும்போது கூட ''இன்றைய சூழலில் பயங்கரவாதம் புத்திசாலித்தனமானதல்ல'' என்று மட்டுமே கூறினார். பயங்கரவாதத்தை நாம் மறுத்ததில்லை, மறுக்கவும் முடியாது

நடவடிக்கைகளை இயக்கக்கூடிய மையப்படுத்தப்பட்ட அமைப்பும், தல அளவிலான வலிமையான புரட்சிகர அமைப்புக்களும் உள்ள சூழலில் பயங்கரவாதம் தவிர்க்க முடியாத அவசியம் என்றார். 1900த்தின் முற்பகுதியில் மாணவர் போராட்டங்கள் வலுப்பெற்ற போதும் தெரு மோதல்களில் கிளர்ச்சியாளர்கள் பலர் கொல்லப்பட்ட போதும் அப்போராட்டங்களை குறிப்பாக தெரு மோதல்களை (street fighting) வரவேற்றார். நவீன துருப்புகளுக்கெதிராக தெரு மோதல்கள் சாத்தியமில்லை என்கிற கருத்தையும் எதிர்த்தார். நரோத்னிக்குகளின் தனிநபர் பயங்கரவாதத்தை எதிர்த்த லெனின், ''வன்முறையையும், பயங்கரவாதத்தையும் கொள்கையளவில் நான் மறுக்கவில்லை, எனினும் அவை மக்களைப் புரட்சியிலிருந்து அன்னியமாக்காமல் புரட்சியில் பங்கேற்கச் செய்யும் வகையில் அமைய வேண்டும்'' என்றார் உளவாளிகளையும், துரோகிகளையும் கொல்லாமலிருக்க முடியாது என்பதைச் சொன்ன லெனின், எனினும் அவர்களை அம்பலப்படுத்திச் செயலிழக்க வைக்கும் அமைப்பை நாம் உருவாக்க வேண்டுமென்றார். 1905 புரட்சியை ஆதரித்து வரவேற்ற லெனின், ''ஆயுதந்தாங்கிய மக்களே விடுதலையைப் பெறமுடியும்'' என்றார். ''எழுச்சி கொண்ட மக்களுக்குள் வன்முறை முன்னோடிகள் அமிழ்ந்துபோக வேண்டும்'' என்ற லெனின், வெடிகுண்டு என்பது தனிநபர்ப் போராளியின் ஆயுதமாக இல்லாமல் மக்களின் ஆயுதமாக மாறவேண்டும்'' என்றார். கட்சி அணியின மத்தியில் ராணுவக் குழுக்கள் அமைப்பதைத் தொடர்ந்து

www.padippakam.com



அற்புத்திய லெனின் ''குண்டு, குண்டு எனச் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். ஆனால் ஒன்றைக்கூடத் தயாரிக்கவில்லை. ராணுவக் குழுக்கள், ராணுவ நடவடிக் கைகள் மூலம் பயிற்சியைத் தொடங்க வேண்டும்'' (பார்க்க: Collected works vol 42. pp 345-346, 420,422—423) என்றார்.

புரட்சிகர மக்கள் எழுச்சியில் கெரில்லாப் போர் முறையை ஆதரித்த லெனின் ''புராதன சோசலிச வடிவங் களிலிருந்து மார்க்சியம் வேறுபடும் அம்சங்களில் ஒன்று அது இயக்கத்தை எந்த ஒரு குறிப்பிட்ட போராட்ட வடிவத்துடனும் பிரிக்க முடியாமல் பிணைக்கவில்லை என்பது... சூழலிலிருந்து பிரிக்கப்பட்ட பருண்மையற்ற கருத்துருவமான வரட்டுவாதச் சூத்திரங்களை மார்க்சியம் முற்றாக மறுக்கிறது...'' என்றார்... புரட்சிகர எழுச்சிகள் இல்லாத கட்டத்தில் பாட்டாளி வர்க்கம் கருத்தியலைப் பரப்பும் நோக்குடன் பாராளு மன்றத்தில் பங்கு பெறலாம் என்ற லெனின், மக்கள் எழுச்சி உள்ளபோது வன்முறை யுடன் கூடிய கலகத்தையே சரியான போராட்டவடிவமாக முன் வைத்தார்.

அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் என்கிற கருத்தை முற்று முழுதாய் மறுத்து 'வன்முறைப் புரட் சியும், அரசதிகார அமைப்புகளை நொறுக்குதலுமில் லாமல் ஒடுக்கப் பட்ட மக்களை விடுவிக்க முடியாது' என்பதை அழுத்தம் திருத்தமாய்ச் சொன்ன லெனின், மார்க்ஸ் பிரிட்டனுக்குக் கொடுத்த சலுகையைக்கூட கொடுக்கத் தயாராக இல்லை. மார்க்ஸ் காலம் மலையேறி விட்டது. இன்று (1917) பிரிட்டனும் சனநாயகத் தன் மையை இழந்து நிற்கிறது. எனவே வன்முறைப் புரட்சி இல்லாமல் ஆட்சிமாற்றம் எங்குமே சாத்தியமில்லை என வாதிட்டார் லெனின். புரட்சிக்குப் பிந்திய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார காலத்தில் முதலாளிய வர்க்கம் ஒடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய லெனின்

www.padippakam.com



(அரசும் புரட்சியும்) ''புரட்சிகர சட்டம் ஒழுங்கை மிக மிகக் கறாராக நிறுவுங்கள்,'' என்று போல்செவிக்குகளை நோக்கிச் சொன்னார். ''அராஜகத்தை உருவாக்கும்'' முயற்சிகளையும் ''இரக்கமேயில்லாமல் நசுக்குங்கள்'' என்றார். வன்முறையாளர்கள் எனத் தூற்றப்பட்ட போது லெனின் சொன்னார். ''உடைமை வர்க்கங்களின் எதிர்ப்பை முறியடித்தாக வேண்டியிருக்கிறது. பாட்டாளி களை நசுக்குவதற்கு அவர்கள் உபயோகித்த அதே வழி களை நாங்களும் பின்பற்றித்தான் ஆக வேண்டும். வேறு எந்த வழிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை''

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்கிற கருத் தாக்கம் மார்க்சியக் கருத்தாக்கமாக முடியாது என்று கூறிய காவுட்ஸ்கிக்கு ஓடுகாலிப் பட்டம் சூட்டி லெனின் துவம்சம் செய்த கதையை இங்கு விரித்து எழுத வேண்டிய தில்லை. "மார்க்சியக் கோட்பாட்டின் சாராம்சமே பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம்தான்'' என்பது லெனின் வாதம் மொத்தத்தில், புரட்சிகர எழுச்சியில் வன்முறையை ஏற்றுக் கொண்ட லெனின், வன்முறை உட்பட்ட எல்லாச் செயல் பாடுகளும் வெகுசனத் தன்மையுடையதாக இருக்க வேண்டுமென்பதையும் அதற்குரிய அமைப்புச் செயற்பாடு களையும் வலியுறுத்தினார்.

## மூன்று

இறுதியாக, பா. வ. அரசுகளின் வன்முறை இதர அரச வன்முறைகளுக்கு எள்ளளவும் குறையாமல் இருந்து போனதன் காரணங்களுக்கு வருவோம். இது குறித்து விரிவான ஆய்வைச் செய்ய இங்கு சாத்தியமில்லை என்ற போதிலும் சில முக்கியமான, மிக முக்கியமான கருத்துக் களை எடுகோள்களாக இங்கே முன் வைக்கத் தோன்று கிறது.

படிப்பகம்

www.padippakam.com



அவை:

1) எதிர்கால நடைமுறை, புரட்சிகர எழுச்சியின் போதுமான போராட்ட வடிவம் போன்றவை குறித்து பொதுவிதியாக எதையும் சொல்ல இயலாது என்பதை ஆரம்பத்தில் வலியுறுத்திய லெனின் உண்மையில் அத்தகைய எழுச்சி வந்தபோது பருண்மையான சூழலிலிருந்து பிரிக்கப்பட்ட சில பொது விதிகளை உருவாக்க முயன்றார். பின்னர் அது லெனினியமாக போல்செவிக் பாரம்பரியத்தில் உள்வாங்கப்பட்டது.

2) முதலாளிய அரசு எந்திரத்தின் பல்வேறு உறுப்புக்களும் முற்றிலும் தகர்த்தெறியப்பட வேண்டும் என மார்க்சும் லெனினும் மிக வன்மையாய் வலியுறுத்திய போதும் போல்செவிக் பாரம்பரியத்தில் அது நிறைவேற்றப்படவே இல்லை. அரசு அமைப்பு, ராணுவம், காவல்துறை, கல்வி, தொழிற்சாலை நிர்வாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் முதலாளிய வடிவங்கள் அப்படியே பின்பற்றப்பட்டன. குற்றவியல்—நீதி பரிபாலன—தண்டனைத் துறைகளும் இதற்கு விதி விலக்கல்ல. அரசு அதிகாரத்தின் நிறைவேற்று களங்களில் ஒன்றாகிய நீதிமன்ற வடிவத்தின் கொடூரத்தைப்பற்றிய ஃபூக்கோவின் விமர்சனங்களும், எச்சரிக்கைகளும் மிக முக்கியமானவை (பார்க்க: Discipline and Punish, மற்றும் நிறப்பிரிகை—5ல் மாவோயிஸ்டுகளுடனான ஃபூக்கோவின் உரையாடல்). வெகுஜன நீதி என்பது அதன் உண்மையான பொருளில் போல்செவிக் அரசுகளில் எங்குமே நிறைவேற்றப்பட்டதில்லை.

3) நீதிபரிபாலனத்தில் வர்க்க சமூக வடிவங்களை அப்படியே ஏற்றுக்கொண்டதன் விளைவாக இத்தகைய நீதி பரிபாலனத்துக்குரிய சூழலிலிருந்து விலக்கப்பட்ட எல்லாக் காலத்திற்குமான பொது விதிகள் உருவாக்கப் பட வேண்டிய அவசியத்தை பா.வ. அரசுகளும் ஏற்றுக்

www.padippakam.com



கொண்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட பொது விதிகள் உள்ளடக்கத்தில் வர்க்க சமூக விதிகளிலிருந்து வேறுபட்டிருந்தாலும் abstract என்கிற வகையில் வர்க்க சமுதாய வடிவத்தையே பெற்றிருந்தன.

4) இத்தகைய பொது விதிகளை உருவாக்கும் பொறுப்பையும், தகுதியையும் முன்னணிப்படை தனக்குரியதாக்கிக் கொண்டது. வெகுசன வன்முறை, வெகுசன நீதி என்பதெல்லாம் பேசப்பட்டாலும் நடைமுறையில் புரட்சிகர எழுச்சி என்பதும் புரட்சிக்குப் பிந்திய அரசுருவாக்கம் என்பதும் முன்னணிப் படையின் செயல்பாடாகவே இருந்தது. மக்களுக்கும் மக்களின் எதிரிகளுக்கும் இடையில் மூன்றாவது நபராகத் தன்னை நிறுத்திக் கொண்ட முன்னணிப்படை மக்களுக்காகப் பேசுகிற உரிமையை எடுத்துக்கொண்டது. பா. வர்க்கத்தின் குரல் எதிர்கால உண்மையை, சமூக முழுமைக்குமான விடுதலையை உள்ளடக்கியது என்று கூறி அந்த உண்மையைக் கண்டுபிடிக்கவும், அதை செயல்படுத்தவுமான உரிமையை தன் கையில் எடுத்துக் கொண்ட முன்னணிப்படை, ஆங்காங்கு தல மட்டங்களில் பருண்மையாய் நீதியையும் உண்மையையும் நிலைநிறுத்தக்கூடிய பருண்மையான நீதிடரிடாலன மற்றும் தண்டனை நிறைவேற்ற வெகுசன அமைப்புகள் உருவாவதைத் தடுத்தது.

இவற்றின் விளைவுகளை இங்கே விரிக்கத் தேவையில்லை. கண்முன் எல்லாவற்றறையும பார்த்துவிட்டோம்.

## நான்கு

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது வன்முறை, அறம் ஆகியவை குறித்து மார்க்சிய நோக்கில் நாம் இன்று பின்பற்றத் தக்க ஒரு விதியை உருவாக்க



படிப்பகம்

www.padippakam.com



லாமெனில், எந்தப் பொதுவிதியும் இவை குறித்து உருவாக்க முடியாது என்பதே அவ்விதியாக இருக்க முடியும்.

— மதுரையில் IDEAS அமைப்பு நடத்திய வன்முறை தொடர்பான கருத்தரங்கில் (டிச 19,2)—1992 வாசிக்கப்பட்ட கட்டுரை.

படிப்பகம்

www.padippakam.com

# 7. இதற்குப் பின்...

## வர்க்கப் போராட்டத்தைக் கேந்திரக் கண்ணியாக வைப்பது என்றால் என்ன?

''மார்க்சியம் தோற்றுவிட்டது'' என்கிற குரலை இன்று முன்வைக்கும் யாரும் மார்க்சியம் முன் வைத்த அரசியல் பொருளாதாரத்தையோ, மெய்யியல் கோட்பாடுகளையோ, சமூக உருவாக்கம் பற்றிய சிந்தனைகளையோ கொள்கையளவில் தவறு என நிறுவியதில்லை. கட்சி வட்டாரங்களிலிருந்தோ, கல்வி வட்டாரங்களிலிருந்தோ கோட்பாட்டளவில் மார்க்சியச் சித்தாந்தம் தவறு என நிறுவி காத்திரமான ஒரு நூல்கூட இதுவரை வந்ததில்லை. தோற்றுவிட்டது எனச் சொல்பவர்கள் முன்வைக்கும் ஒரே வாதம், புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் பொதுவுடமைக் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புகளை அடிப்படையாக வைத்துதான். புரட்சிக்குப் பிந்திய சமூக அமைப்புகள் அனைத்தும் தோற்றுவிட்டன. எனவே மார்க்சியம் தோற்றுவிட்டது! ஆக, மார்க்சியத்திற்கான நெருக்கடி என்பது பெரும்பாலும் பு.பி. சமுதாய அமைப்பின் அரசுவடிவங்கள், சிவில் உரிமைகள், சனநாயகம், பொருளாதாரக் கட்டுமானங்கள் ஆகியவை குறித்தனவாகவே உள்ளன. எனவே இந்த அம்சங்கள் குறித்தே நாம் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இது ஏதோ இன்று நேற்றைய பிரச்சினை அல்ல; கடந்த

www.padippakam.com



இருபது முப்பதாண்டுகளாகவே உலகெங்கிலும் பொது வுடைமையாளர்களிடையே முக்கிய விவாதப் பொருளாக இப் பிரச்சினைகள் அமைந்துள்ளன.

நக்சல்பாரி இயக்கம் இந்தியாவில் தோன்றியபோது அவர்களது மிக முக்கிய பங்களிப்புகளாக இந்திய சமூக அமைப்பு பற்றிய மாற்று மதிப்பீடு, ஏகாதிபத்தியம் பற்றிய அவர்களின் கருத்துக்கள், ரசியாவை சோசலிச நாடு அல்ல என்று சொன்னதோடு அதனை சமூக ஏகாதிபத்திய மாக வரையறுத்தது ஆகியவற்றைச் சொல்லலாம். இந்தப் பின்னணியில் புரட்சிக்குப் பிந்திய சமுதாயம் குறித்த விவாதங்கள் முதன் முதலில் அவர்களாலேயே முன் வைக்கப்பட்டன. ரசியாவைச் சமூக ஏகாதிபத்தியமாக வரையறுத்த ஒரு சில வெளியீடுகளும், கட்டுரைகளும் அவர்களால் வெளியிடப்பட்டன. சுனில்பவார் எழுதிய "சோவியத் யூனியனில் முதலாளியம் நிலை நாட்டப் பட்டது எப்படி?" ம. க. இ. க வெளியீடாகிய "லெனி னிசமா சமூக ஏகாதிபத்தியமா?" கேடயம் வெளியீடு களான "மாபெரும் விவாதம்" "சோவியத் பொருளா தாரம் பற்றிய மாவோவின் விமர்சனங்கள்" தோழமை வெளியீடாகிய "ரசியக் கரடியின் இன்னொரு முகம்" என்பவை அவற்றில் சில. அனைத்தும் ரசியாவைச் சமூக ஏகாதிபத்தியமாக வரையறுப்பவை. சோவியத்யூனிய னைச்சமூக ஏகாதிபத்தியமாகச் சித்தரிப்பதில் உள்ள சிக்கல்களை மையமாக வைத்துத் தமிழ்ச்சூழலில் நடை பெற்ற விவாதம் தோழமை வெளியீடாக "ரசியாவில் நடப்பதென்ன?" என்கிறதலைப்பில் தொகுக்கப்பட்டது. இவைதவிர புரட்சிக்குப் பிந்திய சமுதாயத்தின் பிரச்சினை களைக் கரிசனங்களோடு ஆராயும் மேலும் இரண்டு நூல்களை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவை மெய்யறிவுப் பதிப்பகம் வெளியிட்ட பால். எம். ஸ்வீஸியின் 'புரட்சிக்குப் பிந்திய சமூகம்' பரிமாணம் வெளியீடாக வந்த 'மாவோவுக்குப் பிந்திய சீனம்.'

படிப்பகம்

www.padippakam.com



சமீபத்தில் கிழக்கு ஐரோப்பாவில் நடைபெற்ற மாற்றங்களைத் தொடர்ந்து பல்வேறு இடது சாரிக் கட்சிகளும் சிறு வெளியீடுகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன. கோர்ப்பசேவின் "பெரிஸ்த்ரோய்கா," அரிந்தாம் சென்னின் "சோசலிசக் கட்டுமானம் — தத்துவமும் நடைமுறையும்" கோ. கேசவனின் 'சோசலிசமும் முதலாளிய மீட்சியும்' என்பவை அவற்றில் சில. சவுத் ஏசியன் வெளியிட்டுள்ள 'சிலி புரட்சியின் படிப்பினைகள்', 'சீனாவின் ஜனநாயகமும் எதிர்காலமும்' ஆகிய இரண்டு நூல்களையும் புரட்சிக்குப் பிந்திய சமுதாயம் தொடர்பான நூல் வரிசையில் சேர்த்துக் கொள்ளலாம். புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் சமீபத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளே நமது இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலின் கருத்துகளோடு சில அம்சங்களில் உடன்படுகிற வெளியீட்டையும் இந்நூலிலுள்ள கட்டுரை ஒன்றை மறுத்து எழுதப்பட்ட ஒரு வெளியீட்டையும் சற்று விரிவாக இங்கு சொல்லுதல் அவசியம்.

தோழர் கே. வேணு அவர்களை மையமாகக் கொண்டு இயங்கும் இ. பொ. க (மா-லெ) -மையச் சீரமைப்புக் குழுவின் நகல் ஆவணமான (1990) 'பாட்டாளிகளும் மக்களாட்சியும்' என்கிற வெளியீடு குறிப்பிடத்தக்க ஒன்று. இவ்வெளியீடு.

* முன்னாள் சமூக உடைமை நாடுகளின் (பு.பி.சமுதாயங்களின்) 'சமூக பாசிஸ்டு'களுக்கு எதிரான மக்கள் எழுச்சிகளைப் பொதுவாக வரவேற்கிறது.

* இன்றைய படிப்பினைகளின் பின்னணியில் கடந்த காலத்தை மறுபடியும் ஆராய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. ரோசாவின் பாட்டாளி வர்க்க சனநாயகம் பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ரோசா, காவுட்ஸ்கி. புகாரின் ஆகியோர்

www.padippakam.com



முன் வைத்த கருத்துக்களை பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கோருகிறது.

- பு.பி. சமுதாயத்தில் முதலாளிய அரசுப் பொறியமைவை நொறுக்க வேண்டியது குறித்தான மார்க்ஸ் எங்கல்சின் பாரிஸ் கம்யூன் அடிப்படையிலான கருத்துக்களை முழுமையாக ஆதரிக்கிறது.

- 'எல்லா அதிகாரங்களும் சோவியத்துக்கே' என்பது வெறும் முழக்கமாகவே இருந்து போனது; நடைமுறையில் சோவியத்துக்கள் என்பன பா.வ.ச. அரசின் வெறும் பற்சக்கரங்களாகவே ஆகியது. பா.வ.ச. என்பது உண்மையில் பொதுவுடைமைக் கட்சியின் சர்வாதிகாரமாகவே இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

  ஒற்றைப் பரிமாணக் கட்சி என்கிற வகையில் கருத்து மாறுபாடுகளைத் தடை செய்து கட்சியைப் புனிதமாக்கிய வகையில் லெனினுக்கும் ஸ்டாலினுக்குமிடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

- கட்சி வழிபாட்டை எதிர்த்த மாவோவின் விமர்சனங்கள் சரி என்றாலும் கட்சி பற்றிய லெனின்-ஸ்டாலினது அடிப்படைச் சட்டகத்தை அவரது பார்வை மீறவில்லை என்பதைச் சொல்லிவிடும் இந்நூல் கலாச்சாரப் புரட்சி என்பது கலகங்களோடு முடிந்து போனது; புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சிக்கவில்லை, கட்சியின் ஈற்றான மேலதிகாரம் என்கிற போல்செவிசக் கோட்பாட்டை மாவோவால் மீற முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

- கட்சியின் மையமான பங்கை வலியுறுத்தும் இவ்வெளியீடு எல்லாவற்றையும் கட்சியே தீர்மானிப்பது, கட்சி தீர்மானிப்பது எல்லாம் சரி என்பவற்றை மறுக்கிறது.

www.padippakam.com



- பா.வ. புரட்சிக்குப் பின் அதிகாரத்தைக் கட்சி நேரடியாகக் கைப்பற்றிக் கொள்ளாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களிடம் அதிகாரம் இருக்க வேண்டும் எனச் சொல்கிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமையும் மக்களுக்கு இருக்க வேண்டுமென்கிறது.

- கட்சிக்குள் கருத்து மாறுபடும் குழுக்கள் வெளிப்படையாக இயங்க அனுமதிக்கப்படுதலையும், அவை தம் கருத்துப் படைப்புக்களைத் தனியே வெளியிடுகிற உரிமையையும் வரவேற்கிறது.

- பு.பி. சமுதாயத்தில் தனியுடைமையை ஒழித்து சமூக உடமை ஆக்கப்படுதலை அவசியம் எனச்சொல்கிறது. ஆனால் இது வெறும் துவக்கம் தான்; பொருளியலின் மெய்யான சமூக மயமாக்கம் என்பது அரசியலதிகாரத்தைப் பரவலாக்கும் போது மட்டுமே சாத்தியம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

கட்சி அமைப்புகள் எதுவும் சொல்லத் துணியாத பல்வேறு அம்சங்களைத் தைரியமாகச் சொன்ன வகையில் இந்த ஆவணம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. மேற்குறிப்பிட்ட கருத்துகள் பலவும் இந்தத் தொகுப்பிலுள்ள நமது கட்டுரைகளில் வலியுறுத்தப் பட்டுள்ளதைத் தோழர்கள் கவனிக்கலாம். புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் தூலமான அரசு வடிவங்களின் முதலாளியத் தன்மையை மாற்ற வேண்டியதன் அவசியத்தை நமது தொகுப்பு மேலும் ஆழமாகவே சுட்டிக் காட்டுகிறது. அரசியல் அமைப்பைச் சனநாயகப் படுத்துவது என்கிற அம்சத்தை வலியுறுத்தும் மேற்குறித்த ஆவணத்தில் அரசு கருவி என்பதில் கருத்தியல்சார் அரசு கருவிகளான தந்தைவழிச் சமூகக் குடும்பம், கல்வி, மருத்துவம், அதிகார பூர்வ கலாச்சாரம் போன்ற நிறுவனங்களையும் சேர்த்துக் கொள்ளாதது மிகப் பெரிய

www.padippakam.com



குறை. இந்த ஆவணத்தைப் பற்றிய விவாதத்தைத் தமிழகத்தின் முக்கிய ஊர்களில் அந்தத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அவற்றில் இந்தக்குறை சுட்டிக் காட்டப்பட்டபோது கே.வேணுவோ மற்ற தோழர் களோ அதனைச் சிரத்தைக்குரிய ஒன்றாகக் கருதவில்லை.

மையச் சிரமைப்புக் குழுவின் ஆவணம் வலியுறுத்தக் கூடிய இன்னொரு முக்கிய கருத்து தேசிய இன உணர்வு, சனநாயகம் போன்றவற்றை வர்க்கம் சாராக் கூறுகளாக வரையறுப்பது. கட்சித் தோழர்களால் கடும் தாக்கு தலுக்குள்ளாக்கப்படும் இக்கருத்து மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. தேசிய இனப் பிரச்சினை பற்றிய கட்டுரையொன்றில் (நிறப்பிரிகை-1) தேசிய இன உணர்வு, சனநாயகம் ஆகியவற்றை முதலாளிய முறை யுடன் நேரடியாகப் பொருத்திப் பார்ப்பதன் தவறைச் சுட்டிக் காட்டியுள்ளோம். தேசிய இன உணர்வுச் சொல்லாடல்களை முதலாளிகள் மட்டுமலல பாசிஸ்டு களும், பாட்டாளி வர்க்கமும் கூட தனது சொல்லாடலில் ஒருங்கிணைக்க முடியும்; முன்னதற்கு இட்லர் உதாரண மென்றால் பின்னதற்கு அமில்கார் கப்ரால் போன்றோர் உதாரணங்கள்; தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக பொதுவுடைமையாளர் இத்தகைய அரசியலை மேற் கொள்வது அவசியம் என்பதையெல்லாம் அக்கட்டுரை வலியுறுத்தியது.

ஆனால் இங்கொன்றை நாம் கவனத்தில் வைக்க வேண்டியது அவசியம். சனநாயகம், தேசிய உணர்வு என்பதெல்லாம் முதலாளியம் என்கிற ஒரு குறிப்பிட்ட வர்க்க சமூகத்தின் மேற்கட்டுமானம் அல்ல எனச் சொல்லுகிறபோது இவையெல்லாம் வர்க்க சமூகங்களுக் குள் மட்டுமே நிழகக் கூடியவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஒரு வர்க்க சமூகத்திற்குள்ளும், வர்க்க முரண்பாடுகளின் விளைவான அரசமைப்பிற்குள்ளும் தான் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய விடுதலை

www.padippakam.com



யும், உரிமைகள் ஒடுக்கப்படுவதற்கெதிராக சனநாயக் கோரிக்கைகளையும் முன் வைக்க வேண்டியிருக்கிறது. வர்க்கமே இல்லாமல் போகிறபோது, வர்க்க முரண் விளைவான அரசே தகர்த்து நொறுக்கப்பட்டு பின் அதனிடத்தில் வந்த ப.வ.அரசும் உதிர்ந்து போகும் போது- (ஆம்,உதிர்ந்து போகும்போதுதான், உதிர்வதற்கு முந்திய பு.பி. சமுதாயங்களிலல்ல)-தேசிய இன உணர்வு மற்றும் சனநாயகம் என்கிற கருத்தாங்களெல்லாம் அர்த்த மற்றுப் போகின்றன. பொதுவுடைமைச் சமூகம், பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் என்பவற்றின் பொருள் இதுதான். எனவே நமது இறுதிக் குறிக்கோள் அனைத்து மக்களுக்குமான அரசை உருவாக்குவதோ, சோசலிச சனநாயகத்தை உருவாக்குவதோ அல்ல. மாறாக அரசையே இல்லாமற் செய்வதே. லெனின் சொல்கிற "சனநாயகத்தை அதன் எல்லைக்கே தள்ளுவது" என்பதன் பொருள் இதுதான்.

கிரகாம் லாக் சொல்வார்:

> "லெனின் சொல்கிறார்: பாராளுமன்ற சன நாயகம் என்பது அரசின் ஒரு வடிவம் — எனவே அது ஒருவகையான வர்க்கச் சர்வாதிகாரமே. 'தூய சனநாயகம்' அல்லது 'பொதுவான சனநாயகம்' என்றெல்லாம் ஒன்றுமில்லை. பொதுவுடைமை யாளரின் போராட்டங்கள் என்பதன் நோக்கம் இறுதியாக ஒரு 'சனநாயக அரசை' நிறுவுவது அல்ல; மாறாக அரசையே அழித்தொழிப்பதுதான்" (எபினி பாலிபர் — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி, என்.எல் பி..1997 பக்.30).

புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் நடத்த வேண்டிய வர்க்கப் போராட்டமென்பது அரசு நிறுவன வடிவங்களை அழித்தொழிப்பதற்கான போராட்டம்தான். அரசு நிறுவனங்கள் என்பதில் அரசின்

www.padippakam.com



வன்முறை நிறுவனங்கள் மட்டுமல்ல அரசின் கருத்தியல் சார் நிறுவனங்களான பள்ளிக்கூடம், அதிகாரபூர்வ பண்பாட்டு மரபு, அதிகாரபூர்வ இலக்கிய மரபு, ஆணாதிக்க மையமான குடும்பம், மருத்துவ நிறுவனம்... எனப் பலவும் அடங்கும்.

ஆனால் அறியப்பட்ட மார்க்சியத்தில் தேசிய உணர்வு, சனநாயகம் என்பதெல்லாம் முதலாளியத்தோடு நேரடியாகப்பொறுத்தப்பட்டதன் விளைவாக முதலாளிய அமைப்பு தகர்க்கப்பட்டு பாட்டாளி வர்க்க அரசு உருவாக்கப்பட்ட பின் இந்தப் பிரச்சினைகள் தானாகவே மறைந்து போகும் என எண்ணப்பட்டது. புரட்சிக்குப் பிந்திய சமூகம் என்பது பொதுவுடைமைச் சமூகம் அல்ல. அது பொதுவுடைமைச் சமூகத்தை நிறுவுவதற்கான பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான வர்க்கப் போராட்டக் காலகட்டம். புரட்சிக்கு முந்திய சமூகங்களில் முதலாளி வர்க்கம் அரசுகருவிகள் (வன்முறை+கருத்தியல்) அனைத்தையும் நிரப்பிக் கொண்டு தேசிய இன ஒடுக்கு முறையை மேற்கொள்கிறது; சனநாயக உரிமைகளைப் பறிக்கிறது; முதலாளியச் சுரண்டலுக்கு இவை தேவைப்படுகின்றன. பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது முதலாளி வர்க்கதகை அரசு கருவிகளிலிருந்தும் உற்பத்தி சக்திகளின் ஆளுமையிலிருந்தும் தூக்கி எறித்துவிடுகிறது. தனி உடைமைகள் ஒழிக்கப்பட்டு சமூக உடைமை உருவாக்கப்படுகிறது. பாட்டாளி வர்க்க அரசு உருவாக்கப்படுகிறது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி என்பது மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிடுதலின் கீழ் நடைபெறுகிறது. இவற்றைப் பாட்டாளி வர்க்க அரசு நிறைவேற்ற வேண்டிய அவசிய நிபந்தனைகள் என்கிறோம். இந்த நடவடிக்கைகளின் மூலம் நிறைவேற்றப்படுவது என்னவெனில் அரசு கருவிகளின் உள்ளுறையை முதலாளி வர்க்கம் என்பதிலிருந்து பாட்டாளி வர்க்கம் என்பதாக மாற்றியமைப்பது மட்டுமே. ஆனால் அரசு நிறுவனங்கள் அப்படியே இருக்கின்றன.

www.padippakam.com



இந்த நிறுவனங்கள் அனைத்தும் வர்க்க சமுதாயங்களால, ஒடுக்குகிற வர்க்கங்களால், ஒடுக்குகிற நோக்கில் உருவாக்கப்பட்டவை. எனவேதான் இது குறித்து மிக விரிவான ஆய்வை மேற்கொண்ட எபீனி பாலிபர் கூறுவார்: ''எல்லா அரசுக் கருவிகளும் எல்லாக் காலகட்டங்களிலும் ஒடுக்கும் வர்க்கக் கருவிகளே. பாட்டாளிகள் இந்தக் கருவிகளை முதலாளி வர்க்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தும் வாய்ப்பை அடைந்துவிட்ட பிறகும் கூட இவை முதலாளியக் கருவிகளே'' (எபீனி பாலிபர், பக்.122) அதனால்தான் மார்க்சும் லெனினும் அரசைத் தகர்த்து நொறுக்குவதை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றனர்.

> ''அரசு இருக்கும்வரை விடுதலை இல்லை. விடுதலை உள்ள இடத்தில் அரசு இருக்காது''—

என்றார் லெனின் (அரசும்-புரட்சியும்) அரசை நொறுக்கி எறிவது என்றால் என்ன? கிரகாம் லாக் சொல்வார்:

''அரசு எந்திரத்தைத் தகர்த்து நொறுக்க வேண்டியதன் தேவையை நீங்கள் இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். உடலுழைப்புக்கும் மூளையுழைப்புக்குமிடையேயான உழைப்புப் பிரிவினையை இல்லாமற் செய்வதற்குத் தடையாய் இருக்கிற திறனை அரசு கருவிக்கு வழங்கும் சமூக உறவுகளைத் தகர்த்தெறிய வேண்டும்''— (எபீனி பாலிபர் பக்.19)

இந்தச் சமூக உறவுகள் என்பன வெளியில் மட்டுமல்ல, ஒவ்வொரு கருவிக்குள்ளும் செயல்படுகின்றன. எனவே இத்தகைய உழைப்புப் பிரிவினை, அதிகாரச் செயல்பாடுகள் ஆகியவற்றை ஒவ்வொரு அரசு கருவிக்குள்ளும் நாம் தகர்த்தெறிய வேண்டியிருக்கிறது. பிரான்சு நாட்டுப் பொதுவுடமைக் கட்சி, தனது 22வது காங்கிரசில் (1976) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்கிற கோட்பாட்டைக் கைவிடத் தீர்மானித்தபோது அம்முடிவை விமர்சனம் செய்த அல்துஸ்ஸர் கூறுவார்:

www.padippakam.com



''பாட்டாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் முதலாளிய அரசை நொறுக்கி எறிவது (இந்தக் குறிப்பிட்ட சொல்லின் பால் குறிப்பான கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்) என்பதன் பொருள் ஒவ்வொரு அரசு கருவிக்கும் முன்னால் 'சனநாயக' என்கிற சொல்லைச் சேர்ப்பது அல்ல. இத்தகைய மேலோட்டமான சீர் திருத்தவாத நடைமுறையைக்காட்டிலும் ஆழமான ஒன்று அது. நிலவுகிற அரசு கருவிகளின் அமைப்பு, நடைமுறை, கருத்தியல் ஆகிய அனைத்தையும் புரட்சிகரமாக மாற்றுவதாகும். சிலவற்றை இல்லாமல் செய்தல், சிலவற்றைப் புதிதாக உருவாக்குதல் என்பவையாக அது அமையும். பழைய கருவிகளின் நடைமுறைச் செயற்பாட்டை முதலாளியக் கருத்தியல் கட்டமைத்துள்ளது. இக்கருவிகளின் செயல்முறைகளை புரட்சிகரமாக்கும் வகையில் வன்முறை/அரசியல்/கருத்தியல் கருவிகளுக்கிடையேயான வேலைப் பிரிவினையை மாற்றியமைப்பதாக இவை அமைய வேண்டும். புதிய பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் அடிப்படையில் இக் கருவிகளுக்கும் மக்களுக்குமிடையேயான வேலைப்பிரிவினையை மாற்றியமைப்பதாக இவை அமைய வேண்டும். புதிய பாட்டாளி வர்க்கத் தத்துவத்தின் அடிப்படையில் இக் கருவிகளுக்கும் மக்களுக்குமிடையே புதிய உறவுகள் கட்டமைக்கப்பட வேண்டும் (நொறுக்கி எறியப்பட்ட இடத்தில் உருவாக்கப்பட்ட) பாட்டாளி வர்க்க அரசின் உதிர்ந்து போதல் சாத்தியமாகும் வகையில் இவை நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது அரசு கருவிகளிடத்தில் வெகுமக்கள் நிறுவனங்கள் ஈடு செய்யப்பட வேண்டும்.''

**இந்தப் போராட்டத்தைத்தான் புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டம் என்கிறோம். இதைத்தான் வர்க்கப்போராட்டத்தைக் கேந்திரக் கண்ணியில்**

www.padippakam.com



லிவப்பது என்கிறோம். இதைத்தான் முதலாளிய நிறுவனங்களை அவற்றின் முதலாளிய இயல்பிலிருந்து விடுதலை செய்தல் என்கிறோம். அது பொருளியல் உற்பத்தி நிறுவனமாக இருந்தால் அதனை மூலதன இயல்பிலிருந்து விடுதலை செய்தல் என்கிறோம். இவை நிறைவேறும் போது மட்டுமே பாட்டாளி வர்க்க அரசு கட்டத்திற்கான போதுமான நிபந்தனைகள் நிறைவேறும் என்கிறோம்.

புரட்சிக்குப் பிந்திய காலகட்டம் முதலாளியத்திற்கும் பொதுவுடமைக்கும் இடையிலான கால கட்டம். இதுவே பாட்டாளி வர்க்க அரசு காலகட்டமாகும். இந்த இடைக் கட்டத்தின் நோக்கம் பொதுவுடைமைச் சமூகத்தை உருவாக்குவதுதானே யொழிய இடையில் ஒரு சோசலிச அரசை உருவாக்குவதல்ல. எனவே 'சோசலிசக் கட்டுமானம்" என்கிற கருத்தாக்கத்தில் பொருளில்லை என்று கூடச் சொல்லலாம் (நாமும் கூட இந்தத் தொகுப்பிலும் பிற இடங்களிலும் இத்தகைய சொல்லாட்சியைப் பயன் படுத்தி இருந்தாலும் நாம் இதனை பாட்டாளி வர்க்க அரசு கால கட்டத்திற்கான உறவுகள் என்ற பொருளில் மட்டுமே பயன்படுத்தி உள்ளோம். இதையும்கூட இனி தவிர்க்கலாம்) அல்துஸ்ஸர் சொல்வார்:

''மார்க்சையும் லெனினையும் பொறுத்த மட்டில் சோசலிச உற்பத்தி முறை என்று ஒன்று கிடையாது. சோசலிசக் கட்டம்... என்றெல்லாம் கிடையாது. சோசலிசம் என்பது பா. வ. ச. தவிர வேறொன்று மில்லை. இது ஒரு புதிய வர்க்க ஆதிக்கம். இதில் சாத்திய மான அளவுக்குப் பரந்த மக்களின் சனநாயகத்தினூடாக பாட்டாளி வர்க்கம் தனது தலைமைப் பாத்திரத்தை நிறுவும். முதலாளியத்திற்கும் பொதுவுடமைக்குமிடை யிலான சோசலிசம் எனப்படும் இந்த மாறுதல் கால கட்டம் ஒரு முரணான காலகட்டமாகும். இதில் பொது வுடைமைக் கூறுகளும் (எ.டு.: புதிய மக்கள் திரள் கருவகள்) முதலாளியக் கூறுகளும் (எ.டு :கூலி) ஒரு சேர

www.padippakam.com



முரண் உறவில் நிலைத்திருக்கும். வர்க்கப் போராட்டம் சிறிது மாறுபட்ட முறையில் நடைபெறும் ஒரு உறுதி யற்ற தற்காலிகக் காலகட்டம்'' (மேற்குறிப்பிட்ட உரை)

பாட்டாளி வர்க்க அரசின் இத்தகைய முரண் தன்மையை லெனினும் வற்புறுத்துகிறார்.

''பாட்டாளிகளை அவர்களின் அரசிடமிருந்து காப் பாற்றும் பணியை பாட்டாளி வர்க்க அமைப்பு மேற்கொள்ள வேண்டும்'' என்பது அவர் கூற்று (தொகுப்பு நூல் 32. பக், 25) அதாவது பாட்டாளி வர்க்கம் அதன் அரசை உள் நாட்டு/வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து காப்பபற்றும் பணியை மேற்கொள்ளும் போதே அதனிடமிருந்து பாட்டாளிகளையும் காப்பாற்றியாக வேண்டும்! பா. வ. கட்சியானது புரட்சிக்குப் பின்பும் கூட எதிர்க்கட்சி யாகவே இருக்கவேண்டும் என்பதன் பொருள் இதுதான். பா. வ. அரசு என்பது ஒரே சமயத்தில் பாட்டாளிகளை முதலாளிகளிடமிருந்து காப்பாற்றுவதாகவும் பாட்டாளி களுக்கே எதிரானதாகவும் அமைந்துவிடும் முரண் தன்மை குறிப்பிடத்தக்கது. எனவே பாட்டாளி வர்க்க அரசு கால கட்டம் முழுமையும் பாட்டாளி லர்க்க அரசிற்கு எதிராகப் போராடுகிற உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும் அதற்குரிய வடிவங்கள் பா. வ. அரசில் இருக்க வேண்டும். பா. வ. அரசுப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவும், தேவைப்படும்போது திருப்பி அழைக்கப்படக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். சட்டம் இயற்றுதல், நிர்வாகம் என்கிற வேலைப்பிரிவினை தகர்க்கப்பட்டிருக்க வேண்டும். இன மொழி, பண்பாடு ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அணி திரளும் உரிமை பெற்றவர்களாக மக்கள் இருக்க வேண்டும்.

லெனினது கருத்துக்கள் இந்த அம்சங்களில் மிகச் சரியாகவே அமைந்திருந்தன, ஆனால் நடைமுறைதான் வேறுவிதமாக இருந்தது. அரிந்தாம் சென் நூல் பற்றிய

www.padippakam.com



விமர்சனக் கட்டுரையில் இது விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்வதானால் லெனினது கருத்துக்களை அவராலேயே நடைமுறைப்படுத்த இயலவில்லை. "சோவியத் தலைவர்கள் அரசை உறுதி செய்வதன் மூலமாகவே உதிரச் செய்ய வேண்டுமென நினைத்துவிட்டார்கள் போலும்'' என அல்துஸ்ஸர் கிண்டலாக சோவியத் தலைவர்கள் பற்றிச் சொன்னதை நாம் லெனினுக்கும் கூட நீட்டித்துப் பார்க்கலாம். ஸ்டாலின் காலத்தில் இந் நடைமுறைகள் என்பன அளவு ரீதியில் பன்மடங்கானது மட்டுமல்ல, லெனின் கோட்பாட்டு ரீதியாகச் சொன்னவற்றை மாற்றி நடைமுறைக்குகந்த புதிய கோட்பாட்டையும் ஸ்டாலின் உருவாக்கினார். பா.வ. அரசு பற்றிய லெனின் மற்றும் ஸ்டாலினின் கோட்பாடுகளை கிழ்க்கண்டவாறு கிரகாம்லாக் விளக்குவது குறிப்பிடத்தக்கது.

வரைகுறிப்பு : - 1

## லெனினது கோட்பாடு

| | | |
|---|---|---|
| முதலாளியம் | முதலாளியத்திலிருந்து பொதுவுடமைக்கான மாற்றம் (அதாவது சோசலிசம் அல்லது பா வ. சர்வாதிகாரம்) | பொதுவுடைமை சமூகம். |

← வர்க்கப்போராட்டம் →

படிப்பகம்

www.padippakam.com



வரைகுறிப்பு: - 2

## ஸ்டாலின் கோட்பாடு

| | | | |
|---|---|---|---|
| முதலாளியம் | முதலாளியத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றம் (அதாவது பா.வ. சர்வாதிகாரம்) | சோசலிசம் (வர்க்கங்களுக்கிடையே நட்புறவு) | பொதுவுடமைச் சமூகம் |

←——வர்க்கப்போராட்டம்→

ஸ்டாலினைப் பொறுத்த மட்டில் சோசலிசம் என்பது வர்க்கப் போராட்ட காலகட்டமல்ல. மாறாக அது "வர்க்கங்களுக்கிடையேயான நட்புறவுக் காலம்" (பார்க்க; 1936 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் மற்றும் அதைப் பற்றிய விவாதங்கள்). எனவே 'சோசலிச அரசு' என்கிற ஒன்றை அவர் முன் வைத்தார். இதில் வர்க்கப் போராட்டம் இருக்காது என்பது அதன் பொருள். வர்க்கப் போராட்டத்திற்கு இடமில்லாத அரசு என்கிற இக் கோட்பாடு மார்க்ஸ் லெனினது அரசு பற்றிய கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானது. இந்த வகையில் தான் லெனினுக்கும்- ஸ்டாலினுக்கும் இடையேயான தொடர்ச்சியையும் வேறுபாட்டையும் நாம் காண வேண்டும். எனவே பா.வ. அரசு பற்றிய லெனினியக் கோட்பாட்டை நாம் முற்றிலுமாக ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் லெனின் சில அம்சங்களில் ஸ்டாலினிஸ்ட்டாக இருந்தார் என்று சொல்வது மிகையாகாது.

மேற்குறித்த கருத்துக்களிலிருந்து நாம் பின்வரும் முடிவுகளை அடையலாம்.

படிப்பகம்

www.padippakam.com



1. புரட்சியின் மூலம் அரசைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க அரசு ஒன்றை நிறுவுதலின் அவசியத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.
2. முதலாளியத்திற்கும் பொதுவுடமை சமூகத்திற்கு மிடையேயான காலகட்டம் ஒரு வர்க்கப் போராட்ட கால கட்டமே. பா.வ. அரசின் துணையோடு இக் காலகட்டத்தில் நாம் வர்க்கப் போராட்டத்தைக் கேந்திர கண்ணியாக வைத்தல் அவசியம்.
3. வர்க்கங்களுக்கிடையே நட்புறவு நிலவும் வர்க்கப் போராட்டமில்லாத சோசலிச அரசு, சோசலிச உற்பத்தி முறை ஆகியவற்றை நாம் மறுக்கிறோம். 'அனைத்து மக்களின் அரசு' என்பது ஒரு மார்க்சியரைப் பொறுத்த மட்டில் வெறும் உளறலே.
4. அரசு கருவிகளை வன்முறைக்கருவிகள் (ராணுவம், காவல்துறை, உளவு...), அரசியல் கருவிகள் (பாராளுமன்றம், அமைச்சரவை...), கருத்தியல் கருவிகள் (கல்வி, மருத்துவம், குடும்பம், அதிகாரபூர்வப் பண்பாடு...) எனப் பிரித்தால் இவை அனைத்துமே முதலாளியக் கருவிகள் தான். இவற்றின் உள்ளுறையாக இருப்பது முதலாளி வர்க்கம் என்கிற நிலை ஒரு பா.வ. புரட்சி மூலம் மாற்றப்பட்டு பா.வ. பிரதிநிதிகளால் நிரப்பப்பட்ட போதிலும் இவை முதலாளிய வடிவங்களே.
5. புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் இந்தக் கருவிகள் அனைத்தும் தகர்த் தெறியப்படுதலை மார்க்சியம்-லெனினியம் முன் மொழிகிறது. இதன் பொருள், தொடர்ச்சியான வன்முறை மூலம் இந் நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் அழித்தொழிப்பதல்ல. முதலாளிய மற்றும் அதற்கு முந்திய வர்க்க அமைப்புகளாக இருக்கும் இவை, அவை அமைக்கப்பட்ட விதத்தி



படிப்பகம்

www.padippakam.com



லேயே பொதுவுடமை உறவுகள் மலர்வதற்குத் தடையாக இருக்கும்— அந்தத் தடைகளை நொறுக்கி எறிவது—இது சில சந்தர்ப்பங்களில் பழம் நிறுவனங்களையே அடையாளம் தெரியாமல் உடைத்தெறிவதாகவும் அமையும். இவற்றைத் தூலமாகத் தீர்மானிப்பது அந்தந்த தேசியச் சூழல்களே.

6. சனநாயகம், தேசியம் போன்ற உணர்வுகள், வடிவங்கள், இயக்கங்கள் ஆகியவற்றை முதலாளியத்தின் மேற்கட்டுமானமாகப் பார்ப்பதை நாம் மறுக்கிறோம். முதலாளியச் சொல்லாடலுடன் மட்டுமல்ல இவற்றைப் பொதுவுடைமைச் சொல்லாடலுடனும் இணைக்க முடியும்; இணைக்க வேண்டும்.

7. ஆனால் சனநாயகம், தேசியம் போன்றவை (புரட்சிக்குப் பிந்திய சமூகம் உள்ளிட்ட) வர்க்க சமூகங்களிலேயே அர்த்தம் பெறுகின்றன. பொதுவுடைமைச் சமூகத்தின் இறுதி நோக்கம் சனநாயகம், தேசிய விடுதலை ஆகியவற்றை நிறுவுவது என்பதல்ல. சனநாயக உரிமைகளையும் தேசிய உரிமைகளையும் ஒடுக்குவதற்குக் காரணமான சூழலையே இல்லாமற் செய்வதுதான். அது எல்லையற்ற சனநாயகத்தையும் தேசிய எல்லைகளையெல்லாம் தாண்டிய ஒப்பற்ற மனிதநேயத்தையும் உறுதி செய்யும்.

8. எனவே தேசிய, சனநாயக, பொருளாதார, கலாச்சார, பாலாதிக்க ஒடுக்குமுறைகளுக்குக் காரணமான சகல நிறுவனங்களையும் தகர்த்தெறியும் வர்க்கப் போராட்டம் பா.வ. அரசில் கேந்திரக் கண்ணியாக வைக்கப்படும். இந்த வகையில் தேசிய அடையாளங்களுடன் இணைந்து நிற்றலையும் சனநாயக வடிவங்களுக்கான போராட்டங்களையும் பா.வ. அரசு அனுமதிக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



9. தேசியம், சனநாயகம் போன்றவற்றை முதலாளியத்தின் மேற்கட்டுமானமாகப் பொருத்திப் பார்த்ததன் விளைவாகவே "சோசலிச" / பொதுவுடைமைச் சமூகங்களில் இவை உதிர்ந்து போகும் எனக் கருதி புரட்சிக்குப் பிந்திய இப்பிரச்சனைகள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே பு.பி. சமூகங்களில் தேசிய, சனநாயக ஒடுக்குமுறைகள் தொடர்ந்தன.

10. பா.வ. அரசு என்பது பா வ. நலன்களைக் காக்கக் கூடியதாக இருக்கும் போதே, ஒரு அரசு என்கிற வகையில் பா. வர்க்கத்திற்கு எதிராகவும் இருக்குமென்பதால் பா.வ. அரசிற்குள் இவ்வரசுக்கு எதிரான எதிர் அதிகார அமைப்புகள் (எ.டு: சுதந்திரமான தொழிற்சங்கங்கள், சிவில் உரிமை அமைப்புகள், பெண்ணுரிமை அமைப்புகள், தொழிற்சாலை கவுன்சில்கள், சோவியத்துக்கள்...) இயங்க அனுமதிக்கப்படும்.

மேற்குறித்த கருத்துக்களோடு இந்நூலிலுள்ள அரிந்-தாம்சென் நூல் பற்றிய கட்டுரையின் பிற்பகுதியில் விவாதித்துள்ளவற்றையும் இணைத்துப் பார்த்தல் அவசியம்.

## இரண்டு

இந்த நூலில் உள்ள ஒரு கட்டுரையின் மீதான விமர்சனமாக எழுதப்பட்ட திரு. கோ கேசவனின் 'ரசியப் புரட்சி ஒரு மாயையா?' எனும் வெளியீடு பற்றி (புதுமைப் பதிப்பகம், திருச்சி, 1990 பக்.47,விலை ரூ 4/-) விரிவாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. அசட்டுக் கேலிகள், தந்திரமான திரிபுகள், பரிச்சயமற்ற விசயங்களிலெல்லாம் அகந்தையோடு நுழைந்து சண்டமாருதம் செய்தல் என்பவற்றோடு வந்துள்ள இந்நூலில் திரு. கேசவன்

www.padippakam.com


எழுப்பியுள்ள பல கேள்விகள் அர்த்தமற்றவை. ஆர்வ முள்ள தோழர்கள் கேசவனின் நூலையும் இத் தொகுப் பிலுள்ள அரிந்தாம் சென் நூல் பற்றிய கட்டுரை ஆகிய வற்றையும் மீண்டும் ஒருமுறை படிக்க வேண்டுகின்றேன். 'சோசலிச' சமுதாயத்தில் முதலாளிய மீட்சி பற்றிய கேசவனின் கருத்துக்கள் இருபதாண்டுகளுக்கு முன் மா-லெ கட்சிகளால் முன்வைக்கப்பட்டவற்றைத் தாண்ட வில்லை. புதிய கேள்விகள் எதற்கும் பதிலில்லை. (கே. வேணுவின் ஆவணத்தை மறுத்து எழுதப்பட்ட பாப் அவேகியானின் அறிக்கையும் இதே ரகம்தான்).

ரசியச் சமூகம் பற்றிய மாவோவின் வரையறையைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை எனும் கேசவன் பு.பி. சமூகத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கச் சிந்தனையாளர்களின் வலு அல்லது வலுவின்மையைப் பொருத்ததுதான் சோசலிச உறவு கள் நிலைபெறுவது என்கிறார். ரசியா, சீனா உள்ளிட்ட எல்லா பு பி. சமூகங்களிலும் சோசலிச உறவுகள் தக்க வைக்கப் படவில்லையென்றால் பொதுவாக எல்லா இடங் களிலும் பா. வ. சிந்தனையாளர்கள் வலுவின்றி இருந் துள்ளனர் எனப் பொருளாகிறது. இது எப்படி நிகழ் கின்றது என்கிற கேள்விக்குப் பதிலில்லை.

''பழையவற்றை மறுத்து புதியவற்றை இன்னமும் பெறாமலும் அல்லது பெற்றவற்றை முன் வைக்க இயலா மலும்'' இருக்கிறேன், ரசிய சமூகம் சோசலிசமாக இருந்து சீரழிந்து / கடந்த அறுபதாண்டு காலத்திலும் சோசலிச நிர்மாணம் இருந்தது/ முதலாளிய மீட்பு நடந்துவிட்டது— எனப் பல கருத்துக்களும் வெளிப்படுமாறு எழுதுகின் றேன்'' என்பவை திரு. கேசவன் என்மீது வைக்கும் முக்கிய குற்றச்சாட்டுகள்.

ஸ்டாலினுக்குப் பிந்திய ரசியாவை முதலாளியம் மீட்டெடுக்கப்பட்ட சமூகம் என்றோ, சமூக ஏகாதிபத்

படிப்பகம்

www.padippakam.com



தியம் என்றோ, சோசலிச சமூகம் என்றோ சொல்ல இயலாமை குறித்து நாம் எழுப்பியுள்ள கேள்விகள் (பார்க்க: ரசியாவில் நடப்பதென்ன?) இன்னும் கேசவன் உட்பட யாராலும் பதிலளிக்கப்படவில்லை. வர்க்கப் போராட்டத்தைக் கேந்திரக் கண்ணியாக வைத்துள்ள பா. வ. அரசு என்கிற பொருளில் அது சோசலிச சமூகமாக என்றும் உருப்பெற்றதில்லை என்பதே என் நிலைபாடு. இது ஏன் என்பது தான் இந்நூல் முழுக்க விவாதிக்கப்படுகிறது. லெனினது காலத்திலிருந்து நடைபெற்றிருந்தாலும் இவை நடைமுறைமற்றும் கோட்பாட்டளவிலான பிழைகளின் விளைவுதானேயொழிய திட்டமிட்ட சதியின் விளைவுகள் அல்ல - சோசலிசத்தை நிர்மாணிக்கும் நோக்குடன் தான் லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோர் செயற்பட்டனர் எனினும் தோல்வி. ரசியப் புரட்சியிலிருந்து மாவோ மறைவு வரையிலான காலகட்டத்தை ''அறுபதாண்டு கால சோசலிச நிர்மாண அனுபவம்'' என நான் குறிப்பிடுவது இந்தப் பின்னணியில்தான். ரசியப் புரட்சியை மாயையாகக் கருதுவதும் நம் நோக்கமில்லை. ரசியப் புரட்சி பற்றிய தவறான பல கருத்துகளிலிருந்து நாம் விடுதலை பெறுவது அவசியம் என்பதே என் கருத்து.

எத்தகைய சூழலில் இக் கட்டுரைகள் எழுதப்பட்டன என்பதை ஏற்கெனவே சுட்டிக்காட்டி விட்டேன். இன்றைய பிரச்சினைகள் பல குழப்பங்களை உருவாக்கத் தான் முயற்சிக்கின்றன. அவற்றிற்கு நேர்மையாகப் பதில் தேடும் முயற்சியே இக் கட்டுரைகள். தோழர் கேசவனுக்கு இத்தகைய குழப்பங்களெல்லாம் இல்லை என்பது புரிகிறது; கொஞ்சம் பொறாமையாகக்கூட இருக்கிறது' ஜவஹர்லால் நேரு ஒரு முறை,

> ''நம்மை எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் அனைத்தும் மிகக் கடுமையானவையும் கூட. இவை பற்றிய பரிசீலனையே நமது சிந்தனையை விரிவாக்கும். இவை பற்றின தெளிவான பார்வையோ, நம் முன் உள்ள பிரச்சினைகள் பற்றி ஸ்தூலமான அறிவோ இல்லாமல் இன்று உலகத்தைப் பாதிக்கிற குழப்பத்திலிருந்து நாம் எவ்வாறு மீள முடியும்? நான் கருத்தோட்டத்தில் தெளிவுள்ளவனென்று காட்டிக் கொள்ள விரும்பவில்லை; அல்லது பிரதான பிரச

சினைகளுக்குப் பரிகாரம் வைத்திருக்கிறேன் என்று பாவனை செய்யவில்லை ஆனால் ஒன்று, இப்பிரச்சினைகளைப் பற்றியெல்லாம நான் சதா சிந்தனை செய்து கொண்டிருக்கிறேன் என்று மட்டும் பணிவுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சிலர் சந்தேகமற்ற வரையறைகளை கொண்டுள்ளனர். இதன் காரணமாக இன்றைய பிரச்சினைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கஷ்டமோ, அவசியமோ அவர்களுக்கில்லை. இவர்களைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். ஒரு சகாப்தம் மறைந்து பிறிதொரு பெரிய சகாப்தம் தோன்றி வரும் இடைக்காலத்தை ஒட்டி சிந்தனை மோதல்கள் ஏற்படத்தான் செய்யும். இவைபற்றியெல்லாம் மேற்கூறிய நபர்கள் கவலைப்படத் தேவையில்லை'' எனச் சொன்னது (எகானமிக் ரெவியூ 1958) நினைக்கு வருகிறது.

இரட்டையாட்சியில் ஏகாதிபத்தியங்களுக்குக் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்குப் பூரண அதிகாரம் இருந்தது என நாம் எங்கும் சொல்லவில்லை. மாறாக உள்ளூர் அரசுக்கு முற்றும் அதிகாரம் இல்லை எனவும் நாம் பார்க்கத் தேவையில்லை அதே போலத்தான் ''எல்வித மேல் உரிமையுமற்ற தொழிற்சாலைக் கவுன்சில்களை'' ''புரட்சிகர சோவியத்திற்கு'' மேல் வைத்திருக்கிறேன் என்கிற கேசவனின் குற்றச்சாட்டும் இவ்விசயம் குறித்த புரியாமையின் விளைவே. தொழிற்சாலை கவுன்சில்கள் மற்றும் ''சோசலிச'' சனநாயகம் குறித்து மிக விரிவான ஆய்வுகள் வநதுள்ளன. இவை குறித்த ஒரு சில கருத்துக்களோடு இப் பின்னுரையை முடித்துக் கொள்ளலாம்.

'தொழிலாளர் கட்டுப்பாடும் சோசலிச சனநாயகமும்' (NLB 1982) என்கிற மிக முக்கியமான நூலை எழுதிய **கார்மன் சிரியானி,**

> ''தொழிலாளிகளின் பொதுவான பொருளாதார நலன்களைப் பாதுகாக்கவும், உற்பத்தியின் பல்வேறு அம்சங்களையும மேற்பார்வை இடவும், தொழிற்சாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிக் குழுக்கள்தான் (அதாவது தொழிற்சாலை கவுன்சில்கள்) 1917இல் நகர்ப்புறத் தொழிலாளிகளின் மிக முக்கியமான போராட்டக் கருவியாக

www.padippakam.com



இருந்தன என்பதை இன்று ரசியப் புரட்சி பற்றிய எல்லா வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்'' என்று குறிப்பிடுகிறார் (பக் 2). தொழிற்சாலை கவுன்சில்களின் பணி பற்றி அவர் கூறுவனவற்றை இப்படிச் சுருக்கலாம்.

''தொழிலாளர் மத்தியில் பெருமித உணர்வை ஏற்படுத்தின; நிர்வாகம் தொழிலாளிகளிடம் பணிவாக நடக்க வழி வகுத்தன; பெண் தொழிலாளிகள் மீதான பாலியல் சுரண்டல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன; கொடூரமான அதிகாரிகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர்; தொழிலாளரை விருப்பம் போல வேலை நீக்கம் செய்யும் உரிமை பறிக்கப் பட்டது; தொழிற் சங்கம் இல்லாத இடங்களில் தொழிற்சங்க பணிகளும் மேற்கொள்ளப்பட்டன; தொழிலாளரின் கலாச்சார வாழ்வையும் மேம்படுத்தின; தொழிற்சாலை வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் ஆளுமை செலுத்தின' (அத்தியாயம் 2)

பால் ஏவ்ரிச் எழுதியுள்ள ''ருசியப்புரட்சியும் தொழிற்சாலைக் கவுன்சில்களும்'' என்கிற நூலில்,

''வரலாற்றிலேயே தொழிற்சாலை அமைப்புகளின் மிகச் சிறந்த வடிவமாக தொழிற்சாலை கவுன்சில்கள் தான் இருந்தன... எதிர்காலச் சோசலிசச் சமுதாயத்தின் கருக்கள் என அவற்றைச் சொல்லலாம்''

எனக் கூறியுள்ளதும் (மேற்படி நூல், பக்.51) கவனிக்கத் தக்கது. மிகச் சிறந்த ஒரு எதிர் அதிகார அமைப்பாக தொழிற்சாலைக் கவுன்சில்கள் இருந்தன. (சில குறைபாடுகள் இருந்த போதும்). அதனால்தான் முதலாளிகளும் தொழில் நிர்வாகிகளும் இவற்றை ஒழித்துக் கட்டுவதில் குறியாய் இருந்தனர். அவர்களால் முடியாததைக் கடைசியாய்ப் போல்செவிக் கட்சி செய்து முடித்தது என்பது தான் வரலாறு

1905 முதல் தொழிற்சாலை கவுன்சில்களும் சோவியத்களும் ரசியச் சமூகத்தில் இயக்கம் பெற்றிருந்தன. இரண்டிற்குமிடையேயான உறவுகள் சற்றுச் சிக்கலானவை. ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டும் ஒன்றின் பிரதிநிதிகள் இன்னொன்றைக் கட்டமைப்பதும், கட்டுப்

www.padippakam.com



படுத்துவதும் என்பதாக இவ்வுறவுகள் தொடர்ந்தன. போல்செவிக்குகள் தவிர மென்செவிக்குகள், அனார்க்கிஸ்டுகள், சிண்டிகலிஸ்டுகள் எனப் பலரும் இவற்றில் பங்கு பெற்றிருந்தனர். இதனாலேயே இவை குறித்த போல்செவிக் கட்சியின் அணுகுமுறைகள் இரண்டகத் தன்மையாய் இருந்தன. 1905லிருந்தே தொழிற்சாலை கவுன்சில்களும், சோவியத்துகளும் இயங்கி வந்த போதிலும் இறுதியாக 1917இல்தான் இவற்றை லெனின் ஆதரித்தார். 1917 பிப்ரவரி புரட்சி முடிந்து நாடு திரும்பிய பின் எழுதப்பட்ட ''ஏப்ரல் அறிக்கை'யில்தான் அவர் முதன் முதலில் தொழிற்சாலைகளில் **இரட்டை அதிகாரத்தை** ஆதரித்தார். மே மாதத்தில் எழுதப்பட்ட கட்டுரை யொன்றில்தான் தொழிற்சாலை கவுன்சிலை நேரடியாக ஆதரித்தார். சோவியத்களைத் தொடக்கத்தில் ஆதரிக்காத லெனின், பல சோவியத்களில் (கட்சி மேலிடக் கட்டளைகளை எதிர் பாராமலேயே) போல்செவிக்குகள் பங்கேற்கும் நிலை ஏற்பட்ட பின்புதான் இறுதியாக ஏப்ரல் 1917இல்' அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்கே' என்கிற முழக்கத்தை முன் வைத்தார்.

தொடர்ந்தும் போல்செவிக் கட்சியில் நிலைபாடு சீரானதாக இல்லை. மீண்டும் ஜூனில் எழுதிய கட்டுரை ஒன்றில் (பிராவ்தா, ஜூன் 4) தொழிற்சாலை கவுன்சில்களைப் புறக்கணித்தார். தொடர்ந்து தொழிற்சாலை கவுன்சில்கள் இயக்கம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது அரிந்தாம்சென் நூல் பற்றிய கட்டுரையில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. விரிவாக அறிய விரும்பும் தோழர்கள் சிரியாணியின் நூலைப் படிக்கலாம்.

## மூன்று

கலாச்சாரப் புரட்சி, பா.வ. அரசில் சந்தை முதலியவை குறித்தெல்லாம் ஆங்காங்கு பேசப்பட்டாலும் விரிவாக ஆய்வு செய்யவில்லை. மாவோ நூற்றாண்டில் நம்மை எதிர் நோக்கியுள்ள முக்கிய பணி இது. □

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்